109

T.N.L.A.D
17.4.2000
V.96 No.2

D
V211,31'P00
Pcc.96.2
23305

வெளியீடு 30-11-2000 Issued 30-11-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 17, 2000 – தொகுதி 96 – எண் 2

**Monday the 17th April, 2000 – Volume 96 – No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George, Chennai-600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

17-4-2000

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| *(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்* | 207-245 |
| *(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 9 மற்றும் 10)* | 245-315 |
| **2. தகவல் கோரல்—** | |
| *உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்* | 315-318<br>340-342 |
| **3. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| *மண்ணெண்ணெய் மற்றும் சமையல் எரிவாயு விலையை மத்திய அரசு உயர்த்தியது* | 318-340 |
| திரு. சி. ஞானசேகரன் | 318-322 |
| திரு. கே. சுப்பராயன் | 322-324 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 324-326 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 327-329 |
| திரு. லா. சந்தானம் | 326, 329 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 330-331 |
| திரு. சி. வேலாயுதன் | 331-333 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 334-340 |
| **4. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்** - தொடர்ச்சி | |
| *கோரிக்கை எண் 29-சமூக நலன்* | 342-419 |
| *மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், | 342, 346<br>399-416 |
| *டாக்டர் அ. செல்லக்குமார்* | 346-357,<br>359, 360 |


53/74—1

| | பக்கங்கள் |
|---|---|
| 4. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி | |
| டாக்டர் காஞ்சனா கமலநாதன் | 363, 367-373 |
| திருமதி வாசுகி முருகேசன் | 373-376 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 376-381 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 381-386 |
| திரு. மா. இராமச்சந்திரன் | 387-392 |
| திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் | 392-399 |
| 5. அரசினர் தீர்மானம்— | |
| விதி *32*-ஐத் தளர்த்தல் | 419 |
| 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 420 |


223305

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 5, விக்கிரம - திருவள்ளுவர் ஆண்டு 2031**

**2000 ஏப்ரல் 17, திங்கட்கிழமை**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. பரிதி இளம்வழுதி** அவர்கள் தலைமையில் காலை *9-30* மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

"சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு"

தம்மைச் சார்ந்த குடிகளை உயர்த்தும் செயல்களில் காலம் தாழ்த்தாமல் ஈடுபட்டு முயல்கிறவர்களுக்குத் தாமாகவே வெற்றிகள் வந்து குவிந்துவிடும்.

### 1. வினாக்கள்-விடைகள்

**(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் *301*, திரு. செங்கை சிவம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**301—**

**கனிமப் பொருள்**

***19295 திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைக்கு அருகில் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் பூமிக்கு அடியில் "பாஸ்போரைட்" என்ற கனிமப் பொருள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2000 ஏப்ரல் 17

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சென்னைக்கு அருகில் கடற்கரைப் பகுதியை ஒட்டி 30 முதல் 293 மீட்டர் நீர் ஆழத்தில் 18 சதவீதத்திற்கும் அதிகமான $P_2O_5$ கொண்ட "பாஸ்போரைட்" என்ற கனிமம் தோராயமாக 636 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் கிடைப்பது கண்டறியப்பட்டுள்ளது.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எங்கெங்கே "பாஸ்போரைட்" கனிமம் கிடைக்கிறது, எந்தெந்தத் தொழில்களுக்கு இது பயன்படுத்தப்படுகிறது, "பாஸ்போரைட்" எடுக்க எத்தகைய உரிமம் வழங்கப்படுகிறது என்பனவற்றைத் தங்கள் மூலமாக முதல்வரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்போது இது கிடைக்கிற இடங்கள்; திருச்சி மாவட்டம் லால்குடி வட்டம், உட்டத்தூர் கிராமத்தில் 394 ஏக்கர் பட்டா நிலத்திலே ஒரு குத்தகை உரிமம் 1986-லிருந்து 20 ஆண்டு காலக் குத்தகை நடப்பிலே உள்ளது. அந்தப் பகுதியிலே "பாஸ்போரைட்" கனிமத்தினுடைய இருப்பு சுமார் 4 ஆயிரம் டன் என மதிப்பிடப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டம், வரகுவாடி கிராமத்தில் சுமார் 7 ஏக்கர் பட்டா நிலத்தில் ஒரு குத்தகை உரிமம் 1993-ல் 5 ஆண்டு காலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இப்பகுதியிலே "பாஸ்போரைட்" கனிமத்தினுடைய இருப்பு சுமார் 1400 டன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. "பாஸ்போரைட்" கனிமத்தைக் கொண்டு பாஸ்ஃபேட் உரம் தயாரிக்கப்படுகிறது. மேலும் தண்ணீரை நிர்ணயப்படுத்துவதற்கும், துரு ஏறாத கூட்டுப்பொருள் தயாரிப்பதற்கும் Photo film, பற்பசை, பீங்கான் தயாரிப்புப் போன்றவற்றிற்கும் இது பயன்படுத்தப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விண்கோள்களைப் பயன்படுத்தி நமது மாநிலம் முழுவதும் உள்ள விலை மதிப்புள்ள இதுபோன்ற கனிமங்களைக் கண்டுபிடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



2000 ஏப்ரல் 17]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவை தவிர்த்து சுண்ணாம்புக்கல், Graphite, Bauxite Felspar, வெள்ளைக் களிமண், சிலிகா மணல், Gypsum போன்ற முக்கிய கனிமங்கள் கிடைக்கப்பெறுகின்றன. இஃதன்னியில் மற்ற பொருட்கள் கிடைப்பதைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "பாஸ்போரைட்" இங்கே சென்னை கிழக்குக் கடற்கரையிலே தோண்டி எடுப்பது குறித்த தொழில் நுட்ப ரீதியான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா? அப்படித் தோண்டி எடுக்கப்படுகிறபோது அது இலாபகரமாக அமையும் அல்லது இலாபகரமாக அமையாது என்பது பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அது எந்தக் கட்டத்திலேயிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, பழவேற்காட்டிலிருந்து செய்யூர் வரையிலே உள்ள அந்தப் பகுதியிலேதான் இது கண்டுபிடிக்கப்பட்டு அதுபற்றிய ஆய்வுகள் இப்போது தேசிய கடல் ஆய்வுக் கழகத்தால் நடத்தப்பட்டு வருகின்றன. ஆய்வுகளுடைய முடிவுகள் இன்னும் வரவில்லை. வந்தபிறகுதான் விவரங்கள் தெரிய வரும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போதுமான அளவுக்கு இந்தக் கனிமம் கிடைத்தால் இதை ஏற்றுமதி செய்கிற எண்ணம் அரசுக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியா முழுவதும் கிடைக்கின்ற இந்தக் கனிமத்தினுடைய அளவே 5 இலட்சம் டன்தான். ஆனால், நமக்குத் தேவையான கனிமம் 20 இலட்சம் டன். அதனால் ஏற்றுமதிக்கு இடமில்லை. இறக்குமதிக்குத்தான் இடம் உண்டு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 302, மற்றும் 303 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

[2000 ஏப்ரல் 17

வினா எண் 304, திரு. பி.வி.எஸ். வெங்கடேசன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**304—**

**புதிய வட்டம்**

***29874—திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டத்தை அரசு தொடங்குமா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

முற்பகல் 9-35

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 1997-98 ஆம் டு காரிமங்கலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டத்தை காவேரிப்பட்டினத்துடன் சேர்த்து உருவாக்க அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. ஆகவே, கிருஷ்ணகிரி வருவாய்க் கோட்டத்திலே, காவேரிப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டத்தை உருவாக்கிக் கொடுக்க அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறி விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மக்கள்தொகைக் கணக்கெடுப்புப் பணி நடைபெறுவதால் 1-1-2000 முதல் 31-3-2001 வரை புதிய நிர்வாக அமைப்புகளை உருவாக்கவோ அல்லது நிர்வாக அமைப்புகளில் மாற்றம் செய்யவோ கூடாது என அரசாணை நிலை எண் 1841, பொது (தேர்தல்) துறை நாள் 15-12-1999-ல் தடை விதித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.



2000 ஏப்ரல் 17]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 305, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**305—**

**உரங்களின் பயன்பாடு**

***24212—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இயற்கை மற்றும் உயிர் உரங்களின் பயன்பாட்டை உழவர்களிடையே பிரபலப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இயற்கை உரங்களான ஊட்டமேற்றிய தொழு உரம், தென்னை நார்க் கழிவு, பசுந்தாளுர விதைகள் போன்றவற்றையும், பயிர்களுக்கு ஏற்ற உயிர் உர இரகங்களையும் பயன்படுத்துவதில் சுற்றுப்புறச் சூழல் கெடாமல் இருப்பதோடு, பயிர்களின் மகசூல் குறைந்தது 10 முதல் 20 விழுக்காடு அதிகரிக்கச் செய்கிறது. இது குறைந்த செலவில் கையாளப்படும் தொழில்நுட்ப யுக்தி. இதனைக் கருத்திற்கொண்டு 1998-99 ஆம் ஆண்டில் 30 டன் பசுந்தாளுர விதைகள் 25 விழுக்காடு மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. மேலும், உயிர் உரங்களான நீலப்பச்சைப்பாசி 394 டன்களும், அசோஸ்பைரில்லம், ரைசோபியம், ஃபாஸ்போபாக்டீரியா ஆகியவை 70 இலட்சம் பொட்டலங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. 1999-2000 ஆண்டில் 125 டன்கள் பசுந்தாளுர விதைகளைக் கொள்முதல் செய்து விநியோகம் செய்யக் கருத்துரு பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும் 390 டன்கள் நீலப்பச்சைப்பாசியும், அசோஸ்பைரில்லம்,

*[2000 ஏப்ரல் 17*

ஃபாஸ்போபாக்டீரியா மற்றும் ரைசோபியம் 70 இலட்சம் பொட்டலங்கள் வழங்கத் திட்டமிடப்பட்டு, செயலாக்கத்தில் உள்ளது. இவற்றின் செயல்பாட்டினை விவசாயிகள் அறியும்பொருட்டு செயல் விளக்கப் பாத்திகள் நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக இதர அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டு வருகின்றன; பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. இயற்கை உரத்தின் பயன்பாட்டை விளக்கித் துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமாகவும் எடுத்துரைக்கப்படுகிறது. அதைப்போல, தனியார் நிறுவனங்களும் மேற்கண்ட இடுபொருட்களை விநியோகித்து வருகின்றன. விளம்பரங்களும் செய்து வருகின்றன.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாளுக்கு நாள் மக்கள்தொகை அதிகமாகிக் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், பசுமைப் புரட்சியின் மூலமாக அதிகமாக வேளாண்மைத் துறையை ஊக்குவிக்க வேண்டுமென்ற எண்ணத்திலே செயற்கை உரங்களை அதிகமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதேபோல், பூச்சிக்கொல்லி மருந்துகளையெல்லாம் தேவைக்கு அதிகமாக விவரம் தெரியாமல் விவசாயிகள் அடிக்கக்கூடிய சூழ்நிலையின் காரணமாக மண்வளம் மிகமிகத் தாழ்ந்த நிலைக்குப் போய்க்கொண்டி றது. ஆகவே நிலத்தின் சக்தி, வீரியம் குறைந்த நிலையிலே இருக்க இந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்கு அரசு இன்னும் வேகமாக ந்தாள் உரங்களைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். ஊர்ஜனங்களைக் காப்பாற்றக்கூடிய அளவிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிலே கூறினாலும்கூட, அது முழுமையாக எல்லா விவசாயிகளுக்கும் தெரியக்கூடிய அளவிற்கும் அவர்கள் பயன்படுத்தக்கூடிய அளவிற்கும் விவசாயிகளுக்குத் தெரியப்படுத்த வேண்டும். பசுந்தாள் உரங்களை அந்தந்த விவசாயிகளுடைய நிலங்களிலே எல்லாம் கடந்த காலங்களிலே பார்த்து வந்தோம். அந்த நிலையைப் பல்வேறு பகுதிகளிலே இப்போதெல்லாம் பார்க்கமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, வருங்காலத்தில் விவசாயிகள் முழுமையாகப் பசுந்தாள் உரங்களைப் பயன்படுத்துவதற்கும், அதேபோல் மண் பரிசோதனை நிலையங்கள் 16_

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். உங்கள் விருப்பத்திற்குத் தொடர்ந்து பேசிக்கொண்டே போகிறீர்களே.



*2000 ஏப்ரல் 17]*

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** ஆகவே, மண் பரிசோதனை நிலையங்களை அந்தந்தப் பகுதியிலே கிராமங்களிலே இருக்கக்கூடிய விவசாயிகள் முழுமையாகப் பயன்படுத்த வேண்டிய விவரங்களையும் அவர்களுக்கு முழுமையாகத் தெரிவிக்க கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பார்களா என்று மாண்புமிகு......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** "மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்" என்று சொல்லி முடியுங்கள். *(சிரிப்பு)*

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** அமைச்சர் அவர்களிடம் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-40*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இயற்கை உரங்களைப் பயன்படுத்த வேண்டுமென்று இந்தத் துறை விவசாயிகள் மத்தியிலே பிரச்சாரங்கள் செய்கிறது; அதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதற்கான விளக்கங்கள், பயிற்சிகள் அனைத்தும் துறையின் மூலம் நடைபெறுவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். துறை என்னதான் நடவடிக்கை எடுத்தாலும், விவசாயிகள் மத்தியிலே அவற்றை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்த அவர்கள்தான் ஆர்வத்தோடு முன்வர வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் ஒரு விவசாயி; அதனால் அவர்களைப் போன்றவர்களெல்லாம் இந்தப் பிரச்சாரத்திலே தங்களை ஈடுபடுத்திக்கொள்வது நல்லது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத்தை அளித்து இருக்கிறார்கள். விவசாயத்தைப் பொறுத்தவரையிலும் இயற்கை உரங்களைப் பயன்படுத்த வேண்டுமென்று நம்முடைய அரசு இப்போது வலியுறுத்திச் சொல்கிறது. ஆனால், நம்முடைய அரசே, பல ஆண்டு காலமாக நவீனமாகத் தயாரிக்கப்பட்டிருக்கிற உரங்களைப் பயன்படுத்தினால்தான் விளைச்சல் ஏற்படும் என்ற நிலை ஏற்படுத்தி, அதையே விவசாயிகள் அதிகமாகப் பயன்படுத்தி, அதன் மூலமாக அதிக மகசூலைப் பெற்ற காலம் இருந்தது. ஆனால், இப்போது

[2000 ஏப்ரல் 17

இயற்கை உரத்திற்கு வந்தால், மகசூல் பெருமளவு பாதிக்கப்படும் என்று விவசாயிகள் கருதுகிறார்கள். காரணம், இயற்கைச் சூழ்நிலை, இயற்கை உரங்கள் என்பது வரவேற்கக்கூடியது என்று சொன்னாலும், மகசூல் பாதிக்கப்படும் என்ற ஓர் அச்சம் இருக்கிறது. இது ஒரு விவசாயக் கருத்தரங்கிலே பல விவசாயிகள், விவசாய அறிஞர்கள் எல்லாம் கலந்துகொண்ட கூட்டத்திலே கேட்ட கருத்து. ஆனால், அவர்கள் மறுப்புச் சொல்லி இருக்கிறார்கள். நல்ல ஆராய்ச்சிப்பூர்வமாக அதை நிரூபிப்பதற்கான முயற்சிகள் எடுத்து, விவசாயிகளிடத்தில் இதைக் கொண்டு செல்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறதா என்பதை அறிவதோடு, இப்போது விவசாயத்திற்கு சம்பா சாகுபடிக்குரிய வீரிய வித்துகள் இல்லை என்ற கருத்து இருக்கிறது; ஆகவே, வீரிய நெல் விதைகளைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா எனவும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நல்ல விளைச்சல் வருகிறது என்பதுதான் உண்மை. விவசாயிகள் தம் மண்ணினுடைய வளத்தைக் கருத்திலே கொண்டு செயற்கை உரங்களைக் கொஞ்சம் ஒதுக்கி வைத்து விட்டு, இப்போது இயற்கை உரத்திற்கு வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதும் உண்மை. அதுவும் தஞ்சை மாவட்டத்திலே இதை நல்ல முறையிலே விவசாயிகள் பின்பற்றக்கூடிய நிலை இப்போது இருக்கிறது. அதைப்போல, வீரிய ஒட்டு ரக விதைகளை ஒவ்வோர் ஆண்டும் நம்முடைய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் கண்டுபிடித்து அவற்றை அறிமுகப்படுத்துகிறோம். அந்த முயற்சியிலே தொடர்ந்து இந்த அரசு தகுந்த நடவடிக்கை எடுத்து, பல்கலைக்கழகத்திற்கு ஆலோசனை வழங்குகிறது. இந்த வீரிய ஒட்டு ரக விதைகளைக் கண்டுபிடிப்பது அல்லது replace செய்வது — இது 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை என்றெல்லாம்கூட சில நேரங்களில் ஆகிறது; — 6 மாத காலத்திற்குள்ளே புதுப்புது வீரிய ஒட்டு ரக விதைகளைக் கண்டுபிடித்து, அவற்றை அறிமுகப்படுத்துவதன் மூலம்தான், நம்முடைய மக்கள் தேவைக்கு ஏற்ப உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். ஏனென்றால், நிலப்பரப்பு கூடுதலாக ஆவதில்லை. இந்த ஆலோசனையை இந்த அரசின் சார்பிலே பல்கலைக்கழகத்திற்கு வழங்கி, இப்போது அந்த முயற்சியிலே பல்கலைக்கழகத்தை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறோம்.



2000 ஏப்ரல் 17]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இயற்கை உரம் இப்போது அவசியம் என்பதை உணரவேண்டிய காலம் வந்து இருக்கிறது. விவசாய பூமிகள் எல்லாம், மண் எல்லாம் செயற்கை உரங்களினால் இரும்புத் தாதுவாக மாறிக் கொண்டிருக்கிறது என்று நேற்றைக்கு பத்திரிகைச் செய்தி வந்திருக்கிறது. மேலும், இயற்கை உரத்தைப் பற்றி அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கம் தந்தார்கள். மாட்டுச் சாணத்தை உபயோகப்படுத்தினால் நிறைய விளைகிறது என்பது காலங்காலமாக வந்து கொண்டிருக்கிற வழி. எனவே, விவசாயிகள் எல்லாம் நிலத்தடிநீர் பொய்த்துப்போய், விவசாயம் செய்ய முடியாத சூழ்நிலையிலே மீண்டும் மாட்டுப் பண்ணைகளை வைப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், அதற்குக் கடன் கொடுக்கக்கூடிய தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (TABCEDCO) போன்ற நிறுவனங்கள் ஏராளமான நிபந்தனைகளை விதித்து. அதற்கு ஆதரவு தர முடியாது என்று சொல்கிறார்கள். 20-8-1997-ல் போட்ட ஓர் அரசாணையை வைத்துக்கொண்டு, அவர்கள் கடன் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், கடன் கொடுக்கக்கூடிய ஸ்தாபனங்களான Co-operative அமைப்புகள் மற்றும் (TABCEDCO) போன்ற நிறுவனங்கள், அந்த விவசாயி கடனைக் கட்டாவிட்டால், நீ தான் கொடுக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்ததன் காரணமாக, மாட்டுப் பண்ணைகள் வைப்பதற்கு விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கத் தயங்குகிறார்கள். எனவே, அந்தத் தடையை நீக்கி விவசாயிகள் மாடுகள் வளர்ப்பதற்கு அவர்களுக்குக் கடன்கள் எல்லாம் எளிதாகக் கொடுத்து உதவினால், இயற்கை உரத்தை சரியான முறையிலே தயார் செய்வதற்கு வசதியாக இருக்கும். எனவே, அரசு அதற்கு ஆவன செய்யுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பண்ணை விவசாயிகள் மாட்டுப் பண்ணை வைத்துக்கொள்வதிலே எந்தவிதமான தடையும் இல்லை. அவர்களுக்குக் கடனுதவி தேவையென்றால் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளும் கடன் தருகின்றன; கூட்டுறவு வங்கிகளும் தருகின்றன. அதை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளலாம். கூட்டுறவு வங்கிகள்

[2000 ஏப்ரல் 17

தற்போது கொடுக்க மாட்டோம் என்று சொல்வதில்லை. பண்ணை வைத்துக்கொள்வதற்கு. மாடு வாங்குவதற்குக் கூட்டுறவு வங்கிகள் கடன் தருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். அதைப்போல, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள், பெரிய அளவிலேகூட பண்ணை வைத்துக்கொள்வதற்கு, கடன் வழங்குகின்றன. ஆகவே, விவசாயிகள்தான் முன்வந்து அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். முன்பெல்லாம் ஒவ்வொரு பண்ணை விவசாயியும் தன்னிடம் 2 காளை மாடுகளை வைத்திருப்பார். ஆனால், இப்போது அது இல்லை. உறுப்பினர்களுக்கும் இது தெரியும். நாட்டிற்கும் இது தெரியும். அனைவரும் தற்போது கருவிகளைத்தான் பயன்படுத்துகிறார்கள். ஆகவே, நல்ல உரம் மண்ணுக்குத் தேவையென்றால். பண்ணை விவசாயிகள் தங்களுடைய தோட்டத்தில் மாடுகளை வைத்துக்கொள்வது. வளர்ப்பது நல்லது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே மண் வளம் மிக வேகமாகக் குறைந்து வருகிற ஒரு மாநிலமாகத் தமிழ்நாடு இருப்பதாக சமீபத்திய ஐ.நா. புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்றால், இயற்கை உரங்களைத் தவிர்த்து, செயற்கை உரங்களைப் போட்டதன் காரணமாக, மண்ணில் இயல்பாகவே குடிகொண்டுள்ள நுண்ணுயிர்ச் சத்துக்களும், மண் புழு உட்பட எல்லாமே மடிந்துவிட்டன. ஆகவே, மாநில அரசு இயற்கை உரங்களை ஊக்குவிக்க எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சி பாராட்ட வேண்டிய விஷயம்தான். ஆனால் அந்த முயற்சி, நடைமுறையில் என்ன விளைவை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைத்தான் நாம் பரிசீலிக்க வேண்டும். எனவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவது மண்வளத்தை மேலும் கூட்டுவதற்கு இயற்கை உரங்களைப் பயன்படுத்த வேண்டும் என்று பிரச்சாரம் செய்தது நடைமுறையில் எந்த அளவிற்குப் பலன் அளித்திருக்கிறது என்பது பற்றி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறதா? அதேபோல், மண்வளம் மிக வேகமாகக் குறைந்து வருவதைக் கருத்தில்கொண்டு, மேலும் மண் வளத்தைக் கூட்டுவதற்குரிய நடவடிக்கைகளைக் காரியார்த்தமாக ஏதாவது மாநில அரசு சிந்தித்து, நடவடிக்கைக்குரிய திட்டங்களை வகுத்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.



2000 ஏப்ரல் 17]

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செயற்கை உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம், அதுவும் குறிப்பாகத் தமிழகத்திலே மண்வளம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று. அதைப்பற்றி ஓர் ஆய்வு அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பதாகத் தெரிவித்து இங்கே கேள்வி கேட்கப்பட்டது. அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம், நல்ல விளைச்சலைத் தரக்கூடிய ஒரு சூழ்நிலை, மண்வளம் பாதிக்கப்படாது இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருப்பது இன்று தொழில் நுட்பரீதியாகக் கண்டறியப்பட்டு, அரசைப் பொறுத்தவரையில், விவசாயிகளை இதில் முழுமையாக ஈடுபடுத்த வேண்டுமென்று பல்வேறு வகையிலே நாம் விளம்பரங்கள் செய்கிறோம்; பிரச்சாரங்கள் செய்கிறோம்; விவசாயிகளுக்கு பயிற்சிகள் தருகிறோம். அந்த முயற்சியிலே இப்போது இந்த அரசு தீவிரமாக ஈடுபட்ட காரணத்தால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படாமல், நல்ல விளைச்சலைத் தரக்கூடிய ஒரு நிலை இருக்கிறது என்பதை விவசாயிகளும் உணர்ந்து இயற்கை உரங்களைப் பயன்படுத்த இப்போது முன்வருகிறார்கள். அந்த முயற்சியிலே இந்த அரசாங்கம் மேலும் தீவிர கவனம் செலுத்தி பிரச்சாரம் செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சிப் பகுதிகளில் சேர்கின்ற குப்பைகளையெல்லாம் சேர்த்து அதிலிருந்து உரம் தயாரிக்கிற நிலையெல்லாம் இருந்தது. இப்போது அப்படி கிடையாது. நகராட்சி, பக்கத்தில் உள்ள நகராட்சி, பேரூராட்சியில் சேர்க்கிற இந்தக் குப்பைகளுக்கெல்லாம் concurrence வாங்கி, நகராட்சியிலிருந்து இடம் கொடுத்து குப்பைகளிலிருந்து உரம் தயாரிப்பதற்குத் தனியார் முன் வந்தால் அரசு அனுமதிக்குமா? அல்லது அரசு, நகராட்சிகளுக்கு இந்த உரம் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு அனுமதி கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. நகராட்சிப் பகுதிகளில் இருக்கக்கூடிய கழிவுப்பொருட்கள், குப்பைகள், இவற்றைக்கொண்டு, நகராட்சியே உரம் தயாரிக்க முன்வந்தால் அரசாங்கம் அதற்கு ஊக்கம் தரும். அதைப்போல, தனியார்கள்கூட, அதுபோன்ற கழிவுப்பொருட்களையெல்லாம் சேகரித்து.

அதிலிருந்து எரு தயாரித்து, விவசாயிகளுக்கு விநியோகிக்கக்கூடிய அந்த முறையிலே யாராவது ஈடுபட்டால் அதற்கும் உதவி செய்ய அரசாங்கம் தயாராக இருக்கிறது. ஆனால் இப்பொழுதெல்லாம் தழையைக்கூட நிலத்திலே, வயலிலே போடுவதை கொஞ்சம் குறைக்கிறார்கள் விவசாயிகள். நாம் என்னதான் சொன்னாலும் கேட்காமல் முன்னேறிய நிலையிலுள்ள விவசாயிகள் நிலத்தின் மண்ணின் தன்மையைக் கருதி விளைச்சல் கூடுதலாக வரவேண்டுமென்று செயற்கை உரத்தைப் போடுகிறார்கள் இல்லாவிட்டால் இயற்கை உரத்தைத்தான் பயன்படுத்துவார்கள் திடீரென்று விவசாயிகள் சிலர் அதற்குச் செல்கிறார்கள். அதைப்போல நகராட்சிப் பகுதிகளிலே இதுபோன்ற கழிவுப்பொருட்களை-ஒருகாலத்திலே மலம் கழித்தது, குப்பைகள் ஆகியவற்றை-எல்லாம் கம்ப்போஸ்ட் குழி வெட்டிப்போட்டு உரங்கள் தயாரித்து, அது மக்கிய பிறகு விவசாயிகளுக்கு ஒரு வண்டிக்கு இவ்வளவு என்றெல்லாம் விற்பனை செய்தார்கள். அதை விவசாயிகள் எடுத்துக்கொண்டுபோய் வயல்களிலே போட்ட காலமும் உண்டு. ஆனால் இப்போதெல்லாம் அந்தப் பக்கமே போக மாட்டேன் என்கிறார்கள். இருக்கிற இடத்தில் வந்து எடுத்துக்கொண்டு போங்கள் என்று சொன்னால்கூட அதை எப்படிப் போய் எடுப்பது என்று இருக்கிறார்கள். அதிலே ஒன்றும் தவறு இல்லை. அதிலே ஒன்றும் தொத்துவியாதி வரப்போவதில்லை. ஆனாலும்கூட, அப்படிப்பட்ட உரங்கள் இருந்தாலும்கூட விவசாயிகள் எடுத்துச் செல்ல முன்வராத நிலை இருக்கக்கூடிய காரணத்தினால் அப்படி கம்ப்போஸ்ட் குழி வெட்டி உரம் தயாரிக்கின்ற முயற்சியிலே நகராட்சி இப்போது ஈடுபடவில்லை. இதுதான் இருக்கக்கூடிய நிலை. ஆகவே அந்த முயற்சியிலே யாராவது அல்லது எந்த நகராட்சியாவது ஈடுபடலாம். நாம்கூட நம்முடைய மாநிலத்திலே அப்படிக் குப்பைகளை எல்லாம் எருக்களாகத் தயார் செய்வதற்கு ஒரு முயற்சி எடுக்கலாம் என்று நடவடிக்கை எடுத்தோம். ஆனால் அந்த முயற்சி வெற்றிபெறவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நவீன வேளாண்மை முறை வருவதற்கு முன்னால் தொன்றுதொட்டே நம்முடைய நாட்டிலே இருந்த பழக்கம் ஒரு குளம் இருக்கிறது என்று சொன்னால் அந்தக் குளத்தின்மூலம் 50 ஏக்கர் பாசனம் இருக்கும் என்று சொன்னால் அந்த 50 ஏக்கர் பாசன





விவசாயிகளும் ஒற்றுமையுடன் ஒன்றாகப் பயிர் செய்வார்கள். ஒன்றாக அறுப்பார்கள். அதுபோன்று மீதிக் காலங்களில் நன்றாகக் காய விடுவார்கள். அப்படி நிலத்தினுடைய தன்மை ஏற்கெனவே பாதுகாக்கப்பட்டிருந்த ஒரு பழக்கம்போய், இப்போது என்ன ஆகிவிட்டது என்றால் ஆங்காங்கு விவசாயம் செய்வது, அறுவடை செய்வது என்று ஒற்றுமை இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்ட காரணத்தால் நிலம் சரியாகக் காயக்கூடிய வாய்ப்பு இல்லாமல் போய்விடுகின்றது. ஒரு பக்கத்தில் அறுக்கும்போது இன்னொரு பக்கத்தில் பயிராகின்றது. எனவே இந்த நோய்க் கிருமிகள் அங்கு சென்று தங்களுடைய வாழ்க்கையைத் தொடங்கி விடுகின்றன. எனவே இந்த விவசாயிகள் பழைய காலங்களைப் போல ஒற்றுமையான சூழ்நிலையில் விவசாயம் செய்வதற்குண்டான சூழ்நிலையை வாரத்திற்கு ஒருநாள் ஊருக்கு வருகின்ற வேளாண்மை அலுவலர்கள் மூலமாக ஏற்படுத்த வேண்டும். அவர்கள் மூலமாக இந்தப் பழைய சூழ்நிலையை ஏற்படுத்தினால் நன்றாக இருக்காதா? அரசு இதற்கு ஆவன செய்யுமா? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இயற்கை மற்றும் உயிர் உரங்களின் பயன்பாட்டை உழவர்களிடையே பிரபலப்படுத்த நடவடிக்கை எடுப்பது குறித்ததுதான் இந்த மூலக் கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்விக்கு என்னிடத்திலே பதில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 306 மற்றும் 307 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 308. திரு. டி. அமரமூர்த்தி. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**308—**

## பேருந்து இயக்குதல்

***17210—திரு. டி. அமரமூர்த்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 ஏப்ரல் 17

கீழப்பளூர் முதல் தஞ்சாவூர் வரை (வழி-திருமானூர்) இயங்கிக் கொண்டிருந்த அரசுப் பேருந்து தடம் எண் 70-ஐ மீண்டும் இயக்குவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர்-அரியலூர் பிரதான சாலையில் கீழப்பளூர் அமைந்துள்ளதால் போதிய அளவு பேருந்து வசதி பெற்றுள்ளது. எனவே தடம் எண் 70-ஐ மீண்டும் இயக்க வேண்டியதில்லை.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீழப்பளூர்-தஞ்சாவூர் வழித்தடம் என்பது மிக முக்கியமான வழித்தடம். அதாவது ஜெயங்கொண்டம் சாலை, திருச்சி சாலை, திருச்சி-சிதம்பரம் சாலை, பெரம்பலூர் சாலை ஆகிய இடங்களை இணைக்கின்ற கீழப்பளூரிலிருந்து தஞ்சாவூருக்குச் சென்று கொண்டிருந்த அந்தத் தடம் எண் 70-ஐ திடீரென்று நிறுத்திவிட்டார்கள். அது மாணவர்கள் சென்று வருவதற்கு வசதியாக இருந்தது. ஆகவே, பயணிகளின் நலன் கருதி மீண்டும் அந்தத் தடம் எண் 70-ஐ இயக்குவதற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் முன்வருவாரா? அதோடு மட்டுமல்லாமல், குக்கிராமங்களில் சென்று கொண்டிருந்த அத்தனை பேருந்துகளையும் சமீபகாலமாக நிறுத்திவிட்டார்கள். அந்தப் பேருந்துகளையும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரியலூர்-தஞ்சாவூர் வழித்தடத்திலே மட்டும் ஒரு நாளைக்கு 69 நடைகள் பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே தனியாக கீழப்பளூர்-தஞ்சாவூருக்குப் பேருந்து வசதி செய்து கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் அதே வழித்தடத்திலேயே முக்கிய சாலையிலே இருக்கிறது அந்த ஊர். ஆகவே 69 நடைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிற அந்த வழித்தடத்தில் மேலும் கீழப்பளூரிலிருந்து தஞ்சாவூருக்குத் தனியாகப் பேருந்து விடுவதற்கான வாய்ப்புகள் இல்லை. நிறுத்தப்பட்டதாகச் சொல்லுகின்ற அந்தப் பேருந்துகள்கூட இப்போது நிறுத்தப்படவில்லை. முன்பு நிறுத்தப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். 1997-லிருந்து 3 ஆண்டுகளாக அது இயக்கப்படவில்லை. மேலும் பல



2000 ஏப்ரல் 17]

ஊர்களுக்கு ஓடிக்கொண்டிருந்த பேருந்துகள் நிறுத்தப்பட்டதாகச் சொன்னார்கள். நான் முன்பே சட்டமன்றத்திலேயே சொல்லியிருக்கிறேன். எந்தத் தொகுதியிலாவது ஓடிக் கொண்டிருந்த பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்குமானால் என்னிடம் அந்தக் குறிப்பை கொடுப்பீர்களானால் நிச்சயமாக அது இயக்கப்படும் என்ற உறுதியை மீண்டும் உங்களுக்கு நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 9-55

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று வழங்கப்பட்ட இரண்டு புதிய வழித்தடங்களில் ஓடிக் கொண்டிருந்த பேருந்துகளை நிறுத்திவிட்டார்கள். அதையாவது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்புகூட அந்தப் பகுதியிலே ஒரு கிளை திறக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினருடைய பகுதியிலே மட்டும் புதிய வழித்தடங்களாக, 5 வழித்தடங்கள் இந்த இரண்டு ஆண்டுகளிலே மட்டும் இயக்கப்பட்டிருக்கின்றன என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். ஆகவே, மேலும் மக்களுடைய தேவைகளைக் கருதி, அங்கே புதிய வழித்தடங்கள் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு முதலமைச்சர் அவர்கள் அளித்த வரவு-செலவுத் திட்டத்திலேகூட mini-bus பற்றி, ஒரு பெரிய சாதனையாகக் குறிப்பிட்டிருந்தார்கள். உண்மையிலேயே mini-bus பற்றி இந்த அரசு கொண்டுள்ள நிலை என்ன என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். Court-லே வழக்கு இருக்கிறது என்று சொல்லப்பட்டாலும்கூட, அந்தக் Court-லே ஆட்சேபனை செய்கின்றவர்கள் அரசு போக்குவரத்துக் கழகங்களிலேகூட ஆட்சேபனை செய்திருக்கின்றார்கள்.....

[2000 ஏப்ரல் 17

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை. இதற்குத் தனிக் கேள்வி போடவும். வினா எண் 309, திரு. ஆர். தமிழ்ச்செல்வன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**309—**

### அகல இரயில் பாதை

***33023—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் **கீழ்க்காணும்** வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம்-செங்கல்பட்டு இடையேயான அகல இரயில் பாதை திட்டப் பணி நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் விரைவில் பணியை முடிக்க மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) செங்கல்பட்டு-அரக்கோணம் வழித்தடம் அகல இரயில் பாதையாக மாற்றம் செய்யப்பட்டு 26-12-1999 முதல் பயணிகள் போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கேட்கும்போது அந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டிருந்தது; ஆனால் இப்போது இரயில் இயக்கப்படுகிறது. அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அரக்கோணத்திற்கு அருகில், அந்த இரயில் பாதைக்கு அருகில் வெங்கடேசபுரம் என்னுமிடத்தில் ஒரு கடவுப்பாலம் வேண்டுமென்று கேட்டிருந்தோம். அங்கே கிட்டத்தட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அதற்காக 7,18,250 ரூபாய் கட்ட வேண்டுமென்று இரயில்வே துறை கேட்டது. அதையும், நம்முடைய ஒப்பற்ற தலைவர் அவர்களால் வழங்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாயும் அந்தப் பகுதி மக்களின் சார்பில் 2,18,250 ரூபாயும் கட்டப்பட்டு



2000 ஏப்ரல் 17]

அதுவும் இரயில்வே துறையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், இன்று வரை அந்தக் கடவுப்பாலம் அமைக்கப்படவில்லை. அதுகுறித்தும் மத்திய அரசை வலியுறுத்தி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெற்றுத் தருவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது குறித்த கேள்வியை நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். பாலங்களெல்லாம், மேம்பாலங்களெல்லாம் நெடுஞ்சாலைத் துறையிலே வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோ. தளபதி.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விருதுநகர், கொல்லம், மதுரை, இராமேஸ்வரம் போன்ற அகல இரயில் பாதைத் திட்டம் காலதாமதப்பட்டாலும்கூட இந்த ஆண்டு மிகக் குறைந்த அளவில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது அரக்கோணம், செங்கல்பட்டு பற்றியது. வினா எண் 310, திரு. ரா. ஈஸ்வரன். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**310—**

### பாலத்தை விரிவுபடுத்துதல்

***28835—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் தொகுதி, தென்காசி - மதுரை நெடுஞ்சாலையில் (ஒத்தக்கடை-கூடலூர் சாலையில்) உள்ள பாலம மிகச் சிறியதாக போக்குவரத்திற்கு இடைஞ்சலாக உள்ளதால், அதனை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையைத் தெரிவிக்க அனுமதி கோருகிறேன்.

ஆம். பரிசீலனையில் உள்ளது.

[2000 ஏப்ரல் 17

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் இருக்கையில் இல்லை.

வினா எண் 311, திரு. ஏ.வி.ஏ. நாசர், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**311—**

**துறைமுகம்**

***29688—திரு. ஏ.வி.ஏ. நாசர்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டையிலிருந்த பழமையான துறைமுகத்தை மீண்டும் செயல்பட வைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழ வாய்ப்பில்லை.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு காலத்தில் பரங்கிப்பேட்டைத் துறைமுகம் என்பது ஏற்றுமதி, இறக்குமதிக்கு மிகவும் வாய்ப்பாக இருந்த ஒரு துறைமுகம். அந்தத் துறைமுகத்திலே பயணிகள் போக்குவரத்து மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்று இருந்திருக்கிறது. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று இங்கே பதில் அளித்திருக்கின்றார்கள். அந்தப் பகுதியிலே உள்ள மீனவர்கள் மீன்பிடித் துறைமுகம் அமைக்க வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்து வருகிறார்கள். பெங்களூரிலேயிருந்து அதற்குச் சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து இரண்டுமுறை ஆய்வுகளெல்லாம் நடத்தப்பட்டன. ஆனால் அது இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவே, அந்தப் பகுதி மீனவர்களின் நலனைக் கருத்தில் கொண்டாவது ஒரு மீன்பிடித் துறைமுகமாவது அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



2000 ஏப்ரல் 17]

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீன்பிடித் துறைமுகம் என்பது மீன் வளத் துறையின் சார்பிலே வருகின்றது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பரங்கிப்பேட்டையிலே துறைமுகம் அமைப்பது சம்பந்தமாக ஆர்வத்தைக் காட்டியிருக்கிறார்கள். பரங்கிப்பேட்டைக்கு அருகிலேதான் கடலூர் இருக்கிறது. கடலூர் துறைமுகம் வரலாற்றுச் சிறப்புமிக்க துறைமுகம். ஆனால், நம்முடைய துரதிருஷ்டம், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் துறைமுகங்கள் எல்லாம் கிழக்குக் கடற்கரைப் பகுதியிலே கடல் ஆழம் குறைந்து கொண்டே வருகிற காரணத்தால் அவற்றினுடைய முக்கியத்துவம், நாகப்பட்டினமாக இருந்தாலும், கடலூராக இருந்தாலும், பூம்புகாராக இருந்தாலும், பரங்கிப்பேட்டையாக இருந்தாலும், குறைந்திருக்கிறது. இருந்தாலும் கடலூருக்கு அருகில் திருச்சோபுரம் என்ற இடத்தில் பென்னார் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் (Pennar Oil Refineries) என்று ஒரு தொழிற்சாலை வர இருக்கிறது. அதன் மூலமாக கடலூருக்கு அருகில் திருச்சோபுரத்திலே ஒரு பெரிய துறைமுகத்தை உருவாக்குவதற்கான முயற்சி அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அந்தத் துறைமுகம் வருமானால் பரங்கிப்பேட்டை துறைமுகத்திற்கான தேவையும் இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 312, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**312—**

**வணிக வளாகம்**

***13248—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாச்சலம் நகரின் மையப்பகுதியில் உள்ள விருத்தகிரீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான இடத்தில் வணிக வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

[2000 ஏப்ரல் 17

அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10-00

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விருத்தாச்சலம் நகரத்தினுடைய மையப் பகுதியில் உள்ள விருத்தகிரீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமாக சுமார் 3 ஏக்கர் இடம் இருந்தது. அந்த இடத்தை விருத்தாச்சலம் நகராட்சி காய்கறி அங்காடி வைப்பதற்காக — புதியதாக இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு கடைகள் கட்டுவதற்கு முன்பாக — தற்காலிக ஏற்பாடாக அந்த இடத்தை நகராட்சி கோவில் நிர்வாகத்திலிருந்து வாங்கி 8 ஆண்டுகளுக்கு முன்பாக அங்கே கடை வைத்தார்கள். தற்போது நகராட்சி சார்பாக அங்காடியும் கட்டப்பட்டுவிட்டது. ஆனால், தற்போதுள்ள இடம் நகரத்தினுடைய மிக மையப் பகுதியில் இருக்கிற காரணத்தால் காய்கறி வியாபாரிகள் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அங்காடிகளுக்குச் செல்ல மறுக்கிறார்கள். நகராட்சி, கோயில் நிர்வாகம், மற்றும் நானும் பலமுறை முயற்சித்தும் அந்த வியாபாரிகள் செல்ல மறுக்கிறார்கள். இதன் காரணமாக கோயில் இடமும் தற்போது பாதுகாப்பான நிலையில் இருக்கிறது. கோயிலினுடைய வருமானமும் குறைந்த நிலையில் உள்ளது. எனவே, இந்த இடத்தைப் பாதுகாப்பதற்கும் கோயிலினுடைய வருமானத்தைப் பெருக்குகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தாலும் அருள்கூர்ந்து மாண்புமிகு அமைச்சரவர்கள் எதிர்காலத்தில் பரிசீலனையாவது செய்து அந்த இடத்தில் வணிக வளாகம் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி, செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சிக்கு ஏற்கெனவே 1 ஏக்கர் 5 சென்ட் நிலம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 3,300 வாடகையில் விடப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல அந்த இடம் பொதுமக்களால் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு, வணிகர்களுடைய விறுவிறுப்பான வணிகத்திற்கு வாய்ப்பான இடமாக இருக்கிறது என்பது மறுக்க இயலாத உண்மை. இப்போது நகராட்சி தருகின்ற கட்டணம் என்பது மிகவும் குறைவுதான். எனவே, முறைப்படி நகராட்சி சார்பில் வணிக வளாகம் கட்டப்பட்டு, அதில் போக மறுக்கிற நிலையில், வெகுவிரைவில் அவர்களை அங்கே போகச்



2000 ஏப்ரல் 17]

செய்து இந்த இடத்தை ஒழுங்கு செய்தபிறகு கண்டிப்பாக இந்தக் கோயிலின் சார்பில் அறநிலையத் துறையின் சார்பிலே வணிக வளாகம் கட்டுவதற்கு ஆவன செய்யப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக கோயில்களுக்கு நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் இப்போது பல்வேறு சட்டங்கள், விவசாய பாதுகாப்புச் சட்டங்கள், moratorium ஆகியவை போடுகின்ற காரணத்தினால் நில வருவாய், குத்தகை வருவாய் வருவதில்லை. அதனால் கட்டடம் கட்ட வேண்டுமென்று கோயில்கள் முனைகின்றன. அமைச்சர் அவர்களுக்கே தெரியும், 1989-லே நெல்லை, நெல்லையப்பர் கோயிலுக்கு ஊருக்கு மத்தியில் திரு. கே.பி.கே. அவர்கள் வணிக வளாகம் கட்டுவதற்கு அடிக்கல் போட்டார்கள். பிறகு 1998-லே நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்து சட்டமன்றத்தில் கேள்வி கேட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முன்பு அமைச்சராக இந்தத் துறைக்கு பொறுப்பேற்று இருந்த மாண்புமிகு செங்குட்டுவன் அவர்கள், அதற்கு உடனே கட்டப்படும் என்றார்கள். இப்போது கேட்டாலும் துறையினர் மூன்று வார்த்தைகளை வைத்திருக்கிறார்கள். ஒன்று investigation; இன்னொன்று estimate; மற்றொன்று, re-estimate; இதற்குள்ளேயே சுற்றிச்சுற்றி 10 ஆண்டுகாலம் ஆகிவிட்டது. அமைச்சர் அவர்கள்கூட ஒரு முறை இதைப் பார்வையிட்டார்கள். இந்த வணிக வளாகம் வருமா; எங்கள் பதவிக் காலத்தில், இந்த ஓராண்டு காலத்தில் அதன் வேலை தொடங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த முறையே மூன்று இடங்களில் வணிக வளாகம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது; அதில் ஒன்று தூத்துக்குடியில்; மற்றொன்று திருத்துறைப்பூண்டியில்; மற்றொன்று திருநெல்வேலி, நெல்லையப்பர் கோயிலில். ஆனால், நெல்லையப்பர் கோயிலுக்காக ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட இடம் ஒரு குளமாக இருந்து தூர்க்கப்பட்ட இடம் என்பதை நான் நினைவில் கொள்ள விரும்புகிறேன். அதனால் அங்கு போடுமண் போடப்பட்டதனால் சரியான உறுதிப்பாடு அதில் இல்லை. எனவே, அந்த உறுதிப்பாட்டை

[2000 ஏப்ரல் 17

நம்முடைய உதவி செயற் பொறியாளர்கள் தெளிவுபடுத்திய பிறகு எந்த அளவிற்கு அந்தத் தூண்கள் கீழே இறக்கப்பட வேண்டுமென்பதைக் கண்டறிந்த பிறகுதான் அதனுடைய வேலைகளைச் செய்ய முடியும். எனவே, தூத்துக்குடிக்கு வேகமாக வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிற இந்த நேரத்திலே, திருத்துறைப்பூண்டிக்கும் முழு அனுமதி பெற்றாகிவிட்டது. நெல்லையப்பர் கோயிலில் மட்டும் வேலை சற்றுச் சுணங்குவதற்குக் காரணம் பொறியாளர்களுடைய கருத்தை அறிவதற்காகத்தான். வெகுவிரைவில் அதற்கான வேலைகள் தொடங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக கோயில் நிலங்களில் குடியிருப்புப் பகுதிகள் அதிகமாக இருக்கின்றன. 50, 60 ஆண்டுகளாக இருக்கின்ற குடியிருப்புப் பகுதிகளில் அவர்களுக்கே அந்தக் குடியிருப்புகளைச் சொந்தமானதாகச் செய்கின்ற வகையில் 3 சென்ட் நிலம் அளித்து பட்டா வழங்கி விலைக்கு விற்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் பலமுறை இதற்கு விடை சொல்லப்பட்டிருக்கிறது. பழைய கோப்புகளைத் திருப்பிப் பார்க்கவும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 313, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**313—**

## தமிழ் ஆட்சிமொழி

***14962—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக அளவில் தமிழை ஆட்சிமொழியாக ஏற்றுக்கொண்ட நாடுகள் எவை என்பதை அரசு அறிவிக்குமா?



2000 ஏப்ரல் 17]

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டிலிருந்து அது அங்கு அமலில் உள்ளது?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இலங்கை மற்றும் சிங்கப்பூர்.

(ஆ) இலங்கையிலே தமிழ் ஆட்சிமொழியாக 26 சனவரி 1988 முதல் இப்போதும் செயல்படுகிறது. சிங்கப்பூரில் 1965 ஆகஸ்ட் 9 முதல் தமிழ் ஆட்சி மொழியாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் இருக்கையில் இல்லை. திரு. இரா. தாமரைக்கனி.

முற்பகல் 10-05

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிங்கப்பூர், இலங்கை போன்ற இடங்களில் எல்லாம் தமிழ் ஆட்சி மொழி ஆக்கப்பட்டிருக்கிறது. ரேடியோ, டி.வி. போன்றவற்றில் அங்கு எல்லாம் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். நம் நாட்டில் அப்படிக் கிடையாது. அப்படி முக்கியத்துவம் கொடுக்கிற அளவில் ஏற்பாடு செய்யப்படுமா? சமீபத்தில் ரஷ்யா போன்ற நாடுகளுக்குச் சென்றிருந்தேன். அங்கே பள்ளிக்கூட மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு வந்து தமிழில் ஆராய்ச்சி பண்ணுகிறார்கள். "ஆராய்ச்சி பண்ணுவதற்கு வேண்டிய புத்தகங்கள் நம்முடைய தமிழக அரசிடம் கேட்டால்கூடக் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள்," என்று சொல்கிறார்கள். ரஷ்யா போன்ற உலக நாடுகளில் உள்ள பல்கலைக் கழக மாணவர்கள் எல்லாம் நிறையப் புத்தகங்கள் கேட்கிறார்கள். உடனுக்குடனே அனுப்ப மாட்டேன் என்கிறீர்கள். அப்படி எந்தெந்த நாட்டில் இருந்து கேட்டு கோரிக்கை வந்திருக்கிறது. அதையெல்லாம் உடனுக்குடன் அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ரஷ்யாவுக்கு சென்று வந்ததை விளம்பரப்படுத்தியது மகிழ்ச்சிக்குரியது.

[2000 ஏப்ரல் 17

ஆனால் அவர் இதற்கிடையே ஒரு நாளாவது என்னைச் சந்தித்து, "ரஷ்யாவில் இப்படி நூல்களைக் கேட்கிறார்கள்" என்று முகவரியைக் கொடுத்திருந்தால் கண்டிப்பாக அனுப்பி வைக்கப்பட்டிருக்கும். ஏற்கெனவே, தலைவர் கலைஞர் அவர்கள், 3 இலட்ச ரூபாய் இதற்காக ஒதுக்கி 136 புத்தகங்கள் வீதம் 22 நாடுகளுக்கு அனுப்புவதற்கு ஒப்புதல் வழங்கி, பல நாடுகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. குறிப்பாக Reunion போன்ற நாடுகள் இன்னும் சொல்லப் போனால் மொரீஷியஸ் போன்ற நாடுகள், சிங்கப்பூர், மலேசியா போன்ற பல நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. அண்மையில் கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. நிஜாமுதீன் அவர்களுக்கு ஒரு மடல் வந்தது. பெஹ்ரைன் நாட்டில் இருந்து கேட்கிறார்கள் என்று, அவர் மடல் கொடுத்த அடுத்த நாளே அவருக்கு அந்த நூல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்றத்தில் மட்டுமே கேள்விகள் கேட்பதை வழக்கமாகக் கொள்ளாமல் நேரிடையாக முயற்சி செய்தால் அதுவும் அனுப்பி வைக்கப்படும். அதேநேரத்தில் இவர் முதலில் தொலைக்காட்சிப் பெட்டிகள் பற்றி எல்லாம் கேட்டார். தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் என்பது 1956 டிசம்பர் 27 முதல் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகிறது. இப்போது அதிக அளவில் தலைமைச் செயலகத்தில் இருந்து அடிமட்ட அலுவலகங்கள் வரைக்கும் பெரிய அளவிலே, வெற்றிகரமாக இது செயல்பட்டுக் கொண்டு வருகிறது. நீங்கள் சொன்ன தொலைக்காட்சி மற்றும் வானொலி போன்றவை தமிழக அரசுக்குத் தொடர்புடையன அல்ல என்பதை மட்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 314, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**314—**

**மத்திய கூட்டுறவு வங்கி**

***32241—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 ஏப்ரல் 17]

திருவள்ளூர் மாவட்டத்திற்கென்று தனியாக ஒரு மத்திய கூட்டுறவு வங்கியைத் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்திற்கென தனியாகக் கூட்டுறவு வங்கி அமைக்கக்கூடிய நிலை, எந்த நிலையில் உள்ளது? இப்போது இருக்கின்ற காஞ்சிபுரம் கூட்டுறவு வங்கியிலே தேர்தல் நடைபெற்று அங்கே முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பதவியில் இல்லை. தனி அதிகாரிகள்தான் ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையை மாற்றி உடனடியாக திருவள்ளூர் மாவட்டத்திற்கென்று கூட்டுறவு வங்கியைத் தொடங்கி அங்கே தேர்தல் நடத்தப்பெற்று முறையான வகையில் தலைவர், இயக்குநர்கள் பதவி ஏற்க அரசு வழிவகை செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனி அதிகாரி நியமிக்கப்பட்டு இருக்கிறார். இந்த வங்கியினுடைய சொத்துகள், காஞ்சிபுரம் மாவட்டத்தில் எவ்வளவு இருக்கின்றன, திருவள்ளூர் மாவட்டத்தில் எவ்வளவு இருக்கின்றன, என்று கணக்கெடுக்கப்பட்டு சரிசமமாகப் பிரிக்கப்பட்டு, புதிய வங்கி தொடங்கப்படுவதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகள் முடிந்த பிறகு, நபார்டு நிறுவன பொது மேலாளரின் அனுமதி பெற்று அதற்குப் பிறகு தலைமை, ரிசர்வ் வங்கியில் அனுமதி பெற்றுத்தான் அது தொடங்கப்படும். 'வங்கியை இரண்டாகப் பிரித்துத்தான் தேர்தல் நடத்தப்படவேண்டும்' என்று ஏற்கெனவே பல கோரிக்கைகள் வந்த காரணத்தால், அந்தத் தேர்தல் இப்போது நடத்தப்படாமல் இருக்கிறது. விரைவிலே தனித் தனியாகப் பிரித்துத் தேர்தல் நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது திருவள்ளூர் மாவட்டத்தில் மத்திய கூட்டுறவு வங்கி

தொடங்கப்படுகிற கேள்வியாக இருந்தாலும் திருவாரூர் மாவட்டத்திற்கும் மத்திய கூட்டுறவு வங்கி தொடங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்ததே, அது அரசினுடைய செயற்குறிப்பில் உள்ளதா? ஆம் எனில், எப்போது அது தொடங்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் வங்கியை இரண்டாகப் பிரிப்பது போல, திருச்சியில் இருக்கின்ற வங்கியை கரூர், பெரம்பலூருக்கு என்றும், அதேபோல சேலத்தில் இருக்கின்ற வங்கியை நாமக்கல், சேலம் என்ற வகையிலும் தஞ்சையில்—மூன்று மாவட்டங்கள் நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சை என்று இருக்கின்ற இடங்களிலே இரண்டு வங்கிகள் இப்போது இயங்கிக்கொண்டிருக்கின்றன—இன்னொரு வங்கி புதிதாகத் தொடங்கப்பட வேண்டுமென்ற அந்தப் பணிக்கும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு கணக்கெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கும்மிடிப்பூண்டி கி. வேணு.

**திரு. கும்மிடிப்பூண்டி கி. வேணு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், திருவள்ளூர் மாவட்டத்திற்கும், தனி மத்திய வங்கி தொடங்கப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகச் சொன்னார்கள். அதற்காக நன்றி. இந்த ஆண்டு இறுதிக்குள் அந்தப் பணிகள் முடிவு பெறுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனி அதிகாரி நியமிக்கப்பட்டு 6 மாத காலத்திற்குள்ளாக அவர்களுடைய கணக்குகள் தரப்பட வேண்டும் என்று இப்போது ஆணையிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு நபார்டு நிறுவன பொது மேலாளர், அதேபோல தலைமை வங்கியினுடைய — ரிசர்வ் வங்கியினுடைய—அனுமதி பெறுவதற்கு கிட்டத்தட்ட 6 மாதத்திற்குமேல் மேலும் 3 மாதம் ஆகும். விரைவிலே அந்த 9 மாத காலத்திற்குள்ளாக அந்த வங்கி பிரிக்கப்பட்டு, தேர்தலும் முறைப்படி நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைவிட இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர்கள் தமது





வங்கியை இரண்டாகப் பிரிப்பதற்குப் பல பேர் ஒப்புதல் தராமலும் General Body Meeting-லே அனுமதி பெறாமலும் இருந்துகொண்டிருக்கிறார்கள். அதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அங்கே 10 மாவட்ட கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. 80 தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. அதேபோன்று 4 நகர வங்கிகளும் செயல்பட்டு வருகின்றன. கிட்டத்தட்ட 107 கோடி ரூபாய் அங்கே இருப்பாகவும் வைத்திருக்கின்றார்கள். ஆகவே, தேனி மாவட்டத்தைத் தனியாகப் பிரித்து ஒரு மாவட்ட கூட்டுறவு வங்கி தொடங்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன். அதேபோன்று மாவட்டத்தினுடைய தலைநகராக இருக்கின்ற காரணத்தினால் அங்கே ஒரு நிலவள வங்கியும் தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல மாவட்டங்களிலிருந்து எங்களுக்கு வேண்டும் என்று எந்தெந்தப் பகுதியிலிருந்து கோரிக்கைகள் வந்தனவோ அந்தப் பகுதியிலேதான் பிரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேனிக்குத் தேவை என்று சொன்னால் அதைப்பற்றி இந்த அரசு ஆராயும். அதேபோல மாவட்டத் தலைநகராக இருக்கிறது; எனவே நிலவள வங்கி தேவை என்று சொன்னார்கள். 40 புதிய வட்டங்களிலே நிலவள வங்கி தொடங்குவோம் என்று கடந்த முறை சட்டமன்றத்திலே அறிவித்திருக்கிறோம். உரிய முன்மொழிவு இதுவரை 15 வங்கிகளுக்கு வந்திருக்கிறது. அனுமதிக்காக நபார்டுக்கு சென்றிருக்கிறது. தேனிக்கும் முன்மொழிவு வந்தால் விரைவிலே அதைப்பற்றி ஆராய்ந்து புதிதாகத் திறப்பதற்கு இந்த அரசு இசைவு அளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 315, திரு மா. இராமச்சந்திரன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

[2000 ஏப்ரல் 17

315—

## பகுதி நேர அங்காடி

***32530—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் ஒன்றியம், மருங்குளம் ஊராட்சி, கோபால் நகரில் ஒரு பகுதி நேர அங்காடி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தஞ்சை மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், மருங்குளம் ஊராட்சி, கோபால் நகர் கிராமத்தில் 109 குடும்ப அட்டைகளே இருப்பதால் அரசின் சிறப்பு அனுமதியோடு அங்கு பகுதிநேர நியாயவிலைக்கடை அமைக்க, தக்க செயற்குறிப்பு கேட்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது கிட்டத்தட்ட 156 அட்டைகள் இருக்கின்றன. அதுமட்டுமல்ல. அவர்கள் எல்லாம் கோபால் நகரிலிருந்து 3½ கிலோமீட்டர் தூரத்திலுள்ள மருங்குளம் வந்து பொருள்களை வாங்கிச் செல்ல வேண்டியிருக்கிறது. 3½ கிலோமீட்டர் தூரம் வர இருப்பதனால் ஒரு நாள் வேலை இழப்பு அவர்களுக்கு ஏற்படுகிறது. ஆகையினால் அரசு ஆணை மூலம் அங்கு ஒரு அங்காடி ஏற்படுத்த வேண்டும். அந்த அரசு ஆணையை அரசாங்கத்தின் மூலமாகச் செயலாளர்தான் போடவேண்டியிருக்கிறது. ஆகையினால் அதை எளிதாக்கிட மாவட்ட ஆட்சித் தலைவரே அந்தக் காரியங்களை ஆற்றுவதற்கான ஆணைகளைப் போட அரசு ஆணையிடுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பகுதிநேரக் கடைகளையும், புதிய நியாய விலைக் கடைகளையும் திறக்க வேண்டும் என்று ஆணையிட்டதற்குப் பிறகு கிட்டத்தட்ட 4,000 கடைகள் இப்போது புதிதாகத் திறக்கப்பட்டிருக்கின்றன. 4,000 கடைகள் திறக்கப்பட்டபிறகு அதே பகுதிநேரக் கடை என்றால் தாய்க்



2000 ஏப்ரல் 17]

கடையிலிருந்த நபரே 2 நாட்கள் சென்று அங்கு அந்தப் பொருள்களை வழங்கிக் கொண்டு வருகிறார்கள். பல இடங்களிலே வாரத்தில் 2 நாட்கள் திறந்து மீதி நாட்கள் மூடியிருக்கின்றபோது பல பேர்கள் ஏதோ நியாயவிலைக் கடை முழுமையாக மூடியிருப்பதாகவே கருதி பிரச்சாரம் செய்துகொண்டிருக்கிறார்கள். அதைவிட ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே பணிபுரிகின்ற நபர் 5 பேர் இருந்தால் அதற்கு அவர்களுக்குச் சம்பளம் தந்து மேலும் புதிதாகத் திறக்க முற்படுவது என்றால் அவர்களுக்குச் சம்பளம் தரக்கூடிய அளவுக்கு அந்தத் தொடக்க வேளாண்மை வங்கி வலுவுள்ளதாக இருக்க வேண்டும். அதையெல்லாம் கருத்திலே கொண்டுதான் 200 அட்டைகள் இருந்தால் பகுதிநேரக் கடை திறக்கலாம் என்று முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். எங்காவது ஜாதிப் பிரச்சினை அல்லது குறுக்கே ஆறு வந்து, வெகு சிரமமாக இருக்கின்ற இடங்களிலே சிறப்பு அனுமதியாக 100 அட்டைகள் இருந்தால்கூடத் தரலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதையும் ஆராயலாம். அப்படிச் சிறப்பு அனுமதி தேவையென்றால் அரசு வழங்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பவானி நகராட்சியிலே 18,000 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. இப்போது முழுநேர நியாயவிலைக் கடைகள் 12 தான் இருந்து வருகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கூடுதலாக நியாயவிலைக் கடைகளை—குறைந்தபட்சம் 6 கடைகளாவது அதிகப்படுத்தி—கொடுக்க வேண்டும் என்று அதிகாரியிடத்திலே விண்ணப்பத்தின் மூலமாகவும் நேரடியாகவும் கேட்டிருக்கிறேன். தங்களிடமும் எடுத்துக் கூறியிருக்கிறேன். ஆகவே உடனடியாக அரசின் மூலமாக கூடுதலாக 18,000 குடும்ப அட்டைகளுக்கு 18 கடைகள் இருக்கக்கூடிய அளவிலே, அரசு அனுமதி கொடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகர்ப் பகுதிகளிலே 800 அட்டைகளுக்கு ஒரு கடை அல்லது வார்டுக்கு ஒரு கடை என்ற அளவிலே அரசு சட்டம் இயற்றி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எத்தனை

[2000 ஏப்ரல் 17

வட்டங்கள் இருக்கின்றனவோ அத்தனை வட்டங்களுக்கும் ஒவ்வொரு கடை திறக்கலாம். ஆனால், நகர்ப்புறங்களிலே இடம் கிடைப்பதே கொஞ்சம் சிரமமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கே தகுந்த வாய்ப்பு இருந்தால், இடம் தயார் செய்து தருவாரேயானால் விரைவிலே கடையை நாங்கள் நிச்சயமாகத் திறந்து தருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. சண்முகம்.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம் கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் 300 கார்டுகள் அல்லது 3 கிலோ மீட்டர் தொலைவிருந்தால் நியாயவிலைக் கடைகள் ஆரம்பிக்கலாம் என்ற நிலையை மாற்றி 200 கார்டுகள் இருந்தாலே, இரண்டு கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கின்ற கிராமங்களிலே கடை அமைப்பதற்கான வசதிகளைச் செய்து தந்தார்கள். அதை இப்போது நாட்டு மக்கள் பாராட்டிக்கொண்டு இருக்கின்றார்கள். அந்தக் கடைகள் அமைக்கின்றபோது இரண்டு நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. ஒன்று, இலவசமாக இடம் தரவேண்டுமென்று சொல்கிறார்கள். அடுத்து, அந்தக் கடைகளுக்கு எடுத்து வரும் பொருட்களுக்கு அந்த கிராமத்தாரே வாடகையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். இடம் இலவசமாகத் தருவதில் எந்தவிதமான சிரமமும் இல்லை. ஆனால், தொடர்ந்து மாதாமாதம் சர்க்கரைக்கு ஒருமுறை செல்கின்றபோது அரிசி எடுப்பதற்கு ஒரு முறை செல்கின்றபோது வாடகை என்று கிராமத்திலே இருக்கிறவர்களால் கொடுக்க முடியாத சூழ்நிலையில் அங்கே சில தவறுகள் நடப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. கிலோவுக்கு விலையை ஏற்றுவதற்குக்கூட வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இலவசமாக இடம் தருவதை ஏற்றுக்கொண்டு, அங்கே கொண்டுவரும் பொருட்களுக்கான வாடகைச் செலவுகளை அந்த சம்பந்தப்பட்ட தொடக்கக் கூட்டுறவு வங்கிகளே ஏற்றுக்கொள்ளுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே கூட்டுறவுத் துறையிலே நல்லதொரு பதவியிலே பணியாற்றியவர்கள். நன்றாக அவருக்குத் தெரியும். ஒரு தொடக்கக் கூட்டுறவு வங்கியிலே இருக்கின்ற வங்கிகள் எவ்வளவு செலவை ஏற்றுக்கொள்ள முடியும் என்பதை அவரே அறிவார். ஏற்கெனவே, பகுதி நேரக் கடையைப் பொறுத்தவரை அந்தப் பகுதி மக்கள் விரும்பினால், அதற்கான இடத்தை இலவசமாகத்



2000 ஏப்ரல் 17]

தருவார்களேயானால், திறக்கப்படும் என்பதற்கு ஆணை இடப் பட்டிருக்கிறது. மற்றொன்று, அரசிலிருந்து அதிகமான நிதிச் சுமையை நாம் அவர்களுக்குத் தர இயலாத நிலையில் இருக்கிறோம். அதனால்தான் இலவச இடமும் போக்குவரத்துக் கட்டணமும் வசூல் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதில் மேலும் அதிகமான செலவு செய்ய இப்போது வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஆர். சரஸ்வதி.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய கூட்டுறவு வங்கி, நிலவள வங்கிகளில் தமிழ்நாடு முழுவதும் பல பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளத்தை அரசு அறியுமா? அப்பணியிடங்களை நிரப்ப அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விரைவிலே அரசு அப்பணியிடங்களை நிரப்புவதற்கான ஆணையை இடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்கள் பல காரியங்களை எளிதாக்க வேண்டுமென்று சொல்லி, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கே அந்த உத்தரவை இடுகிற—ஒரு ஆணையை வழங்கியிருக்கிறார்கள். அதேபோல, இப்போது பகுதி நேர அங்காடிகள் திறப்பதற்குரிய இடங்களிலே, அதுவும் அட்டைகள் குறைவாக இருக்கிற இடங்களிலே, 3 கிலோ மீட்டருக்கு மேலாக அல்லது 5 கிலோ மீட்டர் தூரத்திலே இருந்தால் அதற்கு அரசாணைதான் இட வேண்டும்; செயலாளர் வரையிலே வரவேண்டும்; அரசு வரையிலே வரவேண்டும்; அமைச்சர் வரையிலே வரவேண்டும் என்கிற சூழ்நிலை இருக்கிறது. அதை எளிதாக்கி, ஏனென்றால் இவ்வளவு தூரம் வருகிறபோது நீண்ட நாட்கள் ஆகின்றன. விரைவான முறையிலே அதற்கு நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ஆகையினாலே—மாவட்ட ஆட்சித் தலைவரே அந்த ஆணையை இடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாணை விளக்கமாக இருக்கிறது. 800 அட்டைகளுக்குத் தனிக் கடை; 800 அட்டைகளுக்குமேல் கூடுதலாக

[2000 ஏப்ரல் 17

500 அட்டைகள் இருக்குமானால் புதிய கடை; 800 அட்டைகளுக்கு மேல் கூடுதலாக 200 அட்டைகள் இருக்குமானால் பகுதி நேரக் கடை; 800 அட்டைகளுக்கு மேல் கூடுதலாக 100 அட்டைகள் இருக்குமானால்—அதிலே அங்கே ஒரு ஜாதிப் பிரச்சினையோ அல்லது மதப் பிரச்சினையோ இருக்குமானால் மாவட்ட ஆட்சித் தலைவரே அறிந்து அந்த 100 அட்டைகளுக்கும்—மாவட்ட ஆட்சித் தலைவரே அனுமதி வழங்கலாம். ஆனால், வெறும் 100 அட்டைகளை மட்டும் வைத்துக்கொண்டு ஒரு புதிய பகுதி நேரக் கடையைத் திறக்கின்றபோது அங்கேயுள்ள அந்த நிதிநிலைமையைக் கணக்கில் கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் நேரடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி அளிக்காமல் செயலாளர் அவர்கள் அனுமதியளிக்கிறார்கள். அந்த முறையை இப்போது மாற்ற இயலாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 316, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**316—**

**தொழிற்பயிற்சி நிலையம்**

***25332—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதியில் தச்சம்பட்டில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா இருக்கையில் இல்லை.

வினா எண் 317, திரு. ச. அழகுவேலு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.



2000 ஏப்ரல் 17]

**317—**

**தொழிற்பயிற்சி நிலையங்கள்**

***25919—திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் வட்டம், கண்டமங்கலம் ஒன்றியத்தில் விரைவில் தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 318, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**318—**

**நெசவுத் தொழிற்சாலைகள்**

***24735—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை விசைத்தறி நெசவுத் தொழிற்சாலைகள் உள்ளன?

(ஆ) இவற்றில் ஆண்டுக்கு எவ்வளவு மீட்டர் துணி உற்பத்தியாகிறது?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் 41,085 விசைத்தறிக் கூடங்களில் 2,62,903 விசைத்தறிகள் உள்ளன.

(ஆ) தமிழ்நாட்டில் விசைத்தறிகளில் ஆண்டுக்குத் தோராயமாக 1807 மில்லியன் மீட்டர் துணி உற்பத்தி செய்யப்படுகிறது.

[2000 ஏப்ரல் 17

*முற்பகல் 10-20*

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துணி உற்பத்தியில் முக்கிய இடத்தை வகிக்கிற இந்தத் தொழிலில் சமீப காலமாக ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. பெருமளவுக்கு விசைத்தறி நெசவுக் கூடங்கள் அனைத்தும் நேரடியாக மூலப் பொருளைப் பெற்று உற்பத்தி செய்து விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை; மூலப்பொருளை பெரிய நிறுவனங்களிடமிருந்து பெற்று உற்பத்தி செய்கின்ற நடவடிக்கையை மட்டுமே செய்து வருகின்றது. அப்படி ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்கின்ற அந்தத் தொழிலுக்கு மேலும் ஊக்கம் தரத்தக்க வகையிலே அரசு வேறு வகையான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறதா? அதன் விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு 60 விசைத்தறிச் சங்கங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அடுத்து, இருக்கின்ற ஒட்டுமொத்த 142 சங்கங்களில் 69 சங்கங்கள் இயங்குகின்றன. அந்த 69 சங்கங்களுக்கும் இலவச வேட்டி, சேலை உற்பத்தி வருடம் முழுமைக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது. கைத்தறித் துறைக்கு வருடம் முழுமைக்கும் கொடுத்த பின்புதான் விசைத்தறிச் சங்கங்களுக்குத் தேவையான அளவு இதுவரை முறையாகக் கொடுக்கப்பட்டு, நல்ல முறையில் உற்பத்தி நடைபெற்று வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆட்சியிலே விசைத்தறி நல்ல நிலைமையிலே இருப்பதாகச் சொன்னார்கள். இருந்தாலும் கைத்தறி நெசவுத் தொழிலிலே, கைலி நெய்பவர்கள் எனது தொகுதியிலே அதிகமாக இருக்கிறார்கள். அந்தக் கைலி நெய்பவர்கள், கிட்டத்தட்ட ஒரு கோடி கைலிகளுக்கு மேலாக உற்பத்தி செய்து அவை இப்போது என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய சங்கங்களில் மட்டும் இருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சென்ற ஆண்டு அந்த நெசவாளர்கள் மீது கருணை வைத்து 30 சதவீதம் தள்ளுபடி வழங்கினார்கள். அதனால், அதிகமான கைத்தறி கைலிகள் எல்லாம் வெளியே விற்கப்பட்டுவிட்டன. இருந்தாலும், இன்னும் இருக்கின்ற



*2000 ஏப்ரல் 17]*

கைலிகளை விற்கின்ற வகையிலே—அவர்கள் ஒரு வருடமாக வேலைவாய்ப்பு இல்லாமல், நெசவுப் பாவு போடப்படாமல், இன்று விவசாயக் கூலித் தொழிலாளர்களாகவும், கட்டடத் தொழிலாளர்களாகவும் மாறிக் கொண்டிருக்கிறார்கள்—அவர்கள்மீது கருணை வைத்து நம்முடைய தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் முன்பு வழங்கியது போல 30 சதவீதம் தள்ளுபடி வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஏற்றுமதிக்கு என்று உற்பத்தி செய்யப்பட்டு அதுவும் குறிப்பாக தனியார் ஏற்றுமதியாளர்களிடம் ஒப்பந்தத்தை சட்ட ரீதியாக வைத்துக்கொள்ளாமல், அப்படி நிலுவையிலே இருந்த லுங்கிகளைத்தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆலோசனையின்படி 30 சதவீத தள்ளுபடியிலே முற்றிலும் விற்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தோம். மீண்டும் அதே லுங்கியை நெய்து கொண்டு, அதற்காக மீண்டும் சதவீத தள்ளுபடி கேட்டு அனுப்பக்கூடிய வாய்ப்பு இல்லை. ஆகவே, தேவையான, நுகர்வோர் விரும்பும் உற்பத்தியைப் பெருக்குகின்ற அளவுக்கு விசைத்தறித் துறைக்கு நல்ல பல ஆலோசனைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, ஏற்றுமதித் துறையிலும் இன்று விசைத்தறியாளர்களுடைய பங்கு பெருமளவிலே இருக்கக்கூடிய அளவுக்கு இந்த இரண்டு மாத காலத்தில் அதுவும் சிறப்பாக அமைந்திருக்கிறது. நிச்சயம், எதிர்காலத்திலே விசைத்தறிக்கும் ஒரு நல்ல வாழ்வளிக்கக்கூடிய வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைப்பில் விசைத்தறி நெசவாளர்கள் அணுகப்பட்டது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தனியார் துறைகளில் இருக்கின்ற விசைத்தறி நெசவுக் கூடங்கள் அனைத்தும் Master Weavers என்ற அடிப்படையிலே துணியை உற்பத்தி செய்து கொடுக்கிற, கூலி வேலையை மட்டும் செய்கிற தொழிலாக நடைபெறுவதால் அதற்கு slab சிஸ்டத்திலே இருக்கிற மின் கட்டணத்தை ஒரு முறை மின் கட்டணமாக மாற்றி ஏதேனும் சலுகை வழங்குவதற்கு கைத்தறித் துறை மின்சார வாரியத்தோடு தொடர்பு கொண்டு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2000 ஏப்ரல் 17

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட மனுக்கள் சில வந்திருந்தாலும் அவை குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்துகொண்டு தக்க நேரத்திலே, உரிய பரிகாரம் காண நல்ல முறையிலே செயல்பட உள்ளோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 319, திரு. ம. சண்முகம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

முற்பகல் 10-25

**319—**

**மாணவர்கள் விடுதி**

***31488—திரு. ம. சண்முகம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவு தொகுதியில் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதி தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு தொகுதியில், பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஒன்று ஏற்கெனவே இயங்கி வருகிறது. மேலும் புதிய பிற்படுத்தப்பட்டோர் நலப்பள்ளி மாணவர் விடுதி தொடங்குவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிணத்துக்கடவு தொகுதியிலே 75 சிற்றூராட்சிகளும், இரண்டு பேரூராட்சிகளும் இருக்கின்றன. இரண்டு பேரூராட்சிகளிலும் இரண்டு மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. கிணத்துக்கடவிலே இயங்குகின்ற விடுதிக்குகூட கட்டட வசதி கிடையாது; ஒரு சிறிய கட்டடத்திலே, அதுவும் அவ்வப்போது மாற்றப்படுகின்ற ஒரு சூழ்நிலையிலே அந்த



2000 ஏப்ரல் 17]

விடுதி இயங்கிக் கொண்டிருக்கிறது. அதனால், மாணவர்கள் அதிகமாகச் சேர்வதற்கு வாய்ப்பு இல்லை. ஆகவே, கிணத்துக்கடவிலே இருக்கின்ற அந்த விடுதிக்கு ஒரு புதிய கட்டடம் அமைப்பதுடன், நெகமம் பேரூராட்சிப் பகுதியிலே ஒரு விடுதியை ஆரம்பிக்க, இந்த ஆண்டு அரசு முன்வருமா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையின் மூலமாக 972 விடுதிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் 30 மாணவ மாணவியர் விடுதிகள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் மட்டும் இயங்கி வருகின்றன. எனவே, மாணவ மாணவியருக்குப் புதிய விடுதிகள் தொடங்கப்படுவதைத் தவிர்த்து, தற்போது இயங்கிவரும் விடுதிகளை மேம்படுத்த வேண்டியிருப்பதால், அரசின் நிதிநிலையைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள இடத்தில் புதிய விடுதிகள் கட்டடங்கள் கட்டுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 320, திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**320—**

**கக்கன் நினைவு இல்லம்**

***29908—திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு செய்தி மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மறைந்த காவல் துறை அமைச்சரும், தமிழகத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கிய தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவருமான கக்கன் அவர்களின் பிறந்த ஊரிலுள்ள அவரின் வீட்டை தமிழக அரசு கக்கன் நினைவு இல்லமாக மாற்றி அவருக்குப் பெருமை சேர்க்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

[2000 ஏப்ரல் 17

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மறைந்த கக்கன்ஜி அவர்கள், இந்த நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடியது மட்டுமல்லாமல் அரசமைப்பு நிர்ணயச் சட்டசபையிலும் இருந்தார்கள். அதோடு, இந்த அவையில் பல ஆண்டுகள் அமைச்சராக இருந்து, உள் துறை அமைச்சர் பதவியையே அவர்கள் வகித்த, பொதுப் பணித் துறை, வேளாண்மைத் துறைகளையெல்லாம் வகித்த ஒரு மாபெரும் தலைவர் என்பதோடு, அவர் 1967 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தோல்வி அடைந்தபிறகு, தனக்கு என்று ஒரு வீடு இல்லாமல், தனக்கு என்று ஒரு கார் இல்லாமல், பஸ்சிலேயே பிரயாணம் செய்து, வரலாறு படைத்த ஒரு பெரிய, மகாத்மா காந்தியின் வழிவந்தவர் என்ற முறையில், அவருடைய இல்லத்தை — மேலூருக்குப் பக்கத்தில் இருக்கிற தும்பைப்பட்டி என்கின்ற ஒரு சிறிய கிராமத்தில், அவர்கள் பிறந்து, வளர்ந்த அந்த வீட்டை — நம்முடைய அரசு ஒரு நினைவுச்சின்னமாக எடுத்து, அவர் போன்ற உண்மையான தியாகிகளுக்கு, இந்த நாட்டில், இந்த அரசு பெரிய மரியாதையை வைத்திருக்கிறது என்பதை உலகிற்கு அறிவிக்க நம்முடைய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கருத்தின்படி, கக்கன் அவர்கள் வாழ்ந்த இல்லத்தை நினைவுச்சின்னமாக அமைப்பதற்கு இந்த அரசுக்கு எந்தத் தயக்கமும் இல்லை. ஏனென்றால், தொடர்ந்து தேச தியாகிகளை, கட்சி சார்பற்ற முறையில் மதித்துப் போற்றி அவர்களுடைய நினைவை மக்களிடத்திலே பரப்புகின்ற அந்த முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் மிக நன்றாக அறிவார்கள். காங்கிரஸ் அமைச்சரவையிலே அமைச்சராக இருந்த கக்கன் அவர்களுக்கு மாத்திரமல்ல; அந்த அமைச்சரவையிலே அமைச்சராக இருந்த திரு. இராமைய்யா அவர்களுடைய துணைவியார், சமீபத்திலே நான் புதுக்கோட்டை சென்றிருந்தபோது, தனக்கு ஒரு வீடு வேண்டும்; வீடுகூட இல்லையென்று சொன்னபோது, இராமைய்யா அவர்களுடைய தியாகத்தைப் போற்றி, பாராட்டி, அவருடைய துணைவியாருக்கு ஒரு இல்லமே இந்த அரசின் சார்பாக வழங்கப்பட்டிருக்கிறது. அதைப்போல,



2000 ஏப்ரல் 17]

நம்முடைய மறைந்த காங்கிரஸ் கட்சியினுடைய தியாகியும், முன்னாள் அமைச்சருமான கக்கன் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் இந்த அரசு, அவர்களுடைய தேவைகளையெல்லாம் கேட்டறிந்து, பல நேரங்களிலே உதவி செய்திருக்கின்றது. எனவே, யாரையும் மறந்துவிடுகின்ற அரசல்ல, இந்த அரசு. உலகத்திற்கு அறிவிக்கின்ற வகையிலே இதைச் செய்வார்களா என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். உலகத்திற்கு அறிவிக்கின்ற வகையிலேகூட அல்ல; எங்களுடைய உள்ளத்திற்கு ஒரு ஆறுதல் தேடிக்கொள்கின்ற வகையில் கக்கன் அவர்கள் வாழ்ந்த, அவர் பிறந்த இல்லத்தை நினைவுச்சின்னமாக ஆக்குவதற்கு இந்த அரசு தயங்காது; நிச்சயமாக ஆக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-30

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

*(பட்டியல்கள் 9 மற்றும் 10)**

(ஒன்பதாவது பட்டியல்)

### பள்ளிக்கட்டிடம் பராமரித்தல்

**வினா 21357—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மேலப்பாவூர் அரசு உயர்நிலைப் பள்ளி பராமரிக்கும் பொறுப்பை பொதுப்பணித் துறை ஏற்று பள்ளிக் கட்டடத்தை பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், மேலப்பாவூர் அரசு உயர்நிலைப்பள்ளி கட்டடங்கள் யாவும் அரசு பொதுக்கட்டடங்களில்

---

* இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தவையாகும்.

பதிவேட்டில் இடம் பெற்று பொதுப் பணித் துறையின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. மேலும் இப்பள்ளிக் கட்டடங்களில் சிறப்பு பழுதுபார்ப்பு பணிகட்கு நடப்பு நிதி ஆண்டில் ரூ.49,800 மற்றும் ரூ.28,800/- மதிப்பில் இரு மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

**2—**

## ஆய்வகக் கட்டடங்கள்

**வினா எண் 24580—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99ஆம் ஆண்டில் அரசு ஒதுக்கிய ரூ.20 கோடி தொகைக்கு எத்தனை பள்ளிகளில் ஆய்வக் கட்டடங்கள் கட்டப்பட்டன?

(ஆ) இதில் இன்னும் கட்டி முடிக்கப்படாத பள்ளிகள் எத்தனை உள்ளன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) 1998-99 ஆம் ஆண்டில் அரசாணை நிலை எண் 355, பள்ளிக் கல்வி நாள் 22-9-1998-ன்படி, 200 அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும், 173 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக் கூடங்கள் கட்ட அரசால் நிதி ஒதுக்கப்பட்டது. 153 அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும் மற்றும் 108 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் ஆய்வகம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மீதமுள்ள 47 அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும், 65 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் அறிவியல் ஆய்வுக் கூடங்கள் கட்டும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**3—**

## நவீனக் கழிப்பிடக் கட்டடம்

**வினா எண் 24911—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்ள நவீனக் கழிப்பிடக் கட்டடம் கட்டி முடித்து கடந்த 3 வருடமாக உபயோகப்படுத்தாமல் உள்ளதால் மாணவர்கள் அவதிப்படுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த நவீனக் கழிப்பிட கட்டடத்தை பழுதுபார்த்து மாணவர்கள் பயன்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் கட்டப்பட்டுள்ள நவீனக் கழிப்பிடத்தை பயன்படுத்த ஏதுவாக பழுதுபார்ப்பு மற்றும் தண்ணீர் வசதி அளிக்கும் பணிகள் பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டு விட்டன.

**4—**

## உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடம்

**வினா எண் 30498—திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், சி. கீரனூர் உயர்நிலைப் பள்ளிக்கு மூன்று வகுப்பறைகள் கொண்ட புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், சி. கீரனூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு 3 வகுப்பறை கட்டுவது சார்பாக, இவ்வாண்டு இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே சட்டமன்ற/ பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து இத்தகைய பணிகளுக்கு நிதி ஒதுக்க தொடர்புடைய சட்டமன்ற/

[2000 ஏப்ரல் 17

பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகுமாறு கடலூர் மாவட்ட ஆட்சி தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

5—

**பகுதிநேர நூலகம் அமைத்தல்**

**வினா எண் 31707—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை வட்டம், பூலாங்குடியிருப்பு கிராமத்தில் பகுதிநேர நூலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொது நூலகச் சட்டத்தின்படி 100-க்கும் அதிகமான மக்கட்தொகை கொண்ட இடங்களில் பகுதிநேர நூலகங்கள் திறக்கலாம். செங்கோட்டை வட்டம், பூலாங்குடியிருப்பு கிராமத்தின் மக்கள்தொகை சுமார் 3000 ஆகும். இவ்வூரில் பகுதிநேர நூலகம் திறப்பதற்கான விண்ணப்பங்கள் அவ்வூர் கிராம மக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன.

பகுதிநேர நூலகம் திறப்பதற்கான நிபந்தனைகளை அவ்வூர் கிராம மக்கள் மற்றும் பேரூராட்சி கவுன்சிலர்கள் நிறைவேற்றித் தருவதாக தெரிவித்துள்ளார்கள். எனவே, நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட்டதும் பகுதிநேர நூலகம் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

6—

**ரிசர்வ் தொகுதிகளை மாற்ற பரிந்துரை**

**வினா எண் 32847—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீண்ட நாட்களாக ரிசர்வ் தொகுதிகளாக இருக்கும் நாடாளுமன்ற/ சட்டமன்றத் தொகுதிகளை சுழற்சி முறையில் மாற்றுவதற்காக தேர்தல் கமிஷனுக்கு அரசு பரிந்துரை செய்துள்ளதா?



2000 ஏப்ரல் 17]

விடை—

**மாண்புமிகு பேராசியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தற்போதுள்ள சட்டமன்ற/நாடாளுமன்றத் தொகுதிகளில் மாற்றம் செய்ய 2001 வரை தடையாணை உள்ளது. மத்திய அரசால் 2001 மக்கட்தொகை கணக்கெடுப்பிற்குப் பிறகு நியமிக்கப்படவுள்ள எல்லை வரையறை ஆணையத்தால் மட்டுமே தொகுதிகளில் மாற்றங்கள் குறித்து பரிசீலிக்க இயலும். எனவே, இது குறித்து இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு பரிந்துரையேதும் அனுப்பப்பட வேண்டிய அவசியம் இல்லை.

7—

**துணை மின் நிலையம் அமைத்தல்**

**வினா எண் 28895—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சுந்தப்பட்டியில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மின் பகிர்மான வட்டம், சுந்தப்பட்டியில் ரூ.785.79 இலட்சம் செலவில் 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க வாரியம் நிலை ஆணை எண் 34, நாள் 24-2-1998-ல் அனுமதி வழங்கியுள்ளது.

(ஆ) தகுதியான நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்ட பின்னர், ஓராண்டுக்குள் பணிகள் முடிக்கப்பட்டு மின் நிலையம் இயக்கி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[2000 ஏப்ரல் 17

**8—**

## மின்சார அளவு

**வினா எண் 29094—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெய்வேலியில் உற்பத்தியாகும் வருடாந்திர மின்சார அளவு எவ்வளவு என்பதை அரசு தெரிவிக்குமா?

(ஆ) அதில் தமிழ்நாட்டுக்குக் கிடைக்கும் மின்னளவு எவ்வளவு?

(இ) அதில் பிற மாநிலத்திற்கு அனுப்பப்படும் மின்னளவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) நெய்வேலியில் அனல் மின் நிலையம் 1 மற்றும் அனல் மின் நிலையம் 2 ஆகிய இரண்டு நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சார அளவு கீழ் வருமாறு:

(மில்லியன் யூனிட்டுகள்)

| மின்நிலையம் | 1998-99 | 1999-2000 (ஏப்ரல் முதல் நவம்பர் முடிய) |
|---|---|---|
| நெய்வேலி அனல் மின்நிலையம் 1 | 3752.204 | 2560.774 |
| நெய்வேலி அனல் மின்நிலையம் 2 | 4096.888 | 2369.978 |
| பகுதி 1 | 4096.888 | 2689.978 |
| பகுதி 2 | 5471.275 | 3471.061 |

(ஆ) தமிழ்நாட்டுக்குக் கிடைத்த மின்னளவு கீழ்வருமாறு:-

(மில்லியன் யூனிட்டுகள்)

| மின்நிலையம் | 1998-99 | 1999-2000 (ஏப்ரல் முதல் நவம்பர் முடிய) |
|---|---|---|
| நெய்வேலி அனல் மின்னிலையம் 1 | 2843.790 | 2020.120 |
| நெய்வேலி அனல் மின்னிலையம் 2 | | |
| பகுதி 1 | 1139.140 | 761.497 |
| பகுதி 2 | 1509.560 | 974.055 |



2000 ஏப்ரல் 17]

(இ) நெய்வேலி அனல் மின்னிலையம் 1 இல் இருந்து வெளியேற்றப்படும் மின்சாரம் அத்தனையும் தமிழ்நாட்டிற்கு மட்டுமே.

நெய்வேலி அனல் மின்னிலையம் 2 இல் இருந்து வெளியேற்றப்பட்ட மின்சாரத்திலிருந்து பிற மாநிலங்கள் பெற்ற மின்னளவு பின்வருமாறு:

(மில்லியன் யூனிட்டுகள்)

| வருடம் | ஆந்திரா | பகுதி-1 கர்நாடகம் | கேரளா | பாண்டி |
|---|---|---|---|---|
| 1998-99 | 989.589 | 787.947 | 454.599 | 133.530 |
| 1999-2000 (ஏப்ரல் முதல் நவம்பர் முடிய) | 688.106 | 456.244 | 266.670 | 99.828 |

(மில்லியன் யூனிட்டுகளில்)

| வருடம் | ஆந்திரா | பகுதி-2 கர்நாடகம் | கேரளா | பாண்டி |
|---|---|---|---|---|
| 1998-99 | 1343.530 | 1054.750 | 605.309 | 177.812 |
| 1999-2000 (ஏப்ரல் முதல் நவம்பர் முடிய) | 906.838 | 597.178 | 349.106 | 128.459 |

**9—**

## லேப் டெக்னீஷியன் பணியிடம் நிரப்புதல்

**வினா எண் 29881—திரு. இரா. பொன்னார்டு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல அரசு மருத்துமனைகளில் ஆய்வக நுட்புநர் தரம்-1 (லேப் டெக்னீஷியன்) மற்றும் தரம்-2 (கிரேடு 1, 2) பணியிடங்கள் காலியாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு மருத்துவமனைகளில் காலியாகவுள்ள ஆய்வக நுட்பனர் (தரம் 1 மற்றும் தரம் 2) அனைத்து பணியிடங்களையும் நிரப்புவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**10—**

**மின்சார விபத்து**

**வினா எண் 32676—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1998-99 ஆம் ஆண்டு மே மாதம் முடிய மின்சாரம் தாக்கி மின் ஊழியர்கள் எவ்வளவு பேர் இறந்தனர்?

(ஆ) இறந்தவர்களின் குடும்பத்திற்கு அரசு நிவாரணம் அளித்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 1998-99 (4/98-5/99) ஆம் ஆண்டு மின்சார விபத்துகளில் 36 மின்வாரிய ஊழியர்கள் இறந்துள்ளனர்.

(ஆ) மேற்குறிப்பிட்ட மின் விபத்தில் இறந்தவர்களுக்கு ஈட்டுத்தொகை வழங்கப்பட்டதின் விவரம் கீழ்வருமாறு:—

| | | |
|---|---|---|
| (1) | இதுவரை ஈட்டுத்தொகை வழங்கப்பட்டுள்ளவர்கள் .. | 12 |
| (2) | ஈட்டுத்தொகை வழங்குவது பரிசீலனையில் உள்ளவை .. | 6 |
| (3) | ஈட்டுத்தொகை கோரும் விண்ணப்பங்கள் வாரிசுதாரர்களின் மூலம் பெறாமல் உள்ளவை .. | 17 |
| (4) | ஈட்டுத்தொகை வழங்குவதற்கான தகுதி பெறாதவர் .. | 1 |



**11—**

**குழந்தை பிறப்பு விகிதம்**

**வினா எண் 32843—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஓர் ஆண்டிற்கு எவ்வளவு குழந்தைகள் பிறக்கின்றன என்று அரசு கணக்கெடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு குழந்தைகள் பிறக்கின்றன?

(இ) இந்தியாவில் எந்த மாநிலத்தில் அதிகமாக குழந்தைகள் பிறக்கின்றன என்று அரசு கணக்கெடுத்துள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பிறப்பு இறப்பு பதிவு சட்டத்தின்படி தமிழ்நாட்டில் ஓர் ஆண்டில் சுமார் பதினோரு இலட்சம் குழந்தைகள் பிறக்கின்றன என்று கணக்கிடப்பட்டுள்ளது.

(இ) மத்திய அரசின் மாதிரி பிறப்பு இறப்பு பதிவுத் திட்டத்தின்கீழ் உத்தேசிக்கப்படுகின்ற பிறப்பு விகிதத்தின்படி உத்திரபிரதேசம் மாநிலத்தில் அதிகமான குழந்தைகள் பிறக்கின்றன எனத் தெரிய வருகிறது.

**12—**

**ஊதிய உயர்வு பிரச்சினை**

**வினா எண் 31538—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம ஊழியர்களின் ஊதிய உயர்வு பிரச்சினை அரசால் தீர்க்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2000 ஏப்ரல் 17

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வருவாய்க் கிராம ஊழியர்களது ஊதிய உயர்வு குறித்து அரசு மட்டத்தில் நன்கு ஆய்வு செய்யப்பட்டு மேற்படி கருத்துரு மீது மேல் நடவடிக்கையைத் தள்ளிவைக்க அரசு முடிவு செய்துள்ளது.

**13—**

**வணிக வளாகக் கட்டடங்கள் சீர் செய்தல்**

**வினா எண் 31468—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி, செய்யுதுங்கநல்லூரில் உள்ள வாரச்சந்தை நடைபெறும் வணிக வளாகக் கட்டடங்கள் இடிந்து விழும் நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) இதைச் சீர்செய்யும் கருத்துரு அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கருங்குளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த செய்யுதுங்கநல்லூரில் உள்ள வாரச்சந்தை நடைபெறும் வணிக வளாகக் கட்டடங்கள் இடிந்து விழும் நிலையில் உள்ளதை அகற்றி விட்டு புதியதாக 1998-99ஆம் ஆண்டு சமன்பாடு மற்றும் ஊக்கநிதியில் இருந்து ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் 16 கடைகளும், 1 கழிப்பிடமும் கட்டப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகின்றன.

**14—**

**வருவாய் விவரம்**

**வினா எண் 26450—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 ஏப்ரல் 17]

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 1997-98 ஆம் நிதியாண்டில் வசூலிக்க வேண்டிய வருவாய் வசூல் செய்யாமல் ரூ.18 இலட்சம் வரை நிலுவையில் உள்ளது குறித்து அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) அது பற்றிய விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமையையும், வரவு-செலவுத் திட்டங்களையும் தணிக்கை செய்ய அரசால் நியமிக்கப்பட்ட உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை 1997-98 ஆம் ஆண்டு கணக்குகளைத் தணிக்கை செய்து கொடுத்த தணிக்கை அறிக்கையில்,

(1) விடுப்பு சம்பளம் மற்றும் ஓய்வு ஊதியப் பங்குதொகை;

(2) தொழிலாளர் வைப்பு நிதிக்கு தொழிலாளர்களின் பங்காக வசூலிக்கப்படாத தொகை;

(3) வருவாய்த் துறைக்கு அதிகமாக நிலத்திற்குண்டான கட்டணம் செலுத்தியது;

(4) மற்ற வகைகளில் நிலுவையாக உள்ளவைகள் என்ற தலைப்பின் கீழ் ரூ.17,99,919.00 வசூல் செய்யாமல் நிலுவையில் உள்ளது

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக ஆசிரியர்களை பாண்டிச்சேரி அரசின்கீழ் உள்ள காரைக்கால் வேளாண்மைக் கல்லூரியில் பணிக்கமர்த்திய காரணத்தினால் அக்கல்லூரி முதல்வரிடம் இருந்து வரவேண்டிய விடுப்பு ஊதியம் மற்றும் ஓய்வு ஊதிய பங்குத்தொகை பற்றிய விவரங்களை அக்கல்லூரி முதல்வரிடமிருந்து பெறுவதற்குப் பல்கலைக்கழகத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஊழியர்களின் வைப்பு நிதிக்கு, ஊழியர்களின் பங்கை வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையை ஊழியர்களிடமிருந்து வசூலிக்க உரிய நடவடிக்கைகள் பல்கலைக்கழகத்தால் எடுக்கப்பட்டு வருகிறது. இவை தவிர இன்னும் வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகைகள்

[2000 ஏப்ரல் 17

பெரும்பாலும் அடுத்தடுத்த நிதியாண்டுகளில் வசூலிக்கப்பட வேண்டிய தொகையாகும்.

அத்தொகைகளை விரைந்து வசூலிக்க தகுந்த நடவடிக்கைகளைப் பல்கலைக்கழகம் எடுத்து வருகிறது.

15—

**அலுவலகக் கட்டடம்**

**வினா எண் 30723—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், இராதாபுரத்தில் உள்ள வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் அலுவலகம் தனியார் கட்டடத்தில் இயங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இராதாபுரம் வட்டம், இராதாபுரத்தில் உள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

16—

**அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம்**

**வினா எண் 31285—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஒன்றியம், எரியோடு பேரூராட்சிக்கு உட்பட்ட விவசாய அலுவலகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?



2000 ஏப்ரல் 17]

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஒன்றியம், எரியோடு பேரூராட்சிக்குட்பட்ட விவசாய அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட தற்சமயம் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

17—

**விவசாயக் கருவிகள்**

**வினா எண் 33115—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைத் துறை மூலம் வழங்கப்படும் விவசாயக் கருவிகள் தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகளுக்குத் தட்டுப்பாடின்றி கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) வேளாண்மைப் பொறியியல் துறை மூலமும் மற்றும் வேளாண்மைத் துறையின் மூலமும் விவசாயக் கருவிகள், தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகளுக்குத் தட்டுப்பாடின்றி கிடைக்க தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) (1) வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக தஞ்சாவூர் மாவட்டத்தில் மூன்று மண் தள்ளும் இயந்திரங்கள், 10 உழுவைகள் மற்றும் உபகரணங்கள், 9 ரோட்டரி துளைக் கருவிகள், 9 சிறு விசைத் துளைக் கருவிகள், 33 கைத்துளைக் கருவிகள் மற்றும் 3 காற்றமுத்தக் கருவிகள் ஆகியவை அம்மாவட்ட விவசாயிகளுக்கு வாடகைக்கு விடப்படுகின்றன.

(2) தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களான ஒருங்கிணைந்த தானிய

[2000 ஏப்ரல் 17

உற்பத்தி திட்டம் (அரிசி), தேசிய பயறு அபிவிருத்தி திட்டம், எண்ணெய் வித்து உற்பத்தி திட்டம், கரும்பு அபிவிருத்தி திட்டம் ஆகியவற்றின்கீழ் வேளாண் கருவிகள் அரசு சார்பு கூட்டுறவு நிறுவனமாகிய 'அக்ரோஃபெட்' மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

(3) தஞ்சாவூர் மாவட்டத்தில் வேளாண்மைத் துறை மூலம் பல்வேறு திட்டங்களின்கீழ் விவசாயிகளுக்கு இதுவரையில் வழங்கப்பட்ட கருவிகளின் விவரம் பின்வருமாறு:-

| வரிசை எண் | வருடம் | ஒருங்கிணைந்த தானிய உற்பத்தி திட்டம் | | எண்ணெய்வித்து உற்பத்தி திட்டம் | | பயறு அபிவிருத்தி திட்டம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஒருவழி கலப்பை | தழைமிதி கருவி | ஒருவழி கலப்பை | போஸ் கலப்பை | போஸ் கலப்பை | ஒருவழி கலப்பை |
| 1 | 1995-96 | 110 | 295 | - | - | 286 | - |
| 2 | 1996-97 | 638 | 628 | 217 | 35 | - | 274 |
| 3 | 1997-98 | 644 | 906 | 599 | 250 | - | - |
| | | | (150 பரம்பு பலகை) | | | | |
| 4 | 1998-99 | 807 | 491 | - | - | - | - |

(4) நடப்பாண்டிலும் (1999-2000) தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின்கீழ், எட்டு இலட்சம், ஒதுக்கப்பட்டு, வேளாண்மை கருவிகள் அக்ரோஃபெட் மூலம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

18—

## மராமத்துப் பணிகள்

**வினா எண் 8100—திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உலக வங்கி நிதியுதவியில் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட காண்டூர் கால்வாயிலும், பிரதான கால்வாயிலும் மராமத்து பணிகள் விரைவில் தொடங்கப்படுமா?



2000 ஏப்ரல் 17]

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

வங்கி ரூ.103.50 இலட்சம் நிதி உதவியுடன் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட சீரமைக்கும் பணிகள் 1997-ல் தொடங்கப்பட்டன. மொத்தம் 56 பகுதிகளாகப் பிரித்து மதிப்பீடுகள் தயாரித்து பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

| | விவரம் | எண்ணிக்கை | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | மொத்தப் பணிகள் | 56 | 11,791.655 |
| 2 | பணி முடிக்கப்பட்டவை | 12 | 1,557.56 |
| 3 | பணி முன்னேற்றத்தில் உள்ளவை | 38 | 9,150.96 |
| 4 | ஒப்பந்தப்புள்ளிகள் பல்வேறு நிலைகளில் | 3 | 522.435 |
| 5 | மதிப்பீட்டு தொகுப்புகள் அரசின் ஒப்புதல் பெற்று பணி தொடங்க வேண்டியவை | 3 | 560.70 |

அனைத்து பணிகளும் நல்ல முன்னேற்றத்தில் உள்ளன. அவைகளை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

19—

## வடிவாய்க்கால் தூர் வாரி ஆழப்படுத்துதல்

**வினா எண் 16895—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, தட்டானோடை-ஆணைவாரி வழியாக செல்லும் வடிவாய்க்கால் தூர் வாரி, ஆழப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2000 ஏப்ரல் 17

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* "வேலைவாய்ப்பு உறுதி திட்டம்" மற்றும் "நமக்கு நாமே" திட்டங்களின்கீழ் போதிய நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெறாததால் புவனகிரி தொகுதி, தட்டானோடை-ஆணைவாரி வழியாக செல்லும் வடிவாய்க்காலை தூர் வாரி ஆழப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படவில்லை. இனிவரும் நிதி ஆண்டுகளில் சிறப்பு நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப பணி மேற்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**20—**

**தாவரவியல் பூங்கா அமைத்தல்**

**வினா எண் 22908—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம், ஏற்காடு ஏரி அருகே 60 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.7 கோடி செலவில் தாவரவியல் பூங்கா அமைக்க மத்திய அரசிடம் தமிழக அரசு ஒப்புதல் பெற்றுள்ளதா?

*(ஆ)* ஆம், எனில், அந்தத் திட்டம் எப்பொழுது நிறைவேறும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் ஏற்காடு ஏரி அருகே 60 ஏக்கர் நிலப்பரப்பில் 7.00 கோடி செலவில் தாவரவியல் பூங்கா அமைக்க வனத் துறையில் எந்தத் திட்டமும் இல்லை.

**21—**

**தடுப்புச்சுவர் கட்டுதல்**

**வினா எண் 25793—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 ஏப்ரல் 17]

*(அ)* மன்னார்குடி தொகுதி, ஓசைப்பேரையூர் கிராம விவசாயம் பாசனம் பெற வெள்ளையாற்றிலிருந்து பிரியும் ஏ1 ஓசைபேரையூர் பாசன வாய்க்காலுக்கு அருகில் வெள்ளையாற்றில் தடுப்புச்சுவர் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* மன்னார்குடி தொகுதி, ஓசைப்பேரையூர் கிராம விவசாயம் பாசனம் பெற வெள்ளையாற்றிலிருந்து பிரியும் ஏ1 ஓசைப்பேரையூர் பாசன வாய்க்கால்களுக்கு அருகில் வெள்ளையாற்றில் மைல் 75/40-ல் ஒரு தடுப்பு அணை ரூ.9,00,000/- மதிப்பீட்டுத் தொகையில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**22—**

**தடுப்புச்சுவர் அமைத்தல்**

**வினா எண் 25796—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட பாமனியாற்றில் பரசபுரம், கோரையாற்றின் பட்டிமார் என்ற இடங்களில் ஏற்பட்ட உடைப்பை சரி செய்து நிரந்தரமாக தடுப்புச்சுவர் அமைத்திட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

இந்த ஆண்டு 1999-2000-ல் தூர் வாரும் பணிக்காக சிறப்பு நிதியாக ரூ.50.00 கோடி ஒதுக்கப்பட்டு வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பரசபுரம்

மற்றும் பட்டிமார் ஆகிய கிராமங்களில் தூர் வாரும் பணி முடிக்கப்பட்டு கரைகள் பலப் படுத்தப்பட்டுள்ளன.

**23—**

**வாய்க்கால் செப்பனிடல்**

**வினா எண் 27163—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோனம் ஒன்றியம், திட்டன்விடுதி கிராமத்தில் பள்ளவயல் அருகில் 2½ கி. மீட்டர் நீளம் செப்பனிடப்படாமல் உள்ள வாய்க்காலை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், திட்டன்விடுதி கிராமத்தில் வண்ணான் ஓடை குளத்தில் உபரி நீர் செல்லும் வாய்க்கால் பள்ளவயல் வாய்க்கால் ஆகும். இவ்வடிகால் வாய்க்கால் வரும் 2000-2001 ஆண்டில் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் தூர் வாரும் திட்டத்தில் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்படும்.

**24—**

**விருந்தினர் விடுதி நவீனப்படுத்துதல்**

**வினா எண் 27217 திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரத்தநாடு தொகுதி, நீடாமங்கலம் கோரையாறு தலைப்பில் உள்ள பொதுப் பணித் துறை விருந்தினர் விடுதியை நவீனப்படுத்தித் தர அரசு முன்வருமா?





விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

ஒரத்தநாடு தொகுதி, நீடாமங்கலம் கோரையாறு தலைப்பில் உள்ள பொதுப் பணித் துறை விருந்தினர் விடுதியை நவீனப்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**25—**

**அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்கள்**

**வினா எண் 17917—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் அரசால் அங்கீகாரம் செய்யப்பட்ட தொழிற்சங்கங்கள் எத்தனை?

(ஆ) அங்கீகாரம் செய்ய, அரசு என்ன விதிகள் நிர்ணயித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1998 ஆம் உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி தேர்தல் நடத்தப்பட்டு போக்குவரத்துக் கழகங்களில் இரகசிய வாக்கெடுப்பின் மூலமாக 10000 வாக்குகள் பெற்ற தொழிற்சங்கத்திற்கு ஒரு பிரதிநிதி என்ற வகையில் தேர்ந்தெடுக்கப்பட்டு தற்போது தொழிலாளர் முன்னேற்ற சங்கப்பேரவை சார்பில் 2 பேரும், அண்ணா தொழிற்சங்கப் பேரவை சார்பில் 2 பேரும் சி.ஐ.டி.யு. தொழிற்சங்கப்பேரவை சார்பில் ஒருவரும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் பணியாளர் சம்மேளனம் சார்பில் ஒரு நபரும் ஆக நான்கு தொழிற்சங்க கட்டமைப்புகள் மட்டுமே ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தை, போனஸ் பேச்சுவார்த்தை மற்றும் அது தொடர்பான இதர பேச்சு வார்த்தைகளுக்கு அழைக்கப்படுகின்றன.

[2000 ஏப்ரல் 17

26—

## ஒரே அரசுப் போக்குவரத்துக்கழகமாக்குதல்

**வினா எண் 20232—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கர்நாடகம், கேரளா ஆகிய மாநிலங்களில் உள்ளது போல் தமிழ்நாடு முழுவதும் ஒரே அரசுப் போக்குவரத்துக்கழகமாக மாற்ற அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களில் உள்ளது போல் தமிழ்நாடு முழுவதும் ஒரே அரசுப் போக்குவரத்துக்கழகமாக மாற்றுவது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

27—

## விமான ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி

**வினா எண் 25037—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம்-காமலாபுரம் விமான நிலையத்தில் அரசின் சார்பாக விமான ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சேலம்-காமலாபுரம் விமான நிலையத்தில் அரசின் சார்பாக விமான ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி அமைப்பது சம்பந்தமான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

28—

## விமானப் போக்குவரத்து

**வினா எண் 25038—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 ஏப்ரல் 17]

சேலத்திற்கு விமானப் போக்குவரத்து விடுவதற்கு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சென்னை-சேலம், கோயம்புத்தூர்-சேலம் ஆகிய நகரங்களுக்கு இடையேயான பயணிகள் போக்குவரத்து, வியாபார ரீதியாக விமானப் போக்குவரத்து நடத்த போதுமானதாக இல்லை. எனவே, சேலத்திற்கு விமானம் இயக்க இந்திய விமானப் போக்குவரத்து நிறுவனத்திடம் எந்தவித திட்டமும் இல்லை.

29—

## சமையல் எரிவாயு உருளைகள்

**வினா எண் 9807—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நியாயவிலைக் கடைகள் நடத்தும் கூட்டுறவு அமைப்புகளுக்கு சமையல் எரிவாயு உருளைகள் விற்கும் உரிமை மத்திய அரசிடம் கோரிப் பெறும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

இல்லை.

30—

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம்

**வினா எண் 31607—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், ஆவுடையானூரில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம்

[2000 ஏப்ரல் 17

அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழ்ப்பாவூர் ஒன்றியம், ஆவுடையானூரில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் அமைத்தால் அது நபார்டு நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததுடன், தன்னிறைவு பெற்ற வங்கியாக செயல்படாது என்பதாலும் அங்கு புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**31—**

### ஊக்கத் தொகை விவரம்

**வினா எண் 32849—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் விவசாயிகள் பெற்ற கடனை குறித்த காலத்தில் திருப்பிச் செலுத்திய விவசாயிகளுக்கு அரசு ஊக்கத் தொகை வழங்கியதில் அரசு எவ்வளவு ரூபாய் 1999ஆம் ஆண்டு ஒதுக்கியது?

(ஆ) இதனால் எவ்வளவு பேர் பயன் அடைந்தனர்?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒழுங்காக பயிர்க்கடனை திருப்பிச் செலுத்திய விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் ரூ.15 கோடி நிதி ஒதுக்கப்பட்டு 1,47,654 சிறு மற்றும் குறு விவசாயிகள் ரூ.6.58 கோடி அளவுக்கு பயன் பெற்றுள்ளனர்.



2000 ஏப்ரல் 17]

**32—**

### அரிசி கொள்முதல்

**வினா எண் 33081—திரு. ஆர்.ஆர் சேகரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99-ஆம் ஆண்டில் பொது விநியோகம் செய்ய வெளி மாநிலங்களில் இருந்து எத்தனை டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டுள்ளது?

(ஆ) எந்தெந்த மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 1998-99-ஆம் ஆண்டில் பொது விநியோகத்திற்காக வெளி மாநிலங்களிலிருந்து, அரிசி ஏதும் கொள்முதல் செய்யப்படவில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**33—**

### நெல் கொள்முதல்

**வினா எண் 33090—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசாங்க நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளுக்கு உடனடியாகப் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால், நேரடி கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்படும் நெல்லிற்கு

[2000 ஏப்ரல் 17

பட்டியலிட்டவுடன் எந்தவிதத் தடையுமின்றி பணம் பட்டுவாடா செய்யப்படுகின்றது.'

**34—**

### கறவை மாடுகள் வாங்கக் கடன்

**வினா எண் 24263—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* விவசாயிகள் கறவை மாடுகள் வாங்கிட பால்வள ஒன்றியங்கள் மூலம் கடன் வழங்கப்படுகிறதா?

*(ஆ)* ஆம் எனில், எத்தனை விவசாயிகளுக்குக் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது?

*விடை—*

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

*(அ)* விவசாயிகள் கறவை மாடுகள் வாங்கிட பால்வள ஒன்றியங்கள் மூலம் கடன் வழங்கப்படுவதில்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

**35—**

### ஆவின் நிறுவனம் மூலம் வருமானம்

**வினா எண் 29829—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆவின் நிறுவனம் மூலம் தயாரித்து விற்பனை செய்யப்படும் பொருட்கள் மூலம் அரசிற்குக் கிடைக்கும் ஆண்டு வருமானம் எவ்வளவு?

*விடை—*

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மூலம் விற்பனை செய்யப்படும் ஆவின் பால் உப பொருட்களுக்காக மாதந்தோறும் அரசிற்கு விற்பனை வரி



2000 ஏப்ரல் 17]

செலுத்தப்பட்டு வருகிறது. அவ்வாறு கடந்த ஆண்டு (1998-99) பால் உப பொருட்கள் விற்பனை செய்ததன்பேரில், அரசிற்கு சுமார் ரூ.303.80 இலட்சம் விற்பனை வரியாக செலுத்தப்பட்டுள்ளது.

**36—**

### மத்திய சிறைச்சாலை தொடங்குதல்

**வினா எண் 33546—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மத்திய சிறைச்சாலை இயங்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* மத்திய சிறைச்சாலை நாமக்கல் மாவட்டத்தில் புதிதாகத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

*விடை—*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திண்டுக்கல், இராமநாதபுரம், திருவைகுண்டம் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய கிளைச் சிறைகளை மாவட்டச் சிறையாக உயர்த்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நாமக்கல் மாவட்டத்தில் ஒரு மத்திய சிறைச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**37—**

### பெண்களுக்குத் தனி சிறைச்சாலை

**வினா எண் 33547—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலத்தில் பெண்களுக்கான மத்திய சிறைச்சாலை இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், சேலத்தில் பெண்களுக்கென தனியாக சிறைச்சாலை புதிதாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

[2000 ஏப்ரல் 17

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) சேலத்தில் பெண்களுக்கென மத்திய சிறை இல்லை என்பது அரசுக்குத் தெரியும்.

(ஆ) சேலம் தனிக் கிளைச் சிறையில் பெண் சிறைவாசிகளை வைப்பதற்கு ஒரு தொகுதி இயங்கி வருகிறது. தற்போது இத்தொகுதியில் 53 பெண் சிறைவாசிகள் அடைக்கப்பட்டுள்ளனர். சேலம் மாவட்டத்தில் மொத்த பெண் சிறைவாசிகளின் அடைப்பு எண்ணிக்கையை கணக்கில் கொண்டால், அவர்களுக்கென சேலத்தில் மத்திய சிறைச்சாலை புதிதாகக் கட்ட வேண்டிய நேர்வு எழவில்லை.

**38—**

### மாணவர் விடுதிகளுக்குச் செலவு

**வினா எண் 20591—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 1997-98-ல் தமிழ்நாடு முழுவதுமாக உள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை தங்கும் மாணவர் விடுதிகளுக்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) அதில் ஒரு மாணவருக்கு செய்யும் செலவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கடந்த 1997-98-ல் தமிழ்நாடு முழுவதுமாக உள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையில் நடத்தும் விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர்/மிக பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் மாணவ/மாணவியர்களுக்கென செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 25.54 கோடியாகும்.

(ஆ) பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலப் பள்ளி விடுதிகளில் தங்கிப் பயின்ற மாணவ/



2000 ஏப்ரல் 17]

மாணவியர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு செலவிடப்பட்ட தொகை ரூ. 2,189/- ஆகும். கல்லூரி விடுதியில் தங்கிப் பயின்ற மாணவ/மாணவியர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு செலவிடப்பட்ட தொகை ரூ. 2,950/

**39—**

### மாணவர் விடுதி

**வினா எண் 29800—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கொங்கணாபுரத்தில் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறதா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் அரசு கட்டடத்தில் இயங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கொங்கணாபுரத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அவ்விடுதிக்குக் கட்டடம் கட்டித் தருவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**40—**

### விடுதிக்குக் கட்டடம்

**வினா எண் 29933—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை விடுதிகள் தனியார் கட்டடங்களில் இயங்குவதை அரசு அறியுமா?

[2000 ஏப்ரல் 17

(ஆ) ஆம் எனில், சிறப்புத் திட்டத்தின்கீழ் விடுதிக்குக் கட்டிடம் கட்டித்தர அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்தம் 24 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் 1 விடுதி மட்டும் அரசு சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேலும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளுக்குக் கட்டடம் கட்டிக் கொடுப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**41—**

**நிதியுதவி**

**வினா எண் 30222—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு மத்திய அரசால் வழங்கப்படும் நிதியுதவி எவ்வளவு?

(ஆ) இத்தொகை முழுமையாக 1998-99-ல் செலவிடப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு மத்திய நிதிக் கழகங்களிடமிருந்து திருப்பிச் செலுத்த வேண்டிய நிதியுதவி (காலக் கடன்கள்) அளிக்கப்படுகிறது. 31-12-1999 வரை இக்கழகம் புதுடெல்லியிலுள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ. 24,81,88,650 ம், தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து ரூ. 4,64,00,000 ம் நிதியுதவி பெற்றுள்ளது.



2000 ஏப்ரல் 17]

(ஆ) இந்த நிதியுதவித் தொகையில் பிற்படுத்தப்பட்டோருக்கு ரூ. 1,969 இலட்சங்களும், சிறுபான்மையோருக்கு ரூ. 143 இலட்சங்களும் கடன் தொகையாக வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பயன்பெற்றுள்ள பயனாளிகளில், பிற்படுத்தப்பட்டோர் - 15821 பேரும், சிறுபான்மையினர் - 275 பேரும் ஆவர்.

**42—**

**மாணவர் விடுதிக்குக் கட்டடம்**

**வினா எண் 30225—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் மற்றும் மாணவியர்கள் விடுதிகள் எத்தனை உள்ளன?

(ஆ) இவற்றில் எத்தனை விடுதிகள் சொந்தக் கட்டடத்தில் இயங்குகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதியில் 8 பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிகள் 2 பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் புவனகிரி பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி மட்டும் அரசு சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. புவனகிரி தொகுதியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ/மாணவியர் விடுதிகள் ஏதும் இயங்கவில்லை.

**43—**

**வட்டி விகிதம் குறைத்தல்**

**வினா எண் 30341—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 ஏப்ரல் 17

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் வழங்கும் கடன் தொகைக்கு வட்டி விகிதத்தைக் குறைக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் வழங்கும் கடன் தொகைக்கு வட்டி விகிதத்தைக் குறைப்பது சாத்தியமில்லை.

44—

**சிறப்புப் பயிற்சி அளிக்க நிதியுதவி**

**வினா எண் 30345—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 8 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்க நிதியுதவி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்கள் மாநிலம் முழுவதும் பரவியுள்ள பள்ளிகளில் படிப்பதாலும், மாணவர்கள் எண்ணிக்கை அதிகமுள்ளதாலும், பிரத்தியேகமாக 8 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்க நிதியுதவி செய்யும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



2000 ஏப்ரல் 17]

45—

**மாணவர் விடுதிக்குக் கட்டடம்**

**வினா எண் 31697—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஒன்றியம், இராமநாதபுரத்தில் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஒன்றியத்தில் இராமநாதபுரத்தில் இயங்கிவரும் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்டித் தரக் கோரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

46—

**மாணவ, மாணவியர் விடுதி**

**வினா எண் 33034—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, வெள்ளரி வெள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவ/மாணவியர் விடுதி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, வெள்ளரி வெள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர்/மாணவியர் விடுதி தொடங்குவதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2000 ஏப்ரல் 17

**47—**

**புதிய கட்டடம்**

**வினா எண் 13291—டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரியில் பத்திரப்பதிவு சார்பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிதாகக் கட்டடம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அதற்கான ஆணை பிறப்பிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரியில் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், இணை சார்பதிவாளர் அலுவலகம்-I மற்றும் இணை சார்பதிவாளர் அலுவலகம்-II ஆகியன அரசு கட்டடத்திலேயே இயங்குவதால், புதிதாகக் கட்டடம் கட்டும் கேள்விக்கு இடமில்லை.

**48—**

**பத்திரப்பதிவு செய்தல்**

**வினா எண் 31211—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு கிராமத்திலுள்ள நிலங்களில் மதிப்பீடுகளை குழுக்கள் அமைத்து அதன் மூலம் மதிப்பீடு தயார் செய்து அந்த மதிப்பீட்டின் அடிப்படையில் பத்திரப்பதிவு செய்ய, பரிந்துரை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பதிவுத் துறையில் கூடுதல் பதிவுத் துறைத் தலைவரின் தலைமையின்கீழ் நில நிர்வாக இணை ஆணையரை ஒரு



2000 ஏப்ரல் 17]

உறுப்பினராகக் கொண்டு வழிகாட்டிக் குழு செயல்பட்டு வருகிறது. இவ்வழிகாட்டிக் குழு, துறையிலுள்ள களப்பணி அலுவலர்களுடன் சேர்ந்து மனைப்பிரிவுகளையும், மனையிடங்களையும் ஆய்வு செய்தும், விசாரணையின் மூலமும் பதிவுப் புள்ளிவிவரங்கள் அடிப்படையிலும், கிராமங்களில் உள்ள நிலங்கள் உட்பட சொத்துக்களின் சரியான மதிப்பை நிர்ணயம் செய்கிறது. அந்த மதிப்பீட்டின் அடிப்படையில் பத்திரப்பதிவு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**49—**

**அலுவலகத்திற்குக் கட்டடம்**

**வினா எண் 31221—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூரில் சார்பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடப்பாண்டில் நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

கொளத்தூர் சார்பதிவாளர் அலுவலகம் முகாம் அலுவலகமாக செயல்படுவதால் அரசு கட்டடம் கட்டத் தேவையேதும் இல்லை.

**50—**

**தாட்கோ மூலம் பணிகள்**

**வினா எண் 32828—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் தாட்கோ மூலம் கடந்த ஆண்டு செய்யப்பட்ட பணிகளின் விவரம் என்ன?

[2000 ஏப்ரல் 17

(ஆ) இதன் மூலம் பயனடைந்தோர் எண்ணிக்கை எத்தனை?

விடை —

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடந்த ஆண்டு (1998-99) சேலம் மாவட்டத்தில் தாட்கோ மூலம் செய்யப்பட்ட பணிகள் மற்றும் பயனடைந்தோர் பற்றிய விவரம் வருமாறு:—

| பணிகள் | எண்ணிக்கை |
|---|---|
| 1. பம்ப்செட் 5 குதிரை திறன் | 8 |
| 2. பம்ப்செட் 7 குதிரை திறன் | 10 |
| 3. இரு காளைகளுடன் கூடிய டயர் வண்டி | 35 |
| 4. மிதிவண்டியுடன் கூடிய விசைத்தெளிப்பான் | 4 |
| 5. தனிநபர் தொழில் முனைவோர் திட்டம் | |
| (அ) ஆதிதிராவிடர்கள் | 136 |
| (ஆ) பழங்குடியினர்கள் | 29 |
| 6. பெண் குழந்தைகளின் கல்வித் திட்டம் | |
| (அ) ஆதிதிராவிட மாணவிகளுக்கு 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு முடிய | 4,877 |
| (ஆ) பழங்குடியினர் மாணவிகளுக்கு 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு முடிய | 907 |
| (இ) பழங்குடியினர் மாணவிகளுக்கு 6 ஆம் வகுப்பு | 1,032 |
| 7. துப்புரவுப் பணியாளர் மற்றும் அவரைச் சார்ந்தோர்களின் புனர்வாழ்வு திட்டம் | 30 |
| மொத்தம் | 7,068 |



2000 ஏப்ரல் 17]

1—

## பத்தாவது பட்டியல்

### விளையாட்டு மைதானம்

**வினா எண் 8295—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாங்குநேரி தொகுதி, கரந்தநேரி உயர்நிலைப் பள்ளிக்கு அதன் அருகே உள்ள புறம்போக்கு நிலத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை —

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

நாங்குநேரி தொகுதி, கரந்தநேரி உயர்நிலைப்பள்ளிக்கு புல எண் 103/2-ல் உள்ள நிலத்தை விளையாட்டு மைதானம் அமைக்க கையகப்படுத்துவது சார்பாக, திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலுவலரால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2—

### நூலகம் அமைத்தல்

**வினா எண் 20918—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், 1998-99 ஆம் ஆண்டு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள குணராமநல்லூர் ஊராட்சி, மேலமெஞ்ஞானபுரம் கிராமத்திற்குப் பொது நூலகம் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை —

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், மேல மெஞ்ஞானபுரம் கிராமம், 1998-99 ஆம் ஆண்டு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கிராமமாக

[2000 ஏப்ரல் 17

இருப்பதால், இந்தக் கிராமத்தில் பகுதிநேர நூலகம் திறக்க வாடகைக் கட்டடம் அளித்தல், காலிமனை பெறுதல், ரூ. 1,000 உடன் இரண்டு புரவலர்கள் சேர்த்தல் ஆகிய நிபந்தனைகள் தளர்த்தப்பட்டு ஒரு பகுதிநேர நூலகம் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**3—**

## கட்டட வசதி

**வினா எண் 22966—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பாவூர்சத்திரம் த.பி.சொ. அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பொது மக்கள் நன்கொடையாக வழங்கியுள்ள கணினிகளை நிறுவுவதற்குத் தேவையான கட்டட வசதிகளை செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாராளுமன்ற/சட்டமன்ற உறுப்பினர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் பள்ளிகளில் வசதிகள் செய்து கொடுப்பதற்கென அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த ஒதுக்கீட்டிலிருந்து இத்திட்டத்தின்கீழ் மேற்கண்ட ஊர் தொகுதி பாராளுமன்ற/சட்டமன்ற உறுப்பினர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இப்பள்ளிக்கு கணினியை வைத்துக்கொள்ள தனியாக அறை ஒன்றினைக் கட்ட நடவடிக்கை எடுக்கும்படி திருநெல்வேலி மாவட்ட ஆட்சியருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**4—**

## இரண்டுமாடி கட்டடம் கட்டுதல்

**வினா எண் 24556—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் பள்ளிகளில் கட்டடம் கட்டும்பொழுது ஒரு வகுப்பறை மற்றும் இரண்டு வகுப்பறைகளுக்கென தனித்தனி பிளாக்காக கட்டடம் கட்டுவதால் பள்ளிக்குத் தேவையான வெற்றிடங்கள்



2000 ஏப்ரல் 17]

குறைவதைத் தவிர்க்க பின்வரும் காலங்களில் இரண்டு மாடி கட்டடங்கள் கட்டுவதற்கு ஏதுவாக அஸ்திவாரப் பணிகளை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசுப் பள்ளிகளில் தற்பொழுது கட்டடங்கள் பொதுப் பணித் துறை மூலம் பள்ளியிலுள்ள இடவசதி மற்றும் மண் தன்மையினை ஆராய்ந்தும், வருங்காலத்தில் ஏற்படும் கட்டட விஸ்தரிப்புகளை கருத்தில்கொண்டும், குறைந்தபட்சம் இரு மாடிகளை ஏற்கும் வண்ணமும் வடிவமைக்கப்பட்டு அரசின் ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**5—**

## மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 9719—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இலஞ்சி பேரூராட்சிப் பகுதியில் அரசு மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஊராட்சி ஒன்றியம், இலஞ்சி கிராமத்தில் அரசு மருத்துவமனையோ, புதிய ஆரம்ப சுகாதார நிலையமோ அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

6—

[2000 ஏப்ரல் 17

## மின்வாரிய அலுவலகத்திற்குக் கட்டடம்

**வினா எண் 25385—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி கோட்டம், ஆய்க்குடி யானூர் மின்வாரியப் பிரிவு அலுவலகத்திற்குத் தேவையான கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் 1999-2000 ஆம் நிதியாண்டில் வாரிய அலுவலகம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7—

## முழுநேர ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 25428—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி, அரியப்பபுரத்தில் இயங்கிவரும் பகுதிநேர ஆஸ்பத்திரியை (ஆரம்ப சுகாதார நிலையம்) முழுநேர ஆஸ்பத்திரியாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) அரசாணை (நிலை) எண் 400, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 29-8-1996-ன்படி திருநெல்வேலி மாவட்டம்,



2000 ஏப்ரல் 17]

கீழப்பாவூர் ஒன்றியத்தில் உள்ள பாவூர்சத்திரம் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் 1997-98 ஆம் நிதியாண்டிலிருந்து 24 மணி நேரம் இயங்கும் நிலையமாக செயல்படுகின்றது. எனவே, அந்த கீழப்பாவூர் ஒன்றியத்திலுள்ள அரியப்பபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணிநேர நிலையமாக மாற்ற சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

8—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 29021—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், மேலகரம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மேலகரம் கிராமத்திற்கு 2 கி.மீ. தொலைவில் தென்காசி அரசு மருத்துவமனை மற்றும் குற்றாலம் நகர்மன்ற அரசு மருத்துமனையும், 5 கி.மீ. 8 கி.மீ. தொலைவில் முறையே வல்லம் மற்றும் சுந்தரப்பாண்டியபுரம் ஆரம்ப சுகாதார நிலையங்களும் செயல்படுகின்றன. மேலும், மேலகரம் கிராமம் அடங்கிய தென்காசி ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்கேற்பப் போதுமான அளவில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் மத்திய அரசின் வரையறையின்படி மேலகரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகளில்லை.

[2000 ஏப்ரல் 17

9—

### இயந்திரத்தை இயக்குதல்

**வினா எண் 29026—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்ட மருத்துவமனையில், Abdomen Scan இயந்திரத்தை வாரம் மூன்று நாட்களாவது இயங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்ட மருத்துவமனையில் (Abdomen Scan) இயந்திரம் 1996 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு மேற்படி இயந்திரம் பயிற்சி பெற்ற மருத்துவரால் 23-10-1997 முதல் மக்களுக்குப் பயனுள்ள வகையில் சிறந்த முறையில் தினந்தோறும் செயல்பட்டு வருகிறது.

10—

### பணியாளர் ஏற்பாடு

**வினா எண் 29027—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்ட மருத்துவமனையில் X-Ray & Lab. Technician இருந்தும்கூட அப்பணியாளரை Headquarters duty எனப் போட்டு வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?



2000 ஏப்ரல் 17]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பணியாளர்கள் விடுப்பில் செல்வதால் ஏற்படும் பணியிடர்பாடுகளையும், பணிமுடக்கத்தினையும் தவிர்க்கும்முகத்தான், மேற்கொள்ளப்படும் தற்காலிக அலுவல் நடைமுறைகளில் இதுவும் ஒன்று. பொது மக்களின் நலன் கருதியும் அவசர, அவசியத்தைக் கருதியும் இத்தகைய தற்காலிக ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

11—

### தெங்குமராட்டா இணைப்பு

**வினா எண் 29956—திரு. வெ.அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதியின் எல்லைச் சார்ந்தார் போலுள்ள தெங்குமராட்டா என்ற ஊரை ஈரோடு மாவட்டத்தில் சேர்க்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தெங்குமராட்டா பகுதியில் உள்ள பொது மக்களும் தெங்குமராட்டா ஊராட்சி உறுப்பினர்களும், ஊராட்சி ஒன்றியத் தலைவரும் தெங்குமராட்டா நீலகிரி மாவட்டத்துடன் இருப்பதையே விரும்புகின்றனர். எனவே, தெங்குமராட்டாவை ஈரோடு மாவட்டத்துடன் சேர்ப்பது தற்போது அவசியமில்லை.

12—

**பட்டா வழங்குதல்**

**வினா எண் 33472—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, தொட்டிபாளையம் ஊராட்சியிலும், வரதநல்லூர் ஊராட்சியிலும் சேர்ந்த ஜல்லிக்கல்மேட்டில் 50 ஆண்டுகளாக குடியிருக்கும் மக்களுக்கு விரைவில் அரசு பட்டா வழங்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பவானி, தொட்டிபாளையம் மற்றும் வரதநல்லூர் ஊராட்சிகளைச் சேர்ந்த ஜல்லிக்கல்மேடு புல எண்கள் 736/2 மற்றும் 736/4இல் உள்ள நிலங்கள் செல்லியம்மன் கோவிலின் பட்டா நிலங்கள் என்பதாலும் அங்கு வாழும் 60 நபர்கள் செலுத்தும் மனை வாடகை மூலம் கோவில் நிர்வாகம் இயங்கி வருகிறது என்பதாலும் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

13—

**நிலம் வழங்குதல்**

**வினா எண் 22959—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம், இரவியதர்மபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக் கட்டடம் கட்டுவதற்குத் தேவையான நிலத்தை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், இரவியதர்மபுரம் ஊராட்சியில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி கட்டடம் கட்டுவதற்கு, இரவியதர்மபுரத்தில் இருக்கும் சுல்தான் பாவா பள்ளிவாசல் ஜமாத் மூலமாக நிலம் நன்கொடையாக அரசுக்கு வழங்கப்பட்டு தொடக்கப் பள்ளி கட்டப்பட்டு நல்ல நிலையில் கட்டடம் இயங்கி வருகிறது.

14—

**பள்ளிக்குக் கட்டடம்**

**வினா எண் 23688—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம் குருசாமிபுரம் ஊராட்சி ஒன்றிய பள்ளிக்கு கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், குருசாமிபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கு 1999-2000 ஆம் ஆண்டில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்ட ஒன்றியக் குழுவினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

15—

**குடிநீர்த் திட்டம் செயல்படுத்துதல்**

**வினா எண் 26061—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றியம், பாட்டப்பத்து ஊராட்சி, துவரங்குளம் கிராமத்திற்கு குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றியம், பாட்டப்பத்து ஊராட்சி, துவரங்குளம் குடியிருப்பிற்கு பாட்டப்பத்து குடிநீர்த் திட்டத்திலிருந்து தற்போது 3 பொது குழாய்கள் மூலம் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 20 லிட்டர் வீதம் வழங்கப்படுகிறது. இக்குடியிருப்பினை முழு அளவு குடிநீர் வசதி பெற்றதாக செய்யும் பொருட்டு வரும் நிதியாண்டுகளில் புதிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்த முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

16—

**முந்திரி விளைச்சல்**

**வினா எண் 26080—திரு. ஏ.வி.ஏ. தாசர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக வனப் பகுதிகளில் தற்போதைய முந்திரி விளைச்சல் எவ்வளவு?

(ஆ) இதை அதிகப்படுத்த எத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது?



விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) தமிழக வனப் பகுதிகளில் 1998-99 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் மூலம் 15,552 எக்டேரில் முந்திரி தோட்டத்தில் இருந்து 153.700 டன் முந்திரி கிடைக்கப்பெற்றது. அதன் மதிப்பு ரூ. 424.00 இலட்சங்களாகும். இதைத் தவிர வனத துறையின்கீழ் உள்ள சென்னை மண்டலத்தின் செங்கற்பட்டு கோட்டம் காஞ்சிபுரத்தில் 8,250.180 எக்டேரில் 28,466 கிலோ முந்திரி கிடைக்கப்பெற்றது. அதன் மதிப்பு ரூ. 14,97,339 ஆகும். இடைபடுகாடுகள் கோட்டம், திருவள்ளூரில் 351 எக்டேரில் 4,504 கிலோ முந்திரி கிடைக்கப்பெற்றது. இதன் மதிப்பு ரூ. 1,41,145 ஆகும்.

(ஆ) வனத்தோட்டக் கழகத்தின்கீழ் சுமார் 17,635 எக்டேர் முந்திரி தோட்டம் உள்ளது. இவற்றில் 30 ஆண்டுகளுக்கு மேல் சுமார் 8,105 எக்டேர் முந்திரி தோட்டங்கள் உள்ளது. அவற்றை 1999-2000 முதல் ஆண்டிற்கு 1,000 எக்டேர் வீதம் வெட்டி புதிய வீரிய ஒட்டு கன்றுகள் நடுவதற்கு திட்டமிடப்பட்டு உள்ளது. இவ்வாறு உற்பத்தி செய்த முந்திரி தோட்டங்களுக்கு இரண்டு/மூன்று ஆண்டுகளில் தகுந்த உரம் இடப்படுகிறது. இவ்வாறு பராமரிப்பு செய்வதன் மூலம் நான்காம் ஆண்டிலிருந்து முந்திரி மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது.

தீவிர சாகுபடி பணிகள் என்ற வகையில் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் பொறுப்பில் உள்ள தோட்டங்களில் தேவையில்லாத வளர்ச்சியை வெட்டி சுத்தப்படுத்துதல், உழவு செய்தல், மரங்களைச் சுற்றி மண் கொத்துதல், தேவையானால் தோட்டங்களைச் சுற்றியும் உள்ளேயும் அமைத்துள்ள மண் கரைகளை செப்பனிடுதல் போன்ற வேலைகள் செய்வதுடன் முந்திரி வளர்ச்சி கழகத்தில் இருந்து அவ்வப்போது அறிக்கை பெற்று கழக செயல்பாட்டுடன் ஒப்பிட்டு கழக செயல்திறனை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதின் மூலம் ஆண்டிற்கு ஆண்டு முந்திரிகள் மூலம் வருமானம் அதிகரித்து வருகிறது. இதனைத் தவிர புதிய தோட்டங்கள், பட்டுப்போன மரங்களை மாற்றி நடும் பணிகளில் குளோனிங் முறையில் உருவாக்கப்பட்ட தோட்டங்களில் இருந்து

[2000 ஏப்ரல் 17

பெறப்பட்ட உயர்ரக மரக்கன்றுகளின் உயிர்மொட்டுக்களை ஒட்டுச்செடி (கிராஃப்டிங்) வளர்ப்பு மூலம் அபிவிருத்தி செய்வதன் மூலம் மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

**17—**

## கூடுதல் பேருந்து

**வினா எண் 8203—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டையிலிருந்து சங்கரன்கோவில் வழியாக கோவில்பட்டிக்குக் கூடுதலாக பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சுரண்டையிலிருந்து சங்கரன்கோவில் வழியாக கோவில்பட்டிக்கு பகுதிவாரியாக போதிய அளவு பேருந்து வசதி இருப்பதால் கூடுதலாகப் பேருந்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.

**18—**

## பேருந்து வசதி

**வினா எண் 22986—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றிய பகுதியான ஆரியங்காவூர் கிராமத்திற்கு பேருந்து வசதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2000 ஏப்ரல் 17]

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரியங்காவூர் என்ற சிறிய கிராமம் பாவூர் சத்திரத்திலிருந்து திப்பணம்பட்டி வழியாக கடையம் செல்லும் சாலையிலிருந்து பிரிந்து சுமார் 1.2 கி.மீ. தூரத்திலும், பாவூர்சத்திரத்தில் இருந்து கல்லூரணி வழியாக சிவநாடானூர் செல்லும் சாலையில் இருந்து பிரிந்து சுமார் 1.2 கி.மீ. தூரத்திலும் இருசாலைகளுக்கும் மத்தியில் அமைந்துள்ளது. பாவூர்சத்திரம் திப்பணம்பட்டி ஆரியங்காவூர் விலக்கு வழியாக, 2 பேருந்துகள் மூலம் 18 சுற்றுக்களும் பேருந்து வசதி உள்ளது. ஆரியங்காவூர் என்ற கிராமத்தின் மக்கள் தொகை 1000-க்கும் குறைவாக இருப்பதாலும், ஆரியங்காவூர் கிராமத்திற்குச் செல்லும் சாலை இருவழிகளிலும் பேருந்து இயக்க உகந்ததாக இல்லை என்பதாலும், இச்சாலையில் அமைந்துள்ள ஆளில்லாத இரயில்வே லெவல் கிராசிங் வழியாக புதியதாக பேருந்து இயக்க இரயில்வே நிர்வாகம் அனுமதி வழங்குவதில்லை என்பதாலும் ஆரியங்காவூர் கிராமத்திற்கு தற்போது பேருந்து வசதி செய்ய சாத்தியக்கூறு இல்லை.

**19—**

## வழித்தடம் நீட்டித்தல்

**வினா எண் 22987—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் ஆலங்குளம்-நெல்லையப்பபுரம் வழித்தடத்தில் இயங்கி வரும் 5-பி சிவநாடானூர் நகர பேருந்து செல்லத்தாயார்புரம் வரை வந்து செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தடம் எண் 5-பி நகரப் பேருந்து தற்போது 29.4 கிலோமீட்டர் தூரம் இயக்கப்படுகிறது. நகரப் பேருந்துகள் அதிகபட்சமாக

[2000 ஏப்ரல் 17

30 கிலோமீட்டர் தூரம் தான் இயக்க முடியும். தடம் எண் 5-பி நகரப் பேருந்தை செல்லத்தாயார்புரம் வரை நீட்டித்து இயக்கினால் வழித்தடத்தின் நீளம் மேலும் 2.4 கிலோமீட்டர் அதிகரித்து 30 கிலோமீட்டர் என்ற வரையறையைத் தாண்டிவிடும். எனவே, இப்பேருந்தை நீட்டித்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.

20—

**மகளிர் பேருந்து இயக்குதல்**

**வினா எண் 23742—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி-புளியரை மார்க்கத்தில் காலை, மாலை வேளைகளில் மகளிர் மட்டும் பேருந்துவிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்கள் சிரமமின்றி வசதியாக தென்காசி-புளியரை மார்க்கத்தில் காலை, மாலை வேளைகளில் பயணம் செய்ய மதுரை கோட்டம்-2 மற்றும் தனியார் பேருந்துகள் மூலமாக இத்தடத்தில் போதுமான பேருந்து வசதிகள் இருப்பதால் "மகளிர் மட்டும்" என தனிப் பேருந்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.

21—

**பேருந்து இயக்குதல்**

**வினா எண் 25001—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசியிலிருந்து பாவூர்சத்திரம், ஆவுடையானூர், கடையம் வழியாக நாகர்கோயிலுக்குப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2000 ஏப்ரல் 17]

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள வழித்தடம் சுற்று வழித்தடமாதலாலும், பகுதிவாரியாக போதுமான அளவு பேருந்து வசதி உள்ளதாலும் மேற்கண்ட வழித்தடத்தில் பேருந்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.

22—

**பேருந்து இயக்குதல்**

**வினா எண் 25004—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டையிலிருந்து சங்கரன்கோவில், கோவில்பட்டி, சாத்தூர் வழியாக மதுரைககு பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சுரண்டையிலிருந்து சங்கரன்கோவில், கோவில்பட்டி, சாத்தூர் வழியாக மதுரைக்கு செல்வது என்பது சுற்றுவழித்தடமாகும். சுற்றுவழித்தடமாக இருப்பதால் சுரண்டையிலிருந்து சங்கரன்கோவில், கோவில்பட்டி வழியாக மதுரைக்கு நேரடிப் பயணிகள் பயன்பாடு இருக்காது. கோரிக்கைத் தடத்தில் பகுதி பகுதியாக பேருந்து வசதிகள் உள்ளது. எனவே கோரிக்கைத் தடத்தில் பேருந்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.

[2000 ஏப்ரல் 17

23—

### மினி பஸ் உரிமம்

**வினா எண் 695—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99 ஆம் ஆண்டு மார்ச் முடிய தமிழ்நாட்டில் எத்தனை பேர் மினி பஸ் உரிமை கேட்டு மனு போட்டிருந்தார்கள்?

(ஆ) மனு போட்டவர்கள் எத்தனை பேருக்கு மினி பஸ் உரிமை வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) 1998-99 ஆம் ஆண்டு மார்ச் முடிய தமிழ்நாட்டில் 3845 நபர்கள் மினி பஸ் உரிமை கேட்டு மனு சமர்ப்பித்தனர்.

(ஆ) அவற்றில் 543 பேருக்கு மினி பஸ் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

24—

### பாலம் கட்டுதல்

**வினா எண் 22866—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி உதவிக் கோட்டம், பாவூர்சத்திரம் சுரண்டை சாலையிலிருந்து வெள்ளக்கால் ராஜபாண்டி செல்லும் சாலையை பழுது நீக்கி புதிய தார்ச்சாலை அமைக்கவும் மற்றும் வெள்ளக்கால் அருகே மாறாந்தை கால்வாயின் குறுக்கே உள்ள பழுதடைந்த பாலத்தை அகற்றி புதுப்பாலம் அமைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?



2000 ஏப்ரல் 17]

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், வெள்ளக்கால் கழுநீர்குளம் சாலையில் கி.மீ. 0/0-2/0 வரையுள்ள பகுதிகளை மேம்பாடு செய்யும் பணிக்கு ரூ. 8.00 இலட்சத்திற்கு சிறப்பு நிதி ஒதுக்கீட்டின்கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள சாலைகளில் நொடிகள் போடப்பட்டு போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் பராமரிக்கப்படுகிறது. பாவூர்சத்திரம் சுரண்டை சாலையிலிருந்து வெள்ளக்கால் ராஜபாண்டி செல்லும் சாலையில் வெள்ளக்கால் அருகே உள்ள மாறாந்தை கால்வாய் பாலத்தினை கட்டும் பணியினை நெடுஞ்சாலைத் துறையின் ஏதாவது வேறு திட்டங்களின்கீழ் மேற்கொள்ள வழிவகைகள் ஆய்வு செய்யப்படும்.

25—

### புதிய பாலம் அமைத்தல்

**வினா எண் 23958—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பாவூர்சத்திரம், சுரண்டை சாலையில் கீழ்ப்பாவூர் பேரூராட்சிக்கு அருகே உள்ள தாம்போகி பாலத்தினால் மழைக்காலத்தில் போக்குவரத்து தடை ஏற்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த இடத்தில் புதிய பாலம் அமைத்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பாவூர்சத்திரம்-வெள்ளக்கால்-சுரண்டை சாலையில் கி.மீ. 1/6-ல் உள்ள தாம்போகியில் கழிவுநீர் தேங்குவதால் ஏற்படும் போக்குவரத்து இடையூறை நிரந்தரமாக போக்கி குழாய் பாலம்

அமைக்கும் பணியினை நடப்பு அல்லது அடுத்த நிதியாண்டில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

26—

**பாலம் சீர்செய்தல்**

**வினா எண் 25464—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி நகராட்சி செங்கோட்டை சாலை பிரியும் இடத்திலுள்ள பாலம் பழுதடைந்துள்ளதை சீர்செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இந்நிதியாண்டில் நிதிநிலைக்கேற்ப இப்பாலத்தின் பணி எடுத்துச் செய்யப்படும்.

27—

**புதிய பாலம் அமைத்தல்**

**வினா எண் 25468—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி உதவிக்கோட்டம், மத்தளம்பாறை சாலையும், புலியருவி சாலையும் சந்திக்கும் இடத்தில் தூர்ந்துபோன பாலத்தை அகற்றி புதிய பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) குற்றாலம் - மத்தளம்பாறை சாலையில் கி.மீ. 0/4-ல் உள்ள மூடுகல் பாலத்தினை சிமெண்ட் கான்கிரீட் பாலமாக திரும்பக் கட்டும் பணியினை நிதிநிலைமைக்கேற்ப நடப்பு நிதியாண்டிலோ அல்லது அடுத்த நிதியாண்டிலோ மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

28—

**பாலம் கட்டுதல்**

**வினா எண் 25469—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஒன்றியம் வல்லம் பள்ளிவாசல் அருகிலுள்ள ரோட்டில், பள்ளி அருகிலுள்ள பாலம் பழுதடைந்துள்ளதை புதியதாக கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இலஞ்சி-வல்லம்-பள்ளிவாசல் சாலையில் கி.மீ. 3/10-ல் 1.20 மீட்டர் அகலமுடைய குழாய் பாலத்தினை திரும்பக் கட்டும் பணியினை நடப்பு நிதியாண்டிலோ அல்லது அடுத்த நிதியாண்டிலோ மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

[2000 ஏப்ரல் 17

29—

### குற்றாலநாதர் கோயில் கோபுரம் பொலிவின்றி காட்சி அளித்தல்

**வினா எண் 29058—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம், அருள்மிகு குற்றாலநாதர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடங்களில் அய்யப்ப சீசன் காலத்தில் அண்டித்தோடுகளை எரிபொருளாகப் பயன்படுத்தி சிப்ஸ் தயாரிக்கும் கடைகளுக்கு அனுமதி வழங்கப்படுவதால் கோயிலின் கோபுரத்தின் மீது எண்ணை மக்கு படிந்து பொலிவின்றி காட்சி அளிப்பது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப்போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் அருள்மிகு குற்றாலநாதர் திருக்கோயிலுக்குச் சொந்தமான காலிமனைகளில் சாரல் பருவத்தில் (ஜூன் முதல் செப்டம்பர் முடிய) தற்காலிக கடைகள் அமைக்கும் உரிமம் கடந்த 20 வருடகாலமாக பொது ஏலம் மூலம் விடப்பட்டு மேற்படி காலிமனைகளில் தற்காலிக கடை உரிமம் பெற்றவர்கள் சிப்ஸ் கடைகள் மற்றும் பேன்சி கடைகளில் அண்டித்தோடு எரி பொருளாக பயன்படுத்தி அடுப்புகள் அமைத்து கடை நடத்தி வருகிறார்கள். அண்டித்தோடு புகையினால் கோபுரங்களின் மீதும் அவற்றின் பொம்மைகள் மீதும் பூசப்பட்டுள்ள வண்ணம் மக்கு படிந்து பொலிவிழந்து காணப்படவில்லை. இருந்தபோதிலும், மேற்படி தற்காலிக கடைகள் ஏலம்/டெண்டர் அறிவிப்பு நிபந்தனைகளில், நிபந்தனை எண் 11-ல் உரிமம் பெற்றவர்கள் எக்காரணத்தை முன்னிட்டும் அண்டித்தோட்டை எரிபொருளாக கொண்ட அடுப்பினை பயன்படுத்தக்



2000 ஏப்ரல் 17]

கூடாது என்றும், மீறினால் உரிமம் இரத்து செய்யப்படுவதுடன் உரிமையியல் அல்லது குற்றவியல் சட்டத்தின் கீழும் சுற்றுப்புறச் சூழ்நிலை மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலமும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துதான் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் சில நபர்கள் நிபந்தனைகளை மீறி அண்டித்தோடு அடுப்பு வைத்துள்ளார்கள். அவர்களின் உரிமத்தை இரத்து செய்து, உரிமத் தொகையை பறிமுதல் செய்து இடத்தைவிட்டு அப்புறப்படுத்தப்படும் என அறிவிக்கை கொடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

30—

### தெப்பக்குளம் சீரமைத்தல்

**வினா எண் 32034—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தெப்பக்குளத்தை சீரமைத்து இந்த வருடம் தெப்ப உற்சவ திருவிழா நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி நகர் அ/மி. காசி விஸ்வநாத சுவாமி திருக்கோயில் தெப்பக்குளத்தை தூர்வாரி சீரமைக்கும் பணியும் சீவலப்பேரி குளத்திலிருந்து மேற்படி தெப்பக் குளத்திற்கு தண்ணீர் கொண்டு செல்லும் வாய்க்கால்கள் சீரமைக்கும் பணியும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் மாவட்ட பரவலாக்கும் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு அடுத்த ஆண்டு ஆவணி மூலத்திருநாள் அன்று தெப்பத் திருவிழா நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[2000 ஏப்ரல் 17

31—

### கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்

**வினா எண் 23504—திரு. கே. ரவி அருணன்**: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், சுட்டளை குடியிருப்பில் பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சுட்டளை குடியிருப்பு கிராம மக்களிடமிருந்து சங்கம் பதிவு செய்ய பிரேரணை எதுவும் பெறப்படவில்லை. அப்படி பிரேரணை வரப்பெற்றால் புதிய சங்கம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

32—

### தொழிலாளர் கணை

**வினா எண் 21570—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பருத்தி ஜவுளி ஆலைகள் நெருக்கடியில் உள்ளதாகச் சொல்லி அதன் சுமையைத் தொழிலாளர்கள் மீது சுமத்த முதலாளிகள் முயன்று வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசின் திட்டமென்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழக பஞ்சாலைத் தொழிலாளர் மத்திய சங்க கூட்டு நடவடிக்கைகள் குழுவின் கூட்டம் 7-3-1999 அன்று



223305

2000 ஏப்ரல் 17]

நடைபெற்றதாகவும், அக்கூட்டத்தில் ஊதிய உயர்வு கோரிக்கையை முன்வைத்து தமிழக பஞ்சாலைத் தொழிலாளர்கள் ஒன்றுபட்டு போராட்ட தயாரிப்புகளை செய்துவரும் வேளையில் பஞ்சா[illegible] நிர்வா[illegible] சில ஊதிய வெட்டைத் திணிக்க முயற்சிகள் மேற்கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டு அதற்குக் கண்டனம் தெரிவித்துள்ளது.

சில பஞ்சாலை நிர்வாகங்கள் ஊதிய வெட்டு செய்ய உத்தேசித்து இருந்ததால், 1947 ஆம் வருட தொழிற் தகராறுகள் சட்டம் பிரிவு 9ஏ-ன்கீழ் முன்னறிவிப்பு செய்த பின்னரே அதனை செய்ய வேண்டும் அல்லது ஆலையிலுள்ள தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற் சங்கங்களுடன் மேற்படி சட்டத்தின்கீழ் ஒப்பந்தம் செய்த பின்னரே ஊதிய வெட்டு செய்ய இயலும். அவ்வாறு செய்யாமல் ஊதிய வெட்டினை செய்தால், மேற்படி சட்டத்தின்கீழ் தாவா எழுப்பியோ அல்லது சம்பளப் பட்டுவாடாச் சட்டத்தின்கீழ் மனு செய்தோ நிவாரணம் காணலாம். எனினும் இதுகுறித்து முறையீடு ஏதும் அரசுக்கு வரவில்லை.

33—

### குழந்தைத் தொழிலாளர் பள்ளி

**வினா எண் 23943—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் குழந்தைத் தொழிலாளர் பள்ளி அமைக்க மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின்கீழ் 50 சிறப்புப் பள்ளிகள் தொடங்க மாவட்ட ஆட்சியாளர் அனுப்பியுள்ள செயற்குறிப்பு மத்திய அரசுக்குப்

[2000 ஏப்ரல் 17

பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெற்றவுடன், தென்காசி நகராட்சி பகுதியில் இரண்டு சிறப்புப் பள்ளிகள் தொடங்கப்படும்.

**34—**

**தொழிற் சங்கங்களுக்கு கட்டடம்**

**வினா எண் 28784—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் உள்ள தொழிலாளர் பிரச்சனைகள் மற்றும் தொழிற்தாவா தஞ்சாவூர் தொழிலாளர் அலுவலகத்தில் நடைபெறுகிறது. சென்னையில், தொழிற்சங்க தலைவர்கள் தங்க தேனாம்பேட்டை ஜீவா இல்லம் உள்ளதுபோல் தொழிலாளர் வாரியம் மூலம் தொழிற்சங்க தலைவர்கள் தங்க கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

சென்னை, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் தற்போது போதுமான நிதி வசதி இல்லை. எனவே, தொழிலாளர் நல வாரியம் மூலம் தொழிற்சங்கத் தலைவர்கள் தங்க தஞ்சாவூரில் கட்டடம் கட்டித்தர, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் திட்டங்கள் ஏதுமில்லை.

**35—**

**தொழிலாளர் நல வாரியம்**

**வினா எண் 33488—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமைப்பு சாராத தொழிலாளர் நல வாரியம் செயல்படத் தொடங்கிவிட்டதா?



2000 ஏப்ரல் 17]

(ஆ) ஆம் எனில், அதன் செயல்பாட்டிற்கான நிதி ஆதாரம் உருவாக்கப்பட்டு விட்டதா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியம் 5-11-1999 முதல் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. தமிழ்நாடு முழுவதும் தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் நலத்திட்டத்தினை அமலாக்கம் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, 26-1-2000 முதல் தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்கள் சேர்க்கையும் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் நலத்திட்ட செயல்பாட்டிற்காக தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியத்திற்கு அரசு நாற்பது இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கியுள்ளது. மேலும், வாகன உரிமையாளர்கள் மற்றும் வேலையளிப்பவர்களிடமிருந்து வரி வசூலிக்கப்பட்டு, தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் நல நிதியில் சேர்ப்பதற்கு தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் சட்டத்தின்கீழ் வகை செய்யப்பட்டுள்ளது. இந்நிதி ஆதாரங்களைக் கொண்டு தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் நலத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**36—**

**உதவித் தொகை**

**வினா எண் 33528—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூடப்பட்ட தொழிற்சாலைகளின் தொழிலாளர்களுக்கு தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு தலா ரூ. 500 வீதம் உதவித்தொகை எத்தனை தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) உதவித் தொகைக்காக அரசு ஒதுக்கிய நிதியுதவி எவ்வளவு?

[2000 ஏப்ரல் 17

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 1999 ஆம் ஆண்டு தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு மூடப்பட்டுள்ள தொழில் நிறுவனங்களைச் சார்ந்த 13,153 தொழிலாளர்களுக்கு தலா ரூ. 500 வீதம் உதவித்தொகை மொத்தம் ரூ. 65,76,000 பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

(ஆ) முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 70,25,500 ஒதுக்கீடு செய்யப்பட்டது.

37—

**வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் உதவித்தொகை**

**வினா எண் 33568—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பட்டம் படித்தவர்கள், பிளஸ் 2 படித்தவர்கள் வேலைவாய்ப்பு வேண்டி பதிவு செய்தவர்களுக்கு அளித்து வந்த உதவித்தொகை நிறுத்தப்பட்டுள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு உதவித்தொகை மறுபடியும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் திட்டம் 1-7-1980 முதல் அரசாணை எண் 2680, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 25-11-1980-ன்படி வருவாய்த் துறையால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

15-9-1984 முதல் இத்திட்டம் வேலைவாய்ப்புத் துறையால் 30-9-1993 வரை நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. பின்னர் அரசாணை



2000 ஏப்ரல் 17]

எண் 548, கல்வித் துறை (வி2), நாள் 9-6-1993-ன்படி முறைசாரா கல்வித் துறையால் 3 ஆண்டுக் காலம் செயல்படுத்தப்பட்டு 1995-96 நிதியாண்டோடு இத்திட்டம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது. அரசின் ஆணைப்படிதான் இத்திட்டம் கைவிடப்பட்டு பதிவு செய்த வேலைவாய்ப்பற்றோருக்கு நிதி உதவித்தொகை வழங்குதல் நிறுத்தப்பட்டது. மீண்டும் மேற்கண்டவாறு உதவித்தொகை வழங்க தற்போது அரசு பரிசீலனையில் செயற்குறிப்பு ஏதுமில்லை.

38—

**பதிவு விவரம்**

**வினா எண் 33569—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99, 1999-2000 ஆம் ஆண்டில் நவம்பர் மாதம் முடிய தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் எவ்வளவு பேர் வேலைக்காக பதிவு செய்துள்ளார்கள்?

(ஆ) சேலம் மாவட்டத்தில் வேலை வேண்டி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் எத்தனை பேர் பதிவு செய்துள்ளார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 1998-99, 1999-2000-இல் நவம்பர் மாதம் முடிய தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலைக்காக மொத்தம் 41,50,138 பேரும், 1999-2000 ஆம் ஆண்டில் 43,56,425 பேரும் வேலைக்காக பதிவு செய்து காத்துள்ளனர்.

(ஆ) சேலம் மாவட்டத்தில் வேலை வேண்டி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 1998 ஆம் ஆண்டில் 1,84,504 நபர்களும், 1999 ஆம் ஆண்டில் 1,82,325 நபர்களும் பதிவு செய்துள்ளார்கள்.

[2000 ஏப்ரல் 17

39—

## பணியிடத்தை நிரப்புதல்

**வினா எண் 23573—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி குற்றவியல் நீதிமன்றத்தில் கடந்த 6 மாத காலமாக நடுவர் (Magistrate) பணியிடம் காலியாக உள்ளதால் வழக்குகள் தேக்கமடைந்துள்ளது அரசின் கவனத்திற்கு வரப்பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக பணியிடத்தை நிரப்ப அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னை உயர்நீதிமன்ற அறிவிக்கை எண் 50/99, நாள் 21-4-1999-ன்படி திரு. டி. பொன்பிரகாஷ் என்பவர் தென்காசி குற்றவியல் நடுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

40—

## வியாபார பகுதிகளாக மாற்றுதல்

**வினா எண் 21503—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி நகராட்சியின் வளர்ச்சியை கருத்திற்கொண்டு புதிய பேருந்து நிலையம் அருகே மதுரை சாலையில் இருபுறங்களையும் வியாபார பகுதியாக மாற்ற அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



2000 ஏப்ரல் 17]

(ஆ) தென்காசி உள்ளூர் திட்டப் பகுதிக்கான முழுமைத்திட்டம் மறுஆய்வு செய்யப்படும்போது இது கருத்தில் கொள்ளப்படும்.

41—

## சமையல் கூடம்

**வினா எண் 22600—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், இராமச்சந்திரப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கு சத்துணவு சமையல் கூடம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1998-99 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 41,500 மதிப்பீட்டில் சத்துணவு சமையற்கூடம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது.

42—

## வேலைவாய்ப்புத் திட்டம்

**வினா எண் 33204—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாரதப் பிரதமரின் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் 1998-99 ஆம் ஆண்டில் மனு செய்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) எத்தனை மனுக்கள் பரிந்துரைக்கப்பட்டன?

[2000 ஏப்ரல் 17

(இ) எத்தனை பேர் உதவி பெற்றனர்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) பாரதப் பிரதமரின் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் 1998-99 ஆம் ஆண்டில் மனு செய்தவர்களின் எண்ணிக்கை 2186 பேர்.

(ஆ) 1335 மனுக்கள் பரிந்துரை செய்யப்பட்டன.

(இ) 575 பேர் உதவி பெற்றனர்.

**43—**

**சிறுதொழில் தொடங்குதல்**

**வினா எண் 33248—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறுதொழில் தொடங்குவதற்கான அனைத்து உரிமங்களையும் அந்தந்த மாவட்டத் தொழில் மையம் மூலம் பெறுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

சிறுதொழில் தொடங்குவதற்கான அனைத்து உரிமங்களையும் அந்தந்த மாவட்டத் தொழில் மையம் மூலம் பெறுவதற்கு ஏதுவாக மாவட்ட ஆட்சியாளரின் தலைமையில் மாவட்ட அளவில் ஒரு முனைக்குழு (Single Window Committee) அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் செயல்பாட்டினை மேம்படுத்தும்பொருட்டு தற்போது சிறுதொழில் தொடங்குவது சம்பந்தமாக ஒரு பொது விண்ணப்பப் படிவம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் சிறுதொழில் தொடங்குவதற்கான அனைத்து உரிமங்களும் மாவட்டத் தொழில் மையம் மூலம் பெற முடியும்.



2000 ஏப்ரல் 17]

**44—**

**பட்டு வளர்ப்பு மையங்கள்**

**வினா எண் 33353—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், ஈரோடு, நாமக்கல், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் பட்டு வளர்ப்பு மையங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அவற்றை ஊக்குவிக்க அரசு வழங்கும் உதவிகள் யாவை?

(இ) அதன்பொருட்டு அரசு கடந்த 1998-99-ல் செலவிட்ட தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) பட்டு வளர்ச்சித் துறையின்கீழ், சேலம், ஈரோடு, நாமக்கல் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் மொத்தம் 52 பட்டு வளர்ப்பு தொழில்நுட்ப சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) இந்த நான்கு மாவட்டங்களிலும் மல்பரி பயிரிட்டுள்ள பட்டு விவசாயிகளுக்கு மல்பரித் தோட்டங்கள் பராமரித்தல், நோயற்ற பட்டு முட்டைத் தொகுதிகள் வழங்குதல், நோய்த் தடுப்பு முறைகள் குறித்து விளக்கங்கள் அளித்தல், அதிகபட்ச பட்டுக்கூடு அறுவடைக்கு ஆலோசனைகள் வழங்குதல் ஆகிய பணிகள் இந்தத் தொழில்நுட்ப சேவை மையங்கள் மூலம் வழங்கப்படுகின்றன. மேலும், பட்டுப் புழு வளர்ப்பில் தீவிர பயிற்சி அளித்தல், பயிற்சி உதவித் தொகை மற்றும் பயிற்சி உபகரணங்கள் வழங்குதல், அடிப்படை புழு வளர்ப்புத் தளவாடங்கள் வழங்குதல், சொட்டுநீர்ப் பாசன வசதிகள் ஏற்படுத்துதல் ஆகியனவும் இத்தொழில்நுட்ப சேவை மையங்கள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

(இ) 1998-99 ஆம் ஆண்டில் மேற்சொன்ன இனங்களுக்காக அரசு ரூ. 32.683 இலட்சம் செலவிட்டுள்ளது.

[2000 ஏப்ரல் 17

45—

## முத்திரைக் கட்டணம் வசூல்

**வினா எண் 33540—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு பத்திரப் பதிவுத் துறையில் அறிமுகப்படுத்திய "சமாதான்" திட்டத்தின்கீழ் 31-3-1999 வரை முத்திரைக் கட்டணமாக எவ்வளவு தொகை அரசுக்கு வசூலானது?

(ஆ) சேலம் மாவட்டத்தில் எவ்வளவு வசூலானது?

(இ) அதனால் எவ்வளவு பேர் பயனடைந்தார்கள்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

| | |
|---|---|
| (அ) பதிவுத் துறையில் "சமாதான்" திட்டத்தின் கீழ் 1-3-1999 முதல் 31-3-1999 வரை வசூலான தொகை | .. ரூ. 4.29 கோடி |
| 1-3-1999 முதல் 30-9-1999 வரை வசூலான தொகை | .. ரூ. 34.56 கோடி |
| (ஆ) சேலம் மாவட்டத்தில் 30-9-1999 வரை வசூலான தொகை | .. ரூ. 4.09 கோடி |
| (இ) சேலம் மாவட்டத்தில் "சமாதான்" திட்டத்தினால் 30-9-1999 வரை பயனடைந்தோர் எண்ணிக்கை | .. 4,660 நபர்கள் |

46—

## முத்திரைக் கட்டணம்

**வினா எண் 33542—திரு. ஐ. கணேசன்**: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2000 ஏப்ரல் 17]

(அ) 31-3-1999 ஆம் தேதி தமிழகத்தில் சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப் பதிவு குறைவான முத்திரைக் கட்டணம் செலுத்தி, பத்திரம் திரும்பப் பெறாமல் உள்ளதாக அரசு கணக்கெடுத்துள்ளதா?

(ஆ) அவற்றில் வசூலாக வேண்டிய முத்திரைக் கட்டணம் எவ்வளவு தொகை?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) 31-3-1999 ஆம் தேதியில் தமிழகத்தில் சார் பதிவாளர் அலுவலகங்களில், பத்திரப் பதிவு குறைவான முத்திரைக் கட்டணம் செலுத்தி, பத்திரம் திரும்பப் பெறாமல் உள்ள ஆவணங்களின் எண்ணிக்கை: 74,586

அவற்றின் விவரம் பின்வருமாறு:

1999 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின்கீழ் நிலுவையிலுள்ள ஆவணங்கள்:

| | |
|---|---|
| சந்தை மதிப்பை நிர்ணயம் செய்ய முத்திரைத் தனித் துணை ஆட்சியருக்கு பிரிவு 47-ஏ (1)ன்கீழ் அனுப்பப்பட்ட ஆவணங்கள் | .. 68,435 ஆவணங்கள் |
| சந்தை மதிப்பை நிர்ணயம் செய்ய முத்திரைத் தனித் துணை ஆட்சியரால் பிரிவு 47-ஏ (3)ன்கீழ் பெறப்பட்ட ஆவணங்கள் | .. 1,322 ஆவணங்கள் |
| வெளி மாநிலங்களில் பதிவு செய்து பிரிவு 19-பி (4)ன்கீழ் வித்தியாச முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் | .. 4,829 ஆவணங்கள் |
| **மொத்தம்** | .. **74,586 ஆவணங்கள்** |

[2000 ஏப்ரல் 17

(ஆ) 1999 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தில் வசூலாக வேண்டிய தொகை .. ரூ. 227.27 கோடி

அவற்றின் விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| பிரிவு 47-ஏ(1)ன்கீழ் | .. ரூ. 207.91 கோடி |
| பிரிவு 47-ஏ(3)ன்கீழ் | .. ரூ. 3.74 கோடி |
| பிரிவு 19-பி(4)ன்கீழ் | .. ரூ. 15.62 கோடி |
| மொத்தம் | .. ரூ. 227.27 கோடி |

47—

### கால்நடைப் பார்வையிடும் நிலையம்

**வினா எண் 22553—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், திப்பணம்பட்டி கிராமத்தில் கால்நடைப் பார்வையிடும் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம் கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள திப்பணம்பட்டி கிராமத்தில் பார்வைக் கிளை நிலையம் அமைக்கப்பட்டு 23-1-1998 முதல் செயல்பட்டு வருகின்றது.



2000 ஏப்ரல் 17]

48—

### கடன் தொகை

**வினா எண் 33073—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99 ஆம் ஆண்டில் வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த பணிகளுக்காக ஏழை ஆதிதிராவிடர்களுக்கு எவ்வளவு பேருக்கு கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு? மானியம் வழங்கப்பட்டது எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 1998-99 ஆம் ஆண்டில் வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த பணிகளுக்காக 1446 ஏழை ஆதிதிராவிடர்களுக்குக் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) வங்கிகளால் வழங்கப்பட்ட கடன் தொகை .. ரூ. 120.70 இலட்சம்

தாட்கோவால் வழங்கப்பட்ட மானியத் தொகை .. ரூ. 120.70 இலட்சம்

49—

### கட்டடப் பணிகள்

**வினா எண் 13824—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பாவூர் சத்திரத்தில் இரயில்வே கேட் அருகே காதி மற்றும் கிராமத் தொழில் துறை மூலம்

[2000 ஏப்ரல் 17

கட்டப்பட்டுள்ள கட்டடப் பணி முற்றுப் பெறாமல் பல ஆண்டுகளாக இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விரைவில் கட்டி முடிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அனைத்துக் கட்டடப் பணிகளும் முடிக்கப்பட்டு 30-4-1999 முதல் கீழ்ப்பாவூர் கதர் உபகிளை இக்கட்டடத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**50—**

## நவீன தொழிற் கருவிகள்

**வினா எண் 29259—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1998-99 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் கிராமப்புறங்களில் உள்ள கைவினைஞர்களுக்கு தொழிற் கருவிகள் வழங்கும் திட்டத்தின்படி எவ்வளவு பேருக்குத் தொழில் செய்ய நவீன தொழில் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

1998-99 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் கிராமப்புறங்களில் உள்ள கைவினைஞர்களுக்கு நவீன தொழிற் கருவிகள் ஏதும் வழங்கப்படவில்லை. 1999-2000 ஆம் ஆண்டிற்கான பழங்குடியினர் நலத் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் ரூ. 4.90 இலட்சத்தில் கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.



2000 ஏப்ரல் 17]

| | திட்டத்தின் பெயர் | பயனாளிகள் எண்ணிக்கை | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | பழங்குடியினர்களுக்கு தேன்கூடு வழங்குதல் | 20 | 1.60 |
| 2. | தனிநபர் டீசல் எஞ்சின் பிரிவு அமைத்தல் மற்றும் பழுதுபார்த்தல் | 1 | 0.20 |
| 3. | தனிநபர் மின் இணைப்பு அமைத்தல் மற்றும் பழுது பார்த்தல் | 6 | 1.50 |
| 4. | தனிநபர் மிதிவண்டி நிலையம் அமைத்தல் | 8 | 1.60 |
| | மொத்தம் | **35** | **4.90** |

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

# 2. தகவல் கோரல்

## உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் இப்போது அனுமதிக்கப் போகிறேன். உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 15 ஆம் தேதி, கிருஷ்ணா நதி நீர் வருமென்று சொல்லப்பட்டது. அது என்ன ஆயிற்று என்பதைப்பற்றி....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுபற்றி ஏற்கெனவே கொடுத்திருக்கிறீர்கள். நாளை அலுவல் ஆய்வுக் குழு கூடவிருக்கிறது. அதிலே பேசி முடிவு செய்து, அதைப் பற்றி விவாதிக்கலாம்.

மத்திய அரசு அறிவித்துள்ள மண்ணெண்ணெய் மற்றும் சமையல் எரிவாயு விலை உயர்வு குறித்து..... (குறுக்கீடு) திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நான் ஓர் உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருக்கிறேன். இந்த அவையிலே, 15 ஆம் தேதி வரும் என்று முதல்வர் அவர்கள் அறிவித்து, அந்தத் தண்ணீர் வராத காரணத்தால், முதல்வர்மீது நான் உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருக்கிறேன். ஆகவே, அந்த உரிமை மீறல் பிரச்சினையைப் பற்றி....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலில் திரு. சுந்தரம் போன்றவர்கள், உரிமை மீறல் என்றால் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இல்லாவிட்டால், தெரிந்தவர்களையாவது கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். அவர் கொடுத்திருக்கிற உரிமை மீறல் பிரச்சினை, 15 ஆம் தேதி கிருஷ்ணா தண்ணீர் வருமென்று நான் இந்த அவையிலே அறிவித்தேன்; அது தவறான தகவல் என்று — உரிமை மீறல் தருவது என்றால், ஆந்திர முதல்வர் திரு. சந்திரபாபு நாயுடு மீதுதான் தரவேண்டும். ஏனென்றால், நான் "அப்படி ஒரு கடிதம் எழுதியிருக்கிறார் திரு. சந்திரபாபு நாயுடு" என்று குறிப்பிடுகிறேன். அது தவறாக இருந்தால் என்மீது உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வரலாம். திரு. சந்திரபாபு நாயுடு, 26-3-2000 தேதியிட்டு எனக்கு எழுதிய கடிதத்தில்,

"I have received your letter, dated 26-2-2000 expressing your concern for the early completion of certain works and the need for providing drinking water to Chennai City. I would like to assure that we stand by the commitments made to the State of Tamil Nadu in so far as supply of Krishna water is concerned, we are confident that we will be able to release water to



Chennai City from Kandaleru Dam from 15-4-2000 to tide over the present drinking water problem".

என்று—15 ஆம் தேதி கிடைக்கும் என்று—அவர் எழுதியிருக்கிறார். அதைத்தான் சொல்லியிருக்கிறேன். என்னுடைய அன்றைய அறிவிப்பிலேகூட, "இந்த மாதக் கடைசியிலோ அல்லது அடுத்த மாதம் 15 ஆம் தேதிக்குள்ளோ தண்ணீர் நிச்சயமாக அனுப்பி வைக்கிறேன்" என்று — நான் சற்றுக் கடுமையாக எழுதிய கடிதத்திற்கு பதிலாக—ஆந்திர முதல்வர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள் எனக்குப் பதில் எழுதியிருக்கிறார். 15 ஆம் தேதிக்குள்ளாக நிச்சயமாகத் தண்ணீர் தரப்படுமென்று எழுதியிருக்கிறார் என்றுதான் நான் குறிப்பிடுகிறேனேயல்லாமல், நான் எந்த உறுதியும் இங்கே அளிக்கவில்லை. உறுதி அளித்திருந்தாலோ, அல்லது திரு. சந்திரபாபு நாயுடு கடிதம் எழுதாமலிருந்து, நான் அவர் எழுதியிருக்கிறார் என்று ஒரு உண்மைக்கு மாறான செய்தியைச் சொல்லி இருந்தாலோ, தவறான தகவலை இங்கே வெளியிட்டிருந்தாலோதான் உரிமை மீறல் பிரச்சினை வரும். எனவே, உரிமைப் பிரச்சினை எதெதெற்குக் கொண்டுவர வேண்டும் என்பதை இனிமேலாவது திரு. சுந்தரம் அவர்கள் அறிந்துகொள்வது நலம் என்று கருதுகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதற்குத்தான் விளக்கம் சொல்லிவிட்டார் அல்லவா? ஆந்திர முதல்வர் எழுதிய கடிதத்தைத்தான் நான் சொன்னேன் என்று விளக்கம் சொல்லிவிட்டார். ஆகையால் உட்காருங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு சின்ன விளக்கம்....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் முன்னிலையிலே ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. கிருஷ்ணா தண்ணீரைப் பொறுத்து, ஒரு விவாதமே, ஒரு மணி நேர விவாதமே அவையிலே வைத்துக்கொள்வது என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. நாளையதினம் நம்முடைய அலுவல் ஆய்வுக் குழு கூடவிருக்கிறது.

[கலைஞர் மு. கருணாநிதி] [2000 ஏப்ரல் 17

அந்த அலுவல் ஆய்வுக் குழுவிலே அதைப் பற்றி யோசித்து முடிவெடுக்கலாம்; எந்தத் தேதியிலே வைத்துக்கொள்வது, எவ்வளவு நேரம் விவாதம் என்பதை, நாளையதினம் முடிவு செய்யலாம் என்று, இன்று காலையிலே நாங்கள் எல்லாம்கூடிப் பேசிக் கருத்து அறிவித்திருக்கிறோம். இதற்கிடையே இதையே நீட்டித்துக் கொண்டு போகவேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். உரிமைப் பிரச்சினை என்ற காரணத்தால், இந்தப் பதிலைச் சொன்னேன்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### மண்ணெண்ணெய் மற்றும் சமையல் எரிவாயு விலையை மத்திய அரசு உயர்த்தியது

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மத்திய அரசாங்கம் அறிவித்துள்ள மண்ணெண்ணெய் மற்றும் சமையல் எரிவாயு விலை உயர்வு குறித்து, ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. ஆர்.ஆர். சேகரன், திரு. சி. ஞானசேகரன், திரு. பி.ஆர். சுந்தரம், திரு. க. மணிவர்மா, திரு. லா. சந்தானம், திரு. எஸ். முகம்மது கோதர் மைதீன், திரு. ம. அப்துல் லத்தீப், திரு. சி. வேலாயுதன், கவன ஈர்ப்பாக திரு. ஐ. கணேசன், திரு. கே. சுப்பராயன், திரு. டி. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன், டாக்டர் க. கிருஷ்ணசாமி, சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. கே. சுப்பராயன், திரு. ஜி. நிஜாமுதீன், திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே இது சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. இத்தனை பேர் பேசுவதற்கு நேரம் போதாது. எனவே, ஏற்கெனவே எடுத்த முடிவின்படி, 3 பேருக்கு மட்டும் அனுமதி அளிக்கப்படுகிறது. முதலில் திரு. சி. ஞானசேகரன்.

(முற்பகல் 10-35

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு முதற்கட்டமாக பொது விநியோகத் துறை மூலமாக ரேஷன் கடைகளிலே விற்கப்படுகிற — வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களைச் சென்றடையும் — அரிசியினுடைய விலையை உயர்த்தினார்கள். அடுத்தகட்டமாக, மண்ணெண்ணெய் மற்றும் சமையல் எரிவாயு விலையை



2000 ஏப்ரல் 17] [திரு. சி. ஞானசேகரன்]

உயர்த்தியிருக்கிறார்கள். மூன்றாவது கட்டமாக நேற்றைக்கு முந்தையதினம் ரேஷன் கடைகளிலே வழங்கப்படக்கூடிய கோதுமை, சர்க்கரை விலையை உயர்த்தியிருக்கிறார்கள். சமையல் எண்ணெய் விலையும் உயர்ந்திருக்கிறது. மத்தியிலே ஆண்டு கொண்டிருக்கிற பாரதிய ஜனதா அரசு இப்போது தமிழகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய 6 கோடி மக்களுடைய வயிற்றில் அடித்து இருக்கிறது என்று சொல்லலாம்.

ஏற்கெனவே, ஏழையெளியவர்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்கள், இதுபோன்ற ரேஷன் கடைகளிலே வழங்கக்கூடிய, மானிய விலையிலே வழங்கக்கூடிய அத்தியாவசியப் பண்டங்களான அரிசி, மண்ணெண்ணெய், கோதுமை போன்றவற்றைத்தான் அவர்கள் வாங்கி, உண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையிலே ஒரு பெரிய ஏமாற்றத்தை அளிக்கக்கூடிய வகையில் மத்திய அரசு திடீரென்று ரேஷன் அரிசி விலையை உயர்த்தியிருக்கிறது. இதுகுறித்து நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கை 2000-2001-லே, 33-வது பத்தியிலே சொல்கிறபோது "மத்திய அரசு நிதிநிலை அறிக்கையில் மாநிலங்களுக்கு அளிக்கும் அரிசி விலை உயர்த்தப்பட்டு இருப்பது கவலைக்குரியதாக உள்ளது. இந்த விலை உயர்வினை ரத்து செய்ய வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்" என்று அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே கூறினார்கள்.

அதேநேரத்தில், இந்த நிதிச் சுமையை, இதனால் ஏற்படக்கூடிய நட்டத்தை—தமிழகத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கக்கூடிய ஏழையெளிய மக்களுடைய உணர்வைப் புரிந்து கொண்டு, இந்தத் தமிழக அரசே சுமக்கும், அதற்காக ரூ.300 கோடி அளவிற்கு இந்த அரசுக்கு இழப்பு ஏற்படும் என்றுகூட அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் மத்தியிலே ஆண்டு கொண்டிருக்கக்கூடிய பாரதிய ஜனதா அரசினுடைய கூட்டணியிலே அங்கம் வகிப்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகம்; மற்றும் அதற்கு உள்ளிட்ட சில கட்சிகள்; இங்கே இருக்கக்கூடிய பாட்டாளி மக்கள் கட்சி போன்ற கட்சிகள் அரிசி விலையை உயர்த்தியபோது வெறும் நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள், கவலை அளிப்பதாக இருக்கிறது என்று மட்டும் ஒரு கருத்தைச் சொல்லிவிட்டு, விட்டு விட்டார்கள். நாம் அப்போதே கண்டனக் குரலை எழுப்பி இருக்க வேண்டும். இந்த மாமன்றத்தின் மூலமாக எப்படி சேலம் உருக்காலைக்கு, நாம் ஒரு கோரிக்கையை

வைத்தபோது, உடனடியாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை ஏற்று, ஒரு கண்டனத் தீர்மானத்தை இயற்றினார்களோ, அதேபோல, அரிசிக்கும் நாம் அப்போதே இயற்றியிருக்க வேண்டும். ஆனால் அதை நாம் செய்யாத காரணத்தாலோ என்னவோ, முதலிலே ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, கடைசியிலே மனிதனைக் கடிக்கிற கதையாக, ஒவ்வொன்றாக உயர்த்தி இவர்கள் இப்போது **gas** விலையை உயர்த்தியிருக்கிறார்கள், **kerosene** விலையை உயர்த்தியிருக்கிறார்கள். அரிசியை எடுத்துக் கொண்டால் *2* ரூபாய் அதிகமாகி இருக்கிறது ஒரு கிலோவுக்கு; அதே போல மண்ணெண்ணெய், அதுவும் *2* ரூபாய் அதிகம்; **gas** விலையை எடுத்துப் பார்க்கிறபோது, கிட்டதட்ட *30* ரூபாயிலேயிருந்து *35* ரூபாய்க்கு மேலே இப்போது உயர்ந்திருக்கிறது. சர்க்கரை விலை *2* ரூபாய் கிலோவிற்கு உயர்ந்திருக்கிறது. கோதுமை விலை கிலோவிற்கு *2* ரூபாய் உயர்ந்திருக்கிறது. இப்படி விலையை அதிகரித்துக் கொண்டே போய்க் கொண்டு இருக்கக்கூடிய பாரதிய ஜனதா அரசை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏன் கண்டிக்காமல் இருக்கிறார்கள் என்பதுதான் எங்களுக்கு விந்தையாக இருக்கிறது.

மாறாக, ஆந்திரத்தில் ஆண்டு கொண்டிருக்கக்கூடிய, அந்த தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்காவிட்டாலும்கூட, வெளியிலே இருந்து ஆதரவு அளித்துக் கொண்டிருக்கிற ஆந்திர முதல்வர் மாண்புமிகு சந்திரபாபு நாயுடு அவர்கள்கூட அதைக் கண்டித்து இருக்கிறார். மத்திய அரசிலே அங்கம் வகித்துக் கொண்டிருக்கக்கூடிய திரினாமுல் காங்கிரசினுடைய தலைவி, இரயில்வே துறை அமைச்சர் மாண்புமிகு மம்தா பானர்ஜி அவர்கள் கூட அதைக் கண்டித்து இருக்கிறார். ஆனால் நம்முடைய முதல்வர் அவர்கள் ஏனோ அதைக் கண்டிக்காமல், மத்திய அரசுக்கு வேறு வழியில்லை என்று இவர்கள் வக்காலத்து வாங்கிவிட்டது, அவர்களுக்கு மிகவும் எளிதாகப் போய்விட்டது என்பதை நான் இந்த மன்றத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்து மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு, அதை வன்மையாகக் கண்டித்து இருக்க வேண்டும். அப்படி வன்மையாகக் கண்டிக்காத ஒரு நிலையினால் பாரதிய ஜனதா அரசு மிக எளிமையாக எடுத்துக் கொண்டு, அவர்கள் படிப்படியாக, தமிழன் ஏழையாக வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய அந்த ஏழை மக்களுடைய முதுகில் சுமையை ஏற்றிக்கொண்டே போய்க் கொண்டிருக்கிறது. இதை



நிச்சயமாகத் தமிழக மக்கள் மன்னிக்க மாட்டார்கள். நிச்சயமாக இது மக்கள் விரோத போக்கு, எனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக, இன்றாவது ஒரு கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டும் "மத்திய அரசு விலையைக் குறைக்க வேண்டும். அதேபோல, மண்ணெண்ணெய் விலை, சமையல் எரிவாயு விலை, கோதுமை விலை, சர்க்கரை விலையைக் குறைக்க வேண்டும்" என்று ஒரு கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டும். வெறும் கவலை அளிக்கிறது என்று மட்டும் நாம் சொல்லி விட்டு, விட்டு விடக்கூடாது. மேலும் வேறு வயில்லை என்று சொன்னது வேறு அவர்களுக்குச் சாதகமாகப் போய்விட்டது. நம்முடைய முதல்வர் அவர்கள் உதவிக்கு இருப்பார்கள் என்று சொன்னால் உபத்திரவமாக இருக்கக்கூடிய அளவிற்கு, இவர் ஏனோ அவர்களுக்கு வக்காலத்து வாங்கியதைத்தான் நம்மாலே ஏற்றுக்கொள்ள முடியாமல் போய்விட்டது என்று தமிழக மக்கள் எல்லாம் கொந்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாக இன்றாவது, மக்களுடைய உணர்விற்கு ஏற்ப அவர்கள் ஒரு கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வர வேண்டும். மத்திய அரசு, அவர்கள் சொல்லக்கூடிய.......

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்கிறேன். *9000* கோடி ரூபாய், ரேஷனுக்காக, மானியம் கொடுத்துக் கொண்டிருக்கிறபோது, அதிலே *3000* கோடி ரூபாய்க்கான ரேஷன், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மக்களை சரியாகப் போய்ச் சென்றடையவில்லை; அதற்குக் காரணம், நிறைய போலி அட்டைகள் இருக்கின்றன. அதேபோல வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்கள் யார் என்று இன்னும் மாநில அரசு கண்டறியவில்லை; இன்னும் சொல்லப்போனால், வேகன்களிலே அரிசியெல்லாம் கடத்தப்படுகிறது; இந்தக் காரணத்தினால்தான் நாங்கள் மானியத்தை எடுப்போம் என்ற வகையிலே, மத்திய அரசின் நுகர்வோர்த் துறை அமைச்சர், மாண்புமிகு சாந்தகுமார் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, நான் இந்த அவையின் மூலமாக, மாண்புமிகு முதலமைச்சரைக் கேட்டுக்கொள்வதெல்லாம் தயவுசெய்து, உடனடியாக—*300* கோடி ரூபாய் நிதிச் சுமை இந்த அரசுக்குத்தான்,

[திரு. சி. ஞானசேகரன்] [2000 ஏப்ரல் 17

நாம்தான் ஏற்றுக்கொண்டு இருக்கிறோம்—கண்டித்து நாம் அதைப் பெற்றிருக்க வேண்டும். அதைப் பெற்றிருந்தால், ஒரு M.L.A-க்கு தொகுதி வளர்ச்சி நிதியைக்கூட, ஒரு கோடி ரூபாயாகவாவது உயர்த்தித் தந்திருக்கலாம். உயர்த்தித் தாருங்கள் என்று மாண்புமிகு முதலமைச்சரை நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அப்படியிருக்கிறபோது, 300 கோடி ரூபாய் இருந்தால், 234 உறுப்பினர்களுக்கும் ஒவ்வொரு கோடியாக அந்தத் தொகுதி வளர்ச்சி நிதி கிடைத்திருந்தால், தொகுதி வளர்ச்சி அடைவதற்குக்கூட வாய்ப்பாக இருந்திருக்கும். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு நிச்சயமாக, இந்த அவையில், மக்களுடைய கருத்தினை ஏற்று, ஒரு கண்டனத் தீர்மானத்தை இயற்ற வேண்டும். இல்லையென்று சொன்னால், பாரதிய ஜனதா கட்சிக்குக் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய ஆதரவை விலக்கிக்கொண்டு, தமிழ்நாட்டிலிருந்து, மத்திய அமைச்சர்களாக இருக்கக்கூடிய, அந்த அமைச்சர்களை, நான் நிச்சயமாக வாபஸ் வாங்க வைப்பேன் என்ற ஒரு வார்த்தை அவர்கள் கடுமையாக விடுவிக்கவேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆட்சி அமைப்புகளிலேயே மிகச் சிறந்தது ஜனநாயக அரசமைப்பு என்றுதான் உலகத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கு ஜனநாயகம்தான் மிகச் சிறந்தது என்பதற்காக அல்ல; குறைந்த தீமையுள்ள ஓர் அரசமைப்பு, ஜனநாயக அரசமைப்பு என்பதால், இவற்றை எல்லோரும் ஏற்றுக்கொள்கிறார்கள். அந்த அமைப்பில் பலமும் உண்டு; பலவீனமும் உண்டு. மிகப்பெரிய பலவீனம் என்னவென்றால், இப்போது ஒரு விவாதப் பொருளாக ஆக்கப்பட்டிருக்கிற, இந்த விலை உயர்வு பிரச்சினைதான். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மத்திய அரசு மக்களுக்குக் கேடு விளைவிக்கக்கூடிய நடவடிக்கைகளை ஜனநாயகத்தின் பெயரால் தொடர்ந்து நிகழ்த்திக் கொண்டிருப்பது ஜனநாயகத்தையே கேலிக்கூத்தாக்குவதாகும். எந்த மக்கள், இவர்களுக்கு ஆளுகிற அதிகாரத்தை வழங்கினார்களோ, அந்த மக்களின் அடிப்படை உரிமைகளையே பாதிக்கின்ற அளவிற்கும், அவர்களுடைய வாழ்க்கைப் பிரச்சினையைக் கேள்விக்குறியாக ஆக்குகிற வகையிலேயும், சில பல நடவடிக்கைகள் எடுத்திருப்பதுதான், இந்த ரேஷன் பொருள்களின் விலை உயர்வுக்கும், இன்னும் பிற பொருளின் விலை உயர்வுக்கும்



2000 ஏப்ரல் 17] [திரு. கே. சுப்பராயன்]

காரணமாக அமைந்திருக்கின்றன. அதற்கு, மத்திய அரசு சொல்கிற காரணம், தர்க்க ரீதியாக, நியாயம்தான்.

ஒவ்வொன்றிற்கும் தர்க்கம் உண்டு. மத்திய அரசு என்ன தர்க்கம் சொல்கிறதென்றால் நிதிப் பற்றாக்குறை. மாநில அரசோ அல்லது மத்திய அரசோ, தொடர்ச்சியான நிதிப் பற்றாக்குறையின் காரணமாக, இத்தகைய நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது தவிர்க்க முடியாத நிர்பந்தம் என்று மத்திய அரசும் மாநில அரசும் சொல்கின்றன; நியாயம்தான். ஒரு மத்திய அரசு ஆளுகிறபோது, நிதிப் பற்றாக்குறையை ஈடுகட்டுவதற்காக, சிலபல நடவடிக்கைகளை அவர்கள் எடுக்க வேண்டிய அவசியம் நேரலாம். அந்தத் தர்க்கம் one way traffic. எப்பொழுதுமே தர்க்கம் இரண்டு பக்கமும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

மத்திய அரசு என்ன சொல்கிறது என்றால், மத்திய அரசை நடத்த முடியாத அளவிற்கு நிதி நெருக்கடி இருக்கிற காரணத்தால், இந்த நடவடிக்கைகளை, கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். உங்கள் சுமைகளைத் தூக்கி மக்கள் தலையிலே போடுகிறீர்களே, மக்கள் தங்கள் சுமைகளை, எவன் தலையில் போடுவது என்று எனக்குப் புரியவில்லை. மத்திய அரசுக்கு, நல்ல, நிறைய 100 கோடி தலைகள் இருக்கின்றன; அவர்கள் தலையிலே போட்டுவிடலாம், தங்கள் சுமைகளை. தங்கள் சுமைகளைப் போடுவதற்கு 100 கோடி தலைகள் இருக்கின்றன; அந்த 100 கோடி மக்கள் தங்கள் சுமைகளை எங்கே இறக்கி வைப்பது? தயவுசெய்து, வாஜ்பாய் அல்லது மாநில அரசு இதற்கு வழி சொல்வார்களா. விலை ஏறி இருக்கிறது. ஏற்றப்பட்டிருக்கிற விலையால், அவர்களுடைய குடும்ப பட்ஜெட் பாதிக்கிறது.

மத்திய அரசினுடைய பட்ஜெட் பாதித்தால், மக்கள்மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று சொலகிறார்கள். மக்கள் யார்மீது நடவடிக்கை எடுப்பது? போராட முடியாது. கொடி கட்டிப் போராடினால், அதற்குப் பல்வேறு தடைகள்; ஜனநாயகத்தின் பெயரால், ஜனநாயகம் சேதாரப்படுத்தப்படுகிற நடவடிக்கைகள் எல்லாம் நடக்கின்றன. எனவே, நான் இந்த நடவடிக்கையில் தர்க்க ரீதியாகக் கேட்க விரும்புகிறேன். மத்திய அரசின் தர்க்கம், அந்தரங்கசுத்தியோடு உண்மையென்றால், மாநில மக்களின்மீது, தாக்குதலைத் தொடுத்திருக்கிற மத்திய அரசு, மாநில மக்கள் தங்கள் நெருக்கடியைத் தீர்க்க, way out இல்லையே,

[திரு. கே. சுப்பராயன்] [2000 ஏப்ரல் 17

வழியேயில்லையே; வழி இல்லாமலே இப்படித் தாக்குதல் தொடுக்கலாமா? ஆனால் தாக்குதல் தொடுத்திருக்கிறது. இந்தத் தாக்குதல் தொடுத்திருப்பது, ஜனநாயகத்தின் பெயரால், ஜனங்களைக் கேலி செய்கிற, இன்னும் சொல்லப்போனால், வதை செய்கிற ஒரு வேலையாகத்தான் எனக்குத் தெரிகிறது. எனவே, மாநில அரசு உண்மையிலேயே மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்த விஷயத்தை வரவேற்றது ஒரு துரதிருஷ்டவசமானதாகும். அப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்தது உண்மையிலேயே மாநில மக்களுக்கு அதிர்ச்சித் தரக்கூடிய ஒரு செய்தியாகும். அத்தகைய நிலைமைகளை மாற்றி, இந்த மாநிலச் சட்டமன்றப் பேரவையிலே ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் "மத்திய அரசு தன்னுடைய நடவடிக்கைகளைத் திரும்பப் பெற வேண்டும்" என்ற தீர்மானத்தை மாநில அரசு நிறைவேற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது மத்தியிலே ஆளுகின்ற பாரதிய ஜனதா அரசு மண்ணெண்ணெய், gas, மைதா, ரவா இவற்றினுடைய விலைகளை எல்லாம் சமீபத்திலே உயர்த்தியிருக்கின்றது. இந்த விலை உயர்வு வந்து கிட்டத்தட்ட 1 மாத காலம் ஆகியிருக்கிறது. இந்த விவாதத்தைக் கடந்த பட்ஜெட் கூட்டத்தொடர் மார்ச் 24 ஆம் தேதி அன்றே நாங்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானமாக, சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு என்றெல்லாம் கொடுத்து இருந்தோம். கிட்டத்தட்ட 20 நாட்களுக்குப் பிறகு இந்த விலை உயர்வைப் பற்றி இந்தத் தமிழக அரசு இன்றைக்கு ஒரு விவாதப் பொருளாக எடுத்துக்கொண்டிருக்கிறது என்றால், இந்தத் தமிழக அரசுக்கு இந்த விலை உயர்வு பற்றி எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பது இதன் மூலமாகத் தெரிகின்றது.

இப்போது சந்திரபாபு நாயுடு அவர்கள் அவர்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றத்திலே இந்தப் பிரச்சினையை எழுப்புவார்கள் என்று நேற்று கூறியிருக்கிறார்கள். மத்திய அரசு விலையை உயர்த்தியதற்கு அடுத்த நாளே எங்களுடைய கழகப் பொதுச் செயலாளர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் "இந்த விலை உயர்வு கண்டனத்திற்குரியது, மத்திய அரசு இந்த விலை உயர்வை வாபஸ் வாங்க வேண்டும்" என்று அறிக்கை கொடுத்தார்கள். மத்திய அரசாக இருந்தாலும் சரி, மாநில அரசாக இருந்தாலும் சரி,



2000 ஏப்ரல் 17] [திரு. பி.ஆர். சுந்தரம்]

இதிலே எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதற்கு மாறாக, தமிழக முதல்வர் அவர்கள், இந்த விலை உயர்வுக்கு நியாயம் கற்பித்துப் பேசியிருக்கிறார்கள். தற்போதைய சூழ்நிலையில் இது தவிர்க்க முடியாத பிரச்சினை என்று அவர்கள், மத்தியிலே ஆளுகின்ற பாரதிய ஜனதா அரசுக்கு வக்காலத்து வாங்கியிருக்கின்றார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், மத்தியிலே ஆளுகின்ற பாரதிய ஜனதா அரசுக்கு ஆதரவு அளிக்கக்கூடிய, மாநிலத்திலே ஆண்டு கொண்டு இருக்கின்ற B.J.P.-யினுடைய முதல்வர் அவர்கள்கூட இந்த விலை உயர்வுக்கு நியாயம் கற்பிக்கவில்லை. ஆனால், இப்போது அந்தக் கட்சியை ஆதரித்துக் கொண்டு, என்ன காரணத்திற்காக முதல்வர் அவர்கள் நியாயம் கற்பிக்கிறார்கள் என்று தெரியவில்லை.

'உறவுக்குக் கை கொடுப்போம்' 'உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்று கூறினீர்கள். உறவுக்குக் கை கொடுத்துக் கொண்டிருக்கின்றீர்கள். உரிமையை ஏன் கேட்க மாட்டேன் என்கிறீர்கள்? உங்களுடைய பதவியைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும், மத்தியிலே உங்களுடைய மருமகள் அவர்கள் ஒரு அமைச்சராக நீடிக்க வேண்டும், உங்களுடைய ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்கள் எல்லாம் (குறுக்கீடுகள்) அங்கே அமைச்சராக ஆக வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகத்தான் மக்களுடைய அன்றாடப் பிரச்சினை ஏழைகளுடைய வயிற்றிலே அடிக்கக்கூடிய பிரச்சினை, இதற்கு நீங்கள் குரல் கொடுக்க மாட்டேன் என்கிறீர்கள் என்று நான் கடுமையாக இந்த அரசின் மீது கண்டனம் தெரிவிக்கிறேன்.

அடுத்து, நீங்கள் மத்தியிலே ஆளுகின்ற இந்த B.J.P. அரசைப் பற்றி, அன்றைக்கு பண்டாரங்கள், பரதேசிகள், தமிழ்நாட்டிற்குள் வந்து விட்டார்கள் என்று கூறினீர்கள். இன்றைக்கு உங்கள் வார்த்தையிலேயே சொல்ல வேண்டுமானால், அந்தப் பண்டாரங்கள், பரதேசிகளுக்காக நீங்கள் வக்காலத்து வாங்கும்போதுதான், இந்தத் தமிழகத்தின், தமிழகத்தினுடைய மக்களுடைய நலனை நீங்கள் புறக்கணித்து விட்டதாக நாங்கள் குற்றஞ்சாட்டுகின்றோம்.

குறிப்பாக, கோதுமை விலை 2 ரூபாயும், மண்ணெண்ணெய் விலை கிட்டத்தட்ட ரூ.2.50-லிருந்து ரூ. 5.50 ஆக கிட்டத்தட்ட அன்றைக்குக் கூட கூறினீர்கள். 100 சதவிகிதம், பாதிக்குப் பாதி உயர்த்திவிட்டார்கள். இவற்றையெல்லாம் கேட்பதற்கு உங்களுக்கு நேரம் இல்லை. இதற்கு முக்கிய காரணம் மத்திய அரசினுடைய புதிய பொருளாதாரக் கொள்கை; இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையின்

[திரு. பி.ஆர். சுந்தரம்] [2000 ஏப்ரல் 17

காரணமாக இந்திய முதலீடுகள்தான் இங்கே அதிகமாக வருகின்றனவே தவிர வேறல்ல. அந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக இப்போது விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய விளைபொருட்களுக்கெல்லாம் நியாயமான விலை கிடைக்காமல், தேங்காயினுடைய விலையெல்லாம், இப்போது 1 ரூபாய், 2 ரூபாய்க்கு வந்து, கொப்பரையின் விலை நபார்டு மூலம் டன் 4,000 ரூபாய்க்கு வாங்க வேண்டும் என்று தீர்மானங்கள் எல்லாம் போட்டு, விவசாய உற்பத்தியே அடியோடு பாதித்து, அந்த விவசாயிகள் இப்போது வாழ்க்கையின் ஓரத்திற்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள். ஆகவே, எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் குறிப்பிட்டதைப்போல், "மத்திய அரசு உயர்த்திய அந்த விலையேற்றத்தை உடனடியாக வாபஸ் வாங்க வேண்டும்" என்று இங்கு ஒரு கண்டனத் தீர்மானத்தைப் போட்டு இப்பொழுது அனுப்ப வேண்டும்.

சேலம் உருட்டாலைக்குக் கண்டனத் தீர்மானம் போட்டோமே, ஒரு வரியில் போட்டதோடு சரி, அதற்குப் பிறகு அதைப்பற்றி நினைக்கவேயில்லை. அதேபோல், அந்தக் கண்டனத் தீர்மானத்தை மட்டும் போட்டு அனுப்பினால் போதாது. பிரதம மந்திரியைச் சந்திக்க வேண்டும். தமிழ்நாடு முழுவதும் ஒரு நாளில் அனைத்துக் கட்சியினரும் சேர்ந்து ஒரு 'பந்த்' அனுஷ்டிப்பதற்குக்கூட ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அளவிலே இந்த அரசு ஏழைகளுடைய பிரச்சினையைத் தீர்க்க முடியாத அரசு என்று கூறி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எங்களுடைய கடும் கண்டனத்தைத் தெரிவித்து, அமர்கின்றேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**திரு. லா. சந்தானம்:** முக்கியமான பிரச்சினையாக இருப்பதால், எல்லாக் கட்சியினருக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மொத்தம் 16 பேர் பேச அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். ஆளுக்கு ஐந்தைந்து நிமிஷம் என்றால்கூட, அடுத்ததாக சமூக நலத் துறை மானியக் கோரிக்கை இருக்கிறது. ஏற்கெனவே பேசி அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்ததுதான் இது; ஏற்கெனவே நீங்கள் எல்லாம் அலுவல் ஆய்வுக் குழுவில் பேசி, முடிவு பண்ணி, ஒத்துக்கொண்டதுதான் இது.



2000 ஏப்ரல் 17]

**திரு. லா. சந்தானம்:** நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தாராளமாகச் செய்யுங்கள்.

(திரு. லா. சந்தானம் வெளிநடப்புச் செய்தார்)

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நம்முடைய திரு. லத்தீப் அவர்கள், நம்முடைய திரு. சந்தானம் அவர்கள் சொல்வது போல், இது தமிழகத்தினுடைய ஏழை எளிய மக்களுடைய பிரச்சினை என்பதால், எல்லா கட்சித் தலைவர்களுக்கும் மட்டுமாவது ஐந்தைந்து நிமிஷம் கொடுக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுவில் பேசி முடிவு செய்த பிரகாரம்தான் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** இது ஒரு விசேஷ சூழ்நிலையின் காரணமாக இருப்பதால், ஐந்தைந்து நிமிஷங்களுக்கு அவர்களைப் பேசுமாறு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. லா. சந்தானம் திரும்பவும் வந்து இருக்கையில் அமர்ந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான தேசிய பிரச்சினை. தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல; இந்தியா முழுமைக்கும் உள்ள பிரச்சினை; இந்தியாவினுடைய பொருளாதாரத்தையும் பொறுத்திருக்கிறது. மக்களையும் கவனிக்க வேண்டும். பொருளாதார நிதிநிலையையும் செம்மையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற கடமை மத்திய மாநில அரசுகளுக்கு உண்டு. எனவே, அவர்கள் இந்த நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். நாடு முழுவதும் கோரிக்கைகள் வைத்தும் பிரதமர் அவர்களும் அதைத் திரும்பத் திரும்ப, ஏற்றிய விலையைக் குறைக்க அல்லது குறைத்த மானியத்தை மீண்டும் உயர்த்த முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குள்ளே செல்ல எனக்கு நேரமும் இல்லை; தேவையும் இல்லை. இது நாடறிந்த ஒன்று; எல்லோரும் அறிந்திருக்கிறோம். ஆனால், தமிழகத்திலே குறைக்கப்பட்ட மானியத்திற்கு ஈடுசெய்யும் வகையில், தமிழக அரசு ரூ.300 கோடியை, தமிழக அரசின் சார்பாக வழங்கும் என்று சொல்லியிருப்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எனக்குக் காரணம் புரிகிறது. மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள், ஏழைகள் பாதிக்கப்படக் கூடாது என்று நினைக்கக் கூடியவர். எனவே, அந்த ரூ.300 கோடியை மாநில அரசே ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மாறாக நாம் மத்திய அரசாங்கத்திடம் போராட வேண்டும். தமிழகத்தினுடைய பணத்திலேயிருந்து நாம் ரூ.300 கோடியை—வேறு முன்னேற்றத் திட்டங்களுக்காக இருக்கக்கூடிய பணத்தை—செலவழிப்பதைவிட மத்திய அரசாங்கத்திடம் போராட வேண்டுமென்பதுதான் என்னுடைய நிலை. இல்லையென்றால், ஏற்கெனவே பதுக்கல் நடக்கிறது; ஏற்கெனவே கடத்தல் நடக்கிறது. தமிழகத்திற்கு வெளியே மட்டுமல்ல அரிசி கடத்தல் நடப்பது; இங்கே தமிழகத்திற்கு உள்ளேயேகூட market-க்குப் போய் விடுகிறது. ரேஷன் அரிசி எல்லாம் நிச்சயமாக market-க்குப் போகும். நாம் ரூ.300 கோடியை இழப்பதன் வாயிலாக மக்களுக்குக் கிடைக்கக்கூடிய நன்மை கிடைக்கிறதோ இல்லையோ, ஆனால், பொருளாதாரத்திற்கு மிகப் பெரிய தீங்கு ஏற்படும் என்பது என்னுடைய கருத்து. எனவே நாம் மத்திய அரசாங்கத்திடம் போராட வேண்டும்.

*முற்பகல் 10-55*

இங்கே எல்லோரும் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னார்கள். அது கண்டனத் தீர்மானமாகத்தான் நிறைவேற்ற வேண்டுமென்பது இல்லை. என்னுடைய கருத்து; இது குறித்து கேரள சட்டசபையே ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. அந்த அடிப்படையிலே நம்முடைய கருத்தை வெளிப்படுத்தும் வகையில் எல்லோரும், எல்லாக் கட்சிகளும் சேர்ந்து. இதை ஏதோ கட்சிப் பிரச்சினையாக நான் கருதவில்லை. ஆளும் கட்சிக்கு ஒரு நிலை, எதிர்க்கட்சிக்கு ஒரு நிலை என்று இல்லை; எல்லாக் கட்சிகளுக்கும் இருக்கக்கூடிய ஒரு பொது நிலை. எனவே பொதுவான கருத்தைக் கொண்டிருக்கக்கூடிய இந்தப் பிரச்சினையில் எல்லாக் கட்சிகளும் ஒன்றுபட்டு—முதலமைச்சர் அவர்களே ஒரு தீர்மானத்தைப் போட்டு மத்திய அரசாங்கத்திற்கு, வேண்டுகோளை வைக்கலாம். அதைக் கண்டிக்க வேண்டிய அவசியமும் இல்லை. கண்டனத் தீர்மானம் என்று சொல்வதற்குப் பதிலாக மத்திய அரசாங்கத்திற்கு வேண்டுகோளை வைத்து இந்தச் சட்டமன்றத்தின் வாயிலாக பழைய நிலையைக் கொண்டு வாருங்கள், அதனால் எவ்வளவு பாதகம் ஏற்பட்டாலும், நஷ்டம் ஏற்பட்டாலும் இருக்கட்டும். ஆனால் இந்த முறையிலே பெரிய ஊனம் ஏற்படும்; பதுக்கல் அதிகமாக ஏற்படும்; கடத்தலும் ஏற்படும். பொருளாதாரத்தில் மிகப் பெரிய சிக்கல்கள் உருவாகும். தமிழக அரசின்மேல் மேற்கொண்டு 300 கோடி ரூபாய்





பாரம் சுமத்தப்படும். மற்றத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட அந்தப் பணத்தை இதற்காகச் செலவழிக்கக்கூடிய துர்பாக்கிய நிலை நமக்குக் கூடாது என்ற காரணத்தினால் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும், வேண்டுகோளை வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம். சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது ஏழையெளிய மக்கள் பயன்படுத்துகின்ற அரிசி, கோதுமை, மண்ணெண்ணெய் போன்றவற்றினுடைய விலையை மத்திய அரசு உயர்த்தியிருக்கின்ற காரணத்தினால் ஏழை மக்கள் மிகவும் அவதிக்குள்ளாகி இருக்கிறார்கள். அதுவும் உயர்வு என்றால் சாதாரணமான உயர்வு அல்ல. இப்போதும் பல்வேறு இடங்களிலே மின்சாரம் இல்லாத நிலையில் மண்ணெண்ணெய் விளக்கு வைத்துத் தங்களுடைய வீட்டிலே உள்ள இருளைப் போக்கக்கூடிய நிலையில் பாமர மக்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது அதனுடைய விலையை எல்லாம் நூற்றுக்கு நூறு சதவீதமாக உயர்த்தியிருக்கிற காரணத்தினால், இப்போது தமிழகத்திலே இருக்கின்ற அனைத்துத் தரப்பு மக்களும் மிகுந்த அவதிக்குள்ளாகி கஷ்டத்திலே இருக்கிறார்கள். எனவே, இப்போது பாரதிய ஜனதா அரசிலே தோழமைக் கட்சிகளாக இருக்கிற பல்வேறு அரசியல் கட்சிகள் எல்லாம்கூட இந்த விலை உயர்வு பொதுமக்களை, ஏழை மக்களைப் பாதிக்கின்ற ஓர் உயர்வு என்கின்ற காரணத்தினால் மத்திய சர்க்கார் மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்பதை மிக ஆணித்தரமாகச் செல்லியிருக்கின்றன.

இப்போது ஆந்திர முதல்வர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள்கூட நாடாளுமன்றத்திலே இந்தப் பிரச்சினை வருகின்றபோதுகூட நாங்கள் எல்லாம் அதற்காக வாதிடுவோம் என்றுகூடச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, தமிழக அரசு அந்த உணர்விலே சிறிதும் தயங்கியது அல்ல என்கிற நிலையை ஏற்படுத்துகின்ற அளவிற்கு இன்றைக்கு இந்த அவையின் மூலமாக இந்த உயர்த்திய விலைவாசிகளை எல்லாம் திரும்பப்பெற வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று அகில இந்திய பார்வர்டு பிளாக் இயக்கத்தின் சார்பிலே கூறி அமைகின்றேன்.

**மாண்பமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

[2000 ஏப்ரல் 17

• **திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு பின்பற்றி வருகின்ற பொருளாதாரக் கொள்கையின் காரணமாக ஏற்பட்டிருக்கிற பிரச்சினை இது என்பதை நாம் நன்கு அறிவோம். இப்போது மத்திய அரசால் விலை கூட்டப்பட்டது என்பது மட்டுமல்ல; மக்கள் வாங்கிப் பயன்படுத்துகிற பொருட்களுடைய விலையை எல்லாம் உயர்த்திவிட்டது என்பது மட்டுமல்ல; அதற்கு ஆதாரமாக இருக்கிற பல பொருட்களுக்குக் கொடுக்கப்படுகிற subsidy வெட்டப்பட்டிருக்கிறது என்பது மட்டுமல்ல; அதிலே எந்தவிதமான re-consideration-னும் இல்லை என்ற ஒரு நிலை இப்போது எடுக்கப்பட்டிருக்கிறது. தற்போதைய பத்திரிகைகளில் எல்லாம் அது தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பின்னணியிலே இப்போது தமிழகத்தைப் பொறுத்தளவிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதனுடைய சுமை ஏழையெளிய மக்களுடைய தலையில் போகக்கூடாது என்பதற்காக அரசிலே இருந்து மானியம் கொடுத்து அதைச் சரிகட்டுவதற்கு முயற்சிக்கிறார்கள். என்ன இருந்தாலும் அது மக்களுக்கு ஏற்படுகிற இழப்பு என்பதை நான் ஆளுநர் உரையிலே பேசுகின்ற நேரத்திலே குறிப்பிட்டேன். அதற்கு முதலமைச்சர் அவர்கள் வேறு ஒரு முறையிலே பதில் சொன்னார்கள். நான் என்ன சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என்றால், இங்கே மற்ற கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டிய அதே கருத்துகளோடு என் கருத்தையும் இணைத்துக்கொண்டு இப்போது இந்தச் சுமையை, ஏழையெளிய மக்கள் தலையிலே வந்திருக்கிற இந்தச் சுமையை மாற்றுவதற்காக மத்திய அரசு தேவையான நிதியுதவியை தமிழகத்திற்கு கொடுக்க வேண்டும் என்பதையும் நாம் வலியுறுத்த வேண்டும். அதைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்க ஆளும் கட்சி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து முயற்சிக்க வேண்டும் என்று நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், இது ஒரு கட்சிப் பிரச்சினை அல்ல; தமிழகத்திலேயிருக்கின்ற மக்களுடைய ஒரு மிக முக்கியமான பிரச்சினை. நாம் எப்படி சேலம் உருக்காலைப் பிரச்சினையிலே ஒரு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றினோமோ அந்த முறையிலே, இந்த விலை உயர்வின் காரணமாக மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற இழப்பைச் சரிகட்டுவதற்கான உதவியை, அதற்கான நிதியாதாரங்களை மத்திய அரசு தர வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதோடு, அதைப் பெறுவதற்காக ஒன்றுபட்ட முயற்சிகளிலேயும் நாம் ஈடுபட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



2000 ஏப்ரல் 17] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

முற்பகல் 11-00

நான் ஒன்றை மட்டும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது என்னவென்றால், இப்போது மத்திய அரசு, அங்கே ஆளும் கட்சியாக இருக்கிற தேசிய ஜனநாயகக் கூட்டணியிலே இருக்கிற பல கட்சிகள்கூட இந்த நடவடிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்ற கருத்தைத் தெரிவித்திருக்கின்ற பின்னணியில், தமிழகமும் அந்தக் கருத்தைத் தெரிவிப்பதிலிருந்து பின்வாங்க வேண்டிய அவசியம் இல்லை. இது மக்களுடைய பிரச்சினை என்ற முறையிலே இதற்கு நாம் ஒரு கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றுவது என்பது மட்டுமல்ல; ஏற்கெனவே சேலம் உருக்காலைப் பிரச்சினை சம்பந்தமாகத் தீர்மானத்தை நிறைவேற்றினோம். ஆனால், மத்திய அரசு அதைக் கண்டுகொள்ளவேயில்லை. அவர்கள் தனியார்மயம் ஆக்குவதற்கான நடவடிக்கையை ஒரு பக்கத்திலே எடுத்துக்கொண்டிருகிறார்கள். அதையும் நாம் கணக்கிலே எடுத்துக்கொண்டு, இது மக்களுடைய பிரச்சினை என்ற முறையிலே மத்திய அரசுக்கு உணர்த்தி, நமக்குக் கிடைக்க வேண்டியதை வாங்குவதற்கு நாம் ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டும் என்று பணிவன்போடு கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாடு இப்போது சுமார் 3½ இலட்சம் கோடி ரூபாய்க்குக் கடன்பட்டிருக்கிறது. நான் ஒரு குடும்பத் தலைவன் என்ற முறையிலே சிந்திக்கின்றேன். மத்திய அரசு கடன் இல்லா பாரதம் காண வேண்டும் என்ற உன்னத இலட்சியத்தை முன்வைத்துச் செயலாற்றத் தொடங்கி இருக்கிறது. ஒரு குடும்பத்தில் 50 ஆண்டுகளாக ஆண்ட தந்தை ஏராளமான கடனை வாங்கி, தினசரி அறுசுவை உணவோடு சமைத்துப் போட்டு, குடும்பம் கடனில் தத்தளித்துக்கொண்டிருக்கிறது; தந்தை மறைந்துவிடுகின்றார். 50 ஆண்டுகளாக.....

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவர் என்ன reply பண்ணுகிறாரா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் கருத்தை அவர் சொல்கிறார்.

[2000 ஏப்ரல் 17

**திரு. சி. வேலாயுதன்**: என்னுடைய கருத்தை நான் சொல்லக்கூடாதா? பிறகு நீங்கள் பேசுங்கள். நீங்கள் எல்லோரும் பேசும்போது நான் பேசாமல் இருந்தேன் அல்லவா? என்னைப் பேச விட்டு விட்டு பிறகு நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**திரு. சி. வேலாயுதன்:** என்னுடைய கருத்தை நான் சொல்கிறேன். நீங்கள் எல்லாம் பேசியபோது....

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது சரி அல்ல.

**திரு. சி. வேலாயுதன்**: என்னுடைய கருத்தைப் பேச எனக்கு உரிமை உண்டு. நீங்கள் அத்தனை பேரும் பேசும்போது, நீங்கள் பேசியது எனக்கு மாறுபட்ட கருத்து; இருந்தாலும் நான் பேசாமல் இருந்தேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது சரி அல்ல. நீங்கள் இருவரும் உட்காருங்கள். நீங்கள் பேசும்போது அவர் பேசாமல் உட்கார்ந்துகொண்டிருந்தார். அவர்களுடைய கருத்தை அவர் சொல்கிறார். அவருடைய கருத்தைச் சொல்வதற்கு அவருக்கு உரிமை உண்டு.

**திரு. சி. வேலாயுதன்:** நீங்கள் பேசியபோது மாறுபட்ட கருத்தாக இருந்தாலும் நான் பேசாமல் இருந்தேன் அல்லவா? என்னுடைய கருத்தை நான் சொல்கிறேன். ஆக, மத்திய அரசு கடன் இல்லா பாரதம் காண வேண்டும் என்ற முடிவோடு இறங்கியிருக்கிறது. 50 ஆண்டுகளாக குடும்பத்தை ஆண்ட தந்தை ஏராளமான கடனை வாங்கிவிட்டு, ஐந்து குழந்தைகளை கடனோடு விட்டுவிட்டுச் சென்றிருக்கிறார். குடும்பத்தினுடைய மூத்த மகன் நினைக்கின்றான்; குடும்பத்தினுடைய பொறுப்பில் இருக்கப் போகிறவன் நினைக்கின்றான்;



2000 ஏப்ரல் 17] [திரு. சி. வேலாயுதன்]

குடும்பத்தின்மீது பாசம் உள்ள தந்தையாக இருந்தாலும் கடன் இல்லாமல் வாழ நம்முடைய நிலைமையைச் சொல்லி சிக்கனமாக, வாழ்வதற்காக உண்ண வேண்டுமே தவிர, உண்பதற்காக வாழக்கூடாது என்று குழந்தைகளிடம் எடுத்துச்சொல்லி—சிக்கனமாக, வாழ்வதற்காக உண்ண வேண்டும் என்று கூறி, ஒருசில கடனோடு வாழ வைத்திருக்கலாம் என்று நினைக்கிறேன். 'தினசரி பருப்பு, வடை, பழம், பாயசம் என்ற அளவிற்குச் சாப்பிடவைத்து இவ்வளவு கடனை வைத்துவிட்டு பிறகு இறந்துவிட்டாரே' என்று நினைக்கிறான்; மூத்த மகன் சொல்கின்றான். "நாம் கடன் இல்லாத நல்ல குடும்பமாக வாழ வேண்டும். தந்தை இறந்து விட்டார். கடனாளிகள் அத்தனை பேரும் வரிசையாக வந்து நின்றால், குடும்பத்தினுடைய சொத்தை விற்க வேண்டிய நிலைமை வந்துவிடும். சிக்கனமாக நாம் வாழ வேண்டும் என்று சொன்னால், சிக்கனமாக நம்முடைய குடும்பத்தைக் கொண்டு சென்றால்தான் முடியும்" என்று கருதுகிறான். அந்த அடிப்படையில் மத்திய அரசு கடன் வாங்கிக் கொடுத்ததை நிறுத்தியிருக்கின்றது; மானியத்தை நிறுத்திவிட்டார்கள். விலையைக் கூட்டவில்லை; மானியத்தை நிறுத்தியிருக்கிறார்கள். எனவே, குடும்பத்தினுடைய கௌரவம் காப்பாற்றப்பட வேண்டும்; பாரத நாடு உலக அரங்கிலே ஒரு வல்லரசாக விளங்க வேண்டும். எனவே, இனிமேலாவது நம்முடைய நாட்டிற்காக நாம் கொஞ்சம் சிரமப்படக்கூடிய நிலையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

இன்னொன்று, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழக்கூடியவர்கள் எல்லாம் விறகைத்தான் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள். 75 சதவீதம் வசதி படைத்தவர்களும், 25 சதவீதம் ஏழைகள்தான் gas பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். எனவே, நாட்டு நலன் கருதி நாம், நம்முடைய குடும்பத்தினுடைய சிந்தனையோடு, இந்த நாட்டு நலனில் அக்கறையோடு, குடும்பத்தினுடைய மூத்த குழந்தைகளாகிய நாம் அத்தனை பேரும். சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கக்கூடிய நாம் குடும்பத்தினுடைய மூத்த குழந்தைகள். இளையவர்களிடம், பாவம், விஷயம் தெரியாதவர்களிடம் எடுத்துச் சொல்லி, புரிய வைத்து நாட்டு நிலைமையைச் சொல்ல வேண்டிய கடமையில் நாம் இருக்கிறோம் என்பதைச் சொல்லி அமர்கின்றேன்.

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[2000 ஏப்ரல் 17

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தின்மீது திரு. ஞானசேகரன் அவர்கள் தொடங்கி, திரு. வேலாயுதன் அவர்கள் வரையிலே, இடையில் நம்முடைய நண்பர் திரு. சுப்பராயன் அவர்கள், திரு. சுந்தரம் அவர்கள், திரு. அப்துல் லத்தீப் அவர்கள், திரு. சந்தானம் அவர்கள், திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் ஆகியோர் தங்களுடைய கருத்துகளை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

இதிலே ஒரு கருத்து முக்கியமாகச் சொல்லப்பட்டது. "அரிசி விலை உயர்ந்த ஒரு நேரத்தில், அதற்கான மானியங்கள் குறைக்கப்பட்டும், மாநிலங்களுக்கு மத்திய அரசு வழங்குகின்ற ரேஷன் அரிசியினுடைய விலை அதிகமானபொழுது, அது சரியல்ல என்று நிதிநிலை அறிக்கையிலே எடுத்துக்காட்டிய முதலமைச்சர், கச்சா எண்ணெய் விலை ஏற்றப்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில், அந்த மானியம் குறைக்கப்பட்டிருக்கின்ற நேரத்தில், ஏன் அதைப்பற்றிச் சொல்லவில்லை, அதற்கு மாறாக வக்காலத்து வாங்கியது என்ன நியாயம்"? என்ற ஒரு கேள்வி எழுப்பப்பட்டது.

அரிசி விலையைப் பொறுத்தவரையிலே, அதைச் சமாளிக்கவேண்டிய பொறுப்பு இந்தியாவிற்குள்ளேயேதான் இருக்கிறது. மத்திய அரசு அதை இந்தியாவிற்குள்ளே சமாளிக்கக்கூடிய வழிவகை இருப்பதால்தான் இந்தியாவுக்குள்ளேயே சமாளிக்கவேண்டிய பிரச்சினைகள் என்பதால் "நீங்கள் மாநிலங்களுக்கு வழங்குகின்ற ரேஷன் அரிசியினுடைய விலையை உயர்த்திவிட்டீர்கள், அதைத் திரும்பப் பெறவேண்டும், அதைக் குறைக்க வேண்டும்" என்று நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்தது மாத்திரமல்ல, பிரதமர் அவர்களுக்குக் கடிதங்களும் நான் எழுதியிருக்கிறேன். அந்தக் கடிதங்களுடைய நகல்கள் கூட என்னிடத்திலே இருக்கின்றன. ஆனால், கச்சா எண்ணெய் விலை என்பது சர்வதேச விலை. சர்வதேச விலையின் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடி. அதனால்தான் நான் வேறு வழியில்லை என்று சொல்லவேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டது. வேறு வழியில்லை என்று சொன்ன காரணத்தால், வக்காலத்து வாங்குகின்றேன் என்று பொருள் இல்லை.

நம்முடைய நண்பர் சுந்தரம் அவர்கள் இங்கே பேசும்போது, பதவி போய்விடுமோ என்று பயந்துகொண்டு நீங்கள் மத்திய அரசை இதில் ஆதரிக்கிறீர்கள் என்று சொன்னார். பதவி போய்விடுமே என்கின்ற பயம் எங்களுக்கு 1976 ஆம் ஆண்டு emergency-யை எதிர்த்தபோது



2000 ஏப்ரல் 17] [கலைஞர் மு. கருணாநிதி]

வரவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) பதவி போய்விடுமே என்கின்ற பயம், இலங்கைத் தமிழர்களுக்காக நாங்கள் கண்ணீர் வடித்து எங்களுடைய கண்டனங்களைத் தெரிவித்த காலத்திலே வரவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). இப்பொழுது எனக்குப் பதவி போய் விடுமோ என்ற பயம் இருக்கிறது. ஏனென்றால் என்னுடைய பதவி போய், அந்த இடத்திலே மூப்பனார் வந்து அமர்ந்தால் நான் வருத்தப்படமாட்டேன். நல்லகண்ணு வந்து அமர்ந்தால் வருத்தப்படமாட்டேன். சங்கரய்யா வந்து அமர்ந்தால் வருத்தப்படமாட்டேன். வேறு யாரோ வந்து அமர்ந்துவிடுவார்களோ நான் இந்தப் பதவியை விட்டு விலகினால் (மேசையைத் தட்டும் ஒலி) என்கின்ற அந்த அச்சத்தின் காரணமாகத் தான் பதவி போய் விடக்கூடாது என்று நான் பாதுகாத்துக்கொண்டு இருக்கிறேன் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நண்பர் சுந்தரத்தின் வாயிலாக நாட்டிலே உள்ள நல்லவர்களுக்கெல்லாம் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

முற்பகல் 11-10

சில விவரங்களை இங்கே நான் சொல்லவேண்டும். வக்காலத்து அல்ல; இவை விவரங்களை தெரிந்துகொள்ள வேண்டிய விவரங்கள் என்பதற்காகச் சொல்லுகின்றேன். 1994 ஆம் ஆண்டிலேயே, மத்தியிலே காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது, பிரதமராக இருந்த நரசிம்மராவ் அவர்கள், சமையல் எரிவாயுவுக்கு மானியத்தைப் படிப்படியாகக் குறைக்கவேண்டுமென்று முடிவெடுத்து, 14.2 கிலோ எடைகொண்ட ஒரு சிலிண்டருக்கு 10 ரூபாய் என்று விலையை உயர்த்தினார். பின்னர், பெட்ரோலியத் துறை சீர்திருத்தம் சம்பந்தமாக ஒரு வல்லுநர் குழுவை பிரதமர் நரசிம்மராவ் நியமித்திருந்தார். அந்தக் குழு, திரு. தேவ கவுடா பிரதமராக இருந்தபோது இரண்டு அறிக்கைகளைத் தந்துள்ளது. அந்தக் குழுவின் இரண்டாவது அறிக்கையை மத்திய அரசு, திரு. ஐ. கே. குஜ்ரால் பிரதமராகவும், திரு. ப. சிதம்பரம் அவர்கள் மத்திய நிதியமைச்சராகவும் இருந்தபோது, ஏற்றுக்கொண்டு 20-11-1997-ல சில முடிவுகளை எடுத்து அறிவித்தது. 2001-2002 ஆம் ஆண்டில் பொது விநியோக முறையிலே வழங்கப்படும் மண்ணெண்ணெய்க்காக வழங்கும் மானியம், கச்சா எண்ணெய் இறக்குமதி விலையில் 33.3 விழுக்காடு அளவுக்குக் குறைக்கப்படும் என்பதும், 2000-2001 ஆம் ஆண்டில் சமையல் எரிவாயுவுக்கு (L.P.G. Gas)-வழங்கும் மானியம், இறக்குமதி விலையில் 15 விழுக்காடு அளவுக்குக் குறைக்கப்படும் என்பதும், இறக்குமதி விலைக்கு ஈடாக, பெட்ரோல் மற்றும் விமானத்திற்குப் பயன்படும் எரிபொருள்

[கலைஞர் மு. கருணாநிதி] [2000 ஏப்ரல் 17

விலை உயர்த்தப்படும் என்பதும், டீசல் விலை உலக விலைக்கு (International Price) ஏற்ப தொடர்ந்து மாற்றி அமைக்கப்படும் என ஏற்கெனவே இருந்த மத்திய அமைச்சரவை 1-9-1997 அன்று எடுத்த முடிவுகள் பின்பற்றப்படும் என்பதும் அந்த முடிவுகளாகும்.

கச்சா எண்ணெய் விலை 1998 இறுதியிலும் 1999 ஆரம்பத்திலும் barrel ஒன்றுக்கு அமெரிக்க டாலர் 10 என்று இருந்தது. ஆனால் பிப்ரவரி 1999-லிருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய் விலை 155 விழுக்காடு அதிகரித்துள்ளது. அதாவது, 1999 ஆம் ஆண்டு பிப்ரவரியில் ஒரு டன் கச்சா எண்ணெய் விலை 3210 ரூபாய் என்பதிலிருந்து மார்ச் 2000-ல் 8180 ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. உலக சந்தை விலை கச்சா எண்ணெய்க்கு அதிகரித்துள்ள சூழ்நிலையிலும் விற்கும் விலையினை மாற்றாத சூழ்நிலையிலும், oil pool பற்றாக்குறை 31 மார்ச் 1999 அன்று 3408 கோடி ரூபாயாக இருந்தது, 31 மார்ச் 2000-ல் 6340 கோடி ரூபாயாக உயர்ந்தது. உலக விலை இதே அளவிற்கு தொடர்ந்து கொண்டே போய் விற்பனை விலையையும் மாற்றாமல் இருந்தால், oil pool பற்றாக்குறை மட்டும் 31 மார்ச் 2001-ல் 19,000 கோடி ரூபாயாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலைதான் மண்ணெண்ணெய், சமையல் எரிவாயுவிற்கான விலை மாற்றத்திற்கு வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது என்று மத்திய சர்க்கார் கூறுகிறது.

1975-ல் ஒரு லிட்டர் டீசல் சில்லரை விலைக்கும், மண்ணெண்ணெய் சில்லரை விலைக்கும் உள்ள வித்தியாசம் ஒரு பைசாதான். ஆனால் 1980-ல் டீசல் விலைக்கும் மண்ணெண்ணெய் விலைக்கும் உள்ள வித்தியாசம் 66 பைசா. இந்த வித்தியாசம் 1985-ல் 119 பைசாவாகவும், 1990-ல் 209 பைசாவாகவும், 1995-ல் 372 பைசாவாகவும் ஆயிற்று. ஆனால் 22-3-2000 அன்று ஒரு லிட்டர் டீசல் விலை ரூ.14.04. இதே நாளில் ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் விலை ரூ.2.67. டீசலின் சில்லரை விலைக்கும், மண்ணெண்ணெயின் சில்லரை விலைக்கும் உள்ள வித்தியாசம் 11 ரூபாய் 37 பைசாவாகும். இந்த அளவிற்கு உள்ள விலை வித்தியாசத்தால் பொது விநியோகத்திற்கு ஒதுக்கப்படும் மண்ணெண்ணெய் கள்ளச் சந்தைக்குச் செல்ல அதிக வாய்ப்புகள் உள்ளதையும் மறந்து விடமுடியாது. அதைத்தான் நம்முடைய அருமை நண்பர் அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டினார்கள். ஒன்றுக்கொன்று விலை வித்தியாசம் இந்த அளவிற்கு இருக்கும்போது இந்தப் பொருள் கலக்கப்பட்டு கள்ளச் சந்தையிலே வியாபாரம் ஆக, கடத்தல் பொருளாக ஆக வாய்ப்புக்கூறுகள் அதிகம். அதேபோல மண்ணெண்ணெயை, டீசலோடு கலப்படம் செய்வதற்கான வாய்ப்பையும் நாம் மறந்து விடமுடியாது.



2000 ஏப்ரல் 17] [கலைஞர் மு. கருணாநிதி]

இன்றைக்குக்கூட, இந்து பத்திரிகையிலே ஒரு கட்டுரை வந்திருக்கிறது. "அரிசி விலையை நாம் இங்கே ஏற்றவில்லை; மற்ற மாநிலங்களிலே அரிசி விலையை ஏற்றியிருக்கிறார்கள். அதன் காரணமாக, அரிசி, ரேஷன் அரிசி கடத்தப்படக்கூடும்" என்று, "அதற்கெல்லாம், ஏது இருக்கிறது" என்ற அளவிலே ஒரு கட்டுரை, எச்சரித்துச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

இந்த விலை மாற்றம் கொண்டு வரப்படாமல் இருந்திருந்தால் மண்ணெண்ணெய்க்கு மாத்திரம் 11,000 கோடி ரூபாய் மானியமாகவும் சமையல் எரிவாயு, (L.P.G.)-க்கு 7,000 கோடி ரூபாய் மானியமாகவும் வழங்க வேண்டி இருக்கிறது. மத்திய அரசு விலையை மாற்றியமைத்த பிறகும், 31 மார்ச் 2000-ல் 6,300 கோடி ரூபாயாக இருக்கும் பற்றாக்குறை அளவு 31 மார்ச் 2001-ல் 13,670 கோடி ரூபாயாக உயரும். 22-3-2000 அன்று மண்ணெண்ணெய் ஒரு லிட்டர் இந்தியாவிலே 2 ரூபாய் 67 காசு என்ற அளவிலே இருக்க — அண்டை நாடுகளில் — மண்ணெண்ணெய் ஒரு லிட்டர் இலங்கையிலே 9 ரூபாய் 15 காசு; பாகிஸ்தானில் 9 ரூபாய் 46 காசு; வங்காள தேசத்தில் 11 ரூபாய் 4 காசு.

அதைப்போலவே சமையல் எரிவாயு விலை ஒப்பீடு பார்த்தால், பாகிஸ்தானில் ஒரு கிலோவிற்கு சமையல் எரிவாயு 15 ரூபாய் 95 காசு; இலங்கையிலே 16 ரூபாய் 68 காசு; வங்காள தேசத்தில் 17 ரூபாய் 19 காசு; இந்தியாவிலே 10 ரூபாய் 68 காசு.

விலையேற்றத்திற்கு முன் மண்ணெண்ணெய் ஒரு லிட்டர் இந்தியாவில் விலை 2 ரூபாய் 67 காசு என்பது இப்போது 5 ரூபாய் 17 காசாக ஆகியிருக்கிறது. 22-3-2000 அன்று மத்திய அரசு gas விலையில் அதிகபட்சமாக, 14.2 கிலோ கொண்ட சிலிண்டருக்கு 30 ரூபாயும், மண்ணெண்ணெய் விலையில் லிட்டருக்கு ரூ.2.50-ம் உயர்த்தியது.

இந்த விலை உயர்வை நான் ஆதரிக்கிறேன் என்றொரு குற்றச்சாட்டு இங்கே கூறப்பட்டது. எதிர்க்கட்சி என்பதாலோ அல்லது தோழமைக் கட்சி என்பதாலோ எதையும் கண்ணை மூடிக் கொண்டு எதிர்க்க முடியாது. சில நடைமுறை உண்மைகளை ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும்.

இந்த விலை உயர்வைப் பற்றி என்னுடைய கருத்தை நிருபர்கள் கேட்டபோது, வேறு வழியில்லாமல் விலை ஏற்றப்பட்டுள்ளது என்றும், தேசிய ஜனநாயகக் கூட்டணியிலே அங்கம் வகிக்கும் தி.மு.க. உள்ளிட்ட

[கலைஞர் மு. கருணாநிதி] [2000 ஏப்ரல் 17

எல்லோருடனும் கலந்து ஆலோசித்த பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும், இதை எதிர்க்கட்சியினர் கண்டிப்பது அவர்களுடைய கருத்து என்றும், ஏறத்தாழ 16,000 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பு இருக்கும் என்று கருதப்பட்டு இந்த விலை உயர்வின் மூலமாக 6,000 கோடி ரூபாய் அளவிற்குத்தான் ஈடு செய்ய முடியும் என்று சொல்லப்படுவதாகவும், ஆதலால் மத்திய அரசின் இந்த முடிவைச் சரியென்று அவர்கள் கருதுகிறார்கள் என்றுதான் உண்மை நிலையை விவரித்தேனே தவிர, இந்த விலை உயர்வை ஆதரித்து நான் எந்தக் கருத்தையும் எப்போதும் தெரிவிக்கவில்லை.

*முற்பகல் 11-15*

அதுமாத்திரமல்ல, இந்த விலை உயர்வு குறித்து 22-3-2000 அன்று அறிவிப்பதற்கு முன்பு, அதே நாளில் அதைப்பற்றி ஆலோசிக்கக் கூட்டப்பட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணி கூட்டத்தில் என்ன பேசப்பட்டது என்பதை 23-3-2000 தேதியிட்ட ஸ்டேட்ஸ்மேன் ஏடு விரிவாக வெளியிட்டிருக்கிறது. அது வருமாறு:-

" Several partners of the N.D.A. today resisted the Government's move on administered price hike and were able to reduce the original proposal considerably by their opposition. At the meeting of the N.D.A. partners called at the residence of the Prime Minister, heated protests from the Trinamul Congress and the D.M.K. prevented the Government from going for the hike that it originally proposed. The Petroleum Minister tried to explain the Government's logic over the subsidy cut while N.D.A. partners—the most vocal being Mr. Murasoli Maran, D.M.K. and Mr. Ajit Panja, Trinamul Congress—protested vehemently. They said it would be a tough decision to sell to the masses."

"தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உறுப்புக் கட்சியினர் பலர் விலையை உயர்த்துவதாக இருந்த அரசின் முயற்சியைத் தடுத்தார்கள். மேலும், தமது எதிர்ப்பின் மூலமாக அரசின் மூலக் கருத்தில் இருந்த அதிக உயர்வைக் கணிசமாகவும் குறைத்தார்கள். பிரதமர் இல்லத்தில் கூட்டப்பட்டிருந்த தேசிய ஜனநாயகக் கூட்டணி உறுப்பினர்கள் அடங்கிய கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் திரிணாமுல் காங்கிரஸ் தரப்பில் பலத்த எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதால், மத்திய அரசு ஏற்கெனவே உத்தேசித்திருந்த அளவிற்கு விலை உயர்வு செய்வது தடுக்கப்பட்டது" என்று ஸ்டேட்ஸ்மேன் எழுதுகிறது. "மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர்



2000 ஏப்ரல் 17] [கலைஞர் மு. கருணாநிதி]

இந்தக் கூட்டத்தில் பெட்ரோலியப் பொருட்களுக்கு மானியக் குறைப்புக்கான காரணங்களை விளக்குவதற்கு முற்பட்டபோது, தேசிய ஜனநாயகக் கூட்டணியின் உறுப்பினர்கள் குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த திரு. முரசொலி மாறன் மற்றும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு. அஜித் பாஞ்சா ஆகியோர் மிகக் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தார்கள்" என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, எதிர்க்காமல் இல்லை. எதிர்த்த காரணத்தால்தான், இன்னும் அதிக அளவுக்கு உயர்த்தப்படக்கூடிய யோசனை முதலில் சொல்லப்பட்டதை அவர்கள் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த அளவுக்கு உயர்த்தப்பட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

"இதற்கு என்ன காரணம், இதன் காரணமாக எந்த அளவுக்கு மானியம் தரப்படவேண்டியுள்ளது, இது யாருடைய தலையிலே விழும்" என்றெல்லாம் நம்முடைய சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். "100 கோடி மக்கள் தலையிலே விழும்" என்று சொன்னார்கள். அவருடைய அந்த வாதத்திலே ஒரு நல்ல logic-ம் இருக்கிறது. ஒருவனே அவ்வளவையும் சுமப்பதைவிட 100 கோடி மக்களும் அதைப் பகிர்ந்துகொள்ள முடியும் என்கிற அந்த logic அதிலே இருப்பதை நானும் உணராமல் இல்லை (மேசையைத் தட்டும் ஒலி) எனவே இது இந்திய அளவிலே செய்யப்பட்டிருக்கிற ஒரு காரியமாக இருந்தால் இந்திய அரசு பொறுப்பு ஏற்று அதைக் குறைக்க வேண்டுமென்று சொல்லுகின்ற கடமை நமக்கு இருக்கிறது. அந்தக் கடமையை நாம் வரவு-செலவுத் திட்ட அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறோம். பிறகு பிரதமருக்குப் பல கடிதங்களை எழுதி அதிலேயும் நான் வலியுறுத்தியிருக்கிறேன். இது சர்வதேச அளவில் ஏற்பட்டுவிட்ட ஒரு நிலை என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

இங்கே இதைத் தொடர்ந்து நெல்லைப் பற்றியும், அரிசியைப் பற்றியும்கூடப் பேசப்பட்டது. ஆனால் மத்திய ரேஷன் அரிசி விலை உயர்வுக்குப் பிறகு கர்நாடகத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு ரூ.6.40; வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவர்களுக்கு ரூ.12.75. கேரளத்திலே வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு ரேஷன் அரிசி விலை ரூ.6.40; வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவர்களுக்கு ரூ.11.40. ஆந்திராவிலே வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு கிலோ ரூ.5.50; மேலே உள்ளவர்களுக்கு ரூ.12.50. மேற்கு வங்கத்திலே வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு ரூ.6.40; மேலே உள்ளவர்களுக்கு ரூ.13.00. தமிழ்நாட்டில்தான் வறுமைக்

[கலைஞர் மு. கருணாநிதி] [2000 ஏப்ரல் 17

கோட்டுக்குக் கீழே இருந்தாலும், மேலே இருந்தாலும் ஓரே விலை ரூ.3.50 (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்ற விலை இருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது என்று கூறிக் கொள்கிறேன். இதற்கு ஒரு தீர்மானம் கொண்டுவர வேண்டுமென்று சொல்லப்பட்டது. நீங்கள் சொல்லி நான் எதையும் மறுப்பவன் அல்ல. இருந்தாலும்கூட, இது இப்பொழுது தேவையில்லாத ஒன்று என்பதையும் நான் தெரிவித்து இந்த அளவோடு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சில விளக்கங்களையெல்லாம் சொன்னார்கள். அது என்ன இருந்தாலும், ஏழை-எளிய மக்களைப் பாதிக்கின்ற இந்த விலை உயர்வை, மண்ணெண்ணெய் விலை உயர்வைக் கண்டித்துத் தீர்மானம் கொண்டுவர வேண்டுமென்ற ஏகோபித்த கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாததால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).*

*அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசிய லீக், இந்திய கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்), அகில இந்திய பார்வர்டு பிளாக் ஆகிய கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் அவையைவிட்டு வெளியேறினர்.*

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாராட்டு சொல்லவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. சி.டி. தண்டபாணி.

*முற்பகல் 11-20*

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சபையினுடைய விதி 'எண் 219-ன்கீழ் உரிமைப் பிரச்சினை கொண்டு வருவதற்கு எனக்கு அனுமதி அளித்ததற்காக உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியத் துணைக் கண்டத்தில் புகழ் மிக்க பெருமைக்குரிய மாமன்றங்களில் தமிழக சட்டமன்றப்



2000 ஏப்ரல் 17] [திரு. சி.டி. தண்டபாணி]

பேரவையும் ஒன்று. இந்தச் சட்டப் பேரவைக்குத் தலைமை ஏற்று நடத்தக்கூடிய வணக்கத்திற்குரிய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர்கள் பெருமைக்குரியவர்களாகவும், கௌரவத்திற்குரியவர்களாகவும், நாடாளுமன்ற நடைமுறைகள் தெரிந்தவர்கள் அத்தனைபேரும் பாராட்டுவதற்குரியவர்களாகவும், இடைப்பட்ட ஒரு சில ஆண்டுகளைத் தவிர, இங்கே சபையை நடத்தி வந்திருக்கின்றார்கள். எதிர்க்கட்சி, ஆளும் கட்சி என்ற பேதமில்லாமல், எல்லோரையும் சமமாகப் பாவித்து, இரு பகுதியினருக்கும் அவர்கள் தங்களுடைய, உறுப்பினர்களுக்குரிய உரிமைகளை வழங்கியிருக்கிறார்கள். எனவே, அந்தவகையில் இந்தச் சபையில்...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும், அதற்கென்று சில கட்டுப்பாடுகள் உண்டு; முறைகள் உண்டு. இங்கே ஆளும் கட்சியாக நாங்கள் இருக்கும்போது, ஆளும் கட்சியின் சார்பில் அவை முன்னவர் நம்முடைய பேராசிரியர் அவர்கள் இருக்கிறார்கள். ஆளும் கட்சியினுடைய தலைவர் என்ற முறையில், நான் இருக்கிறேன். நடந்து முடிந்த ஒரு விவகாரத்தைப் பற்றி வெளியிலே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரும் மற்றொரு உறுப்பினரும் பேசினார்கள் என்பதைக் குறித்து ஏற்கெனவே அது சரியல்ல என்பதுபோல நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் இந்த அவையிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இப்போது, நாங்கள் அறியாமலே, எனக்கோ அல்லது அவை முன்னவர் பேராசிரியர் அவர்களுக்கோ தெரியாமல், ஓர் உரிமைப் பிரச்சினைக்கான அறிவிப்பை மாண்புமிகு உறுப்பினர் சி.டி. தண்டபாணி அவர்கள் கொடுத்திருக்கின்றார்கள். எங்களையும் மீறித் தருவதாக இருந்தால், அவர்களுக்கு உள்ள உரிமை. ஓர் உறுப்பினர் என்கிற முறையில் அவர் அந்த உரிமைப் பிரச்சினையைத் தருவதற்கு அவருக்கு எல்லா வகையிலும் தகுதி உண்டு. ஆனால், இது எங்களைக் கலந்து கொடுக்கப்பட்டது அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு மேல், அவர், அதை வலியுறுத்தினால், அது உங்கள் விருப்பம்; அவர் விருப்பம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள். அதாவது நான் அறிவிப்பு கொடுத்த உரிமைப் பிரச்சினை என்ன ஆயிற்று என்று கேட்பீர்கள் என்றுதான் நான்கூட எதிர்பார்த்தேன். நீங்கள் அப்படியே ஆரம்பித்து, பேசிக்கொண்டே போய்விட்டீர்கள்.

[பேரவைத் துணைத் தலைவர்] [2000 ஏப்ரல் 17

அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அதை எடுத்துக்கொள்ளலாமா, வேண்டாமா என்பதை நன்கு பரிசீலித்து பின்னர் அதுபற்றி அறிவிக்கப்படும்.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது நேரம் இல்லாத காரணத்தினாலே அவசரமாக உங்களிடத்திலே கொண்டு வரப்பட்டது. இதுகுறித்து முறையாகத் தலைவரிடத்திலேயும், அதேபோல, முன்னவரிடத்திலேயும் அனுமதி பெற்றிருக்க வேண்டும் என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும்கூட, அதற்காக என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்து, இந்த உரிமை பிரச்சினை குறித்துக் கொடுத்த அறிவிப்பை நான் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 29. சமூக நலன்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2000-2001 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 29-சமூக நலன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.623,51,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1940, திரு. சி. ஞானசேகரன். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4612, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை,

வெட்டுத் தீர்மானம் எண் 3180, திரு. நா. பெரியசாமி.



2000 ஏப்ரல் 17]

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.623,51,47,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1666, திரு. கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3593, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.623,51,47,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2193, திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1638, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.623,51,47,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1317, திரு. க. மணிவர்மா, இருக்கையில்

வெட்டுத் தீர்மானம் எண் 3499, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் மூன்று சக்கர வண்டிகள் வேண்டி விண்ணப்பித்த அனைவருக்கும் மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.623,51,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3185, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.623,51,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3784, திரு. ந. கருப்பண்ண உடையார். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2769, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.623,51,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4030, திரு. பி.ஆர். சுந்தரம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4394, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3089, திரு. பி. வெங்கடசாமி.

முற்பகல் 11-25

**திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "ஒவ்வொரு அரசு அலுவலகத்திலும் வேலை பார்க்கும் பெண்களின் நன்மைக்காகக் குழந்தைகள் காப்பகங்கள் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.623,51,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 175, திரு. கே. ரவி அருணன். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2492, திரு. ப. கோவிந்தன். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3550, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஊனமுற்றோர்களுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் உதவித் தொகை, சிறு தொழில் கடன் ஆகியவை காலதாமதமில்லாமல் வழங்குவது குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.623,51,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2394, திரு. எ. தெய்வநாயகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3740, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.623,51,47,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2820, திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2427, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலியில் பணிபுரியும் பெண்களுக்கு விடுதி அமைத்துக் கொடுக்கப்படுவதன் அவசியம் குறித்து விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் பற்றிய 29 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.623,51,47,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்துக்கு வைக்கப் பட்டுள்ளன. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர். என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் டாக்டர் அ. செல்லக்குமார்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கின்ற மழலைச் செல்வங்கள்—தான் செய்வது என்ன என்று தெரிந்துகொள்ளாமல், தான் உண்ணுகின்ற உணவு, அதனுடைய தரம், அது என்ன உணவு என்பதைக்கூடத் தெரிந்துகொள்ள முடியாத மழலைச் செல்வங்கள்—ஆரோக்கியமான உணவை உண்ண வேண்டுமென்பதற்காக 1982-லிருந்து தமிழக அரசு ஊட்டச் சத்துத் திட்டத்தை அமல்படுத்திக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டிலே இப்போது 431 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றிலே 113 திட்டங்கள் I.C.D.S. திட்டங்களாக சமூக நல இயக்ககத்தின் கீழும், 318 திட்டங்கள் உலக வங்கியால் கடந்த காலத்திலே நிதி உதவி கொடுக்கப்பட்டு, அந்தத் திட்டங்கள் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிற சூழ்நிலையிலே இப்போது இருந்து கொண்டிருக்கின்றன. குழந்தைகளுக்கு உணவு தருகின்ற அந்தத் திட்டம் என்பது எந்த சமூகக் கண்ணோட்டத்தோடு, மக்கள்மீது அக்கறையோடு செயல்படுத்தப்பட்டது என்பதை இந்த மன்றம் உணர்ந்து கொண்டிருக்கும் என்று நான்

@ 421 முதல் 513 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



கருதுகிறேன். ஏனென்று சொன்னால், நாளைய சந்ததியினராக இருக்கின்ற இந்தக் குழந்தைகள் நல்ல உடல் வளத்தோடு, நோயற்ற குழந்தைகளாக வளர்ந்தால்தான், அவர்களுடைய மூளை முழுமையாக வளர்ச்சி பெறும். அதற்கான ஆரோக்கியமான உணவை உண்கிறபோதுதான், அந்தத் திட்டத்தினுடைய பயனை இந்த நாட்டுமக்கள் பெற்றுக்கொண்டார்கள் என்பதற்கு அது அடித்தளமாக இருக்க முடியும். ஏறத்தாழ 1988-லே தொடங்கிய இந்தத் திட்டம் இப்போது தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

அதிலே பல முறைகேடுகள் நடந்துகொண்டிருக்கின்றன என்று கடந்த சட்டமன்றத்திலே வரவு-செலவு அறிக்கை தாக்கல் செய்தபோது அதிலே பேசுகின்றபோது நான் என் கருத்துக்களைச் சொல்லியிருந்தேன். அதிலே விளக்கமாகச் சில கேள்விக் கணைகளை இந்த மன்றத்தின் மூலமாக இந்தத் துறைக்கும், முதலமைச்சருக்கும் நான் தொடுத்திருந்தேன். இந்தத் திட்டங்களிலே 113 I.C.D.S. திட்டங்களுக்கு சமூக நல ஆணையர் மூலமாக உணவு அளிக்கப்படுகிறது. அந்த உணவுப்பொருட்கள், சத்து மாவு பெண்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒன்றை இந்த மன்றம் ஒத்துக்கொள்ளும் என்று நான் நம்புகிறேன். 45 இலட்சம் குழந்தைகளுக்கு இந்தச் சத்து மாவைக் கொடுத்து கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், இந்த நாட்டில் இருக்கின்ற 45 இலட்சம் குழந்தைகளையும் ஓர் அரசைப் பொறுத்தவரை, ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை ஒரே கண்ணோட்டத்தோடுதான் பார்க்கமுடியும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க வாய்ப்பில்லை. என்ன சத்தைக் கொடுக்கிறார்களோ, அந்தச் சத்தை 45 இலட்சம் குழந்தைகளுக்கும் பாகுபாடு இல்லாமல் கொடுப்பதுதான் ஓர் அரசினுடைய செயல்பாடாக இருக்க வேண்டும். 113 கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்கப்படுகின்றது அந்த மாவு. அதற்கென்று அரசினர் கிலோவுக்கு 12 ரூபாய் என்று ஒதுக்கீடு செய்கிறார்கள். ஆனால், உலக வங்கித் திட்டத்தின் அடிப்படையிலே 318 மையங்கள் மூலமாக ஏறத்தாழ 20-லிருந்து 25 இலட்சம் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்ற அந்த உணவுக்கு, கிலோவுக்கு 18 ரூபாய் என்று வழங்குகிறார்கள். ஏனென்று சொன்னால், அது தனியார் நிறுவனம் மூலமாக விநியோகிக்கப்படுகிறது. என்னுடைய முதல் கேள்வி என்னவென்று சொன்னால், 45 இலட்சம் குழந்தைகளும் இந்தத் தமிழ்நாட்டினுடைய குழந்தைகள்தான். நம்முடைய ஏழைத் தாய்மார்களுடைய குழந்தைகள்தான். ஏன் இதிலே ஒரு பாரபட்சம் என்பது எனக்குப் புரியவில்லை. இந்தச் சமூக நல

வாரியத்தின் மூலமாக, பெண்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக விநியோகம் செய்யப்படுகின்ற அந்த உணவுப் பொருட்களைப் பெறுகின்ற 10 இலட்சம் குழந்தைகள் இந்தத் தமிழகத்தினுடைய இரண்டாந்தரக் குடிமக்களா என்பது எனக்குப் புரியவில்லை. இந்த அரசு என்ன எண்ணத்தில் செயல்படுத்திக்கொண்டிருக்கிறது என்பது தெரியவில்லை.

முற்பகல் 11-30

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழ்நாட்டிலே வழங்கப்படுகின்ற ஊட்டச் சத்து General I.C.D.S. 113 வட்டங்களிலும், அதேபோல உலக வங்கி நிதி உதவி பெற்று 318 வட்டங்களிலும் வழங்கப்படுகின்ற உணவு முறையிலே ஏன் வித்தியாசம் என்பதை ஒரு கேள்வியாக எழுப்பி இருக்கின்றார்கள். உலக வங்கி நிதி உதவி மூலமாக 318 வட்டங்களிலே வழங்கப்படுகின்ற உணவிற்கு ஆரம்பத்திலே உலக வங்கியால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, அந்தத் திட்டம் செயல்பட்டு வருகின்றது. மத்திய அரசு, மாநில அரசினுடைய நிதி உதவியோடு 113 I.C.D.S. திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அதிலே குறிப்பாக நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. உலக வங்கித் திட்டத்தின் மூலமாக வழங்கப்படுகின்ற சத்துமாவிலே மாவினுடைய உட்பொருள் ஊட்டச் சத்து தரம் கொள்முதல் வேறுபாடுகள் உள்ளன. அந்த உட்பொருளும், ஊட்டச் சத்தும், தரமும் வேறுபட்டவை. அதேசமயத்திலே நம்முடைய மத்திய அரசினுடைய மாநில அரசினுடைய நிதி உதவியோடு குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்ற ஊட்டச் சத்திலே—குறிப்பாக இங்கே உலக வங்கித் திட்டத்திலே வழங்கப்படுகின்ற சத்துமாவிலே புரதச் சத்து 100 கிராமுக்கு 15 கிராம் கண்டிப்பாக இருக்க வேண்டும்; அதேபோல் கலோரி 350 கிராம் இருக்க வேண்டும்; அதிலே வைட்டமின் உயிர்ச்சத்து இருக்க வேண்டும்; கால்சியம் இருக்க வேண்டும்; இரும்புச் சத்து இருக்க வேண்டும்.—இவை நம்முடைய மாநில, மத்திய அரசு வழங்குவதிலே சற்றுக் குறைவாக உள்ளன. இதுதான் விலை வேறுபாடே தவிர, வேறு எந்தக் காரணமும் இல்லை. அதேசமயத்திலே, 40 இலட்சம் குழந்தைகள் உணவு உட்கொள்வதாக அவர்கள் சொன்னார்கள். உலக வங்கியினுடைய நிதி உதவியோடு வழங்கப்படுகின்ற திட்டத்திலே குழந்தைகள் மொத்தம் 3 இலட்சத்து 18 ஆயிரம் பேர்தான் அதைப் பெறுகின்றார்கள். அதேபோல, மாநில, மத்திய அரசினுடைய நிதி



உதவியோடு வழங்கப்படுகின்ற உணவுத் திட்டத்திலே 1 இலட்சத்து 47 ஆயிரம் பேர்தான்; மற்றும் கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்களுக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் உதவி அளிக்கப்படுகின்றது. இதில் கொள்முதல், தரம் மற்றும் அனைத்திலுலே வேறுபாடுகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுதான் என்னுடைய அடிப்படைக் கேள்வியே. அமைச்சர் அவர்களே சொல்கிறார்கள், சமூக நல வாரியத்தின் மூலமாக வழங்கப்படுகின்ற உணவுப் பொருட்களின் தரம் குறைவு; ஊட்டச்சத்து குறைவு; அதை நாங்கள் வழங்குகின்ற விநியோகிக்கின்ற முறையும் குறைவு; அதனுடைய தராதரம் குறைவு என்று சொல்கிறார்கள்...

**மாண்புமிகு திரு. இ. பெரிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தரம் குறைவு என்று நான் சொல்லவில்லை.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு 110-விதியின் மூலமாகத் தந்த அறிக்கையில் தெளிவாக இருக்கிறது...

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** இல்லை, இல்லை, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன். அதாவது அந்த மாவினுடைய உட்பொருள் — Composition இதிலே சேர்க்கக்கூடிய பொருட்கள் வேறு; அதிலே சேர்க்கக்கூடிய பொருட்கள் வேறு. உலக வங்கி ஒரு விதிமுறையை விதித்து இருக்கிறது. அந்த மாவு தயாரிப்பதற்கு இன்னின்ன விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று விதித்து இருக்கிறது. புரதச் சத்து 100 கிராமுக்கு 15 கிராம் இருந்தே ஆக வேண்டும்; கலோரி 350 இருந்தே ஆக வேண்டும்; வைட்டமின், உயிர்ச்சத்து இருந்தே ஆக வேண்டும்; கால்சியம் இருந்தே ஆகவேண்டும்; இரும்புச் சத்து இருந்தே ஆக வேண்டும் என்று குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. ஆனால், இதிலே வேறுபாடு என்பது, தரம் குறைந்தது என்று நான் குறிப்பிடவில்லை; இதிலே இருக்கக்கூடிய மூலப் பொருட்கள் வேறு; அதிலே தயாரிப்பதற்கு இருக்கக்கூடிய மூலப்பொருட்கள் வேறு. General I.C.D.C. மாநில, மத்திய அரசினுடைய நிதி உதவி பெற்று ஏற்கெனவே தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. ஆனால் 1991 ஆம் ஆண்டு உலக வங்கி நிதி உதவி

கொடுத்து ஆரம்பிக்கப்பட்ட I.C.D.S.-II திட்டத்திலேதான் இந்த விதிமுறைகள் விதிக்கப்பட்டு இருக்கின்றன. ஆக, உலக வங்கி நிதி உதவி கொடுக்கக்கூடிய திட்டத்திலே அவர்கள் குறிப்பிடக்கூடிய விதிமுறைகளைப் பின்பற்றவில்லை என்றால், நிச்சயமாக அவர்கள் கொடுக்கக்கூடிய நிதியை நிறுத்திவிடுவார்கள்; அதுதான் உண்மை.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நானும் ஒரு மருத்துவர், I.S.I. 7021 என்பதுதான் அடிப்படை ஒரு குழந்தைக்கு எந்தவிதமான புரதச் சத்து கொடுக்கப்படவேண்டும்; ஊட்டச் சத்து கொடுக்கப்பட வேண்டும் என்பதை மிகத் தெளிவாகக் குறிப்பிடுகின்றது I.S.I. 7021. அது மிகத் தெளிவாகச் சொல்லி இருக்கிறது. புரோட்டீன் 15 சதவீதம் இருக்க வேண்டும்; கலோரி 350 சதவீதம் இருக்க வேண்டும். அதிலே ஒன்றும் மாற்றுக் கருத்து இல்லை. என்னுடைய கருத்து, அமைச்சர் அவர்கள் 110 விதியின் மூலமாக இந்த மன்றத்தில் தாக்கல் செய்து இருக்கின்ற அறிக்கையிலேகூட இரண்டுக்கும் தரம் வேறுபாடு என்று சொன்னால், நான் கேட்பது, சமூக நல வாரியத்தின் மூலமாக வழங்கப்படுகின்ற ஊட்டச்சத்தைப் பெறுகின்ற குழந்தைகள் இந்த நாட்டினுடைய இரண்டாம் குடிமக்களா; இல்லை, இரண்டாம் தரத்து மக்களா என்பதுதான் என்னுடைய கேள்வி.

*முற்பகல் 11-35*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு திட்டம் உலக வங்கி மூலமாகவோ உதவி செய்கிற ஒரு அமைப்பு மூலமாகவோ கிடைக்கிறபோது, அந்தத் திட்டத்தினைப் பெறுவதற்கு அவர்கள் எந்த அளவிற்கு அனுமதிக்கிறார்களோ அந்த முறையை ஏற்று, அந்த அளவில் செயல்படுத்தப்படுகிறது. ஏற்கெனவே உள்ள திட்டப்படி ஏற்கெனவே நடைபெற்று வந்த பணிகள் அதற்காக நிறுத்தப்படவில்லை. அது தொடர்கிறது. இன்னும் சொல்லப்போனால், இந்திய நாடு வெளிநாட்டினுடைய ஆதரவை, உதவியைப் பெற வேண்டிய அவசியம் இல்லாத ஒரு நிலை இருக்குமேயானால் எல்லோருக்கும் ஒரேவிதமான ஏற்பாட்டைச் செய்யக்கூடிய வாய்ப்பு நமக்கிருக்கும். ஏழைக்குத் தகுந்த எள்ளுருண்டை என்று சொன்னாலும் எள்ளுருண்டையில் கூட சத்து இருக்கிறது. அந்தச் சத்து அந்த ஏழைக் குழந்தைகளுக்குத் தேவைப்படுகிறது.



**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி என்னவென்று சொல்கிறேன். இவர்கள் சொல்கிறபடி, அதிகமான ரூபாயைக் கொடுத்து, உலக வங்கி நிதியுதவியோடுதான் இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அவர்களுடைய நிபந்தனைகளை நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், இப்போது Open Tender மூலமாக வழங்கப்பட்டது என்று சொல்கின்றார்களே, அந்தத் தனியார் நிறுவனம் அவர்கள் விநியோகம் செய்துகொண்டிருக்கக்கூடிய உணவு, பொறுப்பு வாய்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட, அரசுத் துறையினுடைய அதிகாரிகள் மேற்பார்வையிலே பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு அனுப்பப்படுகிறது. அந்த ஆராய்ச்சி நிறுவனங்கள் அதற்குத் தந்திருக்கிற பதில் அடிப்படையிலே 15 சதவீதம் புரதச் சத்து, Protein குறைந்தபட்சம் இருக்க வேண்டுமென்று சொல்வது, 6 சதவீதம் கூட இல்லாத உணவைத்தான், இந்தத் தரம் உயர்ந்த — உலக வங்கித் தரத்தின் அடிப்படையில் நாங்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்களே — அந்தத் தனியார் நிறுவனமானது இப்போது தமிழகத்தில் இருக்கின்ற குழந்தைகளுக்கு, பிஞ்சு உள்ளங்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது என்பது தான் என நான் இங்கே பகிரங்க குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தரம் குறைந்த உணவைக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அதை நான் நிச்சயமாக மறுக்கிறேன். காரணம் உலக வங்கித் திட்டத்தின்படி, தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய மையங்களிலிருந்து random ஆக sample எடுத்து, சோதனைக்கு ஒவ்வொரு மாதமும அனுப்பப்பட்டு வருகிறது. அப்படி புரதச்சத்துக் குறைவாக இருக்குமானால், அதனுடைய ஒப்பந்தப்புள்ளியை நிச்சயமாக, கண்டிப்பாக இந்த அரசு, யாரென்று அதிலே பாரபட்சம் பார்க்காமல் இரத்து செய்யும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கு ஆதாரம் கொடுக்க வேண்டும்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆளுங்கட்சியினுடைய பொறுப்புமிக்க சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தொகுதியிலே வழங்கப்படுகின்ற, தனியார் நிறுவனத்தின் மூலமாக வழங்கப்படுகின்ற, ஊட்டச்சத்து மாவை எடுத்து, பாண்டிச்சேரியில் இருக்கின்ற அரசு ஆராய்ச்சி

நிறுவனத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அங்கிருந்து அதற்கு வழங்கப்பெற்றிருக்கின்ற சான்றிதழை நான் வைத்திருக்கிறேன். அந்தச் சான்றிதழில் கொடுக்கப்பட்டிருப்பது, இந்த உணவில், 6 சதவீதத்திற்கும் குறைவான Protein சத்துதான் இந்த மாவிலே இருக்கிறது என்று மிகத் தெளிவாக உள்ளது. அவர்கள் கொடுத்திருக்கின்றவற்றை இந்த மாமன்றத்தில் ஆதாரமாக வைக்க நான் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலக வங்கித் திட்ட விதியிலே அவர்கள் கொடுத்திருப்பதே மத்திய உணவு ஆராய்ச்சி நிறுவனம், மைசூர் C.F.T.R.I.-ன் மூலமாகத்தான் அது பரிசோதிக்கப்பட வேண்டுமென்று condition வைத்திருக்கிறார்கள். உலக வங்கியினுடைய ஒப்பந்தத்திலே அவர்கள் வைத்திருக்கிற condition என்பதே Sample Test-ஐ மத்திய உணவு ஆராய்ச்சிக் கழகத்தின் மூலமாக, மைசூரிலே உள்ள C.F.T.R.I.-ல் பரிசோதிக்கப்பட வேண்டுமென்பதுதான். நம்முடைய அரசு வந்த பின்னர்தான் கடந்த 1998 ஆம் ஆண்டு ஒப்பந்தப்புள்ளி கோருகின்ற நேரத்தில், இந்த ஒப்பந்தப்புள்ளியிலே கலந்துகொள்ள வேண்டுமென்று முயற்சித்தவர்கள் என்னிடத்திலே கொடுத்த மனுவின் அடிப்படையிலே, இந்தியாவில் இருக்கக்கூடிய எந்த அரசு நிறுவனத்திலும், National Institute of Nutrition, Hyderabad of C.F.T.R.I. எதிலுமே நீங்கள் பரிசோதித்துக் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். உலக வங்கி விதித்திருக்கிற அந்த விதிமுறை, மத்திய உணவு ஆராய்ச்சிக் கழகம், மைசூர் மூலமாகத்தான் பரிசோதனை செய்ய வேண்டுமென்பது. உறுப்பினர் அவர்கள் பாண்டிச்சேரியில் உள்ள நிறுவனத்தில் பரிசோதனை செய்ததாகச் சொல்கிறார்கள். யாருக்குத் தெரியும்? எங்களுக்குத் தெரியாது.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓர் உணவுப் பொருள் எந்த ஆராய்ச்சி நிறுவனத்திலே பரிசோதிக்கப்பட்டிருந்தாலும், அதனுடைய contents ஒன்றாகத்தான் இருக்க வேண்டும்; தரமான உணவாக இருக்குமென்று சொன்னால்...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் செல்லக்குமார் அவர்கள் சொல்கிற கருத்திலே எனக்கு வேறுபாடு இல்லை. ஆனால் நான் தெரிந்துகொள்ள விரும்புவது, பாண்டிச்சேரியில் இருக்கக்கூடிய ஆராய்ச்சி நிறுவனத்திற்குக் கொண்டுபோன உணவுப்பொருள்



நம்முடைய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட உணவுப் பொருள்தான் என்பதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா? அல்லது உறுப்பினர்கள் யார் வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் கொண்டுபோய் ஆராய்ச்சிக்கூடத்திலே கொடுத்து ஒரு certificate வாங்குவது என்று சொன்னால், யார் வேண்டுமானலும் அந்த முயற்சியிலே ஈடுபடலாம். இந்த அரசாங்கம் கொடுத்த உணவுப் பொருள்தான் அங்கே ஆராய்ச்சி செய்யப்பட்டது என்பதற்கு என்ன ஆதாரம்?

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்களது சட்டமன்ற உறுப்பினர், ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர், சத்தியமங்கலம் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் தாராபுரம் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர், கோபிசெட்டிபாளையம் சட்டமன்ற உறுப்பினர், அவர்களுடைய பகுதியில் இருக்கின்ற ஊட்டச்சத்து வழங்குகின்ற சத்துணவு அதிகாரிகள், மாவட்ட திட்ட அலுவலர்கள், அவர்களுடைய கையொப்பத்தோடு உணவுப் பொருளை எடுத்து, பாண்டிச்சேரிக்கு அனுப்பியிருக்கின்றார்கள்; பரிசோதனைக்கு அனுப்பியிருக்கிறார்கள். அங்கிருந்து அந்த உணவின் தரம் — மனிதர்களுக்கல்ல — மாடுகளுக்குக்கூட கொடுக்கமுடியாத அளவிற்குதான் இருக்கிறது என்பதற்கு ஆதாரத்தோடு அதற்கான அறிக்கைகளை நான் வைத்திருக்கிறேன். இன்னொன்று. C.F.T.R.I.-யிலேதான் வழங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். என்னுடைய குற்றச்சாட்டே அதுதான். அந்த C.F.T.R.I. துணையோடுதான் இந்த தவறு நடந்துகொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஆர். சரஸ்வதி.

முற்பகல் 11-40

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாண்டிச்சேரிக்கெல்லாம் நாங்கள் அதுபோன்ற உணவுப் பொருட்களை பரிசோதனைக்கு அனுப்பவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகக் கூறுகிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** அறிக்கை கொடுக்கிறேன்.

(டாக்டர் அ. செல்லக்குமார் தன்னிடம் உள்ள ஒரு தாளை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரிடம் கொடுத்தார்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் செல்லக்குமார் உட்காருங்கள். இந்த மன்றத்திலே தினந்தோறும் தெரிவிக்கிறோம். நீங்கள் இந்தமாதிரி ஏதாவது குற்றச்சாட்டுகள் சொல்லும்போது, முன்கூட்டியே ஆதாரத்தை என்னிடம் காட்டிவிட்டுச் சொன்னால்தான் நன்றாக இருக்கும். இங்கு இருந்துகொண்டு பேசிவிட்டு, அதற்குப்பிறகு, கேட்கும்போது கொடுத்தால் அது எப்படிச் சரியாக இருக்கும்?

**டாக்டர் அ. செல்லக்குமார்:** Report-ல் இருக்கிறது. அந்த அறிக்கையை submit பண்ணியிருக்கிறேன். துணைத் தலைவரிடம் கொடுத்துவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. இது தவறான அணுகுமுறை.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** நான் ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறேன். அதில் இருக்கும் உண்மையைச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முன்கூட்டியே நீங்கள் சொல்லியிருக்க வேண்டும்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** நான் தெளிவாகச் சொல்கிறேன். குற்றச்சாட்டு சொல்வதற்கு உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் எந்தவிதமான குற்றச்சாட்டைச் சொல்வதற்கும் உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. உங்களுக்கு உரிமையுண்டு.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவா அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அரசாங்க நிர்வாகததில் குறைகள தோன்றுமானால் குறை சொலவது தவறல்ல. எங்களுக்கு இப்படிப்பட்ட குறை தோன்றுகிறது என்று சொல்லலாம். ஆனால், ஒரு record இருப்பதாக, ஏதோ அதை ஒரு evidence தருவது போலப் பேசும்போது அந்த evidence-க்கு தகுதியுள்ளதா, அது உண்மையான genuine record-தானா என்று யார் சொல்ல முடியும்? இன்னும் சொல்லப்போனால் அதை இப்போது தீர்மானிக்க முடியாது. அதை முன்கூட்டியே சபாநாயகரிடத்திலே கொடுத்து, "அது record-தான், நீங்கள் சொல்லுங்கள்" என்று சொன்னால்தான் அந்தக் குற்றச்சாட்டைச் சொல்லலாம். இல்லையென்றால் உறுப்பினருடைய கருத்தாக "எனக்கு அதுபற்றிக் குறைபாடு இருக்கிறது. அந்தக் குறைபாட்டை நிவர்த்திக்க வேண்டும்



அல்லது அதைப்பற்றி ஆய்வு செய்ய வேண்டும்" என்று வேண்டுமானாலும் சொல்லலாம். குற்றச்சாட்டு என்ற வார்த்தையைச் சொல்கிறபோது அது குற்றச்சாட்டுக்கு உரியதா, அல்லவா என்று தீர்மானிக்கிற உரிமை சபாநாயகருக்கு உண்டு. எனவே, அப்படி முன்கூட்டியே தெரிவிக்காமல், குற்றச்சாட்டுக் கூறும் நிலையைத் தவிர்த்துக்கொள்வது நலம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த C.F.T.R.I. அமைப்பின் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டிருக்கின்ற அந்த ஊட்டச் சத்தினுடைய ஒரு பகுதி அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல் ஹைதராபாத்தில் இருக்கிற National Institute of Nutrition, I.C.M.R.-Research பிரிவிலே, தரமான அந்த நிறுவனத்திற்கு அனுப்பியபோது எந்த உணவை தமிழகத்து மக்கள், குழந்தைகள் உண்டு கொண்டிருக்கிறார்களோ அது எந்தவிதத்திலும் தகுதியற்ற உணவு என்று — எந்த C.F.T.R.I. தகுதியான உணவு என்று எதைச் சொல்கிறதோ, அதே மத்திய அரசினுடைய இன்னொரு நிறுவனமாக இருக்கிற ஹைதராபாத் நிறுவனம் அதைத் தகுதியற்ற ஒன்று என்று அறிக்கையைத் தாக்கல் செய்திருக்கிறது. என்னுடைய கேள்வி என்ன என்று சொன்னால், நான் அன்றைக்குக்கூட முதலமைச்சரிடம் கேட்டேன். அதாவது இந்தத் திட்டம்....

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 16 பேர் இந்த ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டதிலே, 16 பேர்களுடைய உணவுப் பொருட்களின் sample Test-காக C.F.T.R.I. Mysore-க்கும் N.I.N. Hyderabad-க்கும் அனுப்பப்பட்டு இருக்கின்றன. அந்த இரண்டு நிறுவனங்களுக்கும் sample Test-க்காக ஒரே நேரத்தில் அனுப்பப்பட்டு இருக்கின்றன. அதிலே, N.I.N. இடமிருந்து வந்த முதல் தகவல், முழுமையாக நாம் என்ன கேட்டிருந்தோமோ அது வரவில்லை. முழு விளக்கம் வரவில்லை. முழு விளக்கம் என்றால் சோதனையிலே ஒவ்வொரு தரமும் பிரித்துப், பிரித்து அந்த மூலப் பொருட்களைச் சோதனையிட்டதைப்பற்றி அவர்கள் முழுமையாகத் தரவில்லை. அவர்கள் அனுப்பிய பதிலிலே sample test-களின் விளக்கம் முழுவதும் வரவில்லை. திரும்பவும் இரண்டாம் தரம் அனுப்பியிருந்தோம். இரண்டாவது தரம் அனுப்பியதிலே அதிலே அவர்கள் சுட்டிக்காட்டியது முழுமையாக யாரையுமே, எந்த நிறுவனத்தையும்

ஏற்றுக்கொள்ளவில்லை. C.F.T.R.I. or any Government Institution என்றுதான் நாம் tender condition-லே கொடுத்திருக்கிறோம். அது C.F.T.R.I. or N.I.N. அதனாலே C.F.T.R.I. கொடுத்ததை நாம் எடுத்துக் கொண்டோம், இரண்டாவது முறையாக.

*முற்பகல் 11-45*

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு ஓராண்டு காலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்தப்புள்ளி 1-4-1999 அன்றோடு முடிவுற்று இருக்க வேண்டும். அதை மூன்று முறை, நான்கு முறை முதலமைச்சர் அவர்கள் அந்தத் தனியார் நிறுவனத்திற்கு இந்த ஒப்பந்தத்தை நீட்டித்துக் கொடுத்தார்கள் என்று கடந்த கூட்டத் தொடரில் மன்றத்திலே சொன்னேன். அதைச் சொல்கிறபோது தமிழக அரசாக இருந்தாலும், இந்திய அரசாக இருந்தாலும் ஒரு நிர்வாகம் எப்படி நிதிகளைக் கையாள வேண்டும் என்பதற்காக வகுத்திருக்கிற Financial Code என்று சொல்கிற அந்த Tamil Nadu Financial Code, Article 125 அடிப்படையில் ஒரு இலட்ச ரூபாய்க்கு மேல் எந்தப் பொருட்களை வாங்குவதாக இருந்தாலும் ஓர் அரசு open ஒப்பந்தத்தின் மூலமாகத்தான் வாங்க வேண்டுமென்கிற விதிமுறை இருக்கும்போது 30, 40 கோடி ரூபாய்க்கான ஊட்டச் சத்து வாங்குவதற்கு 4 முறை எப்படி நீங்கள் நீட்டித்துக் கொடுத்தீர்கள் என்று இந்த மன்றத்திலே நான் கேள்வியை வைத்தேன். நான் விவாதத்திலே சொன்னேன்; ஒரு ஊழல் குற்றச்சாட்டாகச் சொன்னேன். (மணியடிக்கப்பெற்றது)— கொஞ்சம் நேரம் நீட்டிக் கொடுங்கள். 110 விதி என்ற அடிப்படையில் எந்தவிதமான கேள்விக் கணைகளும் தொடுக்க முடியாத சூழ்நிலையில் அமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கை வைத்திருக்கிறார்கள். எங்கள் ஊரில், கிராமப்புறங்களில், சொல்வார்கள். அதாவது ஒரு பொருளைத் திருடிவிட்டு அந்த வீட்டுத் தலைவர், அந்த வீட்டினுள்ளே சென்று மறைந்திருக்கும்போது அந்தத் திருடனைப் பிடிப்பதற்காக காவல் துறை அதிகாரிகள் வீட்டினுள் வந்து, குழந்தையைக் கேட்கின்றபோது அந்தக் குழந்தை சொல்லும் 'எங்க அப்பன் குதிருக்குள் இல்லை' என்று தன்னுடைய தந்தையைக் காப்பாற்றி விட்டதாக எண்ணி. இப்படி எங்கள் அப்பன் குதிருக்குள் இல்லை என்று சொல்லுகிற பழமொழியைத்தான் நினைத்துப் பார்க்கிறேன். இந்த அறிக்கையை நான் பார்த்தேன். அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.' தேர்தல்—நாடாளுமன்றத்தினுடைய தேர்தல்—வந்த காரணத்தினாலேதான், நாங்கள் ஒப்பந்தப்புள்ளியைக் கோரமுடியவில்லை என்று. (மணியடிக்கப்பெற்றது) தேர்தல் என்பது, அதனுடைய Notification என்பது, ஜூலை திங்கள் 11 ஆம் தேதிதான் அறிவிக்கப்பட்டது. ஆனால் இந்தத் திட்டம் 1-4-1999-லிருந்து தொடர்ந்து அடுத்த ஆண்டிற்கான ஒப்பந்தக்காரர் யார் என்பதை நிர்ணயித்திருக்க வேண்டும். அவருடைய வாதத்தின் அடிப்படையில்கூட ஆகஸ்ட் மாதம்தான் அந்த ஒப்பந்தம் முடிவுற்றது என்று சொன்னாலும்கூட, ஆகஸ்ட் மாதம் முடிவுறுகின்ற ஒரு ஒப்பந்தத்திற்கு செப்டம்பர் திங்கள் 1-ஆம் தேதி முதல் புதியதாக அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று சொன்னால் அதற்கான அந்த ஒப்பந்தத்தைக் கோருவதற்கு எத்தனை மாத காலம் அவகாசம் வேண்டும் என்பதை இந்த மன்றமே உணர்ந்து பார்க்கவேண்டும். நான் சொல்கிறேன். 1998-ல் இதே அரசு, இதே அமைச்சரவை, நீங்கள், ஒப்பந்தத்தைக் கோரினீர்கள். அந்த ஒப்பந்தம் என்னிடம் இருக்கிறது. அதை 26-12-1997-ல் நீங்கள் Tender Notice-கொடுத்து, அதை settlement செய்வதற்கு 90 நாட்கள் ஆகியிருக்கின்றன. எனவே ஒரு முன் உதாரணம் இருக்கின்றபோது, தெரிந்திருக்கின்றபோது அடுத்த ஆண்டிற்கு நீங்கள் நீட்டிக்க வேண்டும் என்று சொன்னால், ஒப்பந்தத்தைக் கோர வேண்டும் என்ற எண்ணம், நேர்மை உங்களுடைய உள்ளத்திலே இருந்திருக்கும் என்று சொன்னால், நிர்வாகத்தில் இருந்திருக்கும் என்று சொன்னால் 90 நாட்களுக்குள் இந்த ஒப்பந்தத்தை நீங்கள் கோரியிருக்கவேண்டும்.



**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'அப்பன் குதிருக்குள் இல்லை' என்ற கதையைச் சொல்லிவிட்டார்கள். நான் சொல்கின்றேன்; அவர் மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப் போட முனைகின்றார் என்றுதான் நான் கருதுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் சொன்னது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 4 முறை நீட்டிப்புக் கொடுத்து இருக்கிறார் என்று. இந்தத் திட்டத்தினுடைய முக்கியமான நோக்கம் என்ன? முதலில் அவர் நம்முடைய நிதி வைப்பு விதிமுறைகள் மீறப்பட்டுள்ளன என்றார். 1 இலட்ச ரூபாய்க்கு மேல் tender வந்தால்-அதைத் திறந்த tender முறையிலே கோரப்பட வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால், நிச்சயமாக, இந்தத் துறையைப் பொறுத்த அளவில் எந்த விதிமுறைகளும், நிதிவைப்பு விதிமுறைகளும், எந்த சட்ட விதிமுறைகளும் நிச்சயமாக

[திரு. இ. பெரியசாமி] [2000 ஏப்ரல் 17

மீறப்படவில்லை. அனைத்து ஒப்பந்தங்களுமே திறந்த ஒப்பந்த முறையிலே—இன்னும் சொல்லப்போனால் ஒளிவு, மறைவு அற்ற ஒப்பந்த முறையிலேதான் தேர்வு செய்யப்பட்டு, குறைந்த விலைப்புள்ளி கோரியவருக்குத்தான் வழங்கப்பட்டிருக்கின்றன. இதிலே குறிப்பாக விதிமுறைகள் மீறப்பட்டிருக்கின்றன என்று சொல்வது என்பது உண்மைக்கு மாறானது.

அதே சமயத்தில் நீட்டிப்பைப் பொறுத்தவரையில் உயர் நீதிமன்றத்திலேகூடத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. 1996 ஆம் ஆண்டிலே இவர்கள் தொடுத்த வழக்கிலே, இந்த ஒப்பந்தம் சம்பந்தமாகத் தொடுத்த வழக்கிலே-நீதிமன்ற நீதிபதி ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கின்றார். அந்தத் தீர்ப்பிலே மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதிலே, கர்ப்பிணிப் பெண்களுக்கு, குழந்தைகளுக்கு, பாலூட்டும் தாய்மார்களுக்குத் தொடர்ந்து சத்துமாவு வழங்குவதன் அவசியம் கருதி நீட்டிப்பு வழங்குவதிலே தவறில்லை என்று உயர்நீதிமன்றமே தீர்ப்பு வழங்கியிருக்கின்றது இது ஒன்று.

அதே சமயத்திலே, 1999 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலே முடிவடைய வேண்டிய இந்த ஒப்பந்தத்தை ஏன் அவர்கள் கோரவில்லை என்று கேட்டிருக்கின்றார். அதை ஏற்கெனவே விளக்கத்திலே சொல்லியிருக்கின்றேன். ஏற்கெனவே இந்தத் திட்டம் பொதுவாகத் தொடர்ந்து நடத்திக் கொண்டு வருகின்ற திட்டம். அதிலிருந்து ஒருவகையிலே ஒப்பந்தப்புள்ளி கோருவதில் காலதாமதம் ஏற்பட்டால் நீட்டிப்புக் கொடுப்பதில் தவறே இல்லை. அதனால்தான் உயர் நீதிமன்றத் தீர்ப்பை நான் சுட்டிக்காட்டுகிறேன். தொடர்ந்து நடக்கையில், அதில் தடை ஏற்பட்டால் இடைப்பட்ட காலத்திலே அதற்கு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தத் திட்டத்தை நிறுத்த முடியாது. மாற்று ஏற்பாடு செய்கின்றவரையிலே நீட்டிப்புதான் கொடுக்க முடியும். அப்படி நீட்டிப்பு கொடுக்கின்ற காலத்திலே — கொடுக்காமல் விட்டுவிட்டால்—அதிலே பல லட்சம் குழந்தைகளின் நிலைமையையும் கவனத்திலே கொள்ள வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு சொல்லியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் அ. செல்லக்குமார், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். அதிக நேரமாயிற்று.



2000 ஏப்ரல் 17]

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். மீண்டும் இந்த மன்றத்திலே, அமைச்சர் அவர்கள் தயாராக இருக்கின்றார் என்று சொன்னால், நேரிடையாக விவாதிப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

முற்பகல் 11-50

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் எப்போதும் விவாதிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். எங்களைப் பொறுத்த அளவில் எந்தப் பொருள் குறித்தும் நிச்சயமாக இந்தத் துறையிலே விவாதிப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்

**டாக்டர் அ. செல்லக்குமார்:** பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுங்கட்சியைச் சார்ந்த நாங்கள் குழந்தைகளுக்குக் கொடுக்கும் உணவை....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

(திரு. சி. ஞானசேகரன், டாக்டர் தே. குமாரதாஸ், திரு. மு. அப்பாவு ஆகியோர் எழுந்து நின்று இரண்டு நிமிடங்கள் டாக்டர் அ. செல்லக்குமார் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுங்கள் என்று கேட்டனர்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒவ்வொருவரும் எழுந்து நின்று இரண்டு நிமிடங்கள் கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டே போனால் மற்றவர்கள் எல்லாம் பேசவேண்டாமா? அவர் 26 நிமிடங்கள் பேசியிருக்கிறார்.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. Point of Order.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** குறுக்கீடுகள் நிறைய இருந்தன. அமைச்சர் குறுக்கிட்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்கள் கொடுப்பதிலே

ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. எந்தக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் அதிக நேரம் எடுத்துக் கொள்கிறாரோ அந்தக் கட்சியினுடைய மற்றோர் உறுப்பினர் கடைசியாகப் பேசும்போது, அந்த நேரம் குறையும். மற்றொன்று, மறுபடியும் ஒரு பிரச்சினையை எழுப்பி, பிரச்சினைக்களுக்காகவே வாதம் என்ற முறையிலே தொடர்வதற்கு மாண்புமிகு உறுப்பினர் முயற்சிக்கக்கூடாது. பேச்சை முடிப்பதற்குத்தான் நேரம். ஏனென்றால், ஏற்கெனவே அவர் வாதத்திற்கு அழைத்து அந்த வாதத்தில் ஈடுபடுவதற்கு மாண்புமிகு அமைச்சரும் தயாராக இருப்பதாகச் சொல்லிவிட்டார். அதற்கு நேரம் குறிக்கின்றபோது வாதம் செய்யட்டும். ஆகவே, கருத்துகளைத்தான் முடிக்க வேண்டுமே தவிர, பிரச்சினையை மறுபடியும் எழுப்புவதற்கு இந்த நேரத்தைப் பயன்படுத்தக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தெளிவாகச் சொல்லுகிறேன்.....

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of Order ஆளுங்கட்சியைச் சார்ந்த நாங்கள் சொல்லி குழந்தைகளுக்குக் கொடுக்கும் மாவை எங்கும் ஆராய்ச்சிக்கு அனுப்பவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த வாசகத்தை அவைக் குறிப்பிலிருந்து எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** நான் letter கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதே ஊட்டச் சத்து மாவை, இதே தனியார் நிறுவனம் ஆந்திர அரசுக்கு 10 ரூபாய் 30 காசுக்கு விநியோகம் செய்து கொண்டிருக்கிறது; தமிழக அரசுக்கு 18 ரூபாய்க்கு விநியோகம் செய்கிறது. தமிழகத்திலே உற்பத்தி ஆகின்ற இந்த உணவுப் பொருட்களை ஆந்திராவுக்கு எடுத்துச் சென்று அங்கே விநியோகம் செய்கின்றபோது 10 ரூபாய் 30 காசுகள்.....



**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் 18 ரூபாய்க்குக் கொடுப்பதாகச் சொல்லுகிறார். அது தவறாகும். திருத்திக்கொள்ள வேண்டும். 16 ரூபாய். அதிலே குறிப்பாக, ஏற்கெனவே அவர் சொன்ன விளக்கத்திற்கு நான் ஒரு விளக்கத்தைச் சொல்லி முடிக்கிறேன். ஏற்கெனவே நீட்டிப்புக் கொடுத்ததற்குக் காரணம். முதலிலே தேர்தல் அறிவிப்பு வந்துவிட்டது என்று அதிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்வது, ஏற்கெனவே அவர் சொல்லுகின்ற இந்த மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உலக வங்கித் திட்டத்தில் கொடுப்பது போன்று Amylase செயல்பாடுகளை சத்துமாவு தயாரிப்பதற்காகவும், அதோடு மட்டுமல்லாமல் அந்த 431—இப்போது 113, 318 இந்த இரண்டையும் இணைத்து 431. வட்டங்களுக்கு முழுமையாக supply செய்வதற்குரிய, உற்பத்தித் திறனை உயர்த்துவதற்காகத்தான் — அதற்கு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு இப்போது அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் இல்லாத காரணத்தால், அதை உயர்த்துவதற்காகத்தான்—இந்த அரசு ஒருமித்த கொள்முதல் கொள்கையை உருவாக்கியிருக்கிறது. மிகுந்த நல்ல நோக்கத்தோடு, இந்த அரசு இந்தத் திட்டத்தை மிகச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காகத்தான் ஒருமித்த கொள்முதல் கொள்கையை உருவாக்கியிருக்கிறது. அதுதான் இரண்டாவது extension, நீங்கள் அதை நன்றாக புரிந்துகொள்ள வேண்டும். இரண்டாவது extension-க்குக் காரணமே ஒருமித்த கொள்முதல் கொள்கையை உருவாக்குவதற்கு 3 துறைகளும், சமூக நலத் துறை, திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் இருக்கக்கூடிய நம்முடைய நிதித் துறை ஆகிய 3 துறைகளும் அமர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி, எதிர்காலத்திலே ஒரே விலை வரவேண்டும், ஏற்கெனவே அவர் சொன்னார் "ஒரு திட்டத்திற்கும், இன்னொரு திட்டத்திற்கும் என்ன வேறுபாடு இருக்கிறது. என்று, இந்த இரண்டு திட்டங்களையும் ஒன்றாக இணைத்து ஒரே விலையில், அதுவும் ஒரே Component-லே அந்த மூலப்பொருட்களை எல்லாம் ஒரே மாதிரி கொடுத்து, ஒரே விலையில் அதை அமைக்க வேண்டும். Amylase செயல்பாடுடைய சத்துணவு எதிர்காலத்திலே வழங்கப்பட வேண்டும். அதற்குத் தகுந்தாற்போல் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்காக, மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுடைய தரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காகத்தான் ஒருமித்த கொள்முதல் கொள்கையை இந்த அரசு உருவாக்கிக் கொண்டிருக்கிறது. அதுதான் நீட்டிப்புக்குக் காரணம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் காஞ்சனா கமலநாதன் (குறுக்கீடு) விவாதத்தைத் தொடங்கிவைத்ததால் அவருக்கு நான் அதிகமான நேரம் கொடுத்திருக்கிறேன். 28 நிமிடங்கள் கொடுத்திருக்கிறேன். அமைச்சருடைய குறுக்கீடுகளையும் சேர்த்துத்தான் நேரம் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) எல்லா நேரத்தையும் சேர்த்துத்தான் கொடுத்திருக்கிறேன். நீங்கள் இப்படி உரக்கப் பேசினால் பிரயோஜனம் இல்லை.

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, விவாதத்திற்குரிய பொருளாக புதிய, புதிய பிரச்சினைகளை மாண்புமிகு உறுப்பினர் எழுப்புவதாக இருந்தால், இந்த நேரத்தைப் பயன்படுத்தக்கூடாது. அவர்களுக்கு ஒதுக்கிய நேரம் முடிந்துவிட்டது. நேரம் முடிந்ததற்குப் பின்னர், 8 நிமிடங்களுக்கு மேல் இந்த நேரத்தைப் பயன்படுத்த, மாண்புமிகு உறுப்பினர் இதைத் தனக்கு உரிய நேரமாகக் கருதக்கூடாது. வேண்டுமானால், வாதத்திற்கு சபாநாயகர் மூலமாக, நேரம் கேட்டு, அந்த நேரத்திலே அந்த வாதத்தை வைத்துக்கொள்ளலாம். இன்னும் சொல்லப்போனால், புதிய record அல்லது வேறு ஆதாரம் இருந்தால், முன்கூட்டியே சபாநாயகரிடத்திலே காட்டியிருந்தால், அமைச்சருக்கு விளக்கம் சொல்லக்கூடிய வாய்ப்பு இருக்கும். நீங்கள் காட்டாத விவரங்களை, இந்த அவையிலே record என்று சொல்லிப் பேசுகிறபோது, உடனடியாகப் பதில் சொல்லக்கூட முடியாது. இரண்டாவது, வாதத்திற்குரிய நேரமாக, தாங்கள் குறிப்பிட்டதைப்போல, வேறொரு நேரத்தைத்தான் தீர்மானிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அந்த இரண்டு நிமிடத்தைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்புக் கொடுக்கவில்லையே. அந்த இரண்டு நிமிடத்தைப் பயன்படுத்தலாமே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அப்படிச் சொல்லக்கூடாது. விவாதத்தை அவர் தொடங்கி வைத்தார் என்பதற்காக அவருக்கு அதிக நேரம்



கொடுக்கப்பட்டது. அரை மணி நேரம் ஆகிவிட்டது. நேரத்தைப் பாருங்கள். 11.26 மணிக்குத் தொடங்கினார். எல்லாவற்றையும் சேர்த்து, இப்போது 11.56 ஆகின்றது. 30 நிமிடங்கள்—அரை மணி நேரம் ஆகியிருக்கிறது. டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த மார்ச் திங்கள் 2000 அன்று நடைபெற்ற உலக மகளிர் நாள் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வாழ்த்துரை வழங்கும்போது, குறிப்பிட்டுப் பேசிய ஒரு வாசகத்தை, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலே இருக்கின்ற வாசகத்தைப் படித்துக்காட்ட இந்த அவையிலே நான் விரும்புகின்றேன். ஆண்களைவிட பெண்கள் தாழ்ந்துவிட்டதாக யாரும் நினைக்கத் தேவையில்லை. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், இந்த நாட்டிலே சாதி ஒழிய வேண்டுமென்று உத்தமர் காந்தியடிகள் சொன்னார்; பாரதி பாடினார்; பெரியார் முழங்கினார்.

(டாக்டர் அ. செல்லக்குமார், டாக்டர் தே. குமாரதாஸ், திரு. மு. அப்பாவு, திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் எழுந்து நின்று பேசிக்கொண்டிருந்தார்கள்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது அவை நடைமுறைக்கு மீறிய செயல். உட்காருங்கள். ஏற்கெனவே அரை மணி நேரம் கொடுத்தாகிவிட்டது. அதற்குமேலே, இரண்டு நிமிடம், இரண்டு நிமிடம் என்று நீட்டிக்கொண்டே போனால், மற்ற உறுப்பினர்களெல்லாம் பேச வேண்டாமா? (குறுக்கீடு) எல்லோருக்கும் சேர்த்துத்தான் இது. பொதுவான விதிதான், இங்கே டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** ஆனால், உள்ளபடியே, சாதியை இன்னும் தங்களுடைய பெயருக்குப் பின்னால் வைத்துக் கொண்டிருப்பவர்கள் ஆண்கள்தான். இராமசாமி செட்டியார், குப்புசாமி முதலியார், நடேச அய்யர் என்று சாதியைத் தங்களுடைய பெயருக்குப் பின்னால் வைத்திருப்பவர்கள் ஆண்கள்தான்.

(டாக்டர் அ. செல்லக்குமார், டாக்டர் தே. குமாரதாஸ், திரு. மு. அப்பாவு, திரு. சி. ஞானசேகரன், ஆகியோர் நின்று, தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் செல்லக்குமார் அவர்கள்,

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2000 ஏப்ரல் 17

ஏதோ இந்த அமைச்சரவை விவாதத்திற்குத் தயாராக இல்லாததைப்போல தங்களை நோக்கிக் கடுமையாகப் பேசுகிறார். மாண்புமிகு உறுப்பினர் பேசுவதற்கு நீங்கள் அரை மணி நேரத்தை ஒதுக்கினீர்கள். தேவைப்பட்டால் "இன்னொரு நாள், இதுகுறித்து சபைத் தலைவர் அனுமதித்தால், அதை விவாதிக்கத் தயாராக இருக்கிறோம்" என்று சொன்னார்கள். நம்முடைய அமைச்சர் அவர்களும் தான் பதில் தரத் தயாராக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்படி உறுப்பினர் கேட்டுக்கொண்டே போய், அமைச்சரும் பேசிக்கொண்டே போனால், நேரம் என்னவாகும்? ஏற்கெனவே இன்று அவையில் 11.26-க்குத்தான் இந்த மானியத்தின்மீது விவாதம் தொடங்கியது. தொடர்ந்து ஒரே உறுப்பினர் பேசிக்கொண்டு இருப்பதனால், மற்றவர் யாரும் பேச வேண்டாம் என்று அவை முடிவு எடுத்தால், அது வேறு பிரச்சினை. ஆனால், ஏற்கெனவே டாக்டர் செல்லக்குமார், இதுபற்றி விவாதிக்கத் தயார் என்று சொல்லும்போது, தான் பதில் அளிக்கத் தயார் என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார். அதற்கு சபாநாயகர் நேரம் ஒதுக்கித் தந்தால், அவரும் விவாதிக்கட்டும், அமைச்சரும் பதில் சொல்லட்டும் என்று அவையின் முன்னவர் சொல்லி, அந்தப் பிரச்சினையை முடித்துவிட்டார். மீண்டும் ஒரே பிரச்சினையை எவ்வளவு நேரம் விவாதிப்பது என்று அவை முடிவு செய்ய வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதிலே என்ன Point of Order? சரி, சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்லக்குமார் அவர்கள் ஒரு வினாவை இங்கே எழுப்பினார்கள். ஆந்திராவிலே அவர்கள் கொடுக்கும்போது 10 ரூபாய்க்கும், இங்கே தமிழ்நாட்டிலே இவ்வளவு என்று ஒரு வித்தியாசத்தைச் சொல்லும்போது, அதற்கு நேரடியாக நம்முடைய அமைச்சர் பதில் தராமல்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் சொன்னது வேறு; நீங்கள் சொல்வது வேறு.

**திரு. சி. ஞானசேகரன்:** பதிலே தராமல், அவர் எழுப்பிய வினாவிற்கு பதில் எங்கே? பதில் சொல்லாமல், கழுவுகிற மீனிலே நழுவுகிற மீன்போல, அவர் பதில் சொல்லாமல்....



2000 ஏப்ரல் 17]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவர் ஒன்றும் நழுவவில்லை. விவாதத்திற்குத் தயார் என்று அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவாதம் நீடிப்பதைப்பற்றிக்கூட நான் கவலைப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது, குற்றச்சாட்டு என்று சொன்னால், அந்தக் குற்றச்சாட்டை சபாநாயகரிடத்திலே கொடுத்து, அவர் அனுமதித்து, அந்தக் குற்றச்சாட்டு மாண்புமிகு அமைச்சருக்குத் தெரிந்து அதற்குப் பின்னர் பேச வேண்டும். குறைபாடுகள் என்றால், எதை வேண்டுமானாலும் அவருடைய கருத்துகளைச் சொல்லலாம். குற்றச்சாட்டு சொல்கிறபோது, ஆதாரம் முன்கூட்டித்தராமல், "குற்றச்சாட்டு சொல்லிவிட்டேன், உடனே பதில் என்ன" என்று கேட்டால், எப்படி? தமிழக Open Tender கேட்டு, அந்த tender அடிப்படையில் வழங்குகிறபோது, ஆந்திரா அரசிலே, கர்நாடக அரசிலே எந்த முறையிலே செய்கிறார்கள் என்று பார்க்க வேண்டிய தேவை இல்லை. இங்கே கேட்ட Open tender-ஐ நியாயமான முறையில், தகுதியுள்ள உணவு என்று சொல்லப்பட்ட உணவுக்குக் குறைந்த விலையிலே தருகிறவர்களுக்குத் தராமல், அதிக விலையிலே தருகிறவர்களுக்கு அரசு தந்திருக்குமானால், அதற்கே ஒரு நியாயமான காரணம் ஏதேனும் அரசுக்கு இருக்கிறதா என்று கேட்பதாக இருந்தால், அந்தக் குற்றச்சாட்டு முன்கூட்டியே தரப்பட்டு, அந்த அடிப்படையிலே பேச வேண்டுமேதவிர, தன் கையிலே இருக்கிற ஆதாரங்கள்மீது, தான் கருதுகின்றவற்றை வைத்துக்கொண்டு, அவையினுடைய நேரத்தை எடுத்துக்கொள்ள மாண்புமிகு உறுப்பினருக்கு உரிமை இல்லை. குற்றச்சாட்டுத் தரப்பட்டு இருக்குமானால், அதுபற்றி அந்த அவையில் எவ்வளவு நேரம் பேசுவதாக இருந்தாலும், அமைச்சரும், அரசும் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

நண்பகல் 12-00

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய பேராசிரியர் அவர்கள், இரண்டு நிமிடத்திலே பேசி முடியுங்கள் என்று சொன்னார்கள். அவர் உடனே ஒரே சத்துணவு, நம் ஊரிலே 18 ரூபாய், ஆந்திராவிலே 10 ரூபாய்—இது என்ன நியாயம் என்று கேட்டவுடன், அமைச்சர் அவர்கள், இல்லை, இல்லை 16 ரூபாய் என்று சொன்னார்கள். அதற்கு அரை நிமிடம்கூட ஆகவில்லையே? அந்த 2 நிமிடம் கொடுத்திருந்தீர்கள் என்றால், இந்தப்

பிரச்சினையே வந்திருக்காதே, அதைச் சொல்லி முடிப்பதற்கு? நீங்கள் இப்போது permission கொடுங்கள்; அது முடிந்துபோய்விடும்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் ஒரு குற்றச்சாட்டு சொன்னார். அதற்கு அமைச்சர் பதில் சொன்னார். மறுபடியும் ஆந்திராவில் இன்ன விலை என்றால், ஆந்திராவில் என்ன விலை என்று யாருக்குத் தெரியும்? கர்நாடகாவில் என்ன விலை என்று அமைச்சர் உடனே பதில் சொல்ல முடியுமா?

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** இல்லை, இல்லை. இந்தப் பிரச்சினைக்குத்தானே சொல்கிறார். அமைச்சர் பதில் சொல்லியிருக்கலாம். அவர் பதில் சொன்னதற்கு தானே சொல்கிறார்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இல்லை, இல்லை; நான் கேட்பது இதுதான். ஓர் உறுப்பினர் தனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, இந்தியாவிலே இருக்கக்கூடிய எல்லா மாநிலங்களின் பெயர்களைச்சொல்லி, இங்கே இந்த விலை, அங்கே இந்த விலை என்று சொன்னால், உடனே அமைச்சரிடத்திலே அதற்குப் பதில் சொல்வதற்கு என்ன குறிப்பு இருக்கிறது? எப்படிச் சொல்லமுடியும்? இரண்டு; ஆந்திராவிலே கொடுத்த அந்த விலை; நம்முடைய தமிழ்நாட்டிலே கொடுத்த அதே தரத்தோடு ஆந்திராவிலே கொடுத்திருக்கிறார்களா என்பதை யார் நிரூபிப்பது? ஆகவே, இவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்துத்தான், மாண்புமிகு உறுப்பினர் அதற்கு ஆதாரத்தோடு பேசுவதாக இருந்தால், அவைத் தலைவர் அனுமதித்தால், அமைச்சர் பதில் சொல்லத் தயாராக இருக்கிறார் என்று சொன்னதற்குப் பிறகு, மீண்டும், மீண்டும், இதையே விவாதிப்பது என்ன முறை?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதுமட்டுமல்ல; ஏற்கெனவே பேரவைத் தலைவர் அவர்களும் அறிவித்திருக்கிறார்கள். பேரவை விதி 93-இன்பிரகாரம், இந்த மன்றத்திலே யார் மீதாவது குற்றம் சாட்டுவதாக இருந்தாலும், அரசின் மீது குற்றம் சாட்டுவதாக இருந்தாலும், முன்கூட்டியே பேரவைத் தலைவரிடம் அதற்கான ஆதாரங்களைக் காட்டி, அனுமதி பெற்ற பின்புதான் சொல்ல வேண்டுமென்று தினந்தோறும் வலியுறுத்தப்படுகிறது. ஆனால், அதை மீறுகிற வகையிலே இங்கே வந்து பேசிவிட்டு, இப்போது வந்து ஒரு தாளைக் கொடுக்கிறீர்கள். உடனே அதற்கு அமைச்சர் எப்படி பதில் சொல்ல



முடியும்? இருந்தாலும், அமைச்சர் அவர்கள் விவாதத்திற்குத் தயார் என்று சொல்லிவிட்டார். அதோடு நிறுத்திக்கொள்ளுங்கள். அடுத்து, டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** 2 நிமிடம் எனக்கு time கொடுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதெல்லாம் இல்லை; டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலன், சத்துணவுத் துறை......

*(டாக்டர் அ. செல்லக்குமார் நின்றுகொண்டே இருந்தார்.)*

*(ஏய் வெளியிலே போடா என்று ஒரு குரல் கேட்டது) (குறுக்கீடுகள்--கூச்சல்)*

*(தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் எழுந்து நின்றனர்.)*

**திரு. சி. ஞானசேகரன்:** ஏய் வெளியிலே போடா என்று உறுப்பினர் சொன்னார்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இல்லை, இல்லை யாரும் சொல்லவில்லை உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விரும்பத்தகாத, வெறுக்கத்தக்க வார்த்தையைச் சொன்னவர் யார் என்று எழுந்து நின்று, அவையில் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. த. நடராஜன்:** இந்த வார்த்தைக்காக நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை ஆகியவற்றிற்கான மானியத்தின் மீது பங்கேற்று சில கருத்துகளைச் சொல்ல எனக்கு அளிக்கப்பட்டிருக்கிற இந்த வாய்ப்புக்காகத் தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

[டாக்டர் காஞ்சனா கமலநாதன்] [2000 ஏப்ரல் 17

இந்தச் சந்தர்ப்பத்தில் கடந்த 9-3-2000 அன்று நடைபெற்ற உலக மகளிர் நாள் விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர், முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்கள் வாழ்த்துரை வழங்கும்போது குறிப்பிட்ட சில கருத்துகளை இந்த மாமன்றத்தில் பதிய வைக்க நான் விரும்புகிறேன். 'ஆண்களைவிட பெண்கள் தாழ்ந்து விட்டதாக யாரும் நினைக்கத் தேவையில்லை. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமேயானால், இந்த நாட்டிலே...

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் 'மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்' என்று சொல்ல வேண்டாம். அந்த வார்த்தை நல்ல வார்த்தை அல்ல. அதற்கு வருத்தம் தெரிவிக்கிறேன் என்று சொன்னாலே போதும். (குறுக்கீடு)

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** "சுருக்கமாகச் சொல்ல வேண்டுமேயானால், இந்த நாட்டிலே சாதி ஒழிய வேண்டும் என்று உத்தமர் காந்தியடிகள் சொன்னார்; பாரதி பாடினார்; பெரியார் முழங்கினார்; அண்ணா எழுதிக் காட்டினார்; புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப் போன்றவர்கள், கவிதைகளை அதற்காக இயற்றினார்கள். ஆனால், உள்ளபடியே சாதியை இன்னும் தங்களுடைய பெயருக்கு பின்னால் வைத்துக் கொண்டிருப்பவர்கள் ஆண்கள்தான். இராமசாமி செட்டியார், குப்புசாமி முதலியார், நடேச அய்யர் என்று ஜாதியைத் தங்களுடைய பெயருக்குப் பின்னால் வைத்திருப்பவர்கள் ஆண்கள்தான். சரஸ்வதி செட்டியார் என்றோ, லட்சுமி முதலியார் என்றோ, பார்வதி கவுண்டர் என்றோ எந்தப் பெண்ணும் ஜாதிப் பெயரை தங்கள் பெயருக்குப் பக்கத்திலே போட்டுக் கொள்வதில்லை. இதிலிருந்து ஆண்களைவிட பெண்கள் உயர்ந்தவர்கள், ஜாதியை ஒழிப்பதிலே என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்" என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பெண்களைப் பற்றி...

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, சில பகுதிகளிலே கவுண்டர் அம்மா, செட்டியார் அம்மா என்று சொல்கிறார்கள். அதற்கெல்லாம் என்ன சொல்கிறீர்கள். (சிரிப்பு)

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** அதைக்கூட, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவுண்டர் சம்சாரம் என்று சொல்வதற்காக...



2000 ஏப்ரல் 17]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ஜாதி பின்னால் இல்லை, முன்னால் இருக்கிறது. கவுண்டர் அம்மா என்று சொல்லும்போது, ஜாதி முன்னால் இருக்கிறது. குறிப்பிட்ட ஒருவருடைய பெயருக்குப் பின்னால் ஜாதி இருப்பதுதான் தவறு. இது, அம்மையார் அவர்கள் பேசுவது, பெண்கள் கூட்டத்தில், மகளிர் கூட்டத்தில் நான் பேசிய கருத்தைத்தான் (சிரிப்பு) இங்கே திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதைக்கூட ஆண்கள்தான் பெண்களுக்குச் சொல்ல வேண்டியிருக்கிறது. பெண்களாக அதைப் புரிந்து கொண்டு, அதைப் பற்றிக் கவலைப்படாமலே தங்களது ஜாதியை ஒட்ட வைத்துக் கொள்ளாமல் இருக்கிறார்கள். அதுவரையிலே, போற்றுவதற்கும், பாராட்டுதலுக்கும் அந்த மகளிர் உரியவர்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** தலைவர் அவர்களே, கோபிச்செட்டிபாளையத்தில் இருக்கிற நகராட்சி மன்ற ஆணையருடைய பெயர் இந்திரா நாயுடு. அதே மாதிரியாக சரோஜினி நாயுடுவும் இருந்திருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்துகிறேன். (சிரிப்பு)

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். எதற்காக இந்த வாசகத்தை மீண்டும் இங்கே நான் படித்துக் காட்டினேன் என்று சொன்னால், வழக்கமாக உலகத்திலே தான் பெற்ற குழந்தையை இடுப்பிலோ அல்லது கையிலோ தூக்கிச் செல்லும்போதுகூட, அந்தச் சுமையைத் தாங்க முடியாமல் சலிப்புக் காட்டுவது மனித இயல்பு. தன்னுடைய வீட்டிற்கு ஒரு சுமையை சுமந்து செல்லும்போது கூட, அந்தச் சுமையைத் தூக்கிகொண்டு போவதற்குக்கூடச் சலிப்பு காட்டுவது மனித இயல்பு. ஆனால் தான் பொது வாழ்விலே ஈடுபட்ட அந்தக் காலம் தொட்டு, ஏறத்தாழ 45 ஆண்டுகளாக, இந்தப் பெண்ணினம், இதை எப்படி முன்னேற்றுவது, இதனுடைய கீழ்நிலையை எப்படி மாற்றுவது, பெண்களை முன்னேற்றுவதற்காக, என்னென்ன திட்டங்களை வகுத்தால் இந்தப் பெண் சமுதாயம், தன்னைப் பொருளாதார அடிப்படையில் சமுதாய அடிப்படையில் உயர்த்திக் கொள்ளும் என்ற சீரிய நோக்கத்தைத்தான், திரைப்படங்களுக்கு வசனம் எழுதிய காலம் தொட்டு, முதலமைச்சராக பொறுப்பேற்று இருக்கின்ற காலங்களில் சிறப்பாக அதற்கான திட்டங்களை வகுத்து, சட்டங்களை ஏற்படுத்தி இந்தப் பெண் இனத்தினுடைய உயர்விற்காக சலிப்பு அடையாமல் தொண்டாற்றிக் கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர்

அவர்களுக்கு இந்த சமூக நல வாரியத்திலே பேசுகின்றபோது, பெண் இனத்தின் சார்பாக, இந்தத் தமிழ்நாட்டிலே இருக்கின்ற ஒட்டுமொத்தப் பெண்கள் சமுதாயத்தின் சார்பாக, எங்களுடைய தலைதாழ்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ள நாங்கள் கடமைப்பட்டிருக்கின்றோம்.

பெண் குழந்தை ஏன் பிறந்து விட்டது என்று சலிப்புக் காட்டுவதும், அலுப்புக் காட்டுவதும், பெண் சிசு கொலை வரையிலே இப்போது சமுதாயத்திலே கீழ்த்தட்டிலே இருப்பவர்கள், பல்வேறு மாவட்டங்களிலே ஈடுபடுவதும், இந்தப் பெண்ணை எப்படி வளர்த்து ஆளாக்குவது, இந்தப் பெண்ணுக்கு எப்படித் திருமணம் முடித்துக் கொடுப்பது என்று ஒரு சலிப்பு, சங்கடம், பயம் பொருளாதார அடிப்படையிலே ஏற்படுகின்ற சங்கடங்கள்தான் காரணம் என்பதை நன்றாக உணர்ந்து நம்முடைய தமிழக அரசு, தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் இந்த அரசாங்கம் அந்தப் பெண்ணுக்கு திருமணம் முடித்துக் கொடுப்பதிலே எத்தனை நல்ல திட்டங்களை, எத்தனை பல்வேறு தலைப்புகளிலே கொண்டு வந்திருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். திருமண உதவிக்காக மட்டும், நம்முடைய அரசாங்கம், 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவி', அன்னை அஞ்சுகம் அம்மையார் நினைவு உதவி, டாக்டர் தர்மாம்பாள் விதவை மறுமணத் திட்டம், ஈ.வெ.ரா. மணியம்மையார் விதவை மகள் திருமணத் திட்டம், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம் ஆகிய பல்வேறு திட்டத் தலைப்புகளின் கீழே, பெண்கள் தமிழகத்திலே குறிப்பிட்டக் காலத்தில் மணம் முடித்துச் செல்ல வேண்டும் என்பதிலே எத்தனை அக்கறையோடு பங்கேற்று நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலே விரிவாகக் கொடுத்திருக்கிறார்கள். இங்கே நமக்கு கொடுக்கப்பட்டு இருக்கின்ற மக்கள் சாசனத்திலும் அதைப் பல்வேறு தலைப்புகளிலே புள்ளிவிவரங்களுடன் இங்கே வெளியிட்டு இருக்கிறார்கள். இதற்காக அமைச்சர் அவர்களையும், தமிழக அரசையும் நெஞ்சாரப் பாராட்ட நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

பிற்பகல் 12-10

அதைப்போலவே, குழந்தைகளுக்கான திட்டங்கள். இந்த அரசாங்கத்தின் சார்பில், ஏழைத் தாய்மார்கள் பேறுகால ஊதிய



இழப்பை ஈடுசெய்வதற்காக, கர்ப்பிணிப் பெண்களுக்கு கொடுக்கப்படுகின்ற சத்துணவு திட்டத்திலேயிருந்து, தமிழக அரசு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்; அன்னை சத்தியா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் காப்பகங்களை எற்படுத்தி, அதன்மூலமாக ஒரு பாதுகாப்பு கொடுக்கின்ற திட்டம் இப்படிப்பட்ட திட்டங்களுக்காக நாங்கள் மீண்டும் தமிழக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அன்னை சத்தியா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் காப்பகத்தை, அந்தப் பெயர் மாற்றத்தைக்கூட செய்யாமல், எவ்வளவு பெருந்தன்மையோடு, எவ்வளவு ஒரு நல்ல உள்ளத்தோடு, இருக்கிறார்கள் என்பதை இந்த நாடு அறியும். கடந்த காலத்திலே அரசாங்கம் நடைபெற்றபொழுது, எப்படிப் பெயர்களை நீக்குவதிலே, அவர்கள் அக்கறை காட்டினார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் அத்தனைபேரும் நன்றாக அறிவார்கள். டாக்டர் கலைஞர் என்ற பெயர், எங்கெங்கே இருக்கிறதோ, என்னென்ன திட்டங்களுக்கு எந்தெந்தக் கட்டடங்களுக்கு சூட்டப்பட்டிருக்கிறதோ, அந்த இடத்திலேயிருந்தெல்லாம், அந்தப் பெயரை நீக்கம் செய்வதிலே எவ்வளவு முனைப்பு காட்டினார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்றாக அறிவார்கள். ஆனால், பெருந்தன்மையோடு, பெருந்தன்மைக்கு முன்னுதாரணமாக, விளங்கக்கூடிய தானைத் தலைவர், தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் இன்றளவும், அன்னை சத்தியா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் காப்பகத்திற்கு, அந்தப் பெயரை மாற்றம் செய்யாமலே நடத்திக் கொண்டிருக்கிறவர் என்பதை, இந்த மாமன்றத்திலே சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலே, ஆரம்பத்திலே, நம்முடைய மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் சொர்க்கம் என்பது தாயினுடைய மடி என்று குறிப்பிட்டு, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகம் ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. சுருக்கமாக, இந்த மாமன்றத்திலே சொல்ல வேண்டுமென்று சொன்னால், சொர்க்கம் என்பது என்ன? நரகம் என்பது என்ன? கண்டவர்கள் விண்டதில்லை, விண்டவர்கள் கண்டதில்லை. சொர்க்கம் என்பது பெண் சமுதாயத்தைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டிலே, டாக்டர் கலைஞருடைய ஆட்சிதான், சுகமான சொர்க்கம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நாங்கள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். (மணியடிக்கப்பெற்றது) ஏனென்று சொன்னால், பெண்களை, கருவிலே

இருக்கின்ற அந்த மழலைகளைக் காப்பாற்றத் தொடங்குகின்ற இந்த அரசு, கல்வி கற்பிப்பதில் ஆகட்டும், தொழில் பயிற்சி கொடுப்பதில் ஆகட்டும், திருமண உதவிகளை வாரி வழங்குவதில் ஆகட்டும், வேலை வாய்ப்புகளைக் கொடுப்பதில் ஆகட்டும், குழந்தைகள் காப்பகங்களை ஏற்படுத்தி, அந்தக் குழந்தைகள் நன்றாக வளர வேண்டும் (மணியடிக்கப்பெற்றது) என்று முனைப்புக் காட்டுகின்ற திட்டங்களை வகுத்துக் கொடுப்பதில் ஆகட்டும், எந்த அளவிற்கு முனைப்போடு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்றாக அறிவார்கள்.

நம்முடைய மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கின்ற சில கோரிக்கைகளை மட்டும் நான் சொல்லி, என்னுடைய உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன். பணிபுரியும் மகளிர் விடுதிகள் இப்பொழுது ஏறத்தாழ தமிழகமெங்கும் 64 இருக்கின்றன. அவை போதாது. மாவட்டந்தோறும், முக்கியமான நகரங்கள் அனைத்திலும், பணிபுரியும் மகளிருக்கு விடுதிகள் கட்டித் தரப்படவேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து ஊர் நல அலுவலர்கள் என்று இருக்கிறார்கள். Promotion அடிப்படையிலே, அவர்கள் எல்லாம் மாவட்டத்தை விட்டு மாவட்டம் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். மாவட்டம் விட்டு மாவட்டம் வெகுதொலைவிற்கு அனுப்பப்படுகின்றார்கள். இப்பொழுது என்னுடைய தர்மபுரி மாவட்டத்திலேயிருக்கின்ற அந்த கிராம நல ஊழியர் களக்காட்டிற்கு மாற்றிப் போடப்பட்டிருக்கிறார். திருநெல்வேலி மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம் என்று வெகு தொலைவிற்கு அவர்கள் அனுப்பப்படுகிறார்கள். தயவுசெய்து, அவற்றை ஆய்ந்தறிந்து, துறை மூலமாக நீங்கள் தகவல் பெற்று, அப்படித் தொலைதூரத்திலே பணிபுரிகின்ற கிராம நல அலுவலர்களை, அவரவர்கள் மாவட்டத்திலேயே பணிபுரிய வைக்க நீங்கள் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போலவே, சுகாதார மையங்கள் இருக்கின்றன. சுகாதார மையத்திலே செவிலியர்களை நீங்கள் பணித்திருக்கின்றீர்கள். ஏற்கெனவே வாழ்வொளித் திட்டம் என்றும், வருமுன் காப்போம் திட்டம் என்றும், இந்த அரசினுடைய சார்பிலே எத்தனையோ நலத்



திட்டங்களை சுகாதாரத் துறை ஏற்படுத்திச் செய்து கொண்டிருக்கிறது. அவற்றோடு இணைந்து பணியாற்றுகின்ற, நம்முடைய சமூக நலத் துறையைச் சேர்ந்த சுகாதார செவிலியர்கள், இன்னமும் கொஞ்சம் அதில் அக்கறை எடுத்துக்கொண்டு செயல்பட அறிவுறுத்த வேண்டுமென்று நாங்கள் மெத்த பணிவோடு உங்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். கிராமப்புறத்திலே இருக்கின்ற குழந்தைகளுடைய, தாய்மார்களுடைய, ஏழையெளிய, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட பெண்களுடைய, விவசாயிகளுடைய, அந்த நோய்களைக் கண்டறிந்து அவற்றை போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால், அவர்களுக்குத்தான் ஒரு direct contact இருக்கிறது. தினந்தோறும் அவர்களைச் சந்திக்கின்ற காரணத்தினால்தான், ஒரு தொடர்பு அறுந்து போகாமல் அவர்களோடு பழகக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்கிறேன். எனவே, அந்த வருமுன் காப்போம் திட்டம் மூலமாக, வாழ்வொளித் திட்டம் மூலமாக, இந்தச் செவிலியர்களும் இணைந்து, அவர்கள் கொஞ்சம் நல்ல முறையிலே பணி செய்ய வேண்டுமென்று, துறை அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த நல்ல வாய்ப்பிற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி வாசுகி முருகேசன்.

*பிற்பகல் 12-15*

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம் மீதான மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தங்களுக்கும் நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். 'தாயின் மடியில் சொர்க்கத்தைக் காணலாம்' என்ற முதுமொழியோடு ஆரம்பிக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பு பல்வேறு சமூக நலத் திட்டங்களை உள்ளடக்கிய அரிய பொக்கிஷமாகத் திகழ்கிறது.

பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், குழந்தைகள், ஊனமுற்றவர், நலிந்தோர், முதியோர் நலனுக்காகவும் சமூக நலத் துறை சிறப்பாகப் பணியாற்றுகிறது. நிதிநிலை அறிக்கையில் மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த முதியோர் உதவித் தொகையை ரூ.150-லிருந்து 200 ரூபாயாக உயர்த்தியதை மனதார வரவேற்கிறேன். தமிழக மக்களின் நலனை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களால்

அறிவிக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையைப் பல்வேறு தரப்பு மக்களும் வெகுவாகப் பாராட்டிக் கொண்டுள்ள இந்த வேளையில், எதிர்க் கட்சியினர் ஏதாவது ஒருகுறை தென்படாதா என்று துருவிக்கொண்டுள்ள இந்த நேரத்தில் பட்டிதொட்டிகளில் எல்லாம் இந்த நிதிநிலை அறிக்கை பேசப்பட்டு வருகிறதென்றால், இந்த உதவித் தொகை ரூ.200 ஆக உயர்த்தப்பட்டது ஒரு காரணமாகும். இதை உயர்த்திக் கொடுத்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அனைவரின் சார்பாகவும் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமண நிதியுதவித் திட்டத்தில் மட்டும் 4 திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. 10 ஆம் வகுப்பு வரை படித்த பெண்களுக்கு ரூ.10,000 திருமண நிதியுதவித் திட்டம். இந்தத் திட்டத்தில் பயன் பெறுவதற்காகவே கிராமங்களில் பெற்றோர்கள் தங்கள் பெண் குழந்தைகளை 10 ஆம் வகுப்பு வரை படிக்க வைத்திருக்கிறார்கள். எனவே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எந்த நோக்கத்திற்காக இந்தத் திட்டத்தைத் தொடங்கினார்களோ அந்தக் குறிக்கோள் இன்று நிறைவேறி வருகிறது. இதற்காகப் பெண் குலத்தின் சார்பாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

சாதி வேறுபாட்டைப் போக்கும் வண்ணம் அஞ்சுகம் அம்மையார் கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம், விதவைகளுக்கு சமூகத்தில் பாதுகாப்பு கொடுப்பதற்காகவும், அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காகவும் டாக்டர் தர்மாம்பாள் நினைவு திருமண நிதியுதவித் திட்டம், ஈ.வெ.ரா. மணியம்மையார் விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டம், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம், இப்படிப் பல்வேறு திட்டங்களினால் திருமணத்தையும் முடித்து வைத்துவிட்டு, மகப்பேறு உதவித் திட்டத்தின் மூலம் கர்ப்பிணிப் பெண்களுக்கு 500 ரூபாய் நிதியுதவி, இரண்டும் பெண் குழந்தைகளாகப் பிறந்துவிட்டால், அதற்கு நிதியுதவி, இப்படிப் பல்வேறு நிலைகளில் பெண்களின் நலனைக் காப்பதில் தமிழகம் மட்டுமே முதன்மையாகச் செயல்படுகிறது என்றால் அது மிகையாகாது.

சமுதாயத்தில் பின்தங்கிய பெண்களுக்காகப் பல்வேறு திட்டங்களை அள்ளிக் கொடுத்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், மகளிர் திட்டங்கள் அனைத்தையும் ஒருங்கிணைந்து, வாழ்ந்து காட்டுவோம் என்று அடிமைப்படுத்தும் ஆண் வர்க்கத்திற்குச் சவால்விட்டு, பெண்கள் தங்கள் சொந்தக்காலில் நின்று செயல்படுவதற்கு உறுதியாகத் திட்டங்களை ஒருங்கிணைத்து, நம்பிக்கையைப் பெண்களின்



மனதில் விதைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமூக நலத் துறையின் மூலம் தையல் இயந்திரங்கள், ஆதரவற்ற ஏழைப் பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் தையல் இயந்திரம் பெறுவதற்குக் குடும்ப வருமான வரம்பு ரூபாய் 7,000 என உள்ளது. இதில் பல பெண்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இந்த வருமான வரம்பை ரூபாய் 7,000-லிருந்து ரூ.10000 ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே பால்வாடியில் பணிபுரியும் பெண்கள்; பால சேவிகாக்கள், யாருடைய கட்டுப்பாட்டிலும் இல்லாத ஒரு சூழ்நிலையில் பணிபுரிகின்றார்கள். இவர்களையும் சத்துணவு அமைப்பாளர்களைப் போல ஊராட்சி ஒன்றியங்களில் ஒப்படைத்தால், கட்டுப்பாட்டோடு பணிபுரிய ஏதுவாக இருக்கும். எனவே, இந்தப் பாலர் பள்ளிகளை ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் ஒப்படைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு பாலர் பள்ளியிலும் சத்துணவு உருண்டை மாவு வழங்கப்பட்டு வருகின்றது. அதற்காக ஒரு ஆசிரியையும் நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்த ஆசிரியர் பணியிடங்கள் பலயிடங்களில் காலியாக உள்ளன. எனவே, அந்தப் பணியிடங்களை நிரப்ப மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர் உதவித் தொகையை 200 ரூபாய் என உயர்த்தி, கடைசி காலத்தில் முதியோர்களின் தேவையை நிறைவேற்றிய நம்முடைய முதல்வர் அவர்கள், ஆண் மகன் ஒருவன் இருந்தால், இந்தத் தொகை வழங்க அனுமதியில்லை என்ற ஒரு சட்டம் இருக்கிறது. இப்போது கிராமப்புறங்களில் மகன் இருந்தாலும்கூட பல முதியோர்கள் சாப்பாட்டிற்கே வழியில்லாமல் மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். எனவே அவர்களின் கண்ணீரைத் துடைக்கும் வகையில் மகன் இருந்தாலும், இந்த உதவித்தொகையைப் பெறலாம் என்று ஆணை பிறப்பிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சமூக நலத் துறையில் பணிபுரியும் ஊர் நல அலுவலர்கள் மாவட்டம் விட்டு மாவட்டம் சென்று பணிபுரியும் நிலை உள்ளது. இவர்கள் பெண்களாக இருப்பதாலும், பெரும்பான்மையானவர்கள்

திருமணமாகாதவர்களாக இருப்பதாலும், பல்வேறு சங்கடங்களுக்கு ஆளாகிறார்கள். ஆகவே, இந்த ஊர் நல அலுவலர்கள் அவரவர்கள் சொந்த மாவட்டத்திற்குள்ளேயே பணிபுரிகின்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

பணிபுரியும் மகளிருக்குத் தனி விடுதிகள் பல்வேறு இடங்களில் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும்கூட, எல்லா நகரங்களிலும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற நிதியை ரூ.60 லட்சமாக உயர்த்திக் கொடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்த வேளையில், இந்த நிதியை ரூ.1 கோடி அளவிற்கு உயர்த்தித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

9-3-2000 அன்று நடைபெற்ற உலக மகளிர் தின விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துக் கூறியதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் காஞ்சனா கமலநாதன் இங்கே எடுத்துக் கூறினார்கள். அண்ணல் காந்தி, பாரதியார், பாரதிதாசன், பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் சொன்னதை, எழுதியதை எல்லாம் இப்போது சமத்துவபுரம், வாழ்ந்துகாட்டுவோம் என்ற வகையில் செயலாற்றி வருபவர்தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்பதை எடுத்துக் கூறி, நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி. இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே பெண்களுக்கான முன்னேற்றத்திற்குரிய முயற்சிகள் எடுக்கப்படுவது குறித்து விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதேநேரத்தில் காலத்தின் அருமை கருதி, நான் சுருக்கமாகப் பேச விரும்புகிறேன். பெண்களுடைய முன்னேற்றத்திற்கான முயற்சிகளை எடுக்கிற இந்த அரசு இந்தச் சத்துணவுத் திட்டத்தின் மூலமாகப் பணியாற்றுகிற, கிட்டத்தட்ட 72,000 பேர்களுக்கு மேற்பட்ட பெண்களுக்காக, அவர்களுடைய பணியை



நிரந்தரம் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படாதது மிகுந்த வருத்தத்திற்குரிய ஒன்றாக இருக்கிறது. குறிப்பாக அவர்கள் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு அரசு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துணவுத் திட்டம், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் ஆகிய அமைப்புகளின் மூலமாக கிட்டத்தட்ட 1½ இலட்சம் பேர் பணியாற்றுகிறார்கள். அதிலே 72,000 பேர்கள் பெண்களாகவே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்று சொல்கிற இந்த அரசு அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்குவதற்கான முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளவில்லை.

**(மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி) தலைமை)**

1989 ஆம் ஆண்டில் நம்முடைய முதலமைச்சர், மாண்புமிகு கலைஞர் அவர்கள் ஒரு கூட்டத்திலே பேசுகிறபோது அவர்களுக்கான திட்டத்தினை அறிவித்தார்கள். அவர்களைப் பகுதிநேர நிரந்தரப் பணியாளர்கள் என்ற அறிவிப்பின் மூலமாக, அந்தத் திட்டத்தின் மூலமாக அறிவிப்புச் செய்தார்கள். ஆனால் அது பாதி ஆற்றிலே கொண்டுபோய் விட்ட கதையாக இருக்கிறது என்று சொல்லப்பட்டது. திரும்பப் பேசுகின்றபோது 1998 ஆம் ஆண்டிலே முதல்வர் அவர்கள் பங்குகொண்ட அந்தக் கூட்டத்திலே பேசுகிறபோது பேசியவர்கள் அதைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள், "பாதி ஆற்றிலே கொண்டுபோய் விட்டுவிட்டீர்களே" என்று. முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது நாங்கள் பாதி ஆற்றிலே விட்டுவிடவில்லை. காரணம் நீங்கள் பாதி ஆற்று வரையிலும் படகிலே வந்திருக்கிறீர்கள். ஆகவே முழுமையாக நான் கரை சேர்ப்பேன் என்று அந்தக் கூட்டத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். அந்த உறுதியின்படி இந்தக் கூட்டத் தொடரிலேயே இந்த நிகழ்ச்சியின் மூலமாக அவர்களை நிரந்தரப் பணியாளர்களாகச் செய்வதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அரசுப் பணியாளர்கள் என்று சொல்கிறபோது அவர்களுக்குக் காலவரையறை நிர்ணயிக்கப்படுகிறது. 8 மணி நேரப் பணி என்று சொல்லப்படுகின்றது. அதேபோல் இந்தப் பகுதிநேரப் பணியாளர்களும் எட்டு மணிநேரம் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களும் அதிகமான நேரம் பணிகள் செய்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில் அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்குவதற்கு அரசு

ஏன் தயக்கம் காட்டுகிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இதுகுறித்து இந்த அரசால், கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை. ஆகவே இந்தப் பணியாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக மாற்றுவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அதற்குரிய முயற்சிகளை எடுத்து, இந்தப் பதிலுரையிலே அறிவிப்புகளைச் செய்வதற்குரிய முயற்சியை அமைச்சரவர்கள் மேற்கொள்ள வேண்டும். அதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உதவ வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக இந்தச் சத்துணவுத் திட்டத்திலே பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள், பல்வேறு சலுகைகளைக் கேட்டு போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இப்போதுகூட வருகின்ற 25 ஆம் தேதி சத்துணவுத் திட்டப் பணியாளர்கள் சங்கத்தின் சார்பிலே போராட்டம் நடைபெற இருக்கிறது. அவர்கள் முற்றுகைப் போராட்டம்கூட அறிவித்திருக்கிறார்கள். அதேபோல் சத்துணவு ஊழியர்கள் சங்கத்தின் சார்பிலே கறுப்புச் சேலை அணிகின்ற போராட்டம் அறிவித்து, தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். இந்தப் போராட்டங்கள் எல்லாம் கடந்த காலங்களிலே சொல்லப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப் படவில்லை என்பதை வலியுறுத்துவதற்காகவும், அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றச் செய்வதற்குரிய முயற்சிகளாகவும் நடைபெற இருக்கின்றன. ஆகவே இந்தப் போராட்டத்திலே ஈடுபடுகிற இந்தச் சங்கத்தைச் சேர்ந்த அமைப்பாளர்க்ளை எல்லாம் நம்முடைய அரசு அழைத்துப் பேசி, ஒரு நல்ல சுமூகமான தீர்வினைக் கண்டு, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் வலியுறுத்தி, சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் வருவாய்த் துறையில் பணியாற்றுகின்ற கிராம உதவியாளர்களுக்குக்கூட வீட்டு வாடகைப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது. நகர ஈட்டுறுதிப்படி வழங்கப்படுகிறது. ஆனால் இவர்களுக்கு எந்தப் படியும் வழங்கப்படவில்லை. ஆகவே அவற்றை வழங்கச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதேபோல அவர்களுக்குப் பணிக்கொடையோ ஓய்வூதியமோ வழங்குகின்ற திட்டங்களே இல்லை. அவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்றால் அந்த மாதச் சம்பளத்தை மட்டும் கையிலே வாங்கிக் கொண்டு வெறுங்கையோடு





செல்ல வேண்டிய ஒரு அவல நிலை இருக்கிறது. ஆகவே 18 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிற இந்தச் சத்துணவுப் பணியாளர்கள் அத்துனைப்பேர்களுக்கும் நிரந்தரப் பணி கொடுக்கப்படுவதோடு இந்த மாதிரியான சலுகைகளையும் வழங்கச் செய்வதற்கான முயற்சிகளை எடுத்து நம்முடைய அரசாங்கம் அறிவிக்க வேண்டும். அதற்குரிய முயற்சிகளை எடுக்க அமைச்சரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அறிவிப்பு செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

அதேபோல, ஊனமுற்றவர்களுக்கு bus pass வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளாகவே அவர்கள் அதைப் பயன்படுத்தச் செய்வதற்கான முயற்சிகள் இருக்கின்றன. அவர்கள் மாநிலம் முழுவதும் சென்று வருவதற்கான வகையிலே அந்த bus pass ஐ நீட்டிப்புச் செய்து தரவேண்டுமென்று கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். அதையும் பரிவுடன் பரிசீலிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பெண் சிசு கொலையைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இப்போதுகூட சமீபத்திலே, தருமபுரி மாவட்டத்திலே பெண் சிசு கொலை நடந்து, பத்திரிகைச் செய்திகூட வந்திருக்கிறது. இது வெகுவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும் அதற்குரிய காரணங்கள் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்பதுதான் பத்திரிகையின் மூலமாகத் தெளிவாகத் தெரிகிறது. இதைத் தடுப்பதற்கான திட்டங்கள் இருப்பதை முறைப்படுத்தி வேகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதேபோல, குடும்பக் கட்டுப்பாடு திட்டம் பற்றி இதிலே குறிப்பிட்டு சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் ஆண்களைக் கட்டுப்படுத்துவதாக இல்லை. நான் சென்ற வருடம்கூட பேசுகிறபோது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இதற்குப் பதில் அளித்தார்கள். இந்தக் குடும்பக் கட்டுப்பாடு என்று சொன்னாலே அது பெண்களுக்கு மட்டுமே பொருந்தக்கூடிய ஒன்றாகக் கருதப்படுகிறது. ஆண்கள் அதைச் செய்துகொள்வதற்கு மறுக்கிறார்கள் என்று வெகுவாகக் குற்றச்சாட்டு இருக்கிறது. இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் ஈடுபடச் செய்வதற்குரிய முயற்சிகள் எடுக்கிறபோது, இது பெண்களுக்கு

மட்டுமேயான திட்டமாக இருப்பதை மாற்றி இதை ஆண்களுக்குரிய திட்டமாகவும் கொண்டு வருவதற்கான முயற்சிகளை கொஞ்சம் கடுமைப்படுத்த வேண்டிய அவசியம் இருப்பதாக நான் கருதுகிறேன். இதிலே நம்முடைய அரசாங்கம் பல சட்டதிட்டங்களைப் போடுகிறது. முன்னாலே 3 குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அனுமதித்தது. பின்னாலே நாம் இருவர், நமக்கிருவர் என்று சொல்லப்பட்டது. அதற்குப் பின்னாலே ஒரு குழந்தை போதுமே என்ற நிலை இருக்கிறது. இப்போது வருகின்ற நிலையைப் பார்த்தால் கணவனும், மனைவியுமே குழந்தைகளாகி நாமே குழந்தை, நமக்கு ஏன் குழந்தை என்ற கேள்விகூட வருகிறது. இதுகூட பின்னாலே சந்ததியினுடைய இனப் பெருக்கத்தைத் தடை செய்வதாக இருக்கிறது என்ற சிந்தனை இருக்கிறது என்று சொன்னாலும்கூட இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டைத் தீவிரப்படுத்துவதற்குரிய முயற்சியாக மேற்கொள்ளப்பட்டாலும் ஆண்கள் இதிலே அக்கறை இல்லாமல் நடந்துகொள்கிறார்கள் என்ற உண்மை இருக்கிறது. அதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டிய அவசியமும் இருக்கிறது. இதற்குரிய திட்டத்தை நம்முடைய சமூக நலத் துறையின் மூலமாகத் தீவிரப்படுத்தச் செய்வதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இவர்களுக்குக் கொடுக்கப்படுகிற அந்த ஊதிய உயர்வுகளை எல்லாம் கருத்திலே கொண்டு அவற்றை உயர்த்திக் கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல, சத்துணவுப் பணியாளர்களாக பணியாற்றிக் கொண்டிருக்கிற உதவியாளர்களுக்கு வருடம் முழுமையும் என்றைக்கும் பணிதான். அவர்களுக்கு விடுமுறை என்பது கிடையாது. அவர்கள் 365 நாட்களும் பணியாற்றக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதைப் பற்றிப் பரிசீலிக்க வேண்டும்.

கோடைக்காலத்திலே விடப்பெறுகிற விடுமுறைகளைக்கூட அவர்கள் பயன்படுத்துவதற்குரிய வாய்ப்புகள் இல்லாமல் இருக்கிறது. அவற்றையும் பயன்படுத்தச் செய்வதற்குரிய முயற்சிகளை இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

அதேபோல, சத்துணவிற்கு வழங்கப்படுகிற அரிசி, பருப்பு, எண்ணெய் இவை பல நேரங்களிலே தரமற்றவையாக இருக்கின்றன என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. பல இடங்களிலே, பல கிராமங்களிலே



அப்படிப்பட்ட செய்திகள் வருகின்றன. இதை இலவசமாகக் குழந்தைகளுக்குப் போடுகிறோமே என்ற காரணத்தினாலே துர்நாற்றமடிக்கக்கூடிய அரிசி, அதேபோல பருப்பு வகைகள், அதேபோல எண்ணெய் வகைகள் வழங்கப்படுகின்றன என்ற பிரச்சினை இருக்கிறது. ஆகவே இதைத் தரமான உணவு பொருட்களாக வழங்கச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். காலத்திலே வழங்கப்பட வேண்டும், தேவையான அளவு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் இருக்கிறது. இதையும் நம்முடைய அரசாங்கம் பரிசீலித்து அவற்றை வழங்கச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். நான் திரும்பவும் வலியுறுத்திச் சொல்வது இந்தச் சத்துணவுத் துறையிலே பணியாற்றக்கூடிய அந்த ஊழியர்களை எல்லாம் நிரந்தரம் செய்து அவர்களுக்கு அரசு சார்பிலே பணியிலே இருக்கக்கூடிய அரசுப் பணியாளர்களுக்கு வழங்கக்கூடிய அத்தனை சலுகைகளையும் வழங்கச் செய்வதற்கான நல்ல அறிவிப்பை இந்த அறிக்கையின் மூலமாக வழங்க வேண்டுமென்று நான் வலியுறுத்தி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பல திட்டங்களை சமூக நலத் துறை வழியாக அமல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக weaker section என்ற முறையிலே—அது Weaker ஆ இல்லையா என்பதைப் பற்றிக்கூட இப்போது விவாதம் இருக்கிறது—பெண்களைப் பொறுத்த அளவிலே அவர்களுடைய வளர்ச்சிக்காக பல திட்டங்கள் இப்போது அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது அரசு. ஆனால் நான் இந்த நேரத்திலே ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழகத்திலே அதிகமாகப் பெண்கள் வேலை செய்கிற அரங்கம் என்பது விவசாயத் துறை. ஆனால் விவசாயத் துறையிலே அவர்களுக்கு அதற்குத் தகுந்த அளவிலே உள்ள பலன் கிடைக்கிறதா என்பதைப் பற்றி நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

விவசாயத் தொழிலாளியாக இருக்கக்கூடியவர்களுக்குக்கூட சம வேலைக்கு சம ஊதியம் என்ற சித்தாந்தத்தினை நாம் ஏற்றுக்

கொண்டிருந்தாலும் பெண்களுக்கு வேலையினுடைய அடிப்படையிலே ஊதியம் என்ற முறையை ஏற்படுத்தியும், அவர்களுக்குப் போதுமான ஊதியம் கிடைக்காத நிலை இப்போது இருக்கின்றது. அதேபோல அரசினுடைய பல திட்டங்களைப் பொறுத்த அளவிலே, பெண்களினுடைய ஒருமித்த வளர்ச்சி, அவர்களுடைய திறன் போன்றவற்றைப் பொறுத்த அளவிலே சரியான முறையிலே தொடர்பு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதா என்பதை நாம் பரிசீலிக்க வேண்டும். அந்த முறையிலே இந்தத் திட்டங்கள் இல்லை என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். ஆகவே, இந்த அரசாங்கத்தினுடைய திட்டங்களைப் பொறுத்த அளவிலே பெண்கள் மேலும் அதிகமான பயன் அடையக்கூடிய அளவிற்கான திட்டங்களைப் பற்றி இப்போது பரிசீலிக்க வேண்டும். ஒரு ஆழமான பரிசீலனை, ஒரு சரியான பரிசீலனையை அரசு செய்ய வேண்டும்.

பிற்பகல் 12-30

திருமண உதவித் திட்டத்திற்கு அதிகமான பணத்தைக் கொடுப்பதன் காரணமாக மற்ற உதவிகளுக்குத் தேவையான பணம் கொடுக்கப்படுகின்றதா என்பது இப்போது பரிசீலிக்கப்பட வேண்டிய விஷயம் ஆகும். இப்போது சமூக நலத் துறையைப் பொறுத்த அளவிலே ஒதுக்கப்படுகிற பணத்திலே எல்லா பிரிவுகளுக்கும் அதனுடைய விகிதம் சரியான முறையிலே கிடைக்கக்கூடிய முறையிலே அது செய்யப்பட வேண்டும். உதவிகளைப் பொறுத்த அளவிலே, நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், தேவைக்கு ஏற்ற முறையிலே உதவிகள் அனைவருக்கும் கிடைப்பதில்லை. உதாரணமாக pension திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த category-யிலே வருகிற எல்லோருக்கும் pension கிடைக்கிறதா என்று பார்த்தால் கிடைப்பதில்லை. ஏதோ சிலருக்கு மட்டும் கிடைக்கிறதே தவிர, பாதிக்கப்பட்டவர்களுக்கு, அதே முறையிலே கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். உரிமையுள்ள பலருக்கு விட்டுப்போகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. அதையும் மாற்ற வேண்டும்.

அதேபோல, வரவு-செலவுத் திட்டத்திலே சமூக நல வளர்ச்சிக்காக வேண்டி ஒதுக்கப்படுகிற பணம், எந்த அணுகுமுறையிலே, எதற்காக வேண்டி இது ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அந்த அணுகுமுறையிலே, அந்தப் பலன் அனுபவிக்க வேண்டியவர்களுக்குப் போய்ச் சேருகிறதா



என்பதைப் பொறுத்த அளவிலே, அரசு ஒரு சரியான பரிசீலனையை நடத்தி அதிலே உள்ள குறைபாடுகளை மாற்ற வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நான் ஒன்றை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், சுய உதவிக் குழுக்கள் என்ற முறையிலே இருக்கிற பல குழுக்கள், இப்போது agency களாக மாற்றப்பட்டிருக்கின்றன. ஆனால் அது எங்கே கொண்டுபோய் விஷயங்களை விட்டுவிடும் என்பதைப் பார்த்தால், மேலும் மேலும் உலக வங்கியின் வகைக்கே அவர்களைக் கொண்டு சென்றுவிடும் என்ற ஒரு ஐயப்பாடு இப்போது ஏற்பட்டிருக்கிறது. பல ஆராய்ச்சி மன்றங்கள் அப்படிப்பட்ட கருத்தை இப்போது தெரிவித்திருக்கின்றன. ஆகவே, இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பெண்களைப் பொறுத்த அளவிலேயான நலத் திட்டங்களுக்காத் தமிழக வரவு-செலவுத் திட்டத்திலே ஒதுக்கப்படும் தொகைகள், அனைத்தும் பெண்களுக்கே, அதாவது போய்ச் சேர வேண்டியவர்களுக்கே சரியான முறையிலே போய்ச் சேருகின்றதா என்பதைப் பரிசீலிக்க வேண்டும்.

இன்னொன்று நான் சுட்டிக்காட்ட விரும்புவது, பல திட்டங்கள் இப்போது அறிவிக்கப்பட்டிருந்தாலும், நான் ஏற்கெனவே சொன்னதுபோல், எந்தத் திட்டமாக இருந்தாலும் அந்தத் திட்டத்தினுடைய முழுமையான பலன் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய முறையிலே விஷயங்கள் அமைய வேண்டும். உதாரணமாக, ஊனமுற்றவர்களுக்கு சில திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், மற்ற மாநிலங்களோடு ஒப்பிடக்கூடிய நேரத்திலே நம்முடைய நிலை பின்தங்கிய நிலை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்போது வேலையைப் பொறுத்த அளவிலே 5 சதவீதம் வேலை பல மாநிலங்களிலே ஒதுக்கப்படுகின்றது. ஆனால், நம்முடைய மாநிலத்தில் 3 சதவீதம்தான் ஒதுக்கப்படுகின்றது என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், ஊனமுற்றவர்களைப் பொறுத்த அளவிலே, இப்போது மிகவும் கஷ்டப்படக்கூடியவர்கள் என்ற முறையிலே பல இடங்களிலே அவர்களுக்கு வேலையே கிடைக்காத நிலை இருக்கிறது. ஆகவே, இந்த reservation என்பதைச் சரியான முறையிலே கடைபிடித்து அமலாக்குவதற்கு துறை தகுந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல bus pass-ஐப் பொறுத்த அளவிலே இப்போது ஒருசில restrictions பேரிலேதான் கொடுக்கப்படுகிறது. நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இந்த வரம்புகளையெல்லாம் மாற்றி யதார்த்தமாக, பாதிக்கப்பட்டிருக்கின்ற ஊனமுற்றவர்கள் பேருந்துகளிலே பயணம் செய்வதற்கு, இப்போது பஞ்சாப் மாநிலத்திலே ஏற்படுத்தி இருப்பதைப்போல அட்டையை ஏற்படுத்தி, அதற்கான வசதிகளை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது 100 ரூபாய் நிவாரணமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள விலைவாசியில் அது காணுமா என்று பரிசீலிக்க வேண்டும். 500 ரூபாயாவது யதார்த்தமாக வேலை செய்ய முடியாத, பாதிக்கப்பட்டிருக்கிற ஊனமுற்றவர்களுக்குக் கொடுப்பதற்கான நிலையை ஏற்படுத்தவேண்டும். அதுதான் அவர்களுக்குச் செய்கிற நியாயம் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-35

அதேபோன்று, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் இந்த ஊனமுற்றவர்களைப் பொறுத்தவரையில், அவர்களைத் தங்கவைத்து அவர்களுக்குப் படிப்பு ஏற்படுத்திக்கொடுக்கக்கூடிய முறையில் விடுதி வசதியோடு கூடிய பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தவேண்டும். அதேபோன்று இப்போது District Industries Centres-ல் தொழில் தொடங்குகிறவர்களுக்கு ஏற்கெனவே இருந்த ரூ.10,000 என்ற கடனும், Subsidy யுமாகக் கொடுக்கப்படுகிற தொகையும் உயர்த்தப்பட்டிருக்கிறது. அதேபோன்று இவர்களுக்கும் 50 ஆயிரம் ரூபாய் அந்த முறையில் உதவித் தொகையாகக் கொடுக்கப்படவேண்டும்.

அதேபோன்று வீடு இல்லாதவர்களுக்கு வீடு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இன்னொரு மிக முக்கியமான விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது 15 இலட்சத்திற்கு அதிகமான ஆட்கள் மதிய உணவுத் திட்டத்திலேயும், ஊட்டச் சத்துத் துறையிலும் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த இரண்டு துறைகளையும் ஒருங்கிணைத்து,



*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அதை ஒரு தனித் துறையாக ஏற்படுத்தி, அவர்களுக்கு Pay scale, Provident fund, வீட்டு வாடகை, Pension போன்ற சலுகைகளை ஏற்படுத்தவேண்டும். ஏற்கெனவே அமைச்சர் அவர்களே, அவர்களுக்கு 50 ரூபாய் மருத்துவப்படி கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். ஆனால் அதை அமல்படுத்தவில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். அதற்கான ஏற்பாட்டையும் அவர்களுக்குச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு மிக முக்கியமான பிரச்சினையைச் சொல்ல விரும்புகிறேன். பெண்களுக்கு பல நலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் தமிழகத்தில் பெண் குழந்தைகள் கரு அழிப்பு இப்போதும் தொடர்ந்து நடந்து வருகிறது.

அதேபோன்று பாலியல் பலாத்காரம் என்பது தொடர்ந்து நடந்து வருகிறது. பெண்களைப் பொறுத்தவரையில் கடத்திச் செல்வது என்பது தொடர்ந்து நடந்து வருகிறது. இதை effective ஆகத் தடுத்து நிறுத்துவதற்கு நாம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறோம்? இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதாவது ஒரு பெண் ஆசிரியை, ஒரு I.A.S. அதிகாரியால் கற்பழிக்கப்பட்டார் என்ற குற்றச்சாட்டை அந்தப் பெண் ஆசிரியையே சொன்னதற்குப் பிறகும், காவல் துறை அதைச் சரியான முறையில் விசாரிக்கவேண்டிய முறையில் அந்த I.A.S. அதிகாரியை விசாரிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு வந்திருக்கிறது. அதேபோன்று பாதிக்கப்பட்ட அந்தப் பெண், மருத்துவமனைக்குப் போனால், Medico-Legal Case என்று சொல்லி, அவர்களுக்கு ஆஸ்பத்திரியில் அனுமதி கூட மறுத்து இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், மற்ற உள் விவகாரத்திற்குள் நான் போகவில்லை. பாதிக்கப்பட்ட ஒரு பெண், மருத்துவமனையில், நான் பாதிக்கப்பட்டு இருக்கிறேன், எனக்கு வைத்திய உதவி வேண்டுமென்று கேட்டால், அது கூட மருத்துவனையில் மறுக்கப்படுகிறது என்றால், என்ன பாதுகாப்பு ஒரு பெண்ணுக்கு இருக்கிறது? காவல்துறை அந்த I.A.S. அதிகாரியை விசாரிக்கவில்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், ஒரு பெண்ணுக்கு தமிழகத்தில் கிடைக்கிற பாதுகாப்பு இதுதானா? ஆகவே அப்படிப்பட்ட பாதுகாப்பு இப்போது பெண்களுக்குக் கிடைப்பதற்கான நடவடிக்கையை இந்த அரசு ஏற்படுத்தவேண்டும்.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2000 ஏப்ரல் 17

அதேபோன்று பெண்களைப் பொறுத்தவரையில், மாநில பெண்கள் Commission அமைக்கப்பட்டிருக்கிறது என்று கொள்கைக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால், ஒரு National Women's Commission என்ற Commission ஐத் தேசிய அளவில் உருவாக்கியிருக்கிறார்கள். அந்த Commission-க்கு இருக்கிற அதிகாரம் இந்த Commission-க்கு இருக்கிறதா என்றால் இல்லை. ஏனென்றால், இது ஒரு அரசு ஆணை மூலமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த நிலையை மாற்றி, அந்தத் தேசிய Commission-க்கு என்னென்ன அதிகாரங்களும் சட்டபூர்வமான அந்தஸ்தும் இருக்கிறதோ அந்த முறையிலே அந்தஸ்து உள்ள Commission-ஆக நாம் அதை உருவாக்கவேண்டும். அதுதான் பெண்களைப் பாதுகாக்க உதவிகரமாக இருக்கும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, 33 விழுக்காடு கடன் உதவி பெண்களுக்குக் கிடைக்கிற முறையில் நம்முடைய ஏற்பாடுகளை அமைக்க வேண்டும்.

அதேபோன்று இன்னொரு விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். Custodial rape என்பது இப்போது அதிகரித்து வருகிறது. பத்திரிகையில் பார்த்தால், அப்படிப்பட்ட ஆணாதிக்கத்தில், வேலைக்குச் செல்கிற பெண்களை, அவர்களை அடைத்து வைத்து, அவர்களை துன்பப்படுத்துகிற முறைகளில் உள்ள பல விவரங்கள் நமக்கு வந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக, திண்டுக்கல், கோயம்புத்தூர், விருதுநகர் போன்ற தொழில்கள் அதிகமாக நடக்கக்கூடிய இடங்களில் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. அதை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெண்களைப் பொறுத்தவரையில், இப்போது கேலி செய்யக்கூடிய முறையிலே உள்ள பல படங்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. அதேமாதிரி பல விஷயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இதை எப்படிக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்கு, கோலப்பன்Commission என்று ஒரு Commission நியமிக்கப்பட்டது. அந்த கோலப்பன் Commission-னுடைய அறிக்கையை வெளியிட வேண்டும். அதை முழுமையாக அமல் நடத்துவதற்கு தகுந்த நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.



2000 ஏப்ரல் 17]

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்தின்கீழ் பேசுவதற்கு வாய்ப்பளித்தத் தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சமூக நலத் திட்டங்களைப் பொறுத்தவரையில் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய நேரடிப் பார்வையில் மிகச் சிறப்பாக ஒவ்வொரு திட்டத்துக்கும் தனித்தனி பெயர்களைக் கொடுத்து, மிக அழகாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்போது திருமணம் என்று சொன்னால் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுடைய திட்டம்; கலப்புத் திருமணம் என்று சொன்னால் அஞ்சுகம் அம்மையார் அவர்களுடைய திட்டம்; விதவை மறுமணம் என்று சொன்னால் டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் அவர்களுடைய திட்டம்; விதவை மறுவாழ்வு என்று சொன்னால், ஈ.வெ.ரா. மணியம்மையார் அவர்களுடைய திட்டம். பெண்களுக்கு உதவித் திட்டம் என்று சொன்னால், அன்னை தெரசா அவர்களுடைய திட்டம்; குழந்தைகளுடைய பாதுகாப்புத் திட்டம் என்று சொன்னால், அதற்காக அன்னை சிவகாமி அம்மையார் அவர்களுடைய திட்டம்; மகப்பேறு திட்டங்கள் என்று சொன்னால், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களுடைய திட்டம்; அன்னை சத்யா அவர்களுடைய திட்டம்; இப்படி பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. இந்தப் பெயர்களை எல்லாம் யார் அளித்திருக்கிறார்கள் என்று சொன்னால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் ஒவ்வொரு திட்டத்திற்கும் தனித்தனியாகப் பெயர்களை, இன்னின்னார் பெயர்களை இப்படி இப்படி வைக்க வேண்டும் என்று சொல்லி முறையாக இப்போது அந்தத் திட்டங்களுக்கு எல்லாம் பெயர்களை அறிவித்திருக்கிறார்கள்.

திருமண உதவித் திட்டத்தின்கீழ், 50,000 பேர் இப்போது மறுவாழ்வு பெறுகிறார்கள்; அவர்களுக்கு உதவியாகக் கிடைக்கிறது. இதிலே பிரதிநிதித்துவம் இல்லை, இதிலே இன்னின்ன சாதி என்ற பிரிவினை இல்லை. எந்த சாதியாக இருந்தாலும் ஏழையெளியவர்களுக்குக் கிடைக்கிற ஒரு வாய்ப்பை, 50,000 பேர்களுக்கு, 10,000 ரூபாய் என்று சொல்லி 50 கோடி ரூபாயை இதற்கு ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்று சொன்னால் மிகச் சிறப்பான திட்டமாக இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கு முன்னாலே இருந்த ஆட்சிக் காலத்திலே இந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டனவா என்றால் இல்லை. சத்துணவுத் திட்டத்திலே உருண்டைகள் கொடுக்கிற திட்டத்தை

Estimates Committee யிலே உறுப்பினராக இருக்கிற நாங்கள் எல்லாம் பல இடங்களிலே சென்று பரிசோதித்துப் பார்த்தோம். அதிலே பார்க்கிறபோது, அந்த உருண்டைகளில் இருக்கிற அத்தனைப் பொருட்களையும் பகுப்பாய்வு செய்து எங்களுக்கு எல்லாம் இந்தச் சத்துணவுத் திட்டம் எப்படி இருக்கிறது என்று பகுத்துக் காட்டினார்கள். அதிலே எந்தவிதமான குறைபாடுகளும் இருப்பதாகவே எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் நம்முடைய எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் எதையாவது ஒரு tender system, contract இவற்றில் ஏதாவது தஸ்தாவேஜ்களை தயார் செய்துகொண்டு நல்ல திட்டங்களுக்கு ஏதாவது குறைகளைச் சொல்ல வேண்டும் என்று சொல்கிறார்கள். இந்த உருண்டைகளைத் தயார் செய்கின்ற இந்த மகளிர் மன்றங்கள் இப்போது சரியாக செயல்பட முடியாமல் திணறிக் கொண்டிருக்கின்றன. காரணம் இதற்கு முன்னாலே இருந்த ஆட்சிக் காலத்தில், அதிகமாக வீடுகளுக்கே கொண்டு போய்க் கொடுக்கிறோம். என்று சொல்லி, பொய்யாகக் கணக்கை எழுதி அந்தக் கணக்குப்படி பணத்தைப் பெற்றுக் கொண்டிருந்த நிலைமை இருந்தது. இப்போது சரியாக இருக்க வேண்டும் என்கிற நிலைமையின் காரணமாக, முறையாகச் செயல்பட வேண்டும் என்று சொன்னதன் காரணமாக, இப்போது குறைந்துவிட்டது; எங்களால் முழுமையாகச் செயல்பட முடியவில்லை என்று சொல்லி வருத்தப்படுகிற சூழ்நிலையை நாம் பார்க்கிறோம். மிகச் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்ற கருத்திலேதான் இந்தத் திட்டங்களை எல்லாம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினாலே [illegible]ன் மிகச் சிறப்பாக பணியாற்றுகிற, நல்ல திட்டங்களைக் கொண்டிருக்கிற காரணத்தாலே தான் இப்போது 6023 கோடி ரூபாய் இதற்கு ஒதுக்கித் தந்திருக்கிறார்கள்.

நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கிற காலத்திலேதான் மறுவாழ்வுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இப்போது, ஒவ்வொரு மாவட்டத்திலும் மறுவாழ்வு இல்லங்கள் இருக்கின்றன. இதற்கு முன்னாலே இருந்தவர்கள் அதைச் சரியாகச் செயல்படுத்தினார்களா என்றால் இல்லை. ஆனால் இப்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் மிகச் சிறப்பாக அந்த மறுவாழ்வு இல்லங்கள் நடைபெறுகின்றனவா என்று ஆய்வு செய்து, அதற்கென்று முறையான அறிக்கைகளை வைக்கிற அரசாங்கமாக நம்முடைய இந்த அரசு இருக்கிறது.

என்னுடைய தஞ்சை மாவட்டத்தில் கூட மணலூர் பேட்டையில் ஒரு மறுவாழ்வு இல்லம் இருக்கிறது. எங்களுடைய அமைச்சர்,



உள்ளாட்சித் துறை அமைச்சர், அவர்கள், கலைஞர் அவர்களுடைய பிறந்த நாள் விழாவிலே அந்த மறுவாழ்வு இல்லத்திலே இருக்கிறவர்களையெல்லாம் அங்கு போய்ப்பார்த்து அவர்களுக்குச் சிறந்த உணவை அளிக்கின்ற ஒரு முறையை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். ஒவ்வோர் ஆண்டும் கலைஞர் அவர்களுடைய பிறந்த நாள் விழாவிலே அந்த உணவு அளிக்கும் முறையைச் சீர்படுத்த வேண்டுமென்று சொல்லி, அதை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் எங்களுடைய அமைச்சர், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைச் சொல்வதற்குக் காரணம், ஒவ்வொரு மாவட்டத்திலும் இருப்பவர்கள் அந்த நடைமுறையைப் பின்பற்றினால் சிறப்பாக இருக்கும் என்பதற்காகத்தான்.

*பிற்பகல் 12-45*

திருமண உதவித் திட்டம் என்று வருகிறபோது, அந்த வயதுக்கான சான்று பெறுவதில், S.S.L.C. வரை படித்து இருக்க வேண்டுமென்ற நடைமுறையை நாம் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம். அது நல்ல நடைமுறைதான். அது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருக்கிறது. அதிலே அந்தத் திருமணத்திற்கு முன்னாலே அந்த விண்ணப்பத்தைத் தர வேண்டுமென்ற முறை இருப்பது சில ஏழை எளியவர்களுக்குப் புரியாமல் இருக்கிறது. அப்படிப் புரியாததால் திருமணம் செய்த பின்னாலே அந்த மனுவைக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு வருகிறபோது, அப்படிப்பட்டவர்கள் மறுபடியும் ஒரு பத்திரிகையை அடிக்கிற சூழ்நிலையை உருவாக்கிக் கொள்கிறார்கள். ஒரு தவறான காரியம் நடைபெற வேண்டிய சூழ்நிலையை உருவாக்கிக்கொள்கிறார்கள். ஆகையினாலே இந்தத் திருமண உதவித் திட்டத்திலே ஒரு சிறு மாற்றுக் கருத்து, ஏழை எளியவர்களுக்குப் புரியாமல் இருக்கிறபோது, மனுவை அதற்கு முன்னாலே கொடுக்கவேண்டுமென்ற சூழ்நிலையை மாற்றி, திருமணம் நடந்தாலே அவர்கள் ஏழை எளியவர்களாக இருந்தால், அவர்களுக்குக் கொடுக்கின்ற சூழ்நிலையை உருவாக்குகிற திட்டத்தை உருவாக்கித் தந்தால் மிகச் சிறப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதை நீங்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தையல் தொழில் செய்யும் மகளிருக்கு இந்த மேம்பாட்டுத் திட்டம் நல்ல அமைப்பாக இருக்கிறது. இந்தத் திட்டத்தில்

பெருவாரியானவர்களுக்குக் கொடுக்க முடியவில்லை. ஆகவே நிதி ஒதுக்கீடு செய்கிற போது, தையல் இயந்திரம் கொடுப்பதற்குண்டான நிதி ஒதுக்கீட்டைக் கூடுதலாக்க வேண்டுமென்று நான் கோருகிறேன்.

ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம் தமிழகத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான்கூட பல இடங்களில் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம் மிகச் சிறப்பாக நடைபெறும் முறையைப் பார்த்தேன். இந்த ஊனமுற்றவர்களில், கண் தெரியாதோர், காது கேளாதோர் பிள்ளைகளை, அந்தப் பள்ளிகளில் சேர்க்கிறபோது அதிலே ஒரு கணக்கு இவ்வளவுதான் என்ற நிலை இருக்கிறது. காது கேளாத பிள்ளைகளைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறபோது 10 பிள்ளைகளைத்தான் சேர்க்க முடியும் ஓர் ஆண்டிலே என்று சொன்னால், 15 பிள்ளைகள் வருகிறபோது, சிலரைச் சேர்க்க முடியாமல் போகிறது. எனவே, அத்தனை பேர்களையும் சேர்க்கிற சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும். காரணம், அந்தப் பிள்ளைகள் காது கேளாமல், செவிடர்களாக இருப்பதால் மறுபடியும் அவர்களை வீட்டிற்கு அழைத்துப் போய்ப் பாடங்களை சொல்லித் தருவது இயலாத காரியம். ஆகவே இந்தத் திட்டத்திலே அதிகபட்சமான முறையை ஏற்படுத்தி, எத்தனை பிள்ளைகள் வருகிறார்களோ, அத்தனை பிள்ளைகளையும் அதிலே celing இல்லாமல் சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுக்க நம்முடைய அரசு அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குழந்தைகளைத் தத்தெடுத்தல் திட்டம் மிகச் சிறப்பான திட்டம். பிள்ளை இல்லாதவர்கள் தத்தெடுத்துக்கொள்ளும் சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்திருக்கிறோம். இதற்காக ஒரு சட்டமே இருக்கிறது. இன்னின்ன வயதிலே இப்படிப்பட்ட முறைகளை, தத்தெடுப்பதில் பின்பற்ற வேண்டுமென்று சொல்லி இந்துச் சட்டமே இருக்கிறது. ஆனால் இதற்கு முன்னாலே இருந்தவர்கள் எத்தனை வயது ஆனாலும் தத்து எடுத்துக் கொண்டு, இவன் என்னுடைய தத்துப் பிள்ளை என்று சொன்ன காலங்கள் எல்லாம் போய்விட்டன. அந்த தத்துப் புத்திரன் நாட்டிலே இப்போது தானெல்லாம் ஓர் அரசியல்வாதி என்று கருதுகிற சூழ்நிலை உருவாகி வந்த காலங்கள் இல்லாமல் போய் இருக்கிறது. குழந்தை இல்லாதவர்கள் எப்படித் தத்து எடுத்துக்கொள்வது என்ற நல்ல நடைமுறையைப் பின்பற்றுகிற வகையிலே மிகச் சிறப்பான அம்சமாக தத்து எடுக்கும் திட்டத்தை நாம் உருவாக்கித் தந்திருக்கிறோம். ஆகவே தத்து எடுப்பு திட்டத்திலே, பிள்ளை இல்லாதவர்கள் — பெரிய அளவுக்கு வசதி, வாய்ப்புகள் இல்லாதவர்கள் பெற்றுள்ள அந்தப்



பிள்ளைகளை — இங்கே எப்படித் தத்து எடுப்பது என்ற நடைமுறை அந்தச் செயல்முறை சிறப்பாகச் செய்யப்பட்டிருக்கிறது.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் சொன்னதைப் போல, இப்போது பெண் பிள்ளைகள் இல்லாத வாழ்க்கைதான் நல்ல வாழ்க்கை என்ற சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட அந்த வாழ்க்கையிலே பெண் பிள்ளையைப் பெற்றுவிட்டால், பெரிய சிரமமாக இருக்கிறது. அந்தக் குழந்தைக்கு எப்படித் திருமணம் செய்து வைப்பது என்ற கஷ்டம் இருக்கிறது என்பதை உத்தேசித்து, இப்போது முதல் பெண் குழந்தை பிறந்தால் அதற்கு ரூ.3000/-ம், (மணியடிக்கப்பெற்றது) அதற்குப் பின்னாலே பிறக்கும் குழந்தைக்கு 1500 ரூபாயும் கொடுத்து, அந்தக் குழந்தைக்கு 20 வயது ஆகும்போது அது கிட்டத்தட்ட 29 ஆயிரம் ரூபாயும் 58 ஆயிரம் ரூபாயுமாகச் சேர்கிற சூழ்நிலையை உருவாக்கி, திருமணம் மற்றும் இதர காரியங்களைச் செய்து கொள்வதற்கு ஏற்ற வகையில் நல்ல திட்டத்தை உருவாக்கித் தந்து இருக்கிறார்கள். அந்த நல்ல திட்டத்தை நாமெல்லாம் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தத் திட்டங்களெல்லாம் இப்போது மிகச் சிறப்பாகச் செயல்படுகின்றனவா என்பதை நம்முடைய அரசு மிகச் சிறப்பாக கண்காணித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு முன்னாலே இருந்த சமூக நல வாரியம் சமூக நலத் திட்டங்கள், சமூக நல அமைப்புகள் எப்படி இருந்தன என்றால், எவ்வளவோ ஊழல்களை இந்த நாட்டிலே பரப்பிவிட்டு இருந்தன. அவர்கள் ஒதுக்கீடு செய்த தொகையைவிட இப்போது அதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிற இலாகா நம்முடைய சமூகநல இலாகா. 623 கோடி ரூபாய்களை ஒதுக்கிக் கொடுக்கிறோம். (மணியடிக்கப்பெற்றது) இதோ முடித்துவிடுகிறேன். அவ்வாறு ஒதுக்கிக் கொடுக்கிறபோது இந்த இலாகாவிலே தவறு வரக்கூடாது என்பதிலே மிகக் கவனமாக இருக்க வேண்டும் என்பதிலே நம்முடைய அமைச்சரவை, நம்முடைய அரசு மிகச் சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறது. ஏனென்று சொன்னால், மக்களுக்குப் பலன் உடனே கிடைக்கிற இலாகா இது. ஒரு continuation of திட்டம் இதில் இருக்கிறபோது, அந்தத் திட்டத்தைக் குலைக்கிற வகையிலே ஒரு ஒப்பந்தம் வருகிறபோது, அந்த ஒப்பந்தம் இடையிலே நின்றுவிடாமல் இருப்பதற்காக, அந்தத் திட்டங்கள் நின்றுவிடாமல் இருப்பதற்காகத்தான் உயர்நீதிமன்றமே அதற்கு ஒரு தீர்ப்பை அளித்திருக்கிறது என்று நம்முடைய அமைச்சரே சொன்னார். அதையெல்லாம் பார்க்க வேண்டுமே தவிர, tender tender என்று

சொல்லி, இந்த அரசு ஏதாவது தவறுகள் செய்து விட்டதாகச் சொல்ல வேண்டும் என்பதற்காக contract-ல், இன்னொரு contractor இதற்காக முயலுகிறவர்கள்-கொடுக்கிற தஸ்தாவேஜுகளை எடுத்து வைத்துக்கொண்டு, இன்னின்ன தஸ்தாவேஜுகள் என்று சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. குற்றம் சாட்ட வேண்டும் என்பதற்காகவே குற்றம் சொல்கிற ஒரு கருத்தாகத்தான் இதனை மக்கள் எண்ணுகிறார்கள். மக்கள் யாரும் இந்த அரசைத் தவறாக எண்ணவில்லை. ஏனென்று சொன்னால், குற்றச்சாட்டுச் சொல்ல வேண்டும் என்பதற்காக நீங்கள் ஏதோ காரணங்கள் சொல்கிறீர்கள். இது நடைமுறைக்கு ஒவ்வாத காரணம். மக்கள் ஏற்றுக்கொள்ளாத ஒன்று என்பதற்காகத்தான் இந்த contract களை நீங்கள் வேண்டுமென்றே ஒவ்வொன்றாக குறை சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். நல்ல திட்டங்களில் குறைகளை உங்களால் சொல்லமுடியவில்லை. ஆகவே, இந்த அரசு மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது. இந்தச் சமூக நலம் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது என்பதிலே எந்த ஐயப்பாடும் இல்லையென்று சொல்லி வரவேற்று விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-50*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மரியாதைக்குரிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று சமூக நலத் துறையில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக பேசக்கூடிய வாய்ப்புத் தந்தமைக்கு மகிழ்ச்சியோடு நன்றி தெரிவித்து, எனக்குத் தெரிந்த ஒரு சில கருத்துகளை இந்த மாமன்றத்தின்முன் வைக்க விரும்புகிறேன். குறிப்பாக, இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சரிடத்திலே நான் கேட்டுக்கொள்வதெல்லாம் — சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 13 ஆம் தேதியிலிருந்து விடுமுறை என்ற சூழ்நிலையில், கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகங்கள் எங்களுக்கெல்லாம் 12 ஆம் தேதி மாலை 6 மணிக்குக்கூடக் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்து — இனி எதிர்காலத்திலே எந்த மானியமாக இருந்தாலும், அந்தக் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகங்கள் இரண்டு நாட்களுக்கு முன்பாக-அதைப் படித்து, அந்த விவரங்கள் சட்டமன்றத்திலே பேசக்கூடிய அளவுக்கு-கிடைக்க இந்த அரசு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க



வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். காரணம் 12 ஆம் தேதி மாலை 6 மணிக்கு அலுவலகத்திற்கு வந்து கேட்ட நேரத்திலேகூட அச்சுக் கூடத்திலேயிருந்து இன்னும் வரவில்லை, இரண்டு மணிக்குத்தான் வரும் என்று கூறினார்கள். நான்கு நாட்கள் விடுமுறை விடக்கூடிய இந்தச் சூழ்நிலையில், இப்படிப்பட்ட கொள்கை மானியக் குறிப்புகளை விரைவாகக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதைத் தெரிவித்து, எனக்குத் தெரிந்த ஒருசில கருத்துகளை இந்த மன்றத்தின் முன்பாக வைக்க விரும்புகிறேன்.

குறிப்பாக, பெண்களுடைய மேம்பாட்டிற்காக, குழந்தைகளுடைய மேம்பாட்டிற்காக, ஊனமுற்றவர்களுடைய மேம்பாட்டிற்காக பல்வேறு நலத் திட்டங்களையெல்லாம் கொண்டு வந்து செயல்படுத்துகிறோம். ஏழை எளியவர்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடியவர்கள், தாழ்த்தப்பட்ட நிலையிலே இருக்கக்கூடியவர்கள் அத்தனை பேரையும் ஓரளவிற்கு பொருளாதார வளர்ச்சியிலே மேம்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே கோடிக்கணக்கான ரூபாயை அரசு செலவு செய்து, திட்டங்களைப்போட்டு முழுமையாக அவற்றின் பயன் பயனாளிகளுக்குச் சென்று அடைய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் செயல்படக்கூடிய இந்தச் சூழ்நிலையில், திருமண உதவித் திட்டமாக இருந்தாலும் சரி அல்லது முதியோர் ஓய்வூதியத் திட்டமாக இருந்தாலும் சரி, ஊனமுற்றவர்களுடைய திட்டமாக இருந்தாலும் சரி, கலப்புத் திருமணமாக இருந்தாலும் சரி, 10-வது படித்திருக்கக்கூடிய பெண்கள் திருமண உதவித் திட்டமாக இருந்தாலும் சரி, அந்தப் பயன் இன்று முழுமையாக, விரைவாக, சுலபமாக அவர்களுக்குக் கிடைப்பதில்லை என்பதை நான் வருத்தத்தோடு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, அவர்கள் ஒவ்வொருவரும் அந்த அலுவலகங்களுக்குச் சென்று நடந்து, நடந்து, இன்று வா, நாளை வா, அடுத்த வாரம் வா என்று கூறக்கூடிய காட்சிகளை நான் நேரிலே பார்க்கிறேன். பல்வேறு நிலைகளிலே எங்களைப் போன்றவர்கள் நேரடியாக அந்த அலுவலகங்களுக்குச் சென்று வாதாடுகின்றபோதுகூட அங்கே மறுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

குறிப்பாக, ஊழல் மலிவதற்குக் காரணமே இந்த வருமானச் சான்றிதழ்தான். அது அரசுக்கு முழுமையாகத் தெரியும். இந்த வருமானச்

[திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்] [2000 ஏப்ரல் 17

சான்றிதழைப் பெறுவதைப் பொறுத்தவரை, இங்கே இந்த மாமன்றத்தில் இருக்கக்கூடிய அனைத்து உறுப்பினர்களும் அறிவார்கள். தையல் இயந்திரங்களைப் பெறுவதற்கு வருமானச் சான்றிதழ் ரூ.12,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்றிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், அங்கே இருக்கக்கூடிய அலுவலர்களும், அதிகாரிகளும், அங்கே பயனாளிகளாக இருக்கக்கூடியவர்களும் கண்டிப்பாகத் தவறு செய்துதான் இந்தச் சான்றிதழ்களைப் பெறுகின்றார்கள்.

“இதற்கு பொறுப்பு மத்திய அரசு” என்று மாண்புமிகு அமைச்சர் தன்னுடைய பதிலுரையிலே கூறினாலும்கூட, எதிர்காலத்திலே வருமானச் சான்றிதழைக் குறைந்தபட்சம் ரூ. 25 ஆயிரம் என்று மாற்றினால்தான், கண்டிப்பாக எதிர்காலத்திலே ஓரளவுக்கேனும் இந்த ஊழலை ஒழிக்கமுடியும் என்பதை அன்போடு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

கடந்த ஆண்டிலே தையல் இயந்திரங்களே வரவில்லை என்று கூறிவிட்டார்கள். அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே கடந்த ஆண்டுகளிலே அதாவது 1998-99 மற்றும் 1999-2000 ஆக இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்து, எட்டாயிரம் இயந்திரங்கள் கொடுப்பதாகக் கூறியிருக்கின்றீர்கள். ஊனமுற்றவர்கள், அந்தத் தையல் பயிற்சி பெற்றவர்கள், அந்த ஏழை எளியவர்கள் எல்லாம் பலமுறை வராத சூழ்நிலையிலே இன்று நலத் திட்டங்களை யார் யாரெல்லாம் பெற வேண்டுமென்று நினைத்து விண்ணப்பம் கொடுக்கிறார்களோ அதைப் பெறுவதற்கேற்ற வகையிலே நிதி வரவில்லை அல்லது பொருள்கள் வரவில்லை என்றாலும்கூட அந்த விண்ணப்பம் சரியாக இருக்குமானால், அந்த விண்ணப்பதாரர்களுக்கு “இன்னின்ன தேதிதான் நிதிஉதவி கிடைக்கும்; ஆகவே அதுவரை அலுவலகத்திற்கு வந்து செல்லவேண்டிய அவசியம் இல்லை” என்பதைத் தெள்ளத்தெளிவாக அலுவலக அதிகாரிகள் அந்தப் பயனாளிகளுக்குத் தெரிவிக்கவேண்டும். காரணம், வாராவாரம் அந்த அலுவலகங்களுக்குச் சென்று, வீணாகச் செலவு செய்து “நாளை, மறுநாள்” என்று செல்லக்கூடிய அந்தக் காட்சியைப் பார்க்கக்கூடிய நிலையை எதிர்காலத்திலே மாற்றினால்தான் உண்மையான பயனாளிகள் பயனடைய முடியும். அரசு



2000 ஏப்ரல் 17] [திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்]

கோடிக்கணக்காக நிதி உதவி செய்தால் மாத்திரம் போதாது. அந்த நிதி உதவிகள் அனைத்தும் அந்த ஏழை எளியவர்களுக்கு, ஊனமுற்றவர்களுக்கு, விதவைப் பெண்களுக்கு, திருமணப் பெண்களுக்குச் சென்றடையக்கூடிய அளவிலே, கண்டிப்பாக நிர்வாகத்தைச் சீர்ப்படுத்தி ஒழுங்குபடுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, திருமணத்திற்கு 45 நாட்களுக்கு முன்பாகவே, விண்ணப்பிக்க வேண்டுமென்று கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறியிருக்கிறார்கள். தயவுசெய்து இதை மாற்ற வேண்டும். குறிப்பாக, ஏழை எளியவர்களுக்கு, கிராமப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கு இன்னும் விழிப்புணர்வு முழுமையாக வராத காரணத்தினாலே அவர்கள் தெரியாத சூழ்நிலையிலே இருக்கிறார்கள். ஆகவே அந்தத் திருமணத்தின்போதோ அல்லது திருமணத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பாகவோ அல்லது திருமணத்திற்கு ஒரு நான்கு நாட்களுக்குள்ளாகவோ, அந்தப் பத்திரிகையையும் விண்ணப்பத்தையும் கொடுத்தாலும் கூட அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலையை அரசு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

கொள்கை விளக்கக் குறிப்பிலே 43 ஆயிரம் பேருக்கு மேலாக இங்கே கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக பயனடைகிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. தையல் பயிற்சியிலே 78 கூட்டுறவுச் சங்கங்கள், அதேபோல உணவு உற்பத்தி செய்வதிலே 26 கூட்டுறவுச் சங்கங்கள், அதேபோல அச்சுக் கூடங்கள் அமைப்பதிலே 19 கூட்டுறவுச் சங்கங்கள், ஆக மொத்தமாக 43,321 பேர் பயனடைவதாகக் கூறியிருக்கின்றார்கள். இதைக் குறிப்பு அளவிலே கூறியிருந்தாலும்கூட, உண்மையாக கூட்டுறவுச் சங்கங்களே முழுமையாக இதைச் செயல்படுத்தவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். பல்வேறு நிலையிலே நான் சென்று பார்க்கக்கூடிய அந்தச் சூழ்நிலையில்—குறிப்பிலே 43,321 பேர் பயனடைகிறார்கள் என்று கூறினாலும்கூட—முழுமையாகப் பயனடையவில்லை. உங்களுடைய குறிப்பிலே வேண்டுமானால் அப்படி இருக்கலாமேயொழிய, கண்டிப்பாக அத்தனை மகளிர் பயனடையவில்லை என்பதை இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்] [2000 ஏப்ரல் 17

அதுமாத்திரமல்ல. சவரத் தொழிலாளர்களுக்கு உதவுவது, சலவைப் பெட்டிகள் கொடுப்பது போன்ற உதவிகள் வழங்குவதற்கு பல்வேறு நிலைகளிலே முழுமையாக விண்ணப்பம் கொடுத்திருக்கின்றபோதுகூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதையும் இந்த நேரத்திலே வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, இன்று நாட்டிலே பெண்களுக்கு நூற்றுக்கு 33 விழுக்காடு நாடாளுமன்றத்திலே கொடுக்க வேண்டும்; சம உரிமை கொடுக்கவேண்டும் என்றெல்லாம் பல்வேறு கோரிக்கைகள் வைத்திருப்பதிலே ஆண்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் கிடையாது. முழுமையாகப் பெண்கள் தங்களுடைய தயார் நிலையை, தங்களுடைய திறனை வளர்த்து எங்களுக்குப் போட்டியாக எங்களைவிட அதிகமாக வரவேண்டுமென்று விரும்பக்கூடியவர்கள்தான் ஆண்கள். அப்படிப்பட்ட நிலையிலே தங்களுடைய தகுதியை, தங்களுடைய தரத்தை பெண்கள் உயர்த்திக்கொள்ளவேண்டுமேயொழிய, ஆண்களைக் குறை கூற வேண்டிய அவசியம் இல்லை என்பதையும் இந்த நேரத்திலே அன்போடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இப்போது எட்டு இடங்களில்தான் பெண்களுக்கான விடுதிகள் வைத்திருக்கிறீர்கள். மாவட்டத் தலைநகர்கள் அனைத்திலுமே பெண்கள் வேலை செய்கிறார்கள், ஆகவே அனைத்துப் பகுதிகளிலுமே கண்டிப்பாகப் பெண்களுக்கு விடுதி ஏற்படுத்த வேண்டும். பெண்கள் பாதுகாப்பாக இருக்கக்கூடிய அளவிலே மாவட்டத் தலைநகரங்களிலாவது கண்டிப்பாகப் பெண்கள் விடுதிகளை ஏற்படுத்தினால்தான், அவர்கள் அங்கே தங்கி சிறப்பான முறையிலே பணியாற்றக்கூடிய அளவிற்கு இருக்கும். எட்டே எட்டு இடத்தில்தான் நீங்கள் அமைத்திருப்பதாக இப்போது கூறியிருக்கிறீர்கள். ஆகவே, நீங்கள் உங்களுடைய பதிலுரையிலே கண்டிப்பாக மாவட்டத் தலைநகரங்களிலே — ஈரோடு போன்ற மாவட்டத் தலைநகரங்களிலே — பெண்கள் விடுதி ஏற்படுத்துவோம் என்று அறிவிக்க வேணடும். அப்படி ஏற்படுத்தினால்தான் கண்டிப்பாக, அவசியமாக, பாதுகாப்பாக அந்தப் பெண்கள் வேலை செய்வதற்கு ஏதுவாக இருக்கமுடியும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வரதட்சிணை ஆலோசனைக் குழு என்று ஒன்று இருக்கிறது. குறிப்பாக இப்போது பல்வேறு நிலையிலே வரதட்சிணையைத் தடுக்க நல்ல சட்ட திட்டங்கள் இருந்தாலும் சில நேரங்களிலே அவற்றைத்



2000 ஏப்ரல் 17] [திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்]

தவறாகப் பயன்படுத்தி விடுகிறார்கள். அவரவர்களுக்குள்ளாக இருக்கக்கூடிய பிரச்சினைகளின் காரணமாக, சூழ்நிலைகளின் காரணமாக, தவறாகக்கூட இன்று புகார் கொடுக்கக்கூடிய சூழ்நிலையை நாம் பார்க்கிறோம். ஆகவே, எதிர்கரலத்திலே இந்த உயர்மட்ட வரதட்சிணைத் தடுப்பு ஆலோசனைக் குழு யார் யார் எல்லாம் தவறு செய்கிறார்களோ அவர்களைத் தண்டிக்கக்கூடிய அதே சூழ்நிலையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறு செய்யாமல், வேண்டுமென்றே புகார் கொடுக்கக்கூடிய நிலைமை இருந்தால் அவற்றை விசாரித்து அப்படிப்பட்ட புகார்களைப் பதிவு செய்யாமல் இருக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1989 ஆம் ஆண்டிலே இங்கே இருக்கக்கூடிய சத்துணவு அமைப்பாளர்களையும், சத்துணவுத் திட்டத்திலே பணியாற்றக்கூடிய அத்தனைபேரையும் எதிர்காலத்திலே கண்டிப்பாக பணி நிரந்தரம் செய்வதாக அறிவித்து இருந்தார்கள். சொல்லக்கூடியதை செயல்படுத்துவதாகவும், செயல்படுத்தக்கூடியதை சொல்வதாகவும் கூறும் இந்த அரசு 1989 ஆம் ஆண்டிலே சொன்னதற்கு ஏற்ப இந்தச் சத்துணவு அமைப்பாளர்கள், உதவியாளர்கள் அத்தனைபேர்களுடைய கோரிக்கையையும் பரிசீலித்து வருங்காலத்தில் அவர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-00

அது மாத்திரமல்ல, வேலூர் மாவட்டம் போன்ற பல்வேறு மாவட்டங்களிலே சத்துணவு அமைப்பாளர்கள், சத்துணவு உதவியாளர்கள் இல்லை என்ற புகார்கள் நிறைய வந்து இருக்கின்றன. ஆகவே, அவற்றை எல்லாம் பரிசீலித்து, எதிர்காலத்திலே கண்டிப்பாக அந்தப் பணி இடங்களை எல்லாம் நிரப்புவதற்கு ஏற்றவகையிலே பணியிடங்களைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

குறிப்பாக பெண்கள் கருத்தடை செய்துகொள்வது என்பது, ஒரே ஒரு பெண் குழந்தை இருந்தால், 3 ஆயிரம் ரூபாய்; இரண்டு பெண் குழந்தைகள் இருந்தால் ரூ.1500, ரூ.1500 என்று deposit செய்து, மறுபடியும் அதிலிருந்து வருகின்ற வருமானத்தின் மூலமாக அவர்களுக்குக் கொடுப்பதாகக் கூறி இருக்கின்றீர்கள். ஆனால், இதை அவர்கள்

சுலபமாகப் பெற முடிவதில்லை. அந்தக் கருத்தடை செய்துகொள்ளும் பெண்கள், தங்களுக்கு ஒரு பெண் குழந்தை இருந்தாலும் சரி அல்லது 2 பெண் குழந்தைகள் இருந்தாலும் சரி, இந்த நிதி உதவிக்கெல்லாம்கூட சிபாரிசுக்காக எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே வரக்கூடிய காட்சியை நான் பார்க்கின்றேன். அரசின் நலத் திட்டங்கள் முழுமையாகப் பயனாளிகளுக்குச் சென்று, அவர்கள் பயனடைய வேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் சொல்கிறேன். அரசினுடைய நிர்வாகத்தை முடுக்கி விடாமல் இருந்தால், கண்டிப்பாக அதை ஒழுங்காகச் செயல்படுத்த முடியாது. (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரமாகிவிட்டது; சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். அடுத்து இலவச வேஷ்டி சேலை வழங்குவதைப்பற்றி நான் குறிப்பிடுவதற்குக் காரணம், அரசாங்கம் அவற்றை ஏழை எளியவர்களுக்கு பொங்கல் நாளன்று, தீபாவளி நாளன்று கொடுக்க வேண்டுமென்று நினைக்கிறது. அதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் யாருக்கும் இருக்க முடியாது. ஆனால், அவற்றைக் கொடுக்கின்றபோது, இப்படி இப்படித்தான் கொடுக்க வேண்டுமென்ற நியதியை, சட்ட நியதியை கண்டிப்பாக அமலுக்குக் கொண்டுவர வேண்டும். எந்த நிலையும் இல்லாமல் 10 ஆயிரம், 15 ஆயிரம் வேஷ்டி சேலைகளை வட்டாட்சியரிடம் கொடுத்து கொடு என்று சொன்னால், அங்கே இருக்கிற அதிகாரிகள் அவற்றை யாருக்குக் கொடுப்பார்கள்? ஆகவே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு 2 வேஷ்டி சேலை கொடுப்பதா; அல்லது மற்ற ஏழை எளியவர்களுக்குக் கொடுப்பதா; அல்லது நிலம் உள்ள சிறு விவசாயிகளுக்குக் கொடுப்பதா என்பதையெல்லாம் தெளிவுபடுத்தி அனைவருக்கும் வேஷ்டி சேலைகளை ஒழுங்காக வழங்கி அரசு ஒரு நல்ல பெயரை எதிர்காலத்திலே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இப்போது வேஷ்டி சேலைகள் எல்லாம் கொடுக்கவில்லை என்று எங்கு பார்த்தாலும் தகராறு இருக்கிறது; பிரச்சினை இருக்கிறது. ஆகவே, எதிர்காலத்தில் நீங்கள் அவற்றைச் சரியாகக் கொடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லிவிடுகிறேன். இதைச் சொல்வதற்குக் காரணம், எங்கள் ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறை





சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பள்ளபாளையம் பேரூராட்சியிலே கணவனை இழந்த ஓர் அம்மையார் விண்ணப்பம் கொடுத்த பிறகு அவர்கள் 6 மாதங்களுக்கு மேலாக அலைந்தும்கூட, அந்தப் பயன் கிட்டாத காரணத்தாலே, கோபி ஊராட்சி ஒன்றிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் மரியாதைக்குரிய அண்ணாமலை அவர்கள் அந்தப் புகார் மனுவை என்னிடத்திலே கொண்டுவந்து கொடுத்து, அந்தப் பெண்ணையும் அழைத்துவந்து மாவட்ட ஆட்சியரிடத்திலே இதைப்பற்றித் தெரிவிக்க வேண்டுமென்று கோரிய நேரத்திலே, நானும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குச் சென்றபோது, அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வேறு வேலையிலே இருந்த காரணத்தாலே, மாவட்ட வருவாய் அதிகாரியிடம் சென்று — மனுநீதி நாளான திங்கட்கிழமையன்று சென்று — கூறியபோது, உடனடியாக இதைப் பரிசீலனை செய்து பணத்தைக் கொடுக்க வேண்டும்; தாமதம் செய்யக் கூடாது என்று அவர் அதிகாரிகளுக்கு உத்தரவு கொடுத்த பின்னரும், 4 மாதங்கள் ஆகியும் அவர்கள் பணத்தைக் கொடுக்கவில்லை. அந்தப் பெண் மீண்டும் அந்த அதிகாரியிடம் சென்று பார்த்துக் கேட்டபோது, இன்னும் ஒரு வருடத்திற்கு மேலாகும் என்று சொல்லி இருக்கிறார். ஆகவே, இப்படிப்பட்ட குறைகள் எல்லாம் எதிர்காலத்திலே வராமல், நலத் திட்டங்களுக்கு, கோடிக்கணக்கான ரூபாய் மக்களுக்காகச் செலவு செய்வதாகக் கூறிக்கொள்ளும் இந்த அரசு அந்தப் பயன், நிதியாதாரம் முழுமையாக ஏழை எளியவர்களுக்கு, ஊனமுற்றவர்களுக்குச் சென்றடையுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண் 29-ன்கீழ் 2000-2001 ஆம் ஆண்டுக்கு ரூ.623,51,47,000/- நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகின்றேன். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறைக்கு ரூ.64,93,89,000 நிதி கூடுதலாக ஒதுக்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உலக மகளிர் நாள் விழாவில் உரையாற்றியபொழுது, "இங்கு பேசியவர்கள் எல்லாம் ஆண்கள் பெண்களை அடிமைப்படுத்துகிறார்கள் என்று சொல்லி, மேடையிலே

இருந்த எங்களை எல்லாம் கொஞ்சம் நெளிய வைத்தார்கள். நானே சொல்கிறேன், 'என்னை வளர்த்து ஆளாக்கிய தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் எல்லாம்கூட, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் உள்ளிட்ட இந்த இயக்கத்தினர் அனைவருமே பெண்களின் விடுதலைக்காக, பெண்களினுடைய முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டவர்கள்தான் என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். மிகச் சுலபமாக 'ஆணும் பெண்ணும் சமம்தான்' என்பதை பாரதிதாசன் உணர்த்தியிருக்கிறார். 'ஏணை அசைத்தலும் கூடும், அது யார் அசைத்தாலும் ஆடும்' என்பது அவருடைய கவிதை வரி. குழந்தை தூங்கும் ஏணை அதாவது தொட்டிலை குழந்தை விழித்துக்கொள்ளும்போது பெண்கள் அசைத்தாலும் ஆடும்; பெண்கள் மாத்திரமல்ல, ஆண்கள் அதை அசைத்தாலும் ஆடும். ஆண் அசைக்கின்றான் என்பதற்காக ஏணை ஆடாமல் இருந்துவிடாது. அதனால் ஏணையை அசைப்பது பெண்களுக்குத்தான் உரியது என்று இருந்துவிடாமல் ஆண்களும் ஏணையை அசைக்க வேண்டும். குழந்தையைப் பராமரிக்க வேண்டும் என்ற அந்தப் பொருளில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடியிருக்கிறார்" என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் குழந்தைகள் பராமரிப்பில் தனக்குள்ள ஈடுபாட்டை வெளிப்படுத்தி மற்றவர்களுக்கும் அந்த ஈடுபாடு இருந்திட வேண்டுமென்று வலியுறுத்திப் பேசினார்கள். அந்த ஈடுபாட்டின் காரணமாகத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சத்துணவு மையங்களில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் இலவச உணவுக்குப் பயன்படும் விறகு, காய்கறி, உப்பு போன்றவற்றிற்கு வழங்கி வந்த 18 பைசாவை 23 பைசாவாக உயர்த்தி வழங்கி உத்தரவிட்டார்கள். இதற்காகும் கூடுதல் செலவு ரூ.14 கோடி வழங்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1-05

மேலும், சென்னையில் சிறார் தொலைபேசித் தொடர்புத் திட்டம் 30-4-1999 அன்று 1098 என்ற எண்ணுடன் அறிமுகப்பட்டது. இதுவரை மருத்துவ உதவி, தங்குவதற்கான உதவி, குழந்தைகளின் தவறான உபயோகத்திலிருந்து பாதுகாக்க உதவி, வழி தவறிய குழந்தைகள் பற்றிய தகவல் போன்ற 1,771 தொடர்புகள் இந்தியக் குழந்தைகள் நலச் சங்கத்தின் மூலமாகவும், 358 தொடர்புகள் டான்பாஸ்கோவின் அன்பு இல்லத்தின் சார்பாகவும் பெறப்பட்டு தக்க உதவிகள், அவர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தின் மூலமாக





குழந்தைகளுக்கு இழைக்கப்பட்ட வன்கொடுமைகள் பெரும்பாலும் தவிர்க்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பெண் சிசுவதையைத் தடுக்கும்பொருட்டு, சாதி, மத பாகுபாடின்றி, கைவிடப்பட்ட மற்றும் அநாதையாக்கப்பட்ட குழந்தைகளைத் தத்துக் கொடுக்க, தமிழகத்தில் 17 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன. இந்தத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக மே மாதம் 1996 ஆம் ஆண்டு முதல் மார்ச் மாதம் 2000 ஆண்டு வரை 1,202 ஆதரவற்ற குழந்தைகள் பெறப்பட்டு 319 ஆண் குழந்தைகளும், 407 பெண் குழந்தைகளும் உள்நாட்டிலே தத்துத் தரப்பட்டிருக்கின்றனர். 80 ஆண் குழந்தைகள், 142 பெண் குழந்தைகள் வெளிநாட்டிலே தத்துத் தரப்பட்டிருக்கின்றனர். மீதமுள்ள 254 குழந்தைகளும் மேற்கண்ட தொண்டு நிறுவனங்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள். மழலைப் பேறற்றவர்கள் இக்குழந்தைகளைத் தத்து எடுத்துக்கொள்ள முன்வரலாம்.

மலடி என்ற பெயரில் எந்தப் பெண்ணும் அழைக்கப்படும் நிலையைத் தவிர்ப்பது இந்தத் திட்டத்தினுடைய நோக்கமாக அமைந்திருக்கிறது. கொஞ்சிப் பேசி, தோளிலும், மடியிலும் போட்டு, தாலாட்டுப் பாடி, பேணி வளர்க்க விரும்பினால் குழந்தைகளைத் தத்தெடுக்க வேண்டும். மாறாக, பெரியவர்களைத் தத்தெடுத்துக்கொண்டு, இவன் எனக்குப் பிள்ளை இல்லை என்று சொல்வது கூடாது என்பதால் சட்டப்படி அங்கீகாரம் பெற்றிட, தத்து எடுப்பது தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன் கையேடுகள், சுவரொட்டிகள், Internet-ல் தகவல் தொடர்பு வளையம் ஆகியவற்றிற்காக சென்றாண்டு ரூ.5 இலட்சம் வரை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் முதன்முறையாக நவம்பர் 1999-ல் தத்து தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மேலும், அஞ்சல் துறையின் மூலம், தத்து எடுப்பதற்கான நிலைகளை அதிகப்படுத்துவதற்கான வாசகங்களை, அதாவது 'ஆதரவற்ற குழந்தைகள் நாட்டின் உடமை, அவர்களைத் தத்தெடுப்பது நமது கடமை' மற்றும் 'தத்தளிக்கும் குழந்தைகளைத் தத்தெடுப்போம், அவர்களின் தித்திக்கும் மழலையைச் செவிமடுப்போம்' என்ற வாசகங்களையும் அச்சிடுவதற்கு 20 இலட்சம் அஞ்சலக அட்டைகளை அச்சிட்டு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. தற்போது 19 மாவட்டங்களிலே தத்துக் கொடுப்பதற்கான தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சரியாக இல்லை. அந்த மாவட்டங்களிலே முன்வருகின்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்

தத்துக் கொடுக்கும் திட்டத்தினை நிறைவேற்ற, குழந்தைகளைப் பராமரிக்க முன்வந்தால் அரசு அந்நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கத் தயாராக இருக்கிறது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் திருப்பெயரில் நடைபெறும் சத்துணவுத் திட்டத்தில் 2 இலட்சத்து 3.5 ஆயிரம் சத்துணவுப் பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். இவர்களுக்கு இந்த ஆட்சியில் கடந்த 4 ஆண்டுகளில் அளிக்கப்பட்ட சலுகைகளை நான் இங்கே எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

17-4-1998 அன்று சட்டப்பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டதன் பேரில், ஏற்கெனவே அமைப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூ. 200-5-250-10-400 என்ற ஊதிய விகிதம் திருத்தியமைக்கப்பட்டு ரூ.600-10-700-20-1100 என்ற ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்பட்டது. இவர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு அளிப்பதைப் போன்று அகவிலைப்படி உயர்வும் வழங்கப்படுகிறது. தற்போது அமைப்பாளர்கள் ரூ.1150/- மாத ஊதியம் பெற்று வருகிறார்கள். அதேபோன்று சமையலர்கள், உதவியாளர்களுக்கு முறையே ரூ.450,400 என்ற மதிப்பூதியம் நிர்ணயம் செய்யப்பட்டு அகவிலைப்படி உயர்வும் தொகுப்பூதியத்தில் உயர்வும் அளிக்கப்படுகிறது. தற்போது சமையலர் ரூ.570-ம் உதவியாளர் ரூ.460-ம் பெற்று வருகிறார்கள். இதன்படி இவர்களுக்கு ஏறக்குறைய 40 முதல் 55 சதவீதம் வரை ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 1-10

சமையலர் மற்றும் உதவியாளர்களுக்கு ஓய்வு பெறும் வயதை 55-லிருந்து 58 ஆக உயர்த்தி ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. இதர அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக் கொடைத் திட்டம் சத்துணவுப் பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் சத்துணவுப் பணியாளர்களுக்குப் பொருந்தாது என்ற நிலையிலும் அவர்களுடைய கோரிக்கையை அரசு கனிவுடன் பரிசீலனை செய்து வருகிறது.

பணியிலிருக்கும்போது இறந்துவிடும் அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படும் கருணை அடிப்படையிலான பணி நியமனச் சலுகையும், பள்ளிச் சத்துணவு அமைப்பாளர்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்டு



வந்தது சமையலர் மற்றும் உதவியாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டு அவர்கள் பணிக் காலத்தில் இறந்தாலும் அவர்களது வாரிசுகளின் தகுதிக்கேற்ப சத்துணவு மையங்களில் கருணை அடிப்படையில் பணி நியமனம் அளிக்க அரசு ஆணையிட்டுள்ளது.

பள்ளிச் சத்துணவு மையங்களில் கோடை விடுமுறையின்போது அதாவது மே மாதம் இயங்காத போதும்கூட சத்துணவு மையப் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

பணியிலிருக்கும்போது இறக்கும் பள்ளிச் சத்துணவுப் பணியாளர்களின் குடும்பத்திற்கு குழுக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட குடும்ப நல நிதிச் சலுகை 2-12-1994 ஆம் ஆண்டு முதல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததை மீண்டும் செயல்படுத்த 17-11-1997 ஆம் ஆண்டு இந்த அரசு ஆணையிட்டது. அதன்படி பணியிலிருக்கும்போது இறக்கும் பணியாளர்களுக்குக் குடும்ப நல நிதியாக ரூபாய் ஒரு இலட்சம் வழங்கப்படுகிறது. இது சாபக்கேடான ஆட்சி அல்ல, சன்மானம் வழங்கும் சாதனைமிக்க ஆட்சி இது என்பதை சத்துணவுப் பணியாளர்கள் மகிழ்வுடன் தெரிவிக்கின்றனர்.

ஏற்கெனவே 1989-லே கழக ஆட்சியில்தான் பெண்களுக்கு சொத்துரிமை, 30 சதவீதம் வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்பட்டது. காவல் துறையிலும் பெண் காவலர்கள் நியமனம் அளிக்கப்பட்டது. 1996-க்குப் பிறகு தற்போது 33 சதவீதம் உள்ளாட்சி மன்றங்களில் பொறுப்புகள், பெண்கள் பெயரிலே இலவச வீட்டுமனைப்பட்டா, முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை பள்ளிகளிலே பெண்களே இடைநிலை ஆசிரியர்கள், போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும் பெண் காவலர்கள், பண்ணை மகளிர் பயிற்சி, உழவர் சந்தை மூலம் பெண்களுக்குக் குறைந்த விலையில் காய்கறிகள், பெண்கள் பெயரில் பெரியார் நினைவு சமத்துவபுர வீடுகள், பத்து வருடங்களுக்கு மேல் புறம்போக்கு இடங்களில் வசிக்கும் குடும்பத்தைச் சார்ந்த பெண்கள் பெயரில் இலவச மனைப்பட்டா, இந்தியாவிலேயே முதன்முறையாக சென்னை அருகே கேளம்பாக்கத்தில் பெண் தொழில் முனைவோர்களுக்கு என்று தனியாக உயிரியல் தொழில் நுட்பப் பூங்கா, மீனவப் பெண்களின் மீன் விற்பனைச் சிரமங்களை நீக்குவதற்கும், சுகாதாரமான முறையில் மீன் விற்பதற்கான வசதிகளை ஏற்படுத்து வதற்கும், தமிழகத்தில் முதற்கட்டமாக பத்து இடங்களில் மீனவ அங்காடி, கிராமப்புற பெண்கள் தாங்கள் தயாரித்த கைவினைப்

[திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்] [2000 ஏப்ரல் 17

பொருட்களை நகர்ப்புறங்களில் விற்பனை செய்து உரிய விலை பெறுவதற்காக நிலையான மையங்களை அமைத்துத் தர பூமாலை எனும் வணிகச் சின்னம் மற்றும் 28 மாவட்டங்களில் மகளிர் திட்டம் மூலம் சுய உதவிக் குழுக்கள் அமைத்தல். மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம், திருமண நிதியுதவித் திட்டங்கள் ஆகிய திட்டங்கள் இணைந்த வாழ்ந்து காட்டுவோம் என்ற திட்டம் ஆகியவற்றின் மூலம் பெண் நலம் பேணிப் பாதுகாத்து முன்னேற்றப் பாதையில் வீறுநடைபோடச் செய்த முதல்வர் அவர்களைத் தாய்க்குலம் வாயார, மனமார போற்றிப் பாராட்டுகிறது. இப்புதிய திட்டங்களின் மணத்தை நுகர்ந்திட வக்கற்றவர்கள்தான் இந்த பட்ஜெட்டை சாபக்கேடு என்றும் மலிவுப் பதிப்பு என்றும் பேசிக்கிடக்கிறார்கள்.

அவர்கள் ஆட்சி நடத்திய ஐந்தாண்டுகளிலே பயன்பெற்றவர்களைக் காட்டிலும், இந்த ஆட்சியில், நான்காண்டு காலத்தில், பயன்பெற்றவர்கள் அதிகம் என்பதால் இந்த ஆட்சியின் சாதனைகள் ஏழை மக்களை அதிகம் சென்றடைந்த மலிவுப் பதிப்பு மட்டுமல்ல, மனதில் பதியும் மகத்தான பதிப்பாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்திலே மோதிரம் வழங்கியதில் மோசடி, சுண்டல் வழங்கியதில் மோசடி, காலணி வழங்கியதில் மோசடி, இலவசச் சீருடை வழங்கியதில் மோசடி என்று ஐந்தாண்டு காலத்தில் தமிழகத்தில் சாபக்கேடாக இருந்த ஆட்சியை மாற்றிக் காட்டிய மக்களுக்கு நன்றிக் கடனாற்றிட புத்தம் புதிய திட்டங்களைச் சீராக நடைமுறைப்படுத்தி, போடுகிறது பீடுநடை இந்த ஆட்சி.

பிற்பகல் 1-15

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டத்திலே, அவர்கள் ஆட்சியிலே, 5 ஆண்டு காலங்களில் பயன்பெற்றவர்கள் 53,139 பேர்தான், அதுவும். ரூ.5000 மட்டுமே. ஆனால் இந்த 4 வருடங்களிலே மட்டும் தலா 10,000 ரூபாய் என 2,02,614 பெண்கள் பயன்பெற்று இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொன்னால் இந்த ஆட்சியை விட மிகப் பெருமைப்படக்கூடிய ஆட்சி இந்தத் தமிழக மக்களுக்கு எப்போதுமே கிடைக்காது என்பது உறுதி.

அன்னை சத்தியவாணிமுத்து அவர்கள் பெயரிலே அன்னை சத்தியவாணிமுத்து நினைவு தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின்



2000 ஏப்ரல் 17] [திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்]

மூலமாகக் கடந்த ஆட்சியிலே, தையல் இயந்திரம் வழங்கப்பட்டவர்கள் 5 ஆண்டுகளிலே 8,712 பேர்தான். ஆனால் இந்த 4 வருடங்களிலே 13,075 பேர் பயன் பெற்றிருக்கின்றார்கள்.

பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை வகுப்புப் பயிலும், விதவையர் குழந்தைகளுக்குப் பாடப்புத்தகங்களும் குறிப்பேடுகளும் இலவசமாக வழங்கும் திட்டத்தில் 5 ஆண்டு காலங்களிலே அவர்கள் வழங்கியது 20,000 நபர்களுக்குத்தான். இந்த 4 ஆண்டுகளிலே 34,000 பேர்களுக்கு இந்த உதவித்தொகை கிடைத்திருக்கிறது.

சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில் அவர்களுடைய 5 ஆண்டு காலத்திலே ஒரு குழந்தை கூடப் பயன் பெறவில்லை. நிதி ஒதுக்கீடும் சுத்தமாகக் கிடையாது. ஆனால் இந்த 4 ஆண்டு காலத்திலே, அவர்கள் ஆட்சியிலே பதிவு செய்த பெண் குழந்தைகளையும் சேர்த்து 82,914 குழந்தைகள் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் குழந்தைகளுடைய எதிர்காலத்தில் அக்கறைகொண்ட ஆட்சி இந்த ஆட்சிதான் என்பது வெள்ளிடை மலையாகத் தெரிகிறது.

ஊனமுற்றவர்களுக்கு சக்கர நாற்காலி வழங்கியதில் கூட ஊனமுற்றுப்போய் இருந்தது கடந்த கால ஆட்சி.; 669 பேர்களுக்குத்தான் வழங்கினார்கள் 5 ஆண்டு காலத்திலே. ஆனால் இந்த 4 ஆண்டு காலத்திலே 1,120 பேருக்கு வழங்கி ஊனமுற்றோர்களுக்கு விரைவாகச் செல்கின்ற வாய்ப்பு வசதியை உருவாக்கித் தந்தது இந்த ஆட்சிதான். கருப்புக் கண்ணாடிகள் மற்றும் மடக்குக் குச்சிகள், பார்வையற்றோர் 7,655 பேருக்கு கடந்த 5 ஆண்டு காலத்திலே வழங்கப்பட்டது. இந்த 4 ஆண்டு காலத்திலே 9,474 பேர்களுக்கு சரியாக நடந்து செல்லுங்கள், இதோ கைத்தடி என்று அவர்களுக்கு வழங்கி அவர்களுக்குப் பெருமை சேர்த்திருக்கிறது இந்த ஆட்சி.

கடும் ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் உதவித் தொகை 5 ஆண்டு காலத்திலே 4,600 பேருக்கு மட்டுமே வழங்கப்பட்டது. இந்த 4 ஆண்டு காலத்திலே கருணை உள்ளம் கொண்ட முதலமைச்சர் அவர்கள், விண்ணப்பித்திருந்தவர்களிலே பலருக்கும் உதவித்தொகை வழங்க உத்தரவிட்டதன் காரணமாக 15,250 பேர் இந்த உதவித் தொகையைப் பெற்று மகிழ்ச்சியாக வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பார்வையற்றோரை மணந்துகொள்ளும் பார்வையுள்ளவர்களுக்கு அளிக்கப்படும் நிதி உதவி மூலம் 5 ஆண்டு காலம் அவர்கள்

ஆட்சியிலே 117 பேர்தான் பயன்பெற்றார்கள். இந்த 4 ஆண்டு காலத்திலே 400 பேருக்கு புதிய ஒளியை மணவாழ்க்கை மூலம் அமைத்துத் தந்திருப்பது இந்த ஆட்சிதான் என்பதைப் பெருமையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மனசாட்சி உள்ளவர்களால் இந்த அரசின் மகத்தான சாதனைகளை மறைத்துக்கூற முடியாது. இது சாபக்கேடு அல்ல; சரித்திர சாதனை. பல இலட்ச ரூபாய் மதிப்பில் ஒட்டியாணம் போட்டுக் கொண்டவர்களின் ஆட்சிதான் சாபக்கேடான ஆட்சியாக இருந்தது. 9-3-2000-ல் நடைபெற்ற உலக மகளிர் தின விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 4 திட்டங்களுக்குப் புதிதாகப் பெயர்களைச் சூட்டினார்கள். மகளிர் திட்டம்; மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் நடைபெற்றுவருகிற சுய உதவிக் குழுவிற்கான திட்டங்களுக்கு நம்மையெல்லாம் வளர்த்து ஆளாக்கி, இங்கே முதலமைச்சராக வீற்றிருந்து, ஆட்சி புரிந்து நம்முடைய இதயங்களில் தெய்வமாக வாழ்ந்து கொண்டிருக்கிற அறிஞர் அண்ணா அவர்களைப் பெற்ற அன்னையார் பங்காரு அம்மையார் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 25 அரசு குழந்தைகள் காப்பகங்கள் இயங்கி வருகின்றன. அந்த 25 அரசு குழந்தைகளின் காப்பகமும் புரட்சி நடிகராக, மக்கள் திலகமாக பவனி வந்த முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அன்னையார் சத்தியா அவர்களுடைய பெயரால் அழைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதேபோல 2 பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்திற்கு இந்த மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் கர்ம வீரர் காமராசர் அவர்களுடைய அன்னையார் சிவகாமி அம்மையார் பெயரைச் சூட்டியிருக்கிறார்கள்.

இலவச தையல் இயந்திரம் வழங்கிடும் திட்டத்திற்கு இந்தத் தமிழக அமைச்சராகவும் மத்திய அமைச்சராகவும் இருந்தவருமான அன்னை சத்தியவாணிமுத்து அவர்களுடைய பெயரைச் சூட்டி பெண்கள் யாரையெல்லாம் நினைவுகொள்ள வேண்டும் என்பதை, வழிகாட்டியாக யாரையெல்லாம் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவதுபோல, அந்த பெயர்களைச் சூட்டிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மகளிர் சார்பாக இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



தமிழ்நாடு மகளிர் ஆணையம் மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. அந்த மகளிர் ஆணையத்தின் மூலமாக சட்ட விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு நூற்றுக்கும் மேற்பட்ட கல்லூரிப் பேராசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், இனப் பாகுபாடு களைய விழிப்புணர்வு முகாம்கள் நடத்தி காவல் துறையைச் சார்ந்த 171 காவல் துறை ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்ற கல்லூரிப் பேராசிரியர்கள் மூலம் அந்தந்த மாவட்டங்களிலுள்ள கல்லூரிகளில் உள்ள மாணவிகளுக்கு சட்ட விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு அனைத்து மாணவிகளும், கிராமப்புறங்களில் இருக்கிற பெண்களும் சட்ட விழிப்புணர்வில் தங்களுடைய உரிமை என்ன என்பதை அறிந்து கொள்வதற்கு வழிவகை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2000-2001ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைச் சட்டப் பேரவையில் சமர்ப்பித்து உரையாற்றுகின்றபோது ஊனமுற்றவர்களின் வேலைவாய்ப்பினை அதிகப்படுத்தும் வண்ணம் அவர்களுக்கு அளிக்க வேண்டிய முக்கியமான பயிற்சிகளில் ஒன்றாக கணினிப் பயிற்சி மற்றும் ஆய்வகக்கூட தொழில்நுட்பப் பயிற்சி ஆகியவற்றை உடல் ஊனமுற்றோருக்கு அளிக்க உத்தரவிட்டுள்ளார்கள். அந்த அறிவிப்பின்படி சென்னை, மதுரை, திருச்சி, கோவை, திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய 6 மாவட்டங்களில் உடல் ஊனமுற்றோருக்கு கணினிப் பயிற்சி மையங்கள் மூலம் பயிற்சியினை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் பயிற்சித் தொகையாக தலா 500 ரூபாய் வீதம், 12 மாதங்களுக்கு மொத்தம் 6 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். ஒவ்வொரு பயிற்சி மையத்திலும் 50 ஊனமுற்ற நபர்களுக்கு DTP, CADD, Data Entry ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட இருக்கிறது. இதன் மூலம் அரசுக்கு 18 இலட்ச ரூபாய் செலவினம் ஏற்படவிருக்கிறது.

விழுப்புரம், திருவாரூர், புதுக்கோட்டை, தருமபுரி, விருதுநகர், கன்னியாகுமரி ஆகிய 6 நகரங்களில் உடல் ஊனமுற்றோருக்கு மருத்துவ ஆய்வுக்கூட தொழில் நுட்பாளர் (Lab Technician) பயிற்சி 12 மாதங்களுக்கு அளிக்கப்பட உள்ளது. ஆய்வுக்கூட தொழில் நுட்பப் பயிற்சியில் ஆய்வுக்கூட பரிசோதனை, Scan பரிசோதனை, எக்ஸ்ரே பரிசோதனை மற்றும் இதர நவீன பரிசோதனைகளான E.C.G. மற்றும் E.E.G. அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

[திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்] [2000 ஏப்ரல் 17

அங்கன்வாடி மையங்கள் ஆரம்பிக்கப்பட்ட பிறகு, இதுவரையில் பழுதுபார்க்கப்படாமலேயே கவனிப்பாரற்றுக் கிடந்தன. அவற்றைப் பழுதுபார்ப்பதற்கு, குழந்தைகள் தங்கி, உணவு உண்ண, இடவசதியை அழகுபடுத்திட மைய அரசின் மூலம் இந்த அரசு உதவித் தொகையைப் பெற்றுத் தந்துள்ளது. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் 3-ன்கீழ், திட்டகாலத்தில் 10 ஆயிரம் அங்கன்வாடி மையங்கள் பழுதுபார்க்கப்படும்; ஒவ்வொரு மையத்திற்கும் 7 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பழுதுபார்க்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, இதுவரையில் 6250 மையங்களைப் பழுதுபார்க்கத் தேவைப்படும் செலவுத் தொகை 437.50 இலட்ச ரூபாய், ஏற்கெனவே மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான அரசாணை 13-2-2000 அன்று வெளியிடப்பட்டுள்ளது. மீதம் உள்ள 3750 மையங்களைப் பழுது பார்க்கும் பணிக்காக உலக வங்கி ஒப்புதலைப் பெற்ற பிறகு ஆணை வெளியிடப்படும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய பட்ஜெட் உரையில் 71,138 சத்துணவு மையங்கள் நல்லமுறையில் பராமரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தைக் கருத்திற்கொண்டு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவித்துள்ளார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நினைவுக்கூர விரும்புகின்றேன்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் 3-ன்கீழ் 159 குழந்தைகள் வளர்ச்சித் திட்ட வட்டார அலுவலகங்கள் மற்றும் பொருள் பாதுகாப்பு அறையை 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்ட மைய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதுவரை 60 வட்டார அலுவலகங்களை மொத்தம் 300 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே கட்ட அரசு கடந்த பிப்ரவரி மாதம் ஆணை வெளியிட்டுள்ளது. இந்த நிதியாண்டில் மேலும் 60 வட்டார அலுவலகங்களை 300 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

431 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் உலக வங்கி ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்-3 ஆகிய திட்டங்களில் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக உலக வங்கியின் உதவியுடன் உதிஷா (UDISHA) எனும் பயிற்சித் திட்டத்தினை 5 ஆண்டுகளுக்குள் செயல்படுத்த மைய அரசு அனுமதி அளித்துள்ளது. இதற்கென 25.41 கோடி ரூபாயை மைய அரசு வழங்கியிருக்கிறது. உதிஷா (UDISHA) பயிற்சித் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு திட்ட



2000 ஏப்ரல் 17] [திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்]

ஒருங்கிணைப்பாளருக்கு அனுமதி வழங்கப்படும். இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆணைகள் விரைவில் வெளியிடப்படவிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய பல உறுப்பினர்கள் சில கருத்துகளை இங்கே கோரிக்கையாக வைத்திருக்கிறார்கள். பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் மாவட்டந்தோறும் கட்டப்பட வேண்டுமென்றும், கூடுதலாக அந்த விடுதிகள் கட்டித் தரப்பட வேண்டுமென்றும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். பணிபுரியும் மகளிர் இல்லங்கள் கட்டுவதற்கு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினர் முன்வருவார்களானால் அதற்குரிய விதிமுறைகளை அவர்கள் பின்பற்றியிருப்பார்கள் என்றால் அவர்களுக்கு தமிழக அரசு உதவிகளைச் செய்யத் தயாராக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, முதியோர் இல்லங்கள் தேவை என்ற கோரிக்கையையும் எழுப்பியிருக்கிறார்கள். முதியோர் இல்லங்கள் தொடங்கப்படுவதற்கு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினர் முன்வருவார்களானால், அந்த முதியோர் இல்லங்கள் தொடங்குகின்ற நேரத்தில் ஒரு நபருக்கு 3000 ரூபாய் செலவாகிறது என்று சொன்னால், 2500 ரூபாயை ஆண்டுச் செலவுக்கு நம்முடைய தமிழக அரசு தருவதற்குத் தயாராக இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-25

திருமதி காஞ்சனா கமலநாதன் அவர்கள் பேசுகின்றபொழுது, தமிழக அரசினுடைய திட்டங்களை மிக விரிவாகப் பாராட்டிப் பேசி இருக்கிறார்கள். அதை போல, மற்றும் சில உறுப்பினர்களும் பாராட்டி இருக்கிறார்கள். இதில் குற்றங்குறைகள் அதிகமாகக் கூறப்படவில்லை என்பதற்காக, இந்தக் கருத்துகளைச் சொன்னவர்களுக்கு நான் என்னுடைய பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒருசில குறைபாடுகள், திருமண உதவித் திட்டத்திலே இருக்கின்றன என்று இங்குக் கூறப்பட்டது. அந்தத் தவறுகள்கூட முழுமையாகக் களையப்பட வேண்டுமென்பதற்காகத்தான், வருமானச் சான்றிதழ் இனிமேல் பள்ளிகளிலேயே அவர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்

கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட தவறுகள் இனி நேராத பட்சத்தில், இப்படிப்பட்ட குழப்பங்களுக்கு இடம் இல்லாமல், நிறைவான உதவியை ஏழைகளுக்கு வழங்குவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். மேலும், திருமணத்திற்குப் பிறகு வருகின்ற விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்று சொன்னார்கள். இது திருமணத்திற்காகத் தரப்படுகின்ற உதவித் தொகைதான். இந்த உதவித் தொகையைப் பெறவேண்டுமென்று அக்கறை இருப்பவர்கள் திருமணத்திற்கு முன்னதாக நிச்சயமாக விண்ணப்பிக்க வேண்டும். ஒரு நாளுக்கு முன்னதாக அந்த விண்ணப்பங்கள் வந்தாலும்கூட, பதிவு செய்துகொள்ளுமாறு நாங்கள் தெரிவித்திருக்கிறோம். மேலும், அந்த விண்ணப்பங்கள் தருகின்றபொழுது, அந்த அலுவலகங்களில் அதற்கான இரசீதைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்துகிறோம். எனவே, அப்படிப்பட்ட இரசீதுகளை ஒவ்வோர் அலுவலகத்திலிருந்தும் பயனாளிகள் கண்டிப்பாகப் பெற்றுக்கொள்வதற்கு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தையல் இயந்திரங்கள் கூடுதலாக வழங்கப்பட வேண்டுமென்று வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். கடந்த ஆண்டு 4,000 பேருக்கு தையல் இயந்திரங்கள் வழங்குவதாக அறிவிப்பு இருந்தது. ஆனால், உயர்நீதிமன்றத்திலே தடையாணை இருந்த காரணத்தினால், அந்த 4,000 தையல் இயந்திரங்களை வழங்குவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. எனவே, நடப்பு ஆண்டிலே அந்த 4,000-என்பதையும் சேர்த்து, 8,000 பேருக்கு இந்த மார்ச் 31ஆம் தேதி முடிவடைந்த நிலையிலே வழங்குவதற்கு ஏற்பாடு செய்து, இப்போது ஒவ்வொரு மாவட்டத்திலேயும் வழங்கிக் கொண்டிருக்கிறோம். இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்னதாகக்கூட செங்கற்பட்டிலே 200 பெண்களுக்கு மேல் அந்தத் தையல் இயந்திரங்களை அரசு விழாவில் நானே வழங்கி வந்தேன். எனவே, அந்த 8,000 தையல் இயந்திரங்களும் நிச்சயமாக வழங்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நம்முடைய சத்துணவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் பற்றிக் குறிப்பிடுகின்றபோது, அவர்களுக்கு விடுமுறை தரப்பட வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைக்கப்பட்டது. தற்செயல் விடுப்பாகத் மாதத்திற்கு ஒருநாள் வீதம் 12 நாட்கள் விடுப்பு வழங்கப்படுகிற இப்படி வருடத்திற்கு அவர்களுக்கு வழங்குவதிலே,



குழந்தைகளுக்கு உணவு வழங்குவதில் எவ்விதத் தடையுமின்றி 5 நாட்கள் வரை சேர்ந்தாற்போல் விடுப்பு எடுத்துக்கொள்ளலாம் என்ற ஒரு நடைமுறை வழக்கு இருக்கிறது. அதைப்போல, பேறுகால விடுப்பு, மூன்று மாதம் விடுப்பு எடுத்துக்கொள்ளலாம் என்ற நிலையும், ஒரு குழந்தைக்கு மட்டுமே என்ற விதியும் இருக்கிறது. கருச்சிதைவு ஏற்படும் என்று சொன்னால், 42 நாட்கள், அவர்கள் விடுப்பு எடுத்துக் கொள்வதற்கு அனுமதி இருக்கின்றது. மேலும், அந்தப் பணியாளர்களுடைய வேலை நேரம் முழு நேரம் அல்ல என்பதை அனைவருமே அறிவார்கள். ஏனோ தவறுதலாக, முழுநேரப் பணியாளர்கள், முழுநேரப் பணியாளர்கள் என்று வற்புறுத்திக் கூறி வருகிறார்கள். அவர்கள் முழுநேரப் பணியாளர்கள் அல்ல என்ற காரணத்தினால், நிரந்தரம் ஆக்குவது தற்போதைக்கு உசிதம் அல்ல என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையும் நான் இந்த நேரத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

குடும்ப நல நிதியாக, சிறப்பு சேம நிதியாக, மாதம் 20 ரூபாய் சேமிக்க அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. 148 மாதங்கள் பிடித்தம் செய்யப்படும் என்று சொன்னால், பணியிலிருந்து அவர்கள் ஓய்வு பெறுகின்றபோது, அந்த சேமிப்புத் தொகையுடன் வட்டியும் சேர்த்து, மேலும் நான் ஏற்கெனவே சொன்னதுபோல, தாய் வீட்டுச் சீதனமாக, தமிழக அரசின் சார்பாக ரூ.5,000-மும் சேர்த்து அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகின்றேன். மேலும், தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் சில அறிவிப்புகளை வழங்குவதற்கு எனக்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஏழைப் பெண்கள், குழந்தைகள், ஊனமுற்றோர் நலத்தில் மிகுந்த அக்கறை கொண்ட நம்முடைய முதல்வர் அவர்கள், கீழ்க்குறிப்பிட்டுள்ள அறிவிப்புகளை வழங்கிட அனுமதி வழங்கியிருக்கிறார்கள்.

ஏழை மகளிர் முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் 1989 ஆம் ஆண்டு முதல் மகளிர் திட்டங்களைச் செயல்படுத்தி வருவதை நாம் அனைவரும் அறிவோம். தற்போது சென்னை நீங்கலாக, 28 மாவட்டங்களில் அரசு உதவியுடன் மகளிர் திட்டம் செயல்படுத்தப் படுகிறது. இந்தத் திட்டம் பேரூராட்சி மற்றும் நகராட்சி வரையறைக்குள் உள்ள ஏழை மகளிருக்கும் பயன்பட வேண்டுமென்று கோரிக்கை

வைத்ததன் காரணமாக, அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. இதுவரை சுமார் 25 ஆயிரம் மகளிர் குழுக்களும், 4½ இலட்சம் மகளிரும் அதிலே உறுப்பினர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள். அவர்களின் சேமிப்புத் தொகை ரூ.32 கோடியாகும். இதில் 1998ஆம் ஆண்டு வரை தாழ்த்தப்பட்ட இனத்தவரும், மலைவாழ் பெண்களும் 21 சதவிகிதம் இடம் பெற்றிருந்தார்கள். இப்பொழுது 43 சதவிகிதம் இடம் பெற்றிருக்கிறார்கள் என்ற காரணத்தினால், இந்தத் திட்டம் எந்த அளவிற்கு ஏழைப் பெண்களுக்கு வாழ்க்கையில், பொருளாதாரத்திலே முன்னேற்றம் காண உதவுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுத் திட்டம், சென்னை நீங்கலாக 28 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ள நிலையில், விரிவாக்கப் பணிகளுக்கு வலிவுள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தேவைப்படுகின்றன. அந்தத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைக் கண்டறிவதில் சிரமங்கள் இருக்கிற காரணத்தால், புதிதாக வருகிற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகவும்...

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** தொண்டு நிறுவனங்களை ஊக்கப்படுத்தவும், தொண்டுப் பணிகளுக்கு வாய்ப்பளிக்கவும் ஏதுவாக அரசு உதவியுடன் ஒரு குழுமத்தை அமைத்திட புதிய கருத்து உள்ளது. தொண்டு நிறுவனங்கள் எல்லாத் துறைகளிலும் முன்னோடியாக இருந்து செயல்படுவதற்காக, சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, சட்டச் செயலாக்கம், ஆதரவற்ற பெண்கள் தொடர்புடைய பிரச்சினைகள் போன்றவற்றில் உதவும் நோக்கமாக அவற்றினுடைய நோக்கம் அமைந்து இருக்கிறது. "மாநில தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் ஆதார மையம்", கீழ்க்கண்ட செயல்பாடுகளைக் கொண்டதாக அமைக்கப்படவுள்ளது:

தொண்டு நிறுவனங்களை ஒருங்கிணைப்பது, தொண்டினை வளர்ப்பது, தொண்டர்களைத் திரட்டுவது; பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு;புள்ளிவிவரக் களஞ்சியம், ஆராய்ச்சித் தொகுப்புகள் மற்றும்



தகவல் தயாரிப்பது; தொண்டு நிறுவனங்களுக்கான ஆலோசனை மற்றும் அறிவுரை சேவைகளை வழங்குவது என்பது இந்த மையத்தினுடைய நோக்கமாக அமைந்திருக்கிறது.

குடும்பங்களில் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் காரணமாகப் பிரிய நேரிடும் தம்பதிகளுக்கு ஆலோசனை வழங்குவதற்கு, ஏற்கெனவே நாமக்கல் மாவட்டத்தில் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனம், சமூகநல வாரியத்தின் மூலமாக இயங்கி வருகிறது. தற்போது, இந்த ஆண்டு முதல் விழுப்புரம், நாகப்பட்டினம், தேனி, நெல்லை, இராமநாதபுரம் ஆகிய இடங்களில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவுப்படி புதியதாகத் தோற்றுவிக்கப்பட இருக்கின்றன. அதற்கான கூடுதல் செலவினம் ரூ.4.25 இலட்சங்கள் ஆகும்.

ஈரோடு அரசினர் கூர்நோக்கு இல்லத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசு சமபங்கேற்கும் செலவினத் திட்டத்தின்கீழ் இல்லத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள். இதன் செலவுத் தொகை ரூ. 18.06 இலட்சங்களாகும். இதனால் 50 இல்லவாசிகள் தங்கிப் பயில வாய்ப்பளிக்கப்படும்.

வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், ஆதரவற்ற பெண்கள், ஊனமுற்ற ஆண், பெண் இருபாலர் ஆகியோரின் வேலைவாய்ப்பிற்கும், சுயதொழில் செய்து வாழ்க்கை வாழ்வதற்கும், இலவசமாகத் தற்சமயம் வழங்கப்பட்டு வரும் 4,000 தையல் இயந்திரங்களை இந்த ஆண்டு 5,500 தையல் இயந்திரங்களாக உயர்த்தி வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். இதில் 500 தையல் இயந்திரங்கள் ஊனமுற்றோருக்கென்று தனியாக வழங்கப்படுவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். இதனால், அரசுக்குக் கூடுதல் செலவினம் ரூ.28.50 இலட்சங்களாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உடல் ஊனமுற்றோருக்கான சிறப்புக் கல்வியினை மேம்படுத்தும் வகையில் பார்வையற்றோர், செவித்திறன் குறைந்தோர் மற்றும் மன வளர்ச்சி குன்றியோருக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குத் தற்போது வழங்கப்படும் பயிற்சிக்கான மாத உதவித் தொகையை ரூ.300-லிருந்து, இனி ரூ.400 ஆக உயர்த்தி வழங்க, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன்மூலம் 110 பயிற்சியாளர்கள்

[திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்] [2000 ஏப்ரல் 17

பயனடைவார்கள். இதனால் அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.1.65 இலட்சங்கள் ஆகும்.

காது கேளாத நபர்களைத் திருமணம் செய்து கொள்ளும் சாதாரண நபர்களுக்கும், கை, கால் ஊனமுற்றோரைத் திருமணம் செய்து கொள்ளும் சாதாரண நபர்களுக்கும் திருமண உதவித் தொகையாக ரூ.5000 வழங்கப்பட்டு வந்தது. இதில் ரூ.2000 ரொக்கத் தொகையாகவும், ரூ.3000 தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் வழங்கப்பட்டு வந்தது. இந்த இரண்டு திருமணங்களுக்கும், முதலமைச்சர் அவர்கள் உதவித் தொகையை 7 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்க உத்தரவிட்டிருக்கிறார்கள். இதன் காரணமாக 2000 ரூபாய் ரொக்கத் தொகையாகவும், 5000 ரூபாய் தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் வழங்கப்படும். இந்தத் திட்டத்தின்மூலம் 290 பேர் இரண்டு திருமணத் திட்டங்களிலே பயனடைவார்கள். கூடுதல் செலவு, ரூ.5.80 இலட்சங்களாகும்.

ஒவ்வோராண்டும் கடுமையான ஊனமுற்றோர் 6,400 பேருக்குப் பராமரிப்பு உதவித் தொகையாக ரூ. 150 வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு முதல் நிலுவையில் இருக்கின்ற விண்ணப்பங்கள் அனைத்திற்கும் சுமார் 1000 பேர் என்ற அளவிலே கடும் ஊனமுற்றவர்களுக்கு இந்தப் பராமரிப்பு உதவித் தொகையை வழங்க, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன் காரணமாக, ரூ. 15 இலட்சங்கள் கூடுதல் செலவு அரசுக்கு ஆகவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மன வளர்ச்சி குன்றிய பெண்கள் 14 வயதிற்குள் சிறப்புப் பள்ளிகளில் அனுமதிக்கப்படுகிறார்கள். 14 வயதிற்கு மேல் பொறுப்பு பெற்றோருக்கு வந்துவிடுகிறது. திரும்ப வீட்டிற்கு அனுப்பப்பட்டுவிடுகிறார்கள். அந்தப் பெற்றோர்கள் "14 வயதிற்கு மேல் அந்தப் பிள்ளைகளை நாங்கள் எப்படிப் பாதுகாக்க முடியும்; அவர்களுக்கும் நீங்கள் இல்லம் தொடங்குங்கள்" என்று கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், 14 வயதிற்கு மேற்பட்ட மன வளர்ச்சி குன்றிய பெண் குழந்தைகளைப் பாதுகாக்கின்ற இல்லங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்த முன்வந்தால், அவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படும் என்று சொன்னோம். அதன் அடிப்படையிலே, தூத்துக்குடி, மதுரை, சிவகங்கை, சேலம், தஞ்சை, பேரணாம்பட்டு ஆகிய 6 இடங்களிலே அந்த நிறுவனத்தினர் முன்வந்தார்கள் அவர்களுக்கு அரசின் சார்பாக 2.5



2000 ஏப்ரல் 17] [திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்]

இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு தரப்பட்டது. தற்போது மன வளர்ச்சி குன்றிய 14 வயதுக்கு மேற்பட்ட பெண்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, இந்தத் திட்டத்தை ஊக்குவிக்கும் வகையில், மன வளர்ச்சி குன்றிய பெண்களுக்காக, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கோவை ஆகிய 3 மாவட்டங்களில் உள்ள தொண்டு நிறுவனங்கள் முன்வருமேயானால், அவர்களுக்கு நிதி வழங்க அரசு முன்வரவிருக்கிறது. அதற்காகக் கூடுதல் செலவு ரூ. 6.75 இலட்சங்கள் ஆகும்.

ஊனமுற்றோருக்கு உதவும்பொருட்டு, அவர்கள் சுய வேலைவாய்ப்பில் ஈடுபடுவதற்கு, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் பெற்றுக் கொள்ள பரிந்துரைக்கப்படும்போது, அரசு மானியமாக ரூ.1000 அல்லது கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு. இதில் எது குறைவோ அது இதுவரை வழங்கப்பட்டு வந்தது. இனி வரும் நிதியாண்டிலிருந்து இந்த மானியத் தொகை ரூ.1000-லிருந்து ரூ.2000 ஆக உயர்த்தி வழங்கப்படவிருக்கிறது. இத்திட்டத்தில் 800 பயனாளிகள் பயன்பெற்றிருந்தார்கள். இவ்வாண்டு 800-லிருந்து 1000 பேராக உயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள். அதன் அடிப்படையில் ரூ.12.00 இலட்சங்கள் அரசுக்கு கூடுதல் செலவாகும்.

பிற்பகல் 1-35

சென்னை அரசினர் சிறுமியர் இளைஞர் மற்றும் சிறப்பு இல்லத்தில் நிலவும் அதிக எண்ணிக்கையைக் குறைப்பதற்காக திருவண்ணாமலை மாவட்டத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலமாக சிறுமியர்களுக்கென ஒரு இளைஞர் இல்லம் தொடங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. 100 சிறுமியர் இந்த இல்லத்தின் மூலமாகப் பயன் அடைவார்கள். இதனால் அரசுக்கு ரூ.4.80 இலட்சம் செலவு கூடுதலாகும்.

திருவள்ளூர் மாவட்டத்திலே ஒரு இளைஞர் நலக் குழுமத்தையும், தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் மூலம் ஒரு கூர்நோக்கு இல்லத்தையும் தொடங்க அரசு முடிவெடுத்துள்ளது. சென்னை இளைஞர் நலக் குழுமத்தின் வழக்கு எண்ணிக்கை அதிகமாக இருப்பதைக் குறைப்பதற்கும், சென்னை அரசினர் கூர்நோக்கு இல்லத்தில் நிலவும் இல்லவாசிகளின் அதிக எண்ணிக்கையைத் தவிர்க்கவும் நடைமுறைப்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் மூலம் அரசிற்கு ரூ. 3.92 இலட்சம் செலவாகும். இதன்மூலம் 50 சிறார்கள் பயனடைய

இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முதியோர்களுக்கான தேசிய கொள்கையை முன்னிட்டு இம் மாநிலத்தில் சமூக நல ஆணையரை முதியோர் நலனின் மாநில ஒருங் கிணைப்பாளராக நியமனம் செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டு இருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையில் தமிழக அரசு நடைமுறைப்படுத்துகின்ற திட்டங்கள் பற்றியும் புதியதாக வந்த அறிவிப்புகள் பற்றியும் உங்களிடத்திலே தெளிவாக நான் எடுத்துக் கூறியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொண்டு, கோரிய தொகையை அரசுக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடு) விவாதம் முடிவுற்றது (குறுக்கீடு) திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் உரை சொல்கிறபோது, "சத்துணவுப் பணியாளர்களை நிரந்தரப்படுத்த முடியாது; அவர்கள் முழுநேர ஊழியர்கள் அல்ல" என்ற கருத்தைச் சொன்னார்கள். 1989 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையிலேயே, சத்துணவுக்கூட ஊழியர்களை நாங்கள் நிரந்தரமாக்குவோம் என்று சொன்னவர்கள் நீங்கள். ஆட்சிக்கு அப்போதும் வந்தீர்கள்; இப்போது 1996-ல் வந்து இன்றைக்கும்கூட-- இன்னும்-- அவர்களை நிரந்தரப்படுத்தாமல் இருப்பது என்பது வருந்தத்தக்க ஒரு செய்தி. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து அவர்களை முழுநேர ஊழியர்களாக, அரசு ஊழியர்களாக அறிவிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நிரந்தர ஊழியர்களாக ஆக்குவோம் என்று சொன்னோம். ஆக்கியிருக்கிறோம் அரசு ஊழியர்களாக ஆக்குவோம் என்று சொல்லவில்லை. ஆகவே தான், ஆக்கவில்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### கோரிக்கை எண் 29—சமூக நலன்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 29-சமூக நலன். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஏ.வி.ஏ. நாசர் இருக்கையில் இல்லை. திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. பா. வேல்துரை, இருக்கையில் இல்லை. திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"சமூக நலன் பற்றிய 29ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 623,51,47,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## 5. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, நாளை, வினாக்கள்-விடைகள் நேரம் ஒத்தி வைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டப்பேரவையில் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 18-4-2000 அன்று தளர்த்தி, அந்த நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை, மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க.
மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.
மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (18-4-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-39 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[2000 ஏப்ரல் 17

# 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

138. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிசாலை விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 10-2-2000 ஆம் நாளிட்ட 49 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது விலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

85. உடுக்குறியிடாத வினாக்கள் - விடைகள் பட்டியல் (ஒன்பதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

86. உடுக்குறியிடாத வினாக்கள் - விடைகள் பட்டியல் (பத்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

87. மானியக் கோரிக்கை எண் 29-சமூக நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ்).



2000 ஏப்ரல் 17]

(346 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

**கோரிக்கை எண் 29**

## சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2000-2001

### அத்தியாயம்-1

**முன்னுரை**

கோரிக்கை எண் 29-இன்கீழ் 2000-2001 ஆம் ஆண்டிற்கு ரூ. 62,35,147 ஆயிரங்கள் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

1.2. "தாயின் மடியில் சொர்க்கத்தை காணலாம்" என்ற முதுமொழி பெண்களின் பெருமையைப் போற்றுகின்றது.

"பெண்—பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண்" என்ற பல பருவங்களாகக் காணும்போது பல்வேறு உணர்வுகளை அறிகின்றாள். பல்வேறு நிகழச்சிகளைச் சந்திக்கின்றாள். பல்வேறு சிரமங்களை, தடங்கல்களை எதிர்கொள்கிறாள். சொர்க்கத்தைத் தருகின்ற தாயும் சோகப் பதுமையாக சூழ்நிலையால் ஆக்கப்படுகிறாள்.

அத்தகைய அனைத்து பருவங்களிலும் ஏற்படும் துயர காரிருளை விலக்கி அவர்தம் வாழ்வில் உதயசூரிய ஒளியைத் தந்து நம்பிக்கையும் நிம்மதியும் பெறச் செய்யவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இச்சமூக நலத் துறை மூலம் பல்வேறு நலத்திட்டங்களைச் சட்டங்களாக்கி பயனுற செய்து வருகிறார்கள். அதைப் போன்றே தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா ஆகியோரின் உயிர்மூச்சுக் கொள்கைகளான ஏழைப் பெண்கள், ஆதரவற்ற விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோர் தொடர்பான துயர் துடைப்புப் பணிகளில் தமிழக அரசு தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டு பிற மாநிலங்களுக்கு ஒரு முன்னோடியாக விளங்குகிறது.

1.3 பெண் குழந்தைகள் குறைந்தபட்சம் கல்வித் தகுதியைப் பெற வேண்டும் என்பதற்காகவும், வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ள பெற்றோர்கள் தங்களின் பெண் குழந்தைகளைத் திருமணம் செய்து கொடுப்பதில் ஏற்படும் செலவினச் சுமையை ஓரளவு குறைப்பதற்காகவும்

[2000 ஏப்ரல் 17

இந்த அரசு பல்வேறு திருமணத் திட்டங்கள் மூலம் நிதி உதவி வழங்கி வருகிறது. அதேபோன்று சாதி சமயமற்ற சமுதாயத்தை உருவாக்கும் முயற்சியில் இந்த அரசு முழு மூச்சாக ஈடுபட்டு கலப்புத் திருமணம் செய்து கொள்வோருக்கும் நிதி உதவி வழங்கி வருகிறது.

1.4 நாட்டின் செல்வங்களான குழந்தைகளின் உடல் நலத்தையும் சத்துணவுத் தேவையையும் மனத் திறனையும் வளர்க்கும் நோக்கத்துடன் இத்துறை பல சத்துணவுத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. உடல் ஊனமுற்றவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையிலும் நலத் திட்டங்கள் இத்துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1.5. கூட்டுறவுத் துறை மூலம் செயல்படுத்தப்படும் சேமிப்புடன் இணைந்த மகளிர் சிறுவணிகக் கடன் திட்டம் மற்றும் இத்துறை மூலம் செயல்படுத்தப்படும் மகளிர் திட்டம், ஏழைப் பெண்கள் திருமண நிதி உதவித் திட்டம், விதவைகள் மறுமணத் திட்டம், கலப்புத் திருமணத் திட்டம் என்றுள்ள மகளிர் திட்டங்கள் தனித்தனித் துறைகள் மூலம் நடைமுறைப்படுத்தப்படினும் அவை அனைத்தும் ஒருங்கிணைத்து முதலமைச்சர் செயலகத்தின் நேரடிக் கண்காணிப்பில் செயல்படுத்தப்படும். இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2000-2001 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி "வாழ்ந்து காட்டுவோம்" என்ற பெயரில் இயங்கும்.

## அத்தியாயம் 2

## மகளிர் மற்றும் குழந்தைகள் நலம்

### பெண்களுக்கான பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள்

2.1. பெண்களுக்கு உண்மையான முன்னேற்றம் என்பது அவர்களுக்கு சுயவருமானம் மூலம் பொருளாதார சுதந்திரம் அளிப்பதில்தான் உள்ளது. தமிழக அரசு, பல திட்டங்கள் மூலம் பெண்களுக்குச் சுயவருமானம் பெற்றுத் தருவதோடு பெண்கள் நலனுக்கு எதிராக உருவாகும் சில சூழ்நிலைகளை எதிர்கொள்ளத் தேவையான தன்னம்பிக்கையையும் பொருளாதார வலிமையும் பெற்றுத் தருகிறது.

2.2. பெண்களின் இலாபகரமான வேலைவாய்ப்பிற்காக அரசு பல்வேறு மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை தொடங்கியுள்ளது.



2000 ஏப்ரல் 17]

தற்போது 133 கூட்டுறவு சங்கங்கள் பெண்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கி வருகின்றன. அதன் விபரங்கள் பின்வருமாறு:—

| வரிசை எண். | சங்கத்தின் தன்மை | சங்கங்களின் எண்ணிக்கை. | உறுப்பினர்கள் |
|---|---|---|---|
| 1. | தையல் சங்கங்கள் | 78 | 39509 |
| 2. | இணை உணவு சங்கங்கள் | 26 | 1663 |
| 3. | எழுதுபொருள் சங்கங்கள் | 19 | 1009 |
| 4. | இதர சங்கங்கள் | 10 | 1140 |
| | மொத்தம் | 133 | 43321 |

1999-2000 ஆண்டில் தையற் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக சுமார் 60 இலட்சம் இணை சீருடைகள் தைக்கப்பெற்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் கல்வித் துறைக்கு வழங்கி அவர்கள் மூலம் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளிச் சிறார்களுக்கு வரும் கல்வியாண்டு தொடக்கத்தில் விநியோகிக்கப்பட உள்ளன. இத்துடன் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் துறைகளின்கீழ் நடைபெறும் பள்ளிகளில் பயில்பவர்களுக்கும் இச்சங்கங்களின் மூலம் சீருடைகள் தைத்து வழங்கப் படுகின்றன. 2000-2001 ஆம் ஆண்டில் துணி வெட்டும் பழைய இயந்திரங்களுக்குப் பதிலாக அரசு எட்டு புதிய இயந்திரங்களை வாங்க ரூ. 5.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. புதிய மாவட்டங்களில் தையல் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க அனுமதி வழங்கப்படும்.

இணை உணவுச் சங்கங்கள் இணை உணவு தயாரித்து ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட மையங்கள் மூலம் 6 மாதம் முதல் 2 வயது வரை உள்ள குழந்தைகளுக்கும், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் வழங்கி வருகின்றன. வருடம் சுமார் 7800 மெட்ரிக் டன் இணை உணவு தயாரித்து ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்திற்கு வழங்கப்படுகிறது. 7800 மெட்ரிக் டன் இணை உணவினை தயாரிக்கத் தேவைப்படும் மூலப்பொருள்களின் செலவினம் ரூ. 7.57 கோடியாகும். 7800 மெட்ரிக் டன் இணை உணவினை தயாரிக்க மொத்த உற்பத்தி செலவினம் ரூ. 10.14 கோடியாகும். இணை உணவுச் சங்கங்கள் இல்லாத மாவட்டங்களில் இச்சங்கம் தொடங்கிட அனுமதிக்கப்படும்.

[2000 ஏப்ரல் 17

அரசுத் துறை மற்றும் அரசு நிறுவனங்களுக்குத் தேவையான பல்வேறு வகைப் பதிவேடுகளை அச்சடித்து வழங்குவதன் மூலம் எழுதுபொருள் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது.

மேற்கண்ட கூட்டுறவுச் சங்கங்களுடன் 48 பயிற்சி மையங்களும் 5 உற்பத்தி நிலையங்களும் செயல்படுகின்றன. ஆண்டுதோறும் 857 பெண்களுக்கு இப்பயிற்சி நிலையங்களின் மூலம் பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## 2.3. திருமண உதவித் திட்டங்கள்

| திட்டத்தின் பெயர் | உதவித் தொகையின் அளவு | உதவித் தொகை பெறுவதற்கான தகுதிகள் | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை (2000-2001) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டம். | ரூ. 10,000 காசோலை அல்லது கேட்பு வரைவோலை | மணப்பெண் 10-ஆம் வகுப்பு தேர்வு எழுதியிருக்க வேண்டும். பழங்குடியினராக இருந்தால் 5-வது வகுப்பு படித்திருந்தால் போதுமானது.<br><br>ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்கு மிகாமல் இருக்க வேண்டும். வயது வரம்பு 18 மற்றும் அதற்கு மேல். குடும்பத்தில் ஒரு பெண்ணிற்கு மட்டும் நிதி உதவி வழங்கப்படும். | ரூ. 50.00 கோடி<br><br>50,000 பயனாளிகள். |



2000 ஏப்ரல் 17]

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 2. ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டம். | ரூ. 7,000 காசோலை அல்லது கேட்பு வரைவோலை | விதவையரின் ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.<br><br>மணப்பெண்ணின் வயது 18-30-க்குள் இருக்க வேண்டும். ஒரு மகளின் திருமணத்திற்கு மட்டுமே உதவித் தொகை வழங்கப்படும். | ரூ. 73.50 இலட்சம்.<br><br>1,050 பயனாளிகள். |
| 3. அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் நிதியுதவித் திட்டம். | ரூ. 7,000 காசோலை அல்லது கேட்பு வரைவோலை | ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். மணப்பெண்ணின் வயது 20-30-க்குள் இருத்தல் வேண்டும். | ரூ. 7.00 இலட்சம்.<br><br>100 பயனாளிகள். |
| 4. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம். | ரூ. 10,000 (ரூ. 7,000 தேசிய சேமிப்பு பத்திரம் மற்றும் ரூ. 3,000 காசோலை). | வருமான வரம்பு இல்லை.<br><br>மணப்பெண்ணின் வயது 20-30-க்குள் இருத்தல் வேண்டும். | ரூ. 17.50 இலட்சம்.<br><br>175 பயனாளிகள். |
| 5. அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்பு திருமண நிதி உதவித் திட்டம். | (அ) ரூ. 20,000 (ரூ. 10,000 தேசிய சேமிப்பு பத்திரம் மற்றும் ரூ. 10,000 காசோலை). | பட்டியல் வகுப்பு மற்றும் பழங்குடியினர், முற்பட்ட வகுப்பு அல்லது பிற்பட்ட வகுப்பு அல்லது மிகவும் பிற்பட்ட வகுப்பினரைத் திருமணம் செய்தல். | 1.64 கோடி<br><br>600 பயனாளிகள்.<br><br>ரூ. 20,000 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | | மணப்பெண்ணின் வயது 20-30-க்குள் இருக்க வேண்டும். 2-10-1997 முதல் நடைபெற்ற திருமணத்திற்கு வருமான வரம்பு ஏதுமில்லை. | |
| | (ஆ) ரூ. 10,000 (ரூ. 7,000 தேசிய சேமிப்பு பத்திரம் மற்றும் ரூ. 3,000 காசோலை). | ஆ முற்பட்ட வகுப்பினர் பிற்பட்ட வகுப்பினரை திருமணம் செய்தல். 23-4-1998-க்கு முன் நடைபெற்ற திருமணத்திற்கு வருட வருமானம் ரூ. 12,000-க்கு மிகாமல் இருக்க வேண்டும். 23-4-1998-க்குப் பின் நடைபெறும் திருமணத்திற்கு வருமான வரம்பு ஏதுமில்லை. | 440 பயனாளிகள் ரூ. 10,000 |
| | | இவ்விரு வகையிலும் திருமணம் நடைபெற்ற தேதியிலிருந்து இரண்டு வருடத்திற்குள் உதவி கோரி விண்ணப்பிக்கலாம். | |

வரிசை எண். 4 மற்றும் 5 சமூக சீர்திருத்தத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது.

### 2.4 தேசிய மகப்பேறு நிதியுதவித் திட்டம் (டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டம்)

பெண்கள் கருவுற்ற காலங்களில் ஓய்வாக இருப்பதும், அதிக வேலை செய்யாமல் இருப்பதும் அவர்கள் கருவில் சுமக்கும் குழந்தையின் நலனுக்காக மட்டுமின்றி, அவர்களின் உடல் நலம் மற்றும் பேறுகாலத்திற்கும் மிகவும் அவசியமாகிறது. எனினும், இச்சமூகத்தில் நிலவி வரும் பழக்க வழக்கம் காரணமாக குடும்பங்களில் பெண்களின்



நலனுக்குக் குறைந்த முக்கியத்துவமே அளிக்கப்படுகிறது. மேலும், பல குடும்பங்களில் பெண்கள் வறுமையின் காரணமாக அவர்களின் பேறுகால நாள் வரை, ஓய்வின்றி உழைப்பதும், பொருளீட்டுவதும் அவசியமாகி வருகின்றது. இப்பெண்களின் நலனைக் கருத்திற்கொண்டு, அவர்கள் பேறுகாலத்தின்போது ஓய்வெடுக்க ஏதுவாகவும், அவர்கள் வேலைக்குச் செல்லாதிருக்கும் காலங்களில் ஏற்படும் பொருளாதார இழப்பை ஈடுகட்டவும், பேறு கால முடிவிற்கு 8-12 வாரங்களுக்கு முன்னால் அப்பெண்கள் சத்துணவு பெறவும், ஓய்வெடுக்கவும் ஏதுவாக அரசு நிதியுதவி மற்றும் சத்துணவு அளிக்கிறது. ஒவ்வொரு தாய்க்கும் மொத்தமாக ரூ. 500 நிதியுதவி மணியார்டர் மூலம் அனுப்பப்படுகிறது. 1-8-1998-க்கு முன்பு தமிழ்நாடு அரசு ரூ. 200-ம் மத்திய அரசு ரூ.300-ம் சேர்த்து பயனாளிகளுக்கு ரூ.500 கொடுக்கப்பட்டது. 1-8-1998-க்குப் பின்பு ரூ.500-ஐயும் மத்திய அரசே இரண்டு பேறுகாலத்திற்கு வழங்குகிறது. மத்திய அரசு, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நேரிடையாக உதவித் தொகையினை அனுப்புகிறது. இத்தொகை பின்பு மாவட்ட சமூக நல அலுவலர்கள் மூலம் பயனாளிகளுக்குப் பண அஞ்சல்விடை மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது.

### 2.5 நிறுவனங்களின் மூலம் உதவி

#### சேவை இல்லங்கள்

விதவைகள், ஆதரவற்ற மற்றும் உதவிக்கு எவருமில்லாத பெண்கள் தங்கள் வாழ்க்கையை மீண்டும் அமைத்துக் கொள்ளத் தகுந்த நிறுவனப் பாதுகாப்பு அளிப்பதற்கென அரசு சேவை இல்லங்களை நடத்தி வருகிறது. இத்துறையின் மூலம் தாம்பரம், கடலூர், சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் காரைக்குடி ஆகிய ஆறு இடங்களில் சேவை இல்லங்கள் இயங்கி வருகின்றன. இந்த இல்லங்களில் பெண்களுக்கு உணவு, உறைவிடம், சீருடை, கல்வி மற்றும் தொழிற்கல்வி அளிக்கப்படுகின்றன. குழந்தையுடன் உள்ள இவ்வகைப் பெண்கள், அவர்களின் குழந்தைகளையும் இவ்வில்லங்களில் சேர்த்துக் கொள்ளவும் கல்வி பெறவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தாம்பரம் மற்றும் கடலூர் சேவை இல்லங்களில் கலைப்பாடங்களைக் கொண்ட மேல்நிலை வகுப்புகளும், தஞ்சாவூர் சேவை இல்லத்தில் அறிவியல் பாடங்களில் மேல்நிலை வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

சேவை இல்லத்தில் உள்ள பெரியவர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 210-ம் சிறியவர்களுக்கு ரூ. 165-ம் உணவூட்டுச் செலவினம் 1998-99 வரையில் மேற்கொள்ளப்பட்டு வந்ததை, 1999-2000 நிதியாண்டில் இத்தொகை ரூ. 300 வீதமும் ரூ. 200 வீதமும் முறையாக உயர்த்தப்பட்டுள்ளது. பெரியவர்களுக்கு ரூ. 400 மதிப்பிலும் சிறுவர்களுக்கு வருடத்திற்கு ஒருமுறை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் இலவச சீருடை வழங்கப்படுகிறது. மற்றும் இவ்வில்லங்களில் பயிலும் மாணவிகளுக்குத் தேவையான பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகள் தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தில் வாங்கி இலவசமாக வழங்கப்படுகிறது.

உடல் ஊனமுற்றோருக்காக தனியாக ஒரு பிரிவு தாம்பரம் சேவை இல்லத்தில் இயங்குகிறது.

தாம்பரம், கடலூர் மற்றும் தஞ்சாவூர் சேவை இல்லங்களில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து செயலகப் பிரிவு ஒன்றும் தனியாக இயங்கி வருகிறது. இப்பிரிவு மாணவிகளுக்கு ஒரு வருடப் பயிற்சி 65 நபர்களுக்கு அளிக்கப்படுகிறது. பயிற்சிக்குப்பின் அவர்கள் அரசுத் தேர்வு எழுதலாம். செவிலியர், துணி மற்றும் வடிவமைப்பு, ஆய்வகத் தொழில் நுட்பப் பயிற்சி ஆகியன திருநெல்வேலி, காரைக்குடி மற்றும் தாம்பரம் ஆகிய சேவை இல்லங்களில் அளிக்கப்படுகின்றன. தஞ்சாவூரிலுள்ள சேவை இல்லத்தில் 10 ஆம் வகுப்பு முடித்த சேவை இல்ல மாணவிகளுக்கு, நவீனத் தொழில் நுட்பத்தில் ஈடுபடுத்தும் வகையில் கணிப்பொறி பயிற்சியளிக்கப்படுகிறது. 10 ஆம் வகுப்பு படித்து முடித்த் பெண்கள் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். 1996 முதல் 1999 வரை 144 பெண்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் சேவை இல்லங்களுக்காக ரூ. 219.95 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.6. பணிபுரியும் மகளிர் விடுதிகள்**

படித்த பெண்களுக்கு வேலை கிடைத்திடும் நிலையில் பெண்கள் தங்கள் குடும்பத்தினரையும் வீட்டினரையும் விட்டு வெளியே சென்று வசிக்க வேண்டிய நிர்ப்பந்தம் பணிபுரியும் பெண்களுக்கு ஏற்படுகிறது. பணிக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருவதால் அவர்கள் தங்குவதற்கு ஏற்ற இடவசதியின் தேவை அதிகரித்து வருகிறது. பெண்கள் தங்குவதற்கு, பாதுகாப்பான சூழ்நிலையில் நியாயமான வாடகையில் தங்குமிடங்கள் தேவை என்பதை உணர்ந்த



அரசு பணிபுரியும் பெண்களுக்குச் சிறந்த தங்குமிடம் அளித்திடும் வகையில், தமிழ்நாட்டில் சென்னையில் 2-ம், கடலூர், மதுரை, புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருச்சி மற்றும் ஓசூர் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுமாக, மொத்தம் 8 இடங்களில் அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகளை ஆரம்பித்துள்ளது. மகளிரின் மாத வருமானம் பெருநகரப் பகுதிகளில் ரூ.7500-க்கு மிகாமலும், ஏனைய பகுதிகளில் ரூ.7000-க்கு மிகாமலும் இருந்திட வேண்டும். தண்ணீர், மின் கட்டணம் மற்றும் உணவு ஆகிய இனங்களுக்கு ஏற்படும் செலவினத்தை உள்ளுறைவோர் சரிசமமாக ஏற்றுக் கொள்கிறார்கள். இவ்விடுதிகளில் பணிபுரியும் கண்காணிப்பாளர் ஒருவர், சமையலர் இருவர், அலுவலக உதவியாளர் ஒருவர், இரவுக் காவலர் ஒருவர் மற்றும் துப்புரவாளர் ஒருவர் ஆகிய பணியாளர்களுக்கான ஊதியத்தை அரசு வழங்குகிறது.

**2.7. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு உதவி**

வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களிடையே நேரிடையாகத் தொடர்பு கொண்டிருக்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை இனங்கண்டு அவற்றைக் கீழ்க்கண்ட இரு பிரிவுகளாகப் பிரித்து ஆதரவு அளித்து வருகிறது.

**(அ) பெண்களுக்காக நடத்தப்படும் சேவை இல்லங்கள்**

அரசு நிதி உதவியுடன் காந்தி கிராமத்தில் உள்ள கஸ்தூரிபாய் சேவிகாஸ்ரமத்திலும், சென்னையில் உள்ள ஸ்ரீசேவை மந்திரிலும் இரண்டு சேவை இல்லங்கள் நடைபெற்று வருகின்றன.

**(ஆ) பணிபுரியும் மகளிர் விடுதி கட்ட நிதியுதவி அளித்தல்**

தொண்டு நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களால் கட்டப்படும் பணிபுரியும் மகளிர் விடுதிக்குக் கட்டடம் கட்டுவதற்கான மொத்தச் செலவில் 75 சதவிகிதம் மத்திய அரசு மானியமாக வழங்குகிறது. மொத்த மதிப்பீட்டில் 15 சதவிகிதம் அல்லது ரூ.35,000 இவற்றில் எது குறைந்த தொகையோ அத்தொகை மானியமாக மாநில அரசால் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்த விரும்பும் நிறுவனங்கள் கட்டடம் கட்ட சொந்தமாக நிலம் வைத்திருக்க வேண்டும். இதே பணிக்காக பிற அரசிடமிருந்து உதவிகள் பெற்றிருத்தல் கூடாது. கட்டடம் கட்டப்படும் நிலத்தின் மதிப்பில் 50 சதவிகிதம் மத்திய அரசால் மானியமாக அளிக்கப்படுகிறது. 1999-2000 வரையில் 64 பணிபுரியும் மகளிர் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன.

[2000 ஏப்ரல் 17

## 2.8. பெண்களுக்கான இதர திட்டங்கள்

### 1. வழிகாட்டி மையம்

பெண்களின் நலனுக்காகவும், வளர்ச்சிக்காகவும் பல திட்டங்கள் செயல்பட்டு வந்த போதிலும், பெண்களிடம் இத்திட்டங்களைப் பற்றிய விழிப்புணர்வு மிகவும் குறைவாகவே உள்ளது. பெண்களின் நலனுக்காக வழங்கப்படும் பல்வேறு நலத்திட்டங்களைப் பற்றி அவர்களுக்கு தகவல் அளிப்பதற்காக வழிகாட்டி மையங்கள் புதிதாகத் தொடங்கப்பட்ட மாவட்ட சமூகநல அலுவலகங்கள் தவிர, இதர 19 மாவட்ட சமூகநல அலுவலகங்களில் செயல்பட்டு வருகிறது. மையத்தின் தலைவராக இருக்கும் வழிகாட்டி அலுவலர் மாவட்ட சமூகநல அலுவலர் உதவியோடு பெண்களுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களை அளிப்பதற்கும், வங்கிக் கடன் விண்ணப்பங்களை வங்கிகளுக்கு பரிசீலனைக்கு அனுப்பவும் உதவி புரிகிறார். மேலும் வரதட்சணை கொடுமை குறித்த புகார்கள் பெறப்பட்டால் புகார்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க ஆவன செய்கின்றனர். வழிகாட்டி அலுவலர்கள் மக்களுக்கும் அரசுக்கும் பாலமாக விளங்குகின்றனர்.

2000-2001 ஆம் ஆண்டிற்காக ரூ.58.68 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2. மகளிர் மன்றங்கள்

மகளிர் மன்றங்கள் என்பது பெண்களை குழுக்களாக இணைத்து, கிராம அளவில் அமைக்கப்பட்ட ஒரு பழமையான அமைப்பாகும். இம்மன்றங்கள் 1961 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டன. பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றம் தொடர்பான பல்வேறு அரசுத் திட்டங்களைப் பரப்புவதற்காக ஆரம்பிக்கப்பட்ட இம்மன்றங்கள் படிப்படியாகக் கிராம மக்களை ஈடுபடுத்தி கிராம நலப்பணிகளை செயல்படுத்துவதில் ஆர்வம் காட்டி வருகின்றன. கிராம மகளிரை ஒருங்கிணைக்கப் பயன்படுவதோடு, மேலும் கூட்டு முயற்சியினால் கிடைக்கும் வளர்ச்சியினைப் பகிர்ந்து கொள்ளவும் பயன்படுகிறது. கிராம மகளிர், குழுவாகப் பணியாற்றும்போது அவர்களின் தன்னம்பிக்கை விழிப்புணர்வு, சேவை மனப்பான்மை பன்மடங்காகப் பெருகுகிறது. தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 30 மகளிர் மன்றங்கள் என்ற அளவில் 11520 மகளிர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.



2000 ஏப்ரல் 17]

ஒவ்வொரு மகளிர் மன்றமும் 25 முதல் 30 பெண் உறுப்பினர்களை உள்ளடக்கியது. உணவுகளைப் பதப்படுத்துவது, குழந்தை வளர்ப்பு, சுத்தம், சுற்றுப்புறச் சுகாதாரம், சத்துணவு ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற்காக ஒவ்வொரு வருடமும், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 13,000 மானியமாக வழங்கப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் மகளிர் மன்றங்களை ஊக்குவிக்கும் பொருட்டு சிறப்பாகச் செயல்படும் 75 மகளிர் மன்றங்களுக்கு தலா ரூ. 2,000 வீதம் பரிசு வழங்கப்படுகிறது.

2000-2001 ஆம் ஆண்டிற்காக ரூ.51.24 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3. இலவச தையல் இயந்திரம் வழங்குதல்

தமிழ்நாடு அரசு, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் மூலம் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் ஊனமுற்ற ஆண், பெண் இருபாலருக்கும் அவர்களின் வேலைவாய்ப்பிற்கும், சுயதொழில் செய்து வாழ்வதற்கும் இலவசமாகத் தையல் இயந்திரங்களை வழங்கி வருகின்றது. 20 வயது முதல் 40 வரையிலான தையல் தெரிந்த ஏழை மகளிர் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்து வருகின்றனர். 1998-99 ஆம் ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட 4,000 தையல் இயந்திரங்கள், நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த வழக்கினால் வழங்கப்படாமல் தடைபட்டது. பின்னர், தடையாணை நீக்கப்பட்டதன் காரணமாக 1998-99 மற்றும் 1999-2000 ஆம் ஆண்டுகளுக்குச் சேர்த்து 8,000 எண்ணிக்கை தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்குத் தற்போது 'அன்னை சத்தியவாணிமுத்து நினைவு மகளிர் இலவசத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்' என அரசால் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

2000-2001 ஆம் ஆண்டில் 4,000 தையல் இயந்திரங்கள் வழங்குவதற்கு ரூ.76.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4. விதவைகளின் குழந்தைகளுக்குப் பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகள் இலவசமாக வழங்குதல்

இத்திட்டம் ஆண்டு வருமானம் ரூ. 12000-க்கு மிகாமல் உள்ள விதவைகளின் குழந்தைகள் பயன் பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்டது.

[2000 ஏப்ரல் 17

இத்திட்டத்தின்கீழ் ஒன்றாம் வகுப்பு முதல் மேல்நிலை வகுப்பு வரையில் படிக்கும் ஏழை விதவைத் தாய்மார்களின் குழந்தைகளுக்கு பாடப் புத்தகம்/நோட்டுப் புத்தகம் இலவசமாகக் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது. இதன் மூலம் ஆண்டொன்றுக்கு 10,000 குழந்தைகள் பயன் அடைவர்.

| | | |
|---|---|---|
| 1 ஆம் வகுப்பு மற்றும் 2 ஆம் வகுப்பு | - | ரூ. 50 |
| 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை | - | ரூ. 125 |
| 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை | - | ரூ. 175 |
| 9 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு | - | ரூ. 300 |
| மேல்நிலை முதலாம் மற்றும் இரண்டாமாண்டு | - | ரூ. 600 |

2000-2001ஆம் ஆண்டிற்கு ரூ.16.69 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.9. தமிழ்நாடு சமூகநல வாரியம்

தமிழ்நாடு சமூகநல வாரியம் 1954ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு, தமிழ்நாட்டில் தொண்டு நிறுவனங்களின் மூலம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மகளிரின் நிலைமையை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:—

1. சமூகநலத் தன்னார்வ அமைப்புகளை ஊக்குவித்து உயர்வடையச் செய்தல்.
2. தனியார் சேவை நிறுவனங்களின் பணித்திறனை வளர்ப்பதற்குத் தொழில் நுட்பம் மற்றும் நிதி உதவியளித்து அவற்றின் தரத்தினை உயர்த்துதல்.
3. அரசு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்.

தமிழ்நாடு சமூகநல வாரியம், மாநில அரசிடமிருந்தும் மத்திய சமூகநல வாரியத்திடமிருந்தும் நிதி உதவி பெற்று, தொண்டு நிறுவனங்கள் மூலம், குழந்தைகள், ஊனமுற்றோர் மற்றும் மகளிர் ஆகியோரது மேம்பாட்டிற்காகப் பணியாற்றுகிறது. சுமார் 50 சதவிகிதம் முதல் 90 சதவிகிதம் வரை தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி தரப்படுகிறது. எஞ்சிய செலவுத் தொகை தொண்டு நிறுவனங்களால் ஏற்கப்படுகிறது. சில சிறப்புத் திட்டங்களுக்கு 100 சதவிகிதம் நிதியுதவி தரப்படுகிறது.



2000 ஏப்ரல் 17]

மத்திய அரசின் மூலம் 540 தொண்டு நிறுவனங்களின் கீழ் இயங்கும் 1,280 தொண்டு மையங்களுக்கு ஏப்ரல் 1999 முதல் மார்ச் 2000 முடிய ரூ.302.41 இலட்சங்கள் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 376 நிறுவனங்களின் கீழ் இயங்கும் 413 தொண்டு மையங்களுக்கு மாநில அரசின் நிதியுதவி ரூ.64.66 இலட்சங்கள் வழங்கப்படுகிறது.

போதை மருந்து உட்கொள்ளுதல், மது அருந்துதல் போன்ற தீய பழக்கங்களை ஒழிக்கும் பணியிலும் மற்றும் தெருக்குழந்தைகள் மேம்பாடு, எய்ட்ஸ் விழிப்புணர்ச்சி போன்ற சிறந்த பணிகளைச் செயலாற்றும் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுகிறது. பாலியல் தொழிலாளர்களின் குழந்தைகளைப் பராமரிக்கும் குழந்தைகள் காப்பகம் அமைப்பதற்கும் பெருமுயற்சி எடுத்து வருகிறது. பிற சமூகநலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும், பெண்களின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் உதவக்கூடிய வகையில் அரசுத் துறைகள் மற்றும் சேவை நிறுவனங்களுக்கு இடையில் பாலமாகச் செயலாற்றுகிறது.

## 2.10. தமிழக அரசின் நிதியுதவியுடன் சமூகநல வாரியத்தால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 1. வேலை செய்யும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகள் காப்பகம்

வேலை செய்யும் மற்றும் நோய்வாய்ப்பட்ட ஏழைத் தாய்மார்களின் குழந்தைகள் பெரும்பாலும் புழுதியில் விளையாடிக்கொண்டும் பள்ளிக்குச் செல்லாமலும் இருக்கின்றனர். இதற்குக் காரணம் வீட்டைப் பாதுகாக்கவும் அக்குழந்தைகளுக்குப்பின் பிறந்துள்ள மழலையர்களைப் பார்த்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கும் அவர்கள் தள்ளப்படுவதால், அவர்கள் பள்ளிக்குச் செல்வது என்பது இயலாததாகிறது. இதனைத் தடுக்கவும், இவர்கள் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடாமல் இருக்கவும், தேர்ந்தெடுக்கப்பட்ட 175 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் வாயிலாக தமிழ்நாடு சமூகநல வாரியத்தின் மூலம் 212 குழந்தைகள் காப்பகங்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் செயல்படுத்தப்படுகின்றன. ஒரு காப்பகத்திற்கு வருடத்திற்கு ரூ.25,410 மானியமாக வழங்கப்படுகிறது. அவற்றின் பராமரிப்பிற்கு 2000-2001ஆம் நிதியாண்டிற்கு ரூ.53.87 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2000 ஏப்ரல் 17

**2. தமிழ்நாடு சமூகநல வாரியத்தின்கீழ் கிராமப்புறங்களில் செயல்படும் தொண்டு நிறுவனங்களுக்கு தமிழக அரசின் மானியம்**

தமிழ்நாடு சமூகநல வாரியத்தின் கீழ், கிராமப்புறங்களில் மக்கள் நலனுக்காகச் செயல்படும், பதிவு செய்யப்பட்டு மூன்று வருடங்களில் நல்ல நிலையில் இயங்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு தையல் இயந்திரம், தட்டச்சு இயந்திரம் ஆகிய உபகரணங்கள் மற்றும் குழந்தைகளின் விளையாட்டுச் சாதனங்கள் போன்றவைகள் வாங்குவதற்கு ஆண்டொன்றுக்கு ரூ.5,000 மானியமாக 200 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்குத் தமிழக அரசு வழங்கி வருகிறது.

இதற்கென 2000-2001ஆம் நிதியாண்டிற்கு ரூ.10 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3. குடும்ப ஆலோசனை மையம்**

தமிழ்நாடு சமூகநல வாரியத்தின் மூலம் நாமக்கல்லில், ஒரு தன்னார்வ நிறுவனத்தின் வாயிலாக ஓர் ஆலோசனை மையம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாலோசனை மையம் குடும்பங்களில் ஏற்படும் கருத்து வேறுபாடுகள் காரணமாகப் பிரிய நேரிடும் தம்பதிகளுக்கு ஆலோசனை வழங்கி, குடும்பம் பிரியாமல் இருக்க உதவி வருகின்றது. இம் மையம் வரதட்சணைக் கொடுமை, தம்பதிகளுக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகள், குடிப்பழக்கம் ஆகியவற்றை நீக்கவும், எய்ட்ஸ் நோயாளிகளுக்குத் தகுந்த ஆலோசனையும் வழங்கி வருகின்றது. தற்போது மேலும் சில இடங்களில் குடும்ப ஆலோசனை மையங்களைத் தொடங்கிட அரசு பரிசீலித்து வருகிறது.

இதற்கென 2000-2001ஆம் ஆண்டிற்கு ரூ.79,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.11. தமிழ்நாடு மாநிலப் பெண்கள் ஆணையம்**

பெண்களின் நலனைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், தமிழ்நாடு மாநிலப் பெண்கள் ஆணையம் 1993-ல் தொடங்கப்பட்டது. இந்த ஆணையத்தில், தலைவர் மற்றும் 9 உறுப்பினர்கள் உள்ளனர். பெண்கள் நல உரிமைகளைப் பாதுகாப்பதோடு, பெண்களுக்கான சட்டங்கள், திட்டங்கள் மற்றும் அவற்றைச் செயலாக்குவது குறித்து அவ்வப்போது ஆய்வு நடத்துவதும், கொடுமைக்கும், இன்னலுக்கும் ஆளாகும் பெண்களை நேரிடையாகச் சென்று கண்டறிந்து ஆய்வறிக்கை வழங்கி



2000 ஏப்ரல் 17]

தக்க நடவடிக்கை எடுக்கவும் அரசுக்கு மேற்கண்டவை குறித்து ஆலோசனை வழங்குவதும் இந்த ஆணையத்தின் முக்கிய பொறுப்புகளாகும். மேலும், தற்போதுள்ள ஆணையை மாற்றி உறுப்பினர்களின் எண்ணிக்கையை 9-ல் இருந்து கூடுதலாக்கி பல்வேறு துறைகளில் சிறப்பு பெற்றவர்களை நியமிக்க அரசு விரும்புகிறது. இதன் மூலம் ஆணையம் மேலும் சிறப்பாகச் செயல்பட முடியும். இவர்களில் ஒரு தொழில் முனைவோர், ஒரு பெண் மருத்துவர் மற்றும் ஒரு சமூக சேவகி இடம் பெறுவர். 2000-2001ஆம் ஆண்டிற்கு இதற்கென ரூ.2.12 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

முக்கியமாக, பெண்கள் நலச் சட்டங்கள் குறித்து, கிராமப் பெண்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கோடு, கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பெண்கள், கல்லூரிகள் மூலமாகச் சட்ட விழிப்புணர்ச்சி முகாம்கள் ஆணையத்தால் நடத்தப்பட்டு வருகின்றன.

பெண்கள் உரிமைகளைப் பாதுகாக்க, முக்கியமாக அரசு அலுவலர்களுக்கு, அதிலும் குறிப்பாக காவல் துறை அலுவலர்களுக்கு அதிக அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. ஏனென்றால், பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகள், அநீதிகள் அனைத்திற்கும் தக்க நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் காவல் துறையினருக்கே உள்ளது. ஒரு பெண் புகார் கொடுக்க, தானாகவே முன்வந்து காவல் நிலையம் சென்றால், அப்பெண்ணை வித்தியாச நோக்கோடு பார்க்கும் நிலை இன்னும் சமுதாயத்தில் நிலவி வருகிறது. இந்நிலை மாற்றப்பட வேண்டும். மாறிவரும் சமூக சூழ்நிலையில் காவல் துறையினர், பெண்கள் குறித்த மனப்பான்மையினை மாற்றிக்கொள்ளும் அவசியம் ஏற்பட்டுள்ளது. 1999-2000ஆம் ஆண்டில் இனப்பாகுபாட்டினைக் களையும் விழிப்புணர்ச்சி முகாம்களை ஆணையம் மிகப்பெரிய அளவில் நடத்தியது. களப்பணியாளர்களுக்கு, குறிப்பாகக் காவல் துறையினைச் சார்ந்த ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்களுக்குப் பெண்களைக் கண்ணியமாக நடத்த வேண்டியதன் அவசியத்தினை உணரவைக்கும் முன்னோடிப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாணையம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனக் கட்டடம் கிண்டியில் இயங்கி வருகிறது. வரதட்சணை ஒழிப்பு ஆலோசனைக் குழு அனைத்து மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாணையத்தின் ஆலோசனைப்படி எல்லா மாவட்ட சமூகநல அலுவலர்களும் வரதட்சணை ஒழிப்பு அதிகாரிகளாக

நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். மேலும், 5 அலுவல் சாரா உறுப்பினர்களையும் வரதட்சணை ஒழிப்புக் குழு உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளது. இக்குழு முறையாகக் கூடி மகளிர் எதிர்நோக்கும் வரதட்சணைப் பிரச்சினைகள் குறித்தான மனுக்களைப் பெற்று தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## குழந்தை நலத் திட்டங்கள்

2.12. மாநில ஊட்டச்சத்துக் கொள்கையில் வரையறுக்கப்பட்டவாறு ஏழை மக்களின், குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைவு பரவலான வறுமையின் வெளிப்பாடாக உள்ளது. அதுவே பலவித நோய்களுக்கும் பசிப்பிணிக்கும் காரணமாகவும் உள்ளது. பெண்களின் வாழ்க்கைத் தரக் குறைவு, சமூக மற்றும் பொருளாதாரத் தாழ்வு நிலை ஆகியவை அவர்களது ஏழ்மை, ஊட்டச்சத்துக் குறைவு, உடல்நலமின்மை மற்றும் உற்பத்தித் திறன் குறைவு போன்றவற்றிற்குக் காரணங்களாக உள்ளன. தமிழக அரசு பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைவை நீக்கி அவர்களுக்கு ஊட்டச்சத்தையும் உடல்நலத்தையும் மேம்படுத்துவதற்கு பல நலத்திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. காலமுறைப்படி குழந்தை வளர்ச்சியைக் கண்காணித்தல், உடல்நலப் பரிசோதனை, நோய்த் தடுப்பு முறைகள், தேவைப்படின் மருத்துவமனைக்கு அனுப்புதல், இணை உணவு ,மற்றும் முன்பருவக் கல்வி ஆகியவை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மற்றும் உலக வங்கி உதவிப்பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்-3-ன் முக்கியக் கூறுகளாகும். இவை வசதியற்ற குழந்தைகளின் நிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகின்றன.

### 2.13. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்று அழைக்கப்படும் மாநில சத்துணவுத் திட்டம் ஊரகப் பகுதிகளிலுள்ள குழந்தை நல மையங்களில் 2 வயது முதல் 5 வயதிற்குட்பட்ட பள்ளிசெல்லாக் குழந்தைகளுக்கும், 5 வயது முதல் 9 வயது வரை உள்ள ஆரம்பப்பள்ளி (1 முதல் 5-ஆம் வகுப்பு வரை) குழந்தைகளுக்கும், 1-7-1982 ஆம் ஆண்டு முதல் கொண்டு வரப்பட்டது. அதன் தொடர்ச்சியாக இத்திட்டம் 15-9-1982 முதல் நகர்ப்புறச் சத்துணவு மையங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. பின்னர் 10 முதல் 15 வயது வரையிலான (6-வது வகுப்பு முதல் 10-ஆம் வகுப்பு வரை பயிலும்) பள்ளி மாணவர்களுக்கும் 15-9-1984 முதல் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டது. முதியோர் ஓய்வூதியம் பெறுபவர்களும் இத்திட்டத்தின் பயனாளிகளாகச் சேர்க்கப்பட்டனர். தற்போது 46 நகராட்சிகளிலுள்ள 719 குழந்தை நல மையங்கள் மட்டும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் செயல்படுகின்றன. ஏனைய குழந்தை நல மையங்கள் (2 முதல் 5 வயது குழந்தைகளுக்கானவை) யாவும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் உலக வங்கி உதவியுடன் நடைபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் 3-ன் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.



(2) 2 முதல் 5 வயதில் உள்ள பள்ளி செல்லாக் குழந்தைகளுக்கு சத்துணவுடன் முன்பருவக் கல்வி அளிப்பதும், 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளிக் குழந்தைகளுக்கு தினமும் ஒரு வேளை சத்துணவு அளிப்பதன் மூலம் ஊட்டச்சத்துக் குறைவை அகற்றுவதும், குழந்தைகளின் படிப்புத் திறன் மற்றும் பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கையை உயர்த்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். சத்துணவிற்கான உணவுப்பொருட்கள் (அரிசி, பருப்பு, எண்ணெய்) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் சத்துணவு மையங்கள் மற்றும் குழந்தைகள் நல மையங்களில் வழங்கப்படுகிறது. முட்டை திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி முறையில் தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களால் வழங்கப்படுகிறது. இருவித (இரும்பு மற்றும் ஐயோடின்) செறிவூட்டப்பட்ட உப்பு ஏழு மாவட்டங்களிலும், இரும்புச் சத்து செறிவூட்டப்பட்ட உப்பு இதர மாவட்டங்களிலும் தமிழ்நாடு உப்பு நிறுவனத்தினால் வழங்கப்படுகின்றன. அனைத்து மாவட்டங்களிலும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு அல்லது இரும்புச் சத்து செறிவூட்டப்பட்ட உப்பு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி முறையின் மூலம் வழங்க விரைவில் முடிவெடுக்கப்படும். காய்கறி (9 பைசா), தாளிதம் (3 பைசா), விறகு (5.5 பைசா), உப்பு (0.5) பைசா ஆகியவற்றிற்காக நாளொன்றுக்கு ஒரு பயனாளிக்கு 18 பைசா வீதம் மானியம் அளிக்கப்படுகிறது. இம்மானியத்தை ஒரு பயனாளிக்கு நாளொன்றுக்கு 18 பைசாவிலிருந்து 23 பைசாவாக உயர்த்த அரசு அறிவித்துள்ளது.

[2000 ஏப்ரல் 17

பின்வரும் அட்டவணையின்படி உணவுப் பொருட்கள் சத்துணவுப் பயனாளிகளுக்கு உணவு தயாரிக்க வழங்கப்படுகிறது.

(அளவு கிராம்களில்)

| வரிசை எண் | உணவுப் பொருள் | 2 முதல் 4 வயது குழந்தைகள். | 5 முதல் 9 வயது மாணவர்கள். | 10 முதல் 15 வயது மாணவர்கள். | முதியோர் |
|---|---|---|---|---|---|
| 1 | அரிசி | 80 | 100 | 120 | 200 |
| 2 | பருப்பு | 10 | 15 | 15 | 15 |
| 3 | எண்ணெய் | 2 | 1 | 1 | 1 |

(3) ஏற்கெனவே ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த பள்ளிச் சத்துணவு மையங்களும், 1992 மற்றும் 1994 ஆம் ஆண்டுகளில் சமூக நல இயக்குநர் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டு இயங்கி வந்தது. அதன்பின் 1-10-1997 முதல் இவை முறையே ஊரக வளர்ச்சி இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரது கட்டுப்பாட்டிற்கு மீண்டும் மாற்றப்பட்டுள்ளன. சென்னை மாநகரிலுள்ள பள்ளி மையங்கள் சென்னை மாநகராட்சியின் கீழ் தொடர்ந்து இயங்குகின்றன. குழந்தை நல மையங்கள் மட்டும் சமூக நல ஆணையர் மற்றும் உலக வங்கி உதவியுடன் நடைபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள்-3 திட்ட ஒருங்கிணைப்பாளரது கட்டுப்பாட்டின் கீழ் தொடர்ந்து செயல்படுகின்றன.

(4) இத்திட்டத்தில் 3-6-1989 முதல் சத்துணவுடன் வேகவைத்த முட்டை ஒன்று 15 நாட்களுக்கு ஒரு முறை குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுவந்தது. தற்போது 1-6-1998 முதல் வாரத்திற்கு ஒரு முறை வேகவைத்த முட்டை குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. எல்லா மாவட்டங்களிலும் முட்டை ஒப்பந்தக்காரர்கள் கொடுக்கும் முட்டைகள் தரம் வாயந்தவைதானா என்பதைத் தற்போது டாப்கோவிற்குப் பதிலாக கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநரகத்தால் மேற்பார்வையிடப்படுகிறது. சத்துணவுத் திட்டம் மற்றும் முட்டை வழங்கும் திட்டம் சரியாக நடைபெறுகிறதா என்பதைக் கண்காணிக்க மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் குழுக்கள்



2000 ஏப்ரல் 17]

ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் குழந்தை நல மையங்களிலுள்ள பயனாளிகள் மற்றும் பள்ளி செல்லும் குழந்தைகள் (15 வயது வரை) உட்பட ஏறத்தாழ 73 இலட்சம் பேர் இதன் மூலம் பயனடைகிறார்கள். சத்துணவு மையங்கள்/ குழந்தை நல மையங்களைச் செப்பனிடல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தும் வகையில் தேவையான ஆணைகள் துறைத் தலைவர்களுக்கு அரசால் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி சம்பந்தப்பட்ட அரசுத் துறை அல்லது உள்ளாட்சி அமைப்பு சத்துணவு/குழந்தை நல மையக் கட்டட உரிமையாளர் என்ற முறையில் அந்தந்தத் துறையின் வரவு-செலவுத் திட்ட நிதி ஆதாரத்துடன் மையக் கட்டடங்களைச் செப்பனிடுதல் மற்றும் பராமரித்தல் ஆகிய பொறுப்புகளை மேற்கொள்ளும்.

(5) மேலும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தில் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் பயனடையும் கர்ப்பிணிப் பெண்களும் பயனடைகிறார்கள். முதியோர் உதவித் தொகை பெறும் பயனாளிகளும் சத்துணவுத் திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள்.

(6) ஒவ்வொரு திட்டத்தின் கீழும் உள்ள சத்துணவு மையங்களின் எண்ணிக்கை மற்றும் பயனடைந்தோர் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:-

**(1) குழந்தை நல சத்துணவு மையங்கள்**

| வரிசை எண் | திட்டம் | மையங்களின் எண்ணிக்கை | பயனடைவோர் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | குழந்தைகள் | | தாய்மார் மற்றும் முதியோர் உதவித் தொகை பெறுவோர் | மொத்தம். |
| | | | 6 முதல் 24 மாதம் வரை | 2 வயது முதல் 5 வயது வரை | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் | 10482 (அங்கன்வாடி மையங்கள்) | 147942 | 301353 | 140782 (தாய்மார்) | 590077 |

[2000 ஏப்ரல் 17

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 2 | உலக வங்கி உதவியுடன் நடைபெறும் ஒகுவதி-3 | 19500 (சமுதாய ஊட்டச் சத்து மையங்கள் மற்றும் குழந்தை நல மையங்கள்) | 318733 | 559508 | 72746 (மு.ஓ.ஊ.) 318294 (தாய்மார்) | 1269281 |
| 3 | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (நகராட்சிப் பகுதி) | 719 (குழந்தை நல மையங்கள்.) | — | 29309 | 3977 (மு.ஓ.ஊ) | 33286 |
| | மொத்தம் | 30701 | 466675 | 890170 | 535799 | 1892644 |

**(2) பள்ளிச் சத்துணவு மையங்கள்**

| வரிசை எண் | திட்டம் | மையங்களின் எண்ணிக்கை | பயனடைவோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள் (ஊரகப் பகுதிகள்) | 38378 | 5916829 |
| 2 | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள் (நகர்ப்புறப் பகுதிகள்) | 2059 | 472760 |
| | மொத்தம் | **40437** | **6389589** |

## 2.14 ஆரம்பக் கல்விக்கு உதவும் தேசிய சத்துணவுத் திட்டம்

மதிய உணவுத் திட்டத்தின் கீழ், இந்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகம் 1 முதல் 5-ஆம் வகுப்பு வரை பயிலும் ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளுக்கு, ஒரு குழந்தைக்கு 100 கிராம் அரிசி வீதம் மதிய உணவு வழங்குவதற்காக இலவச அரிசியை வருடத்திற்கு 10 மாதத்திற்கு அளித்து வருகிறது.



2000 ஏப்ரல் 17]

## 2.15 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் என்பது குழந்தை பராமரிப்பு மற்றும் வளர்ச்சியில் உலகின் உன்னதமான மிகப்பெரிய திட்டமாகும். மனித மேம்பாட்டிற்கு மழலைப் பருவம் முக்கிய அடிக்கல்லாக அமைவதைக் கொண்டு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளிடையே ஒருங்கிணைந்த வளர்ச்சியைக் குழந்தை பராமரிப்போர் மூலமாகவும் சமுதாயத்தின் உதவியுடன் மேம்படுத்தப்பட்ட அடிப்படைப் பணிகளை சமுதாய அளவில் கொண்டு வருமாறு அமைக்கப்பட்டுள்ளது.

சமுதாயத்தில் நலிவுற்ற குழந்தைகள், கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் முக்கிய பயனாளிகளாவர். இப்பயனாளிகளுக்கு இணை உணவு, முறைசாரா முன்பருவக் கல்வி, மருத்துவப் பரிசோதனை, நோய் தடுப்பு, மருத்துவப் பரிந்துரை, ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரக் கல்வி அளிக்கப்படுகிறது. மேலும் பாதுகாப்பான குடிநீர், சுற்றுப்புறச் சுகாதாரம், மகளிருக்கான கல்வி மற்றும் மேம்பாடு போன்ற வசதிகள் பெற வடிவமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் சோதனை அடிப்படையில் 1975-76 ஆம் ஆண்டில் சென்னை, தளி மற்றும் நிலக்கோட்டை ஆகிய மூன்று வட்டங்களில் தொடங்கப்பட்டது. மேலும் விரிவாக்கப்பட்டு, தற்போது 113 வட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவற்றில் 44 நகர்ப்புறம், 67 கிராமங்கள் மற்றும் 2 மலைப்புறப் பகுதிகள் அடங்கும். தமிழ்நாட்டில் 10482 அங்கன்வாடி மையங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு நகர்ப்புற ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப்பகுதியும் ஒரு இலட்சம் மக்கள் தொகையை உள்ளடக்கியதாகும். ஒவ்வொரு நகர்ப்புறத் திட்டப் பகுதியும் ஒரு குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலரின் தலைமையில் ஒரு மருத்துவ அலுவலர், நான்கு மேற்பார்வையாளர்கள் மற்றும் 4 துணை மருத்துவச் செவிலியர்கள் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராமம் மற்றும் மலைப்புறப் பகுதிகளில் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலருடன் 4 மேற்பார்வை யாளர்களும் ஒரு பயிற்றுநரும் உள்ளனர். இப்பகுதிகளுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவ மற்றும் பல்நோக்குச் சுகாதாரப் பணியாளர்கள் மருத்துவப் பணிகளை மேற்கொள்கின்றனர். ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் சுமார் 60 முதல் 130 வரையிலான அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

[2000 ஏப்ரல் 17

சுமார் 1000 மக்கள் தொகை உள்ள பகுதிக்கு ஒரு அங்கன்வாடி மையம் என்ற விகிதத்தில் மையங்கள் அமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு மையத்திலும் 6 மாதம் முதல் 2 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 30 பேரும், 2 முதல் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 40 பேரும் கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் 30 பேரும் ஆக மொத்தம் 100 நபர்கள் பயன்பெறுவர்.

நாள் ஒன்றுக்கு பயன்பெறும் பயனாளிகள் விபரம்

| | | |
|---|---|---|
| 6 மாதம் முதல் 2 வயது வரையிலான குழந்தைகள் | - | 1,47,942 |
| 2 வயது முதல் 6 வயது வரையிலான குழந்தைகள் | - | 3,01,353 |
| கர்ப்பிணி மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | - | 1,40,782 |
| மொத்தம் | - | **5,90,077** |

உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3-வது திட்டம்

## 2.16 திட்டத்தின் சமீப கால சாதனைகளும் முன்னேற்றங்களும்

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்-2, உலக வங்கியின் கடன் உதவியுடன் 20-1-1991-ல் தமிழ்நாட்டில் 24 மாவட்டங்களைச் சார்ந்த 318 வட்டாரங்களில் ஆரம்பிக்கப்பட்டு 31-12-1997 அன்று முடிவடைந்தது. மைய அரசு திட்டம்-2 செயல்பட்டு வந்த 318 வட்டாரங்களில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகளை 1-1-1998-ல் செயல்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்தது. அதே போன்று மைய அரசின் கடித நாள் 19-4-1999 மூலமாக உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணி 3-வது திட்டம் தமிழகத்தில் 5 வருடங்களுக்கு 1998-99 முதல் 2003-2004 வரை செயல்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்தது. அதன்படி, அரசாணை எம்.எஸ்.எண்.142, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 29-7-1999 மூலமாக இத்திட்டத்தினைச் செயல்படுத்த தமிழக அரசால் முறைப்படி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதன்படி தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்-2 செயல்படுத்தப்பட்ட 24 மாவட்டங்களைச் சார்ந்த 318 வட்டாரங்களில் உள்ள 19500 சமுதாய ஊட்டச்சத்து மையங்களில் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணி 3-வது திட்டமானது செயல்படுத்தப்படுகின்றது.



2000 ஏப்ரல் 17]

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் 6-36 மாதக் குழந்தைகளிடையே ஏற்படும் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் குறைத்து இயல்பு நிலையை உயர்த்துவது. கடந்த 1991 ஆம் வருடக்கணக்கின்படி, குறிப்பாக கிராமங்களில் 1000-க்கு 65 ஆக இருந்த சிசு மரண விகிதத்தைக் குறைப்பதுடன், குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையை 50 சதவிகிதமாகக் குறைப்பதாகும்.

### 1. திட்டத்தின் சாதனைகள்

இத்திட்டத்தின் மூலம் 1991 முதல் 1999 வரை 0-36 மாதக் குழந்தைகள் 40.80 இலட்சம் பேர் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டத்தில் இணை உணவு பெறப் பின்பற்றப்படும் தேர்வு நிலையின்படி 10.50 இலட்சம் 0-36 மாதக் குழந்தைகளும் 11.50 இலட்சம் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்களும் தேர்வு செய்யப்பட்டு, இணை உணவு வழங்கப்பட்டது. இத்திட்டப் பணிகளினால் இயல்பு நிலை குழந்தைகளின் எண்ணிக்கை சமுதாயத்தில் கடந்த 1996 ஆம் ஆண்டில் 43.8 விழுக்காட்டில் இருந்து, தற்போது 52.4 விழுக்காடாக அதிகரித்துள்ளதோடு, கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாட்டு நிலையானது 1996 ஆம் ஆண்டில் 1.3 விழுக்காட்டில் இருந்து தற்போது 0.4 விழுக்காடாகக் குறைந்துள்ளது. மேலும், மிதமான ஊட்டச்சத்துக் குறைபாட்டு நிலையானது 1996 ஆம் ஆண்டில் 14.9 விழுக்காட்டில் இருந்து தற்போது 9.8 விழுக்காடாகக் குறைந்துள்ளது.

### 2. இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோள்கள்

- 0-6 வயதுக் குழந்தைகளின் ஊட்டச்சத்து, சுகாதாரம், மன மற்றும் சமூக வளர்ச்சியினை மேம்படுத்தி குறிப்பாக 3 வயதிற்குட்பட்ட குழந்தைகளிடையே ஊட்டச்சத்துக் குறைபாட்டைத் தடுத்து, குழந்தை பராமரிப்புப் பழக்கத்தினைக் குடும்ப அளவில் மேம்படுத்துவது.

  பெண்களிடையே குறிப்பாக கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் இளம் பெண்கள் ஆகியோரின் ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல்.

  குடும்பத்தின் ஊட்டச்சத்து, சுகாதாரப் பிரச்சினைகள் சம்பந்தமாக தேவையான பராமரிப்பு பற்றிய விழிப்புணர்வை மேலோங்கச் செய்வது அதன் மூலம் தாய்மார்கள் மற்றும் இளம் பெண்களின் தன்னுரிமை மேம்பாட்டினை உயர்த்துவது.

**3. இத் திட்டத்தின் பயனாளிகள்**

- 0-3 வயது குழந்தைகள்
- 3-6 வயது குழந்தைகள்
- கர்ப்பிணித் தாய்மார்கள்
- பாலூட்டும் தாய்மார்கள்
- இளம் பெண்கள்
- சமுதாயக் குழுக்கள்/சமுதாயத் தலைவர்கள்

**4. அங்கன்வாடி மையத்தில் அளிக்கப்படும் திட்டப் பணிகள்**

- எடை எடுத்து வளர்ச்சி நிலையை உயர்த்துதல்
- தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இணை உணவு அளித்தல்
- குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பள்ளி முன்பருவக் கல்வி
- ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி
- சுகாதாரப் பணியாளர்கள் மூலம் (கிராம நல செவிலியர்/மருத்துவ அலுவலர்) சுகாதாரப் பணிகள் அளிப்பது
- மருத்துவ மேல் சிகிச்சைக்காகப் பரிந்துரைத்தல்

**5. திட்டத்தின் எதிர்காலம்**

திட்டம்-2-இன் மூலமாக ஏற்பட்ட பயன்களைத் தக்க வைத்துக் கொள்ளும் விதமாக இப்புதிய திட்டத்தில் இளம் பெண்களுக்கான ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரப் பணிகள், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டிற்காகச் செயல்படுத்தப்பட்ட பணிகளை ஒருங்கிணைத்தல், திட்டப் பணிகளைச் செயல்படுத்துவோருக்கான தேவையறிந்து பயிற்சியளித்தல், பெண்கள் தன்னுரிமை மேம்பாடு மற்றும் தரமான முழு ஆளுமை போன்ற புதிய வழிமுறைகள் மேற்கொள்ளப்படும். இத் திட்டத்தில் இன்னொரு புதிய வழிமுறையாக கிராம அளவிலான கண்காணிப்புக் குழு அமைக்கப்படும். குறிப்பிட்ட கிராமத்தைச் சார்ந்தவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு கிராம அளவில் செயல்படும் திட்டப் பணிகளின் செயல்பாட்டினை இக் குழு கண்காணிக்கும். மேலும் 0-2 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் கல்விக்காக முக்கியத்துவம் அளிக்கப்படும். பெண்கள் தன்னுரிமை



மேம்பாடு போன்ற பணிகளுக்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்படும். மேலும், மைய அரசின் கடிதம் நாள் 19-5-1999-இல் தேசிய அளவிலான உதிஷா (Udisha) பயிற்சித் திட்டத்தின்படி தமிழகத்தில் உள்ள 431 திட்டங்களுக்குப் பயிற்சியளிக்க ஒப்புதல் அளித்தது. அதாவது, இந்த நிதி ஒதுக்கீட்டில் ஆணையர், சமூக நலத் துறை அவர்களின்கீழ் இயங்கும் 113 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3-வது திட்டத்தைச் சார்ந்த 318 வட்டாரங்களுக்கும் பயிற்சியளிக்கப்படும். ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் செயல்பட்டு வரும் 113 திட்டங்களையும், உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3-ஆவது திட்டம் செயல்பட்டுவரும் 318 வட்டாரங்களையும் ஒருங்கிணைத்து, ஒரே துறையின்கீழ் செயல்படுத்துவது மற்றும் பணியாளர்களை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பணியமர்த்துவது குறித்த பிரேரணைகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3-ஆவது திட்டத்தின்கீழ் உபகரணங்கள், மருந்துப்பொருட்கள் மற்றும் தேவையான பொருட்கள் வாங்கிடவும், மாநிலத் திட்ட அலுவலகம், வட்டார ஆதார மையங்கள் செயல்பட 60 புதிய கட்டடங்கள் கட்டிடவும் அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, திட்டப் பணிகள் வெகுவாக முன்னேற்றமடைந்து வருகின்றன. அதன் விபரம் பின்வருமாறு:

| வரிசை எண் | பொருள் | ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மாவட்டங்களிலிருந்து தகவல் பெற ஏதுவாக நேரடி தொலைபேசி வசதியினை மேம்படுத்துதல் | 0.03 |
| 2. | வயிற்றுப் பூச்சி நீக்க மாத்திரைகள் மற்றும் இரும்புச் சத்து போலிக் அமில மாத்திரைகள் வழங்குதல் | 122.85 |
| 3. | 60 வட்டார ஆதார மைய அலுவலகங்கள் கட்டுதல் | 300.00 |

[2000 ஏப்ரல் 17

| வரிசை எண் | பொருள் | ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 4. | முன்பருவக் கல்வி உபகரணங்கள் வாங்கி வழங்குதல். | 97.50 |
| 5. | எடை எடுக்கும் கருவிகள் வாங்கி வழங்குதல் | 3.18 |
| 6. | அங்கன்வாடி மையங்களுக்கு மருந்துகள் பேணும் பெட்டிகள் வாங்கி வழங்குதல் | 48.75 |
| 7. | அங்கன்வாடி மையங்களுக்கு விளையாட்டுச் சாதனங்கள் வாங்கி வழங்குதல் | 58.50 |
| 8. | அங்கன்வாடி மையங்களுக்கு ஆலோசனை அட்டை வழங்குதல் | 25.00 |
| 9. | அங்கன்வாடி மையங்களுக்குப் பயிற்சிக் கையேடு வழங்குதல் | 25.00 |
| 10. | மாநிலத் திட்ட செயலாக்க அலகிற்கு பேக்ஸ் இயந்திரம் வாங்குதல் | 0.20 |
| 11. | மாநிலத் திட்ட செயலாக்க அலகிற்கு 2 கார்கள் வாங்குதல் | 6.85 |
| 12. | 2306 குழந்தை எடைக் கருவிகள் பழுதுபார்த்தல் | 2.31 |
| 13. | அங்கன்வாடி மையங்களுக்குத் தேவையான பாத்திரங்கள் வழங்குதல் | 390.00 |
| 14. | பரிசுகளும் ஊக்கத் தொகையும் | 6.00 |
| 15. | 6,250 அங்கன்வாடி மையங்கள் பழுதுபார்த்தல் | 437.50 |
| 16. | கணிப்பொறி மற்றும் உபகரணங்கள் வாங்குதல் | 24.64 |
| | மொத்தம் | 1,548.31 |



2000 ஏப்ரல் 17]

**6. புதிய மாவட்ட திட்டக் குழுக்கள்**

தேனி, திருவாரூர், நாமக்கல், பெரம்பலூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3-ஆவது திட்டத்தின் திட்டக் குழு அலுவலகம் புதிதாக ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**7. திட்ட மதிப்பீடு**

இத்திட்டத்தினை 1998-99 முதல் 2003-2004 வரை ஐந்து வருடங்களுக்குச் செயல்படுத்த, உலக வங்கியால் ரூ.86.95 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் தேசிய அளவில் நடத்தப்படும் உதிஷா பயிற்சித் திட்டத்தின்படி 1-4-1999 முதல் ஐந்து வருடங்களுக்குப் பயிற்சியளிக்க ரூ.25.41 கோடி நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

**2.17 கவனமும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தைகள்**

தமிழக அரசு, சமூகத்தில் ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகளின் நலத்திற்காக மிகவும் பாடுபடுகிறது. இக் குழந்தைகளின் நலத்திற்காக இத் துறையின் மூலம் 25 ஆதரவற்ற குழந்தைகள் காப்பகங்கள், 5,500 குழந்தைகள் பயனடையும் வகையில் இயங்கி வருகின்றன. 5 வயது முதல் 18 வயது வரையில் உள்ள ஆதரவற்ற, கைவிடப்பட்ட குழந்தைகள் இவ்வில்லங்களில் சேரலாம். அரசு இவர்களுக்கு உணவு, உறைவிடம், கல்வி, மருத்துவ வசதி வழங்குகிறது. இக் குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளுடன் உடை, குறிப்பேடுகள், பாடநூல்கள், காலணிகள் மற்றும் படுக்கை வசதிகள் வழங்கப்படுகின்றன. மற்ற பள்ளிகளில் பயிலும் குழந்தைகளைப் போல் அரசு குழந்தைகள் காப்பகங்களில் பயிலும் குழந்தைகளும் காலணி அணிய வேண்டும் என்ற நோக்கத்துடனும், மேலும் அக்குழந்தைகள் பூச்சிக்கடி மற்றும் பல்வேறு வகையான தொற்று நோய்களுக்கு ஆளாவதைத் தவிர்க்கும் பொருட்டும் மேற்படி குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.50 மதிப்புடைய காலணி வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் இக் குழந்தைகளுக்குச் சீருடை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் 1999-2000-ஆம் ஆண்டிலிருந்து அரசு குழந்தைகள் காப்பகக் குழந்தைகளுக்கு யோகா மற்றும் தற்காப்புக் கலைகள் கற்பிப்பதற்கான வகுப்புகள் பகுதி-2 திட்டத்தின்கீழ் 10 அரசுக் குழந்தைகள் காப்பகங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

[2000 ஏப்ரல் 17

மேலும், காப்பகக் குழந்தைகளின் தினசரி வாழ்க்கையிலிருந்து சில மாற்றங்கள் ஏற்படுத்தும் வகையில் குழந்தைகளை அருகிலுள்ள இடங்களுக்குச் சுற்றுலா அழைத்துச் செல்லும் திட்டம் 1999-2000 ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்விடுதிகளின் தரத்தினை உயர்த்துவதற்கு இடைவிடாக் கண்காணிப்பும், ஆய்வும் அவசியமாகும். இந்நிறுவனங்கள் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காக ஆலோசனை அளிப்பதற்கென அரசு, தலைசிறந்த சமூகப் பணியாளர்களைக் கொண்ட குழு ஒன்றினை அமைத்துள்ளது. இவ்வில்லங்கள் நல்ல நிர்வாக அமைப்பில் இயங்க ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றினை ஒவ்வொரு அரசு குழந்தைகள் காப்பகத்திற்கும் ஏற்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. இவ்வாறு அமைக்கப்பட்ட இக்குழுவின் கால வரம்பு முதல் கூட்ட நாளினின்று மூன்றாண்டுகளாகும். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இக்குழு கூடும். இக்குழுவில் நால்வர் அலுவல் சார்புள்ள உறுப்பினர்கள், மூவர் அலுவல் சார்பற்ற உறுப்பினர்கள் ஆவர். இக்குழுவின் உறுப்பினர்கள் விவரம் கீழ்வருமாறு:

| | | |
|---|---|---|
| (1) | மாவட்ட ஆட்சித் தலைவர் | தலைவர் |
| (2) | மாவட்டக் கல்வி அதிகாரி | அலுவல் சார்புள்ள உறுப்பினர் |
| (3) | அனாதை இல்லத்தின் பகுதி நேர மருத்துவ அலுவலர் | அலுவல் சார்புள்ள உறுப்பினர் |
| (4) | மாவட்ட சமூக நல அலுவலர் | அலுவல் சார்புள்ள உறுப்பினர்/செயலர் |
| (5) | மாவட்டப் பிரதிநிதியாக மாநில சமூக நல வாரிய உறுப்பினர் | அலுவல் சார்பற்ற உறுப்பினர் |
| (6) | மாவட்ட ஆட்சித் தலைவரால் நியமிக்கப்படும் முன்னணியிலுள்ள இரண்டு சமூக சேவகர்கள் | அலுவல் சார்பற்ற உறுப்பினர்கள் |

ஆதரவற்ற குழந்தைகளை இந்த இல்லங்களில் சேர்த்தல், வெளியேற்றல், கல்வி மற்றும் குழந்தைகளின் உடல்நலம் போன்றவற்றில் இவ்வில்லங்கள் அமைந்துள்ள முன்னேற்ற நடவடிக்கைகளை ஆய்வு



2000 ஏப்ரல் 17]

செய்தல், ஆதரவற்ற குழந்தைகளின் நலனிற்கு எதிராக வரும் புகார்களைக் கவனித்தல் மற்றும் இவ்வில்லங்களை நிர்வகிக்க அந்தந்த மாவட்ட சமூக நல அலுவலருக்கு அறிவுரை வழங்குதல் போன்றவை இக்குழுவின் பணிகளாகும். ஆலோசனைக் குழுவின் தலைவருக்கு குழந்தைகள் அனைத்துப் புகார்களையும் அனுப்பலாம்.

அரசு குழந்தைக் காப்பக இல்லங்கள் திறம்படச் செயல்படுவதற்கு இவ்வாலோசனைக் குழுக்கள் நிரந்தரமாகச் செயல்பட ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆண்டொன்றிற்கு ரூ. 1000-க்கு மிகாமல் செலவு மேற்கொள்ள அரசு அனுமதி வழங்கியுள்ளது.

மேலும் இத்திட்டத்திற்கு தற்போது அன்னை சத்யா அம்மையார் நினைவு ஆதரவற்ற குழந்தைகள் காப்பகங்கள் என தமிழக அரசால் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

2000-2001 ஆம் ஆண்டில் ரூ.44.579 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**2.18. பள்ளி மாணவர்களுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டம்**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளிக் குழந்தைகளுக்கு ஆண்டுதோறும் ஓர் இணை இலவசச் சீருடை வழங்கும் திட்டம் 1985-86 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சீருடைகளைத் தைத்து வழங்கும் பொறுப்பு சமூக நல ஆணையருக்கு அளிக்கப்பட்டுள்ளது. சீருடைகளைத் தைப்பதற்குத் தேவையான துணிகள் கோ-ஆப்டெக்ஸ் மற்றும் தமிழ்நாடு துணி நூல் கழகத்திடமிருந்து, கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் மூலம் வாங்கப்படுகின்றன. சமூக நல ஆணையரின் கட்டுப்பாட்டில் இயங்கும் மகளிர் தையற் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் சீருடைகள் தைக்கப்பட்டு கல்வித் துறை அலுவலர்கள் மூலமாக பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. 1998-99 ஆம் ஆண்டு முதல் இலவசச் சீருடை ஒன்றுக்கு 50 பைசா வீதம் தையற்கூலி உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இலவசச் சீருடைத் திட்டத்தின்கீழ் 1999-2000 ஆம் ஆண்டிற்கு 60 இலட்சம் இணை சீருடைகள் தைக்கப்பட்டு பயனாளிகளுக்கு 2000 ஆம் ஆண்டு ஜூன் - ஜூலை மாதங்களில் பள்ளிகள் திறந்தவுடன் விநியோகம் செய்யப்படும். 2000-2001 ஆம் ஆண்டிற்கும் இத்திட்டத்தினை கொள்கை அளவில் தொடர்ந்து செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. இதற்காக ரூ.5,671 இலட்சம் (ரூ.5,088 இலட்சம் துணி விலை மற்றும்

ரூ. 583 இலட்சம் தையற் கூலி) தொடக்கக் கல்வித் துறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சீருடைகளின் தரம் மற்றும் அளவு குறித்து அவ்வப்போது பரிசோதிக்க மாவட்ட ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோ-ஆப்டெக்ஸ் மற்றும் தமிழ்நாடு துணி நூல் கழகம் தரமான துணிகளை வழங்கிடவும், வழங்கப்படும் துணியில் ஒவ்வொரு மீட்டர் இடைவெளியிலும் "தமிழ்நாடு அரசு இலவசச் சீருடைத் திட்டம்" என்ற முத்திரையினைப் பொறித்து வழங்கவும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

## 2.19. தமிழ்நாடு அரசு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

பெண் குழந்தைகளின் மதிப்பை உயர்த்த, ஆண் குழந்தைகள் வேண்டும் என்ற எண்ணத்தை மாற்ற, குடும்ப நலத்தை மேம்படுத்த, பெண் குழந்தைகளின் பெற்றோருக்குப் பெண்களின் மேற்கல்விக்காகவும் திருமணத்திற்காகவும் இந்த நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் பெண் குழந்தை தன்னம்பிக்கையுடன் வளர்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1997-98 முதல் திருத்தம் செய்யப்பட்ட பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஆண் குழந்தை இல்லாத ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் உள்ள 40 வயதிற்குட்பட்ட தாய் கருத்தடைச் சிகிச்சை செய்து கொண்டால் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் மூலம், ஒரு பெண் குழந்தை இருந்தால் ரூ. 3000-ம் இரு பெண் குழந்தைகள் இருந்தால் தலா ரூ. 1500-ம் 5ஆண்டு நிரந்தர வைப்புத் தொகை இரசீதாக அக்குழந்தைகள் பெயரில் வழங்கப்படும். அப்பெண் குழந்தை 20 வயது ஆகும் வரை ஐந்தாண்டுக்கு ஒரு முறை கட்டாயமாக இந்த இரசீதைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். இதனால் கிடைக்கும் பணம் அப்பெண் குழந்தை 20 வயது ஆகும் போது வழங்கப்படும். உத்தேசமாக ரூ. 1,500 முதலீட்டிற்கு ரூ. 29,000-ம் ரூ. 3,000 முதலீட்டிற்கு ரூ.58,000-ம் கிடைக்கும். இதுவரை இத்திட்டத்தின்கீழ் 82,914 குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளன இதுவரை ரூ. 12.55 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதில் 1999-2000 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட ரூ. 2.25 கோடியும் சேர்ந்துள்ளது. இத்தொகை 14,790 குழந்தைகளுக்கு பயனளிக்கப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டிற்கு ரூ. 6.65 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



மேற்படி திட்டம் தற்போது, "அன்னை சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## 2.20. தத்துக் கொடுத்தல்

தத்தெடுத்தல் என்பது அனாதையாக்கப்பட்ட, ஆதரவற்ற, கைவிடப்பட்ட மற்றும் புறக்கணிக்கப்பட்ட சூழலில் உள்ள குழந்தைகள் குடும்பச் சூழலில் வளர்வதற்கு ஒரு முக்கியமான வாய்ப்பாக அமைகிறது. தத்தெடுத்தல் மூலம் குழந்தைகளுக்கு அன்பும், அரவணைப்பும், பிரத்யேகக் கவனிப்பும் கிடைக்கிறது. அவர்களுடைய தனித் தன்மை மற்றும் செயல் திறன் அறிவதற்கும் வழிவகை செய்கிறது.

மேலும் குழந்தைகள் உணர்வளவிலும், உடலளவிலும், அறிவாற்றலளவிலும் மற்றும் பொருளாதார அளவிலும் இயல்பாக வளர தத்தெடுத்தல் உதவுகிறது. அத்துடன் இக்குழந்தைகள் சமுதாய மற்றும் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்கும் தத்தெடுத்தல் ஒரு கருவியாக உள்ளது. தமிழ்நாட்டில் சென்னை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம், கோயம்புத்தூர், திண்டுக்கல், தேனி, தூத்துக்குடி, உதகமண்டலம் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் 17 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டு குழந்தைகளை உள்நாட்டில் தத்துக் கொடுக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த 17 நிறுவனங்களில் 8 நிறுவனங்களுக்கு அயல் நாடுகளிலும் குழந்தைகளைத் தத்துக் கொடுப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. பிற மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒரு நிறுவனம் வீதம் இத்திட்டத்தைச் செயல்படுத்த உரிமம் வழங்க வேண்டும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு தத்து திட்டம் தொடர்பாகப் பொது மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. அதற்காகச் சுவரொட்டிகள் அச்சிடப்பட்டு மாவட்ட சமூக நல அலுவலர்கள் மூலம் பொதுமக்களுக்கும் இதர துறை அலுவலர்களுக்கும் விநியோகிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் நவம்பர் 1999-ல் தத்து தினம் கொண்டாடப்பட்டது. மண்டல வாரியாக கருத்தரங்கம் சேலம், செங்கற்பட்டு, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் நடத்தி, தத்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. புதிதாக உரிமம் பெறப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு சமூகப் பணியாளர்கள் மூலம் பயிற்சி

அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 17 நிறுவனங்களில் பணிபுரிந்து வரும் சமூகப் பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தகவல் தொடர்பு வலையும் — "tn.adoptchild.com" — ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் தத்து திட்டம் தொடர்பாகத் தெரிந்துகொள்ள வேண்டிய அனைத்து விபரங்களும் அதனைச் செயல்படுத்தும் நிறுவனங்களின் பட்டியலும் அதன் தொடர்பான சட்டங்களும், தத்தெடுப்பது தொடர்பான இதர விவரங்களும் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

குழந்தைகளைத் தத்துக் கொடுக்கும் திட்டத்தைச் செயல்படுத்தும் அங்கீகாரம் பெற்ற தன்னார்வுத் தொண்டு நிறுவனங்களின் செயல்பாட்டை ஆய்வு செய்வதற்காக, சமூக நலத் துறைச் செயலர் தலைமையில், பல்வேறு துறைகளில் உள்ள நிபுணர்களைக் கொண்டு மாநில ஆலோசனைக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இக்குழுவின் தலைமையில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஆய்வுக் கூட்டத்தை அரசு தொடர்ந்து நடத்தி வருகிறது. இக்கூட்டத்தில். அவ்வப்போது வழங்கப்படும் ஆலோசனைகளின்மீது அரசு மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், தத்து குறித்தத் திட்டங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் சீரிய முறையில் செயல்படுத்திட மாவட்ட சமூக நல அலுவலர்களைப் "பற்றாளராக" அரசு நியமித்துள்ளது.

இயக்ககத்தில் தத்தெடுத்தல் தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட தகவல் மையத்தினை மேலும் வலுப்படுத்த விவரங்கள் பிற மாநிலங்களிலிருந்தும்/ நாடுகளிலிருந்தும் சேகரிக்க புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகளை வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழக அரசு தத்தெடுத்தல் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்நடவடிக்கைகளுள் ஒன்றாக, இரண்டு மில்லியன் அஞ்சல் அட்டையில் கீழ்க்காணும் வாசகங்களுடன் தத்து குறித்து விளம்பரம் செய்வதற்கு அரசு ரூ.2.00 இலட்சத்தை ஒதுக்கீடு செய்துள்ளது:

"ஆதரவற்ற குழந்தைகள் நாட்டின் உடைமை
அவர்களைத் தத்தெடுப்பது நமது கடமை"
"தத்தளிக்கும் குழந்தைகளைத் தத்தெடுப்போம்
அவர்களின் தித்திக்கும் மழலையைச் செவிமடுப்போம்"



## 2.21. குழந்தைகளின் நலனில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பு

தமிழக அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் பாதுகாப்பும், பராமரிப்பும் தேவைப்படும் குழந்தைகள் நலத் திட்டத்தில் கட்டடங்கள் கட்டுவதற்கும், குழந்தைகளைப் பராமரிப்பதற்கும், தன்னார்வ நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்படுகின்றன. இதில் 80 சதவீதம் மானியமாக மாநில அரசு 1-4-1992 முதல் வழங்குகிறது. 20 சதவீதம் நிறுவனமே ஏற்றுக்கொள்கிறது. இம்மானியம் தொடர் செலவினமாக உணவு, உடை போன்றவற்றிற்கு ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு ரூ.250 வீதம் வழங்கப்படுகிறது. இவ்வில்லங்களை சமூக நல இயக்ககத்தில் உள்ள அலுவலர்கள் முறையாகப் பார்வையிடுகிறார்கள்.

2000-2001 ஆம் ஆண்டிற்கு ரூ.308.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

177 நிறுவனங்களில் பயன்பெறும் 14,377 குழந்தைகளுக்காக 2000-2001 வருடத்திற்கு ரூ.308 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.22. முதியோர் இல்லங்கள்

மாறிவரும் குடும்பச் சூழ்நிலை, பழக்கவழக்கங்கள் இவற்றின் காரணமாகக் கூட்டுக் குடும்பச் சூழ்நிலை மாறி வருகின்றது. இதன் காரணமாக முதியோர்களின் நலனைக் காப்பதில் தேக்கம் ஏற்பட்டு ஆதரவற்ற நிலைமைக்குத் தள்ளப்படுகின்றனர். வறுமை நிலையில் உள்ள குடும்பத்தைச் சார்ந்த முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற நிலையில் உள்ள முதியோர்கள் ஆகியவர்களில் அன்றாட வாழ்வில் உணவு, உறைவிடம் இன்றி துயருறுவோர் பலர் உள்ளனர். இவர்களுடைய துயர் களைய தனியார் தொண்டு நிறுவனங்களின் மூலம் தற்போது 7 இல்லங்களில் 280 முதியோர்கள் தங்கிப் பயன்பெறும் வகையில் அரசு நிதி உதவி அளிக்கிறது.

2000-2001 ஆம் நிதியாண்டிற்கு ரூ.6.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முதியோர்களுக்கு உணவுச் செலவிற்காக மாதம் ஒன்றுக்கு ஒருவருக்கு ரூ.250 வீதம் மானியம் மாநில அரசால் அளிக்கப்படுகிறது. அவ்வப்பொழுது சமூக நல இயக்ககத்திலிருந்து சம்பந்தப்பட்ட அலுவலர் அந்நிறுவனங்களுக்குச் சென்று இத்திட்டம் சரிவரச் செயல்படுகிறதா என்பதை ஆய்வு செய்தும் வருகின்றார்.

[2000 ஏப்ரல் 17

## 2.23. கருணை இல்லங்கள்

தமிழகத்தில் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் தற்போது 43 கருணை இல்லங்கள் இயங்கி வருகின்றன. கருணை இல்லங்களுக்கு ஆகும் செலவில் 50 சதவீதம் அரசு மானியமாக சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. திருக்கோயில்களால் நடத்தப்பட்டு வரும் கருணை இல்லங்களின் 1,397 குழந்தைகளுக்கு உணவு மற்றும் நிர்வாகச் செலவிற்காக ஒரு குழந்தைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.467 அளிக்கப்படுகிறது. படுக்கைச் செலவினத்திற்காக ஆண்டொன்றுக்கு ரூ.20 வழங்கப்படுகிறது.

2000-2001ஆம் ஆண்டிற்காக ரூ. 86.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.24. அரசு மறுவாழ்வு இல்லங்கள்

தொழுநோயால் அவதியுறும் ஏழை நோயாளிகளின் நோயைக் குணப்படுத்தவும் அவர்களுக்குப் புதுவாழ்வு அளிக்கவும் தமிழ்நாடு அரசு கீழ்க்காணும் 10 இடங்களில் தொழுநோய் மறுவாழ்வு இல்லங்களை அமைத்து உள்ளது. 1971 ஆம் ஆண்டு முதல் 1974 ஆம் ஆண்டுக்குள் அனைத்து மறுவாழ்வு இல்லங்களும் தொடங்கப்பட்டன.

1. பரனூர் - காஞ்சிபுரம் மாவட்டம்
2. உளுந்தூர்பேட்டை - விழுப்புரம் மாவட்டம்
3. பர்கூர் - தருமபுரி மாவட்டம்
4. புதுக்கோட்டை - புதுக்கோட்டை மாவட்டம்
5. விண்ணப்பள்ளி - ஈரோடு மாவட்டம்
6. மனையேறிப்பட்டி - தஞ்சாவூர் மாவட்டம்
7. ஒய். புதுப்பட்டி - மதுரை மாவட்டம்
8. மல்லவாடி - திருவண்ணாமலை மாவட்டம்
9. செல்லியம்பட்டி - தருமபுரி மாவட்டம்
10. தேவியாக்குறிச்சி - சேலம் மாவட்டம்



2000 ஏப்ரல் 17]

### அனுமதி மற்றும் விடுவித்தல்

ஒவ்வொரு இல்லத்திலும் 400 பெரியவர்களும் 25 சிறுவர்களும் (ஆண், பெண் உட்பட) தங்குவதற்கு வசதியுள்ளது. தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ள தானாக வரும் நோயாளிகளும், பிச்சை எடுத்ததற்காகத் தண்டனை பெற்றவர்களும் பிரத்யேகமாக அமைந்துள்ள உளுந்தூர்பேட்டை மறுவாழ்வு இல்லத்தில் அனுமதிக்கப்படுகிறார்கள். மணமானவர்களின் கணவரோ அல்லது மனைவியோ தொழுநோயால் பாதிக்கப்பட்டு பிச்சை எடுப்பவராக இருந்தால் மற்றவரையும் இல்லத்தில் சேர்க்க அனுமதி உள்ளது. அவர்களுக்குக் குழந்தைகள் இருப்பின் அவர்களும் இவ்வில்லங்களில் சேர்க்கப்படுகின்றனர். இல்லவாசிகள் நோய் தொற்றாதவகையினர் என இல்ல மருத்துவரால் சான்றளிக்கப்பட்டாலோ, தானே சுயமாகச் சம்பாதிக்கக்கூடியவர்கள் எனக் கருதப்பட்டாலோ, நிர்வாகத்திற்கு மீண்டும் மீண்டும் இடையூறாகவும் ஒழுங்கீனமாகவும் நடந்துகொள்ளும் இல்லவாசிகளும் இல்லத்திலிருந்து விடுவிக்கப்படுகின்றனர். 1997-ல் இல்லவாசிகளை புதியதாகச் சேர்க்கக்கூடாது என்று இருந்த தடையாணை நீக்கப்பட்டபின் புதியதாக 240 பேர் சேர்க்கப்பட்டு மறுவாழ்வு பெறுகிறார்கள்.

### உள்ளுறைவோருக்கு அளிக்கப்படும் வசதிகள்

உள்ளுறைவோருக்கு இலவசமாகத் தங்க வசதியும், உணவு, உடை, மருத்துவ வசதி மற்றும் பல தொழில்களில் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. அவர்கள் விளையாடுவதற்கான வசதியும் திரைப்படம் மற்றும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வசதியும், நூலகம் போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

### அ. உணவு

தொழுநோயால் பாதிக்கப்பட்ட இல்லவாசிகளுக்கு நாளொன்றுக்கு ரூ.15 வீதமும் அவர்களுடைய குழந்தைகளுக்கும், சார்ந்துள்ளவர்களுக்கும் நாளொன்றுக்கு ரூ.10 வீதமும் வழங்கப்படுகின்றன. காந்தி ஜெயந்தி, சுதந்திர தினம், குடியரசு தினம், தொழுநோயாளிகள் தினம், மற்றும் தேசிய விடுமுறை நாட்களிலும் ஒவ்வொரு உள்ளுறைவோருக்கும் ரூ.5 கூடுதலாக சிறப்புணவுத் தொகை வழங்கப்படும்.

**ஆ. இருப்பிடம்**

உளுந்தூர்பேட்டை, பர்கூர் மறுவாழ்வு இல்லங்களைத் தவிர மற்ற எல்லா இல்லங்களும் குடும்பத்தினர்கள் தங்கக்கூடிய அறைகள் கொண்ட 4 தொகுதிகளாக கீழ்த் தளத்தில் அமைந்துள்ளன. மேலும், முதல் மாடியில் தனி நபர் தங்குவதற்கு துயில்கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. உளுந்தூர்பேட்டை மற்றும் பர்கூர் இல்லங்கள் ஒற்றைத்தளக் கட்டடமாகவும், நிரந்தரக் கொட்டகைகளாகவும் உள்ளன.

**இ. உடை, பாய் போன்றவை**

உள்ளுறைவோருக்கு இரண்டு இணை உடைகள் வழங்கப்படுகின்றன. அண்மையில் பொங்கலை முன்னிட்டு இலவசச் சேலைகளும், வேட்டிகளும் உள்ளுறைவோருக்கு வழங்க ஆணையிடப்பட்டது. புண்ணாவதைத் தவிர்ப்பதற்காக உள்ளுறைவோருக்கு நுண்ணிய துளைகளுடன் கூடிய இரப்பர் காலணிகள் அளிக்கப்படுகின்றன. மேலும் தேவைப்படுகிற இல்லவாசிகளுக்கு சிறப்புக் காலணிகள் வழங்கப்படுகின்றன. செயற்கைக் கால் பொருத்துவதற்காக ஆண்டு ஒன்றுக்கு ஒவ்வோர் இல்லத்திற்கும் ரூ.1000 வழங்கப்படுகிறது. தட்டு, டம்ளர் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறையும், பாய் ஒவ்வோர் ஆண்டும், போர்வை மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறையும் வழங்கப்படுகின்றன.

**ஈ. மருத்துவ வசதிகள்**

உள்ளுறைவோருக்கு மருத்துவச் சிகிச்சை இலவசமாக அளிக்கப்படுகிறது. இரண்டு மருத்துவ அதிகாரிகள், இரண்டு செவிலியர்கள், ஓர் ஆய்வுக்கூட தொழில்நுட்பப் பணியாளர்; ஒரு மருந்தாளுநர், ஓர் உடற்கூறு பயிற்சியாளர், ஒரு பேறுகால உதவியாளர், ஓர் உதவி ஆண் செவிலியர், ஓர் உதவி பெண் செவிலியர் முதலானவர்கள் ஒவ்வோர் இல்லத்திலும் உள்ளுறைவோரின் மருத்துவத் தேவைகளைக் கவனிக்கின்றனர். எல்லாவித வசதிகளும் கொண்ட அறுவைச் சிகிச்சைக் கூடங்கள் பர்கூர், உளுந்தூர்பேட்டை இல்லங்கள் தவிர்த்து மற்ற இல்லங்களில் உள்ளன. கைவிரல் முடமானவர்கள், கால் விளங்காதவர்கள் மற்றும் உடற்கூறு சரியில்லாத நிலையில் உள்ளவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது. ஒவ்வோர் இல்லத்திற்கும் மூக்குக் கண்ணாடி வாங்குவதற்காக ரூ.2000 அனுமதித்துள்ளது. மேலும் ஒவ்வொரு வருடத்திற்கும் பல்துலக்கும் தூரிகை வாங்குவதற்காக ஓர் இல்லத்திற்கு வருடத்திற்கு ரூ.2000



வழங்கப்பட்டு வருகிறது. உள்ளுறைவோர்கள் இறந்துவிட்டால் அவர்களுடைய ஈமக் காரியங்களுக்காக அரசு ரூ.200 அனுமதித்துள்ளது.

**உ. உடற்கூறு பயிற்சியும் தொழிற்பயிற்சியும்**

ஒவ்வோர் இல்லத்திலும், ஓர் உடற்கூறு பயிற்சியாளர் உள்ளார். மின்கருவி (எலெக்ட்ரிகல் ஸ்டிமலேட்டர்) மெழுகுப் பூச்சு சாதனத்தொட்டி (வாக்ஸ் பாத்) ஆகியவற்றின் உதவியைக் கொண்டு ஊனமுற்ற உறுப்பினர்களுக்கும் உடற்கூறு பயிற்சி தேவையுள்ள உள்ளுறைவோர் அனைவருக்கும் உடற்கூறு பயிற்சியாளர்களால் பயிற்சி அளிக்கப்படுகிறது. புண் மற்றும் உறுப்பு சிதைந்து சிரமப்படும் நோயாளிகளை உடற்கூறு பயிற்சியாளர்களும் மற்றும் மருத்துவ அதிகாரிகளும் அறுவைச் சிகிச்சைக்காகத் தேர்ந்தெடுக்கின்றனர்.

**ஊ. பொழுதுபோக்கு வசதிகள்**

ஒவ்வோர் இல்லத்திலும் விளையாட்டுப் பொருட்களை வாங்குவதற்கு ரூ.1200 அரசு அனுமதித்துள்ளது. மேலும் இல்லவாசிகள் பொழுது போக்குக்காக வருடத்திற்கு ரூ.400-க்கு இசைக்கருவிகள் வாங்கிட அனுமதிக்கப்பட்டுள்ளது.

**எ. கல்வி மற்றும் இதர வசதிகள்**

இவ்வில்லவாசிகளில் இலக்கியம் மற்றும் பொதுக் கல்வி மேம்பாட்டிற்காக இரண்டு செய்தித்தாள்கள் மற்றும் இலக்கியப புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

**உள்ளுறைவோரின் குழந்தைகளுக்கான வசதிகள்**

தொழுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் சேலம் மாவட்டத்திலுள்ள ஆத்தூர் தாலுகாவில் ஏத்தாப்பூர் என்னுமிடத்தில் நடத்தப்படும் சிறப்புப் பள்ளியில் அனுமதிக்கப்படுகின்றனர். மேற்படி நோயினால் பாதிக்கப்படாத குழந்தைகள் கூடுமான வரையில் தனியாகப் பிரிக்கப்பட்டு, இவ்வில்லங்களுக்கு அருகிலுள்ள பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர்.

சீருடை, புத்தகங்கள், பெட்டி முதலியவற்றிற்காக ஒவ்வொரு குழந்தைக்கும் ஆரம்பச் செலவினமாக அரசு ரூ.75 வழங்குகிறது.

பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு கல்விக்காக ஆண்டு ஒன்றுக்கு கீழ்க்கண்டவாறு செலவினம் வழங்கப்படுகிறது:

இரண்டாம் வகுப்பு முதல் ஏழாம் வகுப்பு வரை ரூ.20

எட்டாம் வகுப்பு மற்றும் ஒன்பதாம் வகுப்புக்கு ரூ.30

பத்தாம் வகுப்பிற்கு ரூ.50

மேல்நிலை வகுப்பு (முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டுகளுக்கு ஆண்டுக்கு ரூ.75)

**உள்ளுறைவோர் மறுவாழ்வுக்கான நடவடிக்கைகள்**

இவ்வில்லங்களில் அனுமதிக்கப்பட்டுள்ள தொழுநோயாளிகள் உடல்நலத்துடன் இருப்போருக்கு கீழ்க்கண்ட துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது:

1. துணி நெய்தல் (கைத்தறி, விசைத்தறி)
2. பாய் பின்னுதல்
3. காலணி தயாரித்தல் மற்றும் பழுதுபார்த்தல்
4. தையல்
5. தச்சுவேலை
6. விவசாயம்
7. ஊரக நூற்பு மையங்களில் அம்பர் சர்க்கா பயிற்சி (யா.புதுப்பட்டி மற்றும் உளுந்தூர்பேட்டை)

**கைத்தறிகள் மற்றும் விசைத்தறிகள்**

தற்போது 135 கைத்தறிகளும் 77 பாய்த்தறிகளும் பத்து இல்லங்களில் உள்ளன. இல்லவாசிகளால் தயாரிக்கப்படும் பொருட்கள் அவர்களின் தேவைகள் போக மீதமுள்ளவை அருகிலுள்ள மாவட்ட மருத்துவமனைகளுக்கு விற்கப்படுகின்றன. யா.புதுப்பட்டி மற்றும் உளுந்தூர்பேட்டை இல்லங்களில் நிறுவப்பட்டுள்ள ஊரக நூற்பாலைகளில் மாதத்திற்கு 10,000 சிட்டங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. 34 தையல் இயந்திரங்கள் இவ்வில்லங்களில் உள்ளன. இல்லவாசிகளுக்கு வழங்கப்படும் உடைகள் தையல் கலையில் தேர்ச்சி பெற்ற இல்லவாசிகளாலேயே தைக்கப்பட்டு அளிக்கப்படுகின்றன.

**குணமடைந்த தொழுநோயாளிகளுக்கு மறுவாழ்வு அளித்தல்**

சமூக நலத் துறையின் மூலம் செயல்படும் 10 மறுவாழ்வு இல்லங்களில் உள்ள குணமடைந்த தொழுநோயாளிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும்



வகையிலும் அவர்களுடைய சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையிலும் டானிடா நிறுவனம் உதவி வருகிறது.

டானிடா நிறுவனம் ஒவ்வொரு கட்டமாக 1997 முதல் 2002 வரை இத்திட்டங்களை அமல்படுத்தும் வகையில் நிதியுதவி அளித்து வருகிறது.

அதில் முதற்கட்டமாக செப்டம்பர் 1997 முதல் ஆரம்பிக்கப்பட்டு மார்ச் 2000 வரை அமல்படுத்தப்பட்டு முடிக்கப்பெற்றது. முதற்கட்டமானது பரனூர், மல்லவாடி, உளுந்தூர்பேட்டை, தேவியாக்குறிச்சி, செல்லியம்பட்டி ஆகிய 5 மறுவாழ்வு இல்லங்களில் செயல்படுத்தப்பட்டது.

டானிடா மூலம் குணமடைந்த தொழுநோயாளிகளுக்கு வேளாண்மைத் தொழில் சம்பந்தமான பல்வேறு பயிற்சிகள் அளித்து அவர்களை அத்தொழிலில் ஈடுபடும் வகையில் ஊக்குவிக்கப்படுகிறது. அதில் சிறப்பாக நீர் ஆதார வளர்ச்சி, நில மேம்பாடு மற்றும் மண்வளப் பாதுகாப்பு ஆகியவற்றிலும் பயிரிடுதல் சம்பந்தமான குறுகிய காலப் பயிர்கள், இடைக்காலப் பயிர்கள், நீண்டகாலப் பயிர்கள் என்னென்ன என்பதையும் அவற்றை எவ்வாறு பயிரிடுதல் என்பதைப் பற்றியும் அறிந்துகொள்ளும் வகையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேலும் கால்நடை மற்றும் விவசாயப் பொறியியல் துறை மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு விவசாய அமைப்பு முறைகள் ஆகியவை சம்பந்தமாக சம்பந்தப்பட்ட துறைகள் முறையான பயிற்சிகளையும் வழங்கி வருகிறது.

மல்லவாடி மற்றும் பர்கூர் அரசு மறுவாழ்வு இல்லங்களில் பால் தேவையை தன்னிறைவாக்கும் பொருட்டு திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

**வண்ண மீன்கள் வளர்ப்புத் திட்டம் (முன்னோடித் திட்டம்)**

உலக சுகாதார அமைப்பானது டானிடா மூலம் பல்வேறு திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கிறது. அதில் உணவு மற்றும் விவசாய அமைப்பு நிறுவனத்தின் மூலம் முன்னோடித் திட்டமான வண்ண மீன்கள் வளர்ப்புத் திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கிறது. இந்த முன்னோடித் திட்டம் பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்தில் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களால் 2-2-2000 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

[2000 ஏப்ரல் 17

இரண்டாவது கட்டமாக ஏப்ரல் 2000 முதல் மேற்கூறிய செயல்பாடுகள் பர்கூர் அரசு மறுவாழ்வு இல்லத்தில் தொடங்கப்பட்டுள்ள நிலையில் விண்ணம்பள்ளி, புதுக்கோட்டை, யாபுதுப்பட்டி, மனையேறிப்பட்டி ஆகிய இல்லங்களில் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளன.

இரண்டாவது கட்டத்தில் ஒருங்கிணைந்த கால்நடை வளர்ப்புத் திட்டம் பர்கூர் அரசு மறுவாழ்வு இல்லத்தில் இந்நிதியாண்டில் தொடங்கப்பட உள்ளது. இதன் மூலம் இல்லவாசிகளை சமுதாயத்தில் உற்பத்தியாளர்களாகவும், வருமானம் ஈட்டுபவர்களாகவும் செய்வதோடு இதன் மூலம் ஈட்டப்படும் பயனில் பார்வையிழந்தோருக்கும், நடமாட முடியாத நோயாளிகளுக்கும் பங்களிக்கப்படுகிறது.

தொழுநோயாளிகளால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் விற்பனை முறையில் அரசு மறுவாழ்வு இல்லங்களுக்கு அளிக்கப்பட்டு உபரியாக உள்ளவற்றை சந்தையின்மூலம் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. அதன் மூலம் ஈட்டப்படும் வருமானத்தில் லாபத்தில் 10 சதவீதத்தினை பயனீட்டாளர்களின் காப்பு நிதியாகப் பராமரிக்கப்படுகிறது.

தமிழர் திருநாளான பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் ஒவ்வோர் இல்லத்திற்கும் டானிடா நிறுவனம் ரூ.4000-ஐ பொதுமக்களிடமிருந்து அன்பளிப்பாகப் பெற்று டானிடா திட்ட இயக்குநரால் அளிக்கப்பட்டு வருகிறது. டானிடா மூலம் பரிந்துரைக்கப்படும் மேற்கண்டுள்ள திட்டங்களின் மூலமாக இல்லவாசிகள் உற்பத்திச் செயல்பாடுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதால் இல்லவாசிகள் பொருளாதார வாய்ப்பினையும் தன்னம்பிக்கையும் பெறுவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கிறது.

### அரசினர் ஏழைகள் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கம்

1-3-1954 முதல் நடத்தப்பட்டு வரும் மேல்பாக்கம், அரசினர் ஏழைகள் பராமரிப்பு விடுதி, இத்தகைய விடுதிகளில் முதன்மையானதாகும். சென்னை மாநகரில் பிச்சைக்காரர்கள் தொல்லைகளைத் தவிர்க்க அவரவர்களின் தகுதிக்கேற்றவாறு தொழிற் பயிற்சி கொடுத்து அவர்களின் ஆற்றலை ஒருமுகப்படுத்தி பயனுள்ள தொழில்களில் பயிற்றுவித்து அவர்களின் திறமையினை மேம்படுத்தி, தானே சுயமாக சம்பாதிக்க வழிவகை செய்து சிறந்த குடிமகனாக ஆக்க வேண்டுமென்பதே அரசின் நோக்கமாகும்.



2000 ஏப்ரல் 17]

### சேர்க்கை மற்றும் விடுவித்தல்

இவ்விடுதி, ஆண், பெண், மற்றும் சிறுவர்கள் உள்ளிட்டு 950 பேர் தங்க வசதியுடன் கூடிய தொகுதிகளைக் கொண்டது. அரசாணை நிலை எண் 891/சந/நாள்: 30-9-1972-ன்படி அரசு ஏழைகள் பராமரிப்பு விடுதி, மேல்பாக்கம் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு பிச்சைத் தடுப்புச் சட்டம் 1945-ன்கீழ் நீதிமன்றத்தால் தண்டனை பெற்று, பிச்சைக்காரர்கள் இவ்விடுதியில் அனுமதிக்கப்பட்டு அவர்களின் தண்டனைக் காலம் முடியும்வரை தங்க அனுமதிக்கப்படுகின்றனர். தண்டனைக் காலம் ஒரு வருடத்திலிருந்து 3 வருடங்கள் வரை வழங்கப்படுகிறது. தண்டனைக் காலத்திற்கு மேல் எந்தவொரு இல்லவாசியும் தங்க அனுமதிக்கப்படுவதில்லை.

### இல்லவாசிகளுக்கு வழங்கப்படும் வசதிகள்

இல்லவாசிகளுக்கு இலவச உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதிகள் மற்றும் பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

### உணவு

இல்லவாசிகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.15/ வீதமும், சிறுவர்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.10/ வீதம் உணவிற்காகச் செலவிடப்படுகிறது. வாரந்தோறும் புதன்கிழமையன்று ஆட்டிறைச்சியும் வெள்ளிக்கிழமையன்று முட்டையும் வழங்கப்படுகிறது. தேசிய விழா நாட்களான சுதந்திர தினம், குடியரசு தினம், காந்தி பிறந்த தினம் மற்றும் இல்ல ஆண்டு விழா போன்ற நாட்களில் இல்லவாசிகளுக்கு சிறப்பு உணவுக்காக மேற்கொண்டு ஒரு நபருக்கு ரூ.5/- வீதம் செலவிடப்படுகிறது.

### உறைவிடம்

அரசினர் ஏழைகள் பராமரிப்பு விடுதி ஒன்பது ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ளது. இவ்விடுதிகளில் இல்லவாசிகள் தங்க நான்கு தொகுதிகள் கீழ்த்தளக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு தளத்திலும் 100 இல்லவாசிகள் தங்க இடவசதி உள்ளது. பெண்கள் மற்றும் சிறுவர்கள் தங்குவதற்காக தனியாக ஒரு கட்டடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

[2000 ஏப்ரல் 17

**உடைகள்**

ஆண்டு ஒன்றுக்கு இரண்டு மேல் ஆடைகளும் மற்றும் இரண்டு அரைக்கால் சட்டைகளும், இரண்டு துண்டுகளும் ஆண் இல்லவாசிகளுக்கு வழங்கப்படுகின்றன. பெண் இல்லவாசிகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு இரண்டு சேலைகளும், இரண்டு ரவிக்கைகளும் வழங்கப்படுகின்றன. இதைத்தவிர ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் தினத்தன்று மாவட்ட ஆட்சியர் மூலம் இல்லவாசிகளுக்கு இலவச வேட்டி மற்றும் சேலைகள் வழங்கப்படுகின்றன. (அரசு ஆணை எண் 142/சந(6) துறை/நாள்: 22-6-98.)

**இதர வசதிகள்**

1. ஒவ்வோர் இல்லவாசிக்கும் பாய், போர்வை, தட்டு, டம்ளர் மற்றும் தேங்காய் எண்ணெய் வழங்கப்படுகின்றன.
2. முதலில் அனுமதி பெறும் சமயத்தில் ஒவ்வோர் இல்லவாசிக்கும் தபால் அட்டை தரப்படுகிறது. மேலும் இல்லவாசியின் தேவைக்கேற்ப மேற்கொண்டு தபால் அட்டைகள் வழங்கப்படுகின்றன.
3. தண்டனைக் காலம் முடிந்து சொந்த ஊருக்கு அனுப்பப்படும் சமயத்தில் இல்லவாசிக்கு ரயில்வே வாரன்டோ அல்லது உரிய பேருந்துக் கட்டணமோ வழங்கப்படுகிறது.
4. இல்லவாசிகள் படித்து பயன்பெறும் வகையில் இரண்டு நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன.
5. இல்லவாசிகளை நல்வழி நடத்த ஏதுவாக சமூக நலப் பணியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

**மருத்துவ வசதிகள்**

இவ்விடுதியில் ஒரு மருத்துவர், இரண்டு செவிலியர், இரண்டு உதவி ஆண் செவிலியர், இரண்டு உதவி பெண் செவிலியர் மற்றும் இரண்டு மருந்தாளுநர்களைக் கொண்டு இயங்கும் மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. சாதாரண நோய்களைத் தீர்க்கும் வகையில் மூன்று மாதத் தேவைக்கு போதிய மருந்துகள் இருப்பில் வைக்கப்படுகின்றன. சிறப்பு சிகிச்சை தேவைப்படும் இல்லவாசிகள் சென்னையிலுள்ள பல்வேறு அரசு மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.



2000 ஏப்ரல் 17]

தொழுநோயால் பாதிக்கப்பட்டிருக்கும் இரவலர்கள் உளுந்தூர்பேட்டை அரசு மறுவாழ்வு இல்லத்திற்கு மாற்றப்படுகின்றனர். தவிர மனநோயால் பாதிக்கப்பட்டிருக்கும் இல்லவாசிகளுக்கு சிகிச்சை செய்ய கீழ்ப்பாக்கம் அரசு மனநோய் மருத்துவமனையிலிருந்து மனநோய் மருத்துவர் வாரம் ஒரு முறை வந்து சிகிச்சை அளிக்கிறார்.

**மறுவாழ்விற்கான நடவடிக்கைகள்**

இவ்விடுதியில் உள்ள உடற் தகுதியுள்ள இல்லவாசிகளில் தங்கள் உடற் திறனுக்கேற்ப பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

அவர்களுக்கு துணி தைத்தல், மண்பாண்டம் செய்தல், தச்சுத் தொழில், துணி நெய்தல் போன்ற பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

**தையற்பிரிவு**

இப்பிரிவில் 6 தையல் இயந்திரங்கள் உள்ளன. இவற்றைக் கொண்டு இல்லவாசிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

**மண்பாண்டப் பிரிவு**

பூந்தொட்டிகள், கூஜாக்கள், தண்ணீர்ப் பானைகள் போன்றவை உற்பத்தி செய்து தேவைப்படும் அரசு நிறுவனங்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றது. 10 இல்லவாசிகளுக்கு மண்பாண்டப் பிரிவில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**தச்சுப் பிரிவு**

மற்ற அரசுத் துறைகளிலிருந்து பெறப்படும் பழுதடைந்த மரச்சாமான்கள் பழுதுநீக்கம் செய்து அனுப்பப்படுகிறது. இப்பிரிவில் 5 இல்லவாசிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2000-2001 ஆம் நிதியாண்டிற்கு ரூ.36.08 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2000 ஏப்ரல் 17

## அத்தியாயம்-3

### தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

3.1 பெருந்தகை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் பெண்கள் தம் உரிமைகளை முழுமையாகப் பெற்றிட வேண்டும் என்ற கொள்கையை தம் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகக் கொண்டிருந்தார்கள். அந்தக் கொள்கையை நிறைவேற்ற தமிழக அரசு மகளிருக்காகப் பல்வேறு சட்டங்களை நடைமுறைபடுத்தி பெண்களின் வாழ்வில் ஒளியூட்டி, அவர்கள் மேன்மையடைய வேண்டும் என்று அயராது பாடுபட்டு வருகிறது. இந்த உயரிய இலக்கினை அடைய அரசு பல செயல் திட்டங்களைத் தீட்டி தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் நிறைவேற்றி வருகிறது. இந்நிறுவனத்தின் ஒப்பளிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.100 இலட்சம். தமிழக அரசு ரூ.40.00 இலட்சமும், மத்திய அரசு ரூ.38.42 இலட்சமும் தம் பங்காக மொத்தம் ரூ.78.42 இலட்சம் இந்நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது.

தமிழ்நாட்டின் கிராமப்புற ஏழை எளிய பெண்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக இந்நிறுவனம், மகளிர் திட்டம், தொழிற்பயிற்சித் திட்டம், தொழில்முனைவோர் திட்டம் மற்றும் பெண்கள் மனமகிழ் மையங்கள் அமைத்தல் ஆகிய நான்கு திட்டங்களை செயற்படுத்தி வருகிறது.

### 3.2 அன்னை பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்டம்

கிராமப்புற ஏழை எளிய பெண்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கென பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிறுவன நிதியுதவியுடன் மே மாதம் 1989 ஆம் ஆண்டு இத்திட்டத்தை தமிழக அரசு தொடங்கியது. அரசு சார்பாக தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் தொண்டு நிறுவனங்களுடன் வங்கிகளையும் ஒருங்கிணைத்து நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு செயல்பட்டு வருகிறது.

தொண்டு நிறுவனங்கள் உதவியுடன் கிராம அளவில் ஏழைப் பெண்களை உறுப்பினர்களாகக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டன. தொடக்கக் காலத்தில் இம்மகளிர் மேம்பாட்டுத் திட்டம் தேர்ந்து எடுக்கப்பட்ட 8 மாவட்டங்களில் உள்ள 75 வட்டாரங்களில் பல்வேறு கட்டங்களில் செயற்படுத்தப்பட்டது. சென்ற 31-12-1998 ஆம் ஆண்டு இத்திட்டம் முடிவுற்ற நாள்வரையில் 5,207 சுய



2000 ஏப்ரல் 17]

உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு 1,20,960 பெண்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர். இத்திட்டம் அதிகாரபூர்வமாக 31-12-1998-ல் முடிவுற்றாலும் 1999-2000 ஆம் ஆண்டிலும் இத்திட்ட தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.69.83 இலட்சம் மானியமும் பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் வெற்றியின் அடிப்படையில் இத்திட்டத்தினை விரிவுபடுத்தத் தீர்மானித்து 1996 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் நாள், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் இத்திட்டத்தினை தமிழ்நாட்டின் 28 மாவட்டங்களிலுள்ள கிராமப்புறங்களுக்கு மூன்று கட்டங்களாக விரிவுபடுத்தப்படுவதாக அறிவித்தார். இதன்படி 1997-98 ஆம் ஆண்டில் முதல் கட்டமாக 'மகளிர் திட்டம்' என்ற பெயரில் 14 மாவட்டங்களிலுள்ள 194 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் இரண்டாம் கட்டமாக 1998-99 ஆம் ஆண்டில் மேலும் 7 மாவட்டங்களில் விரிவுபடுத்தி 21 மாவட்டங்களிலும் செயற்படுத்தப்பட்டது. மூன்றாம் கட்டமாக மீதமுள்ள 7 மாவட்டங்களில் இத்திட்டத்தினை செயல்படுத்த 1999-2000 ஆம் ஆண்டு பட்ஜெட் உரையில் அறிவிக்கப்பட்டது. 1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்த 7 மாவட்டங்களில் திட்ட அலுவலகம் ஏற்படுத்தப்பட்டது. இம்மாவட்டங்களில் 21 தொண்டு நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கும் பணி தொடங்கப்பட்டுவிட்டது.

எந்தக் கட்டாயமுமின்றி தானே விரும்பி உறுப்பினர்களாகச் சேர்ந்து சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுவதும் இந்த உறுப்பினர்கள் சமூகப் பொருளாதார மேம்பாடு பெற்றிட தேவையான பயிற்சியும் ஊக்கமும் அளிப்பதே தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். சுய உதவிக் குழு உறுப்பினர்கள் வங்கியில் சிறு சேமிப்புக் கணக்கு தொடங்கி தங்களின் சேமிப்புத் தொகையை மாதந்தோறும் வங்கியில் செலுத்தி அதே நிதியில் இருந்து உறுப்பினர்களுக்குக் கடன் வசதி குறைந்த வட்டிக்கு அளிக்கப்படுகிறது. இந்த குழு நிதிக்கு ஆதாரம் சேமிப்பு மட்டும் அல்லாமல் கடன் மூலம் பெறப்படும் வட்டியும் சேர்ந்ததாகும். குழு உறுப்பினர்கள் அனைவரும் கடன் வசதி பெறுவதனால் வட்டி கணக்கிடுதல், திரும்பச் செலுத்துவதின் அவசியம் அறிகிறார்கள். குழுக்களுக்கு சங்கக் கடன் வசதி மற்றும் வங்கிக் கடன் வசதி பெறும் வாய்ப்பு ஏற்படுவதால் கிராமத்திலுள்ள கந்து வட்டிக்காரர்களிடமிருந்து கடன் பெறுவதும்

தவிர்க்கப்படுகிறது. குழுவின் சேமிப்பு நிதியே அத்தியாவசியச் செலவுகளை மேற்கொள்ள ஆதாரமாக அமைந்துள்ளது. குழு சேமிப்பு நிதியே அந்த குழுவின் பலமாகும்.

குழு உறுப்பினர்கள் தங்கள் குடும்பத்தின் நிதி, ஆதாரம் பற்றி நன்றாகத் தெரிந்துள்ளதால், தேவையான அளவு கடன் வசதி பெற்று முறையாக திரும்பச் செலுத்துவதிலும் நேர்மையுடன் உள்ளனர். மேலும், அவர்கள் பொருளாதார மேம்பாட்டிற்கு எந்த வகையில் முதலீடு செய்யலாம் என்பதையும் அறிந்து கொள்கின்றனர். திட்ட அலுவலகங்கள், தொண்டு நிறுவனங்களின் பணி இக்குழுக்களுக்கு ஆலோசனை வழங்குவது, அவர்களுக்குத் தேவையான உதவி செய்வதும் தான். மற்ற முடிவுகளை குழு உறுப்பினர்களின் முடிவிற்கே விட்டு விடுகின்றனர்.

குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி பெற்ற தொண்டு நிறுவனப் பயிற்சியாளர் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. குழு உறுப்பினர்கள் தங்களுடைய திறமைகளை வளர்த்துக்கொள்ளவும், தங்களது நிலைமையை உயர்த்திக் கொள்ளவும் இப்பயிற்சியின் மூலம் படிப்படியாக மனோதிடம் பெறுகிறார்கள். இக்குழுக் கூட்டங்கள் அவர்களுடைய பொது அறிவை வளர்ப்பதற்கு மிகவும் பயன்படுகிறது. தொண்டு நிறுவனங்கள், வங்கிப் பணியாளர்கட்கும் தேவையான பயிற்சிகள் கொடுப்பதன் மூலம் திட்டம் செம்மையாக செயற்படுத்தப்படுகிறது. மேற்குறிப்பிட்ட பயிற்சியில் பங்கு பெறுவோர்: (i) குழு உறுப்பினர்கள், (ii) ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகள், (iii) தொண்டு நிறுவனப் பணியாளர்கள், (iv) மாவட்ட திட்ட அலுவலகப் பணியாளர்கள், (v) தலைமையிட அலுவலகப் பணியாளர்கள், (vi) வங்கி பணியாளர்கள்.

மகளிர் திட்ட அயற்பணியாளர்களும் பங்கு பெற்று கிராமப்புறப் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட முனைகின்றனர்.

1999-2000 ஆம் ஆண்டில் இதுவரை 1837 தொண்டு நிறுவனப் பணியாளர்களுக்கும், 203 மாவட்ட திட்டப் பணியாளர்களுக்கும், 1797 வங்கிப் பணியாளர்களுக்கும், இத்திட்டத்தின்கீழ் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஊக்குநர், பிரதிநிதிகள் மற்றும் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சியளிக்க ரூ.196.19 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டிலும் படிப்படியாக இப்பயிற்சியை மேலும் பலருக்கு அளிக்கும்படியாகத் தொடரப்படும்.



குழு உறுப்பினர்கள் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களாக இருக்க வேண்டும். விதவைகள், கைவிடப்பட்டவர்கள், விவாகரத்து ஆனவர்கள், உடல் ஊனமுற்ற பெண்களுக்கும், குறிப்பாக, தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினருக்கும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. எனவே, மொத்த உறுப்பினர்களில், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் உறுப்பினர்களின் பங்கேற்பு 1998 டிசம்பர் மாதத்தில் 20.78 விழுக்காட்டிலிருந்து பிப்ரவரி 2000-ல் 42.82 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

1999-2000 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் சாதனை விவரம் (பிப்ரவரி 2000 வரை).

| திட்டம். | அலகு. | அடைவு. | அரசு ஒதுக்கீடு (இலட்சத்தில்). | செலவினம் (இலட்சத்தில்). |
|---|---|---|---|---|
| தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் (மகளிர் திட்டம்) | பெண்கள் | 442039 | 1200.00 | 874.93 |

மனித நேயத்தோடு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் அரசின் உன்னத நோக்கம் பெண்கள் குழுக்களாக சேர்ந்து ஒருமித்த உணர்வோடு செயல்படும்போது நிறைவேறும் என்பதால்தான் மகளிர் குழுக்கள் அமைப்பதை இந்த அரசு முனைப்பாகச் செயல்படுத்தி வருகிறது. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு இந்த இலட்சியப் பாதையில் மகளிரைக் கொண்டு செல்ல நிதி உதவி அரசு அளிக்கிறது.

மகளிர் அனைவரும் சிறு சேமிப்பு, தொழில் முனைப்பு என்பதோடு நின்றுவிடாமல், சுகாதாரம், நலவாழ்வு, தாய்-சேய் நலம், தடுப்பூசிகள், ஐயோடின் கலந்த உப்பு, உடல் நலம் பேணுதல், ஊட்டச்சத்து போன்றவற்றையும் இரண்டு வாரத்திற்கு ஒரு முறை கூடும்போது ஆர்வமாகக் கலந்து பேச வேண்டும்; வலிவும், பொலிவும் பெற்ற பெண்கள் சமுதாயம் அமைவது பற்றி பேசித் தெளிவு பெற வேண்டும். மகளிர் குழுக்கள் முன்வந்தால் நியாய விலைக் கடைகளை நடத்தும் பொறுப்பை ஒப்படைக்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரசின் இன்ன பிற திட்டங்களையும் முழுமையாக உணர்ந்து மற்றவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த, மக்கள் சாசனத்தையும், மற்ற நலத் திட்டக் கையேடுகளையும் மகளிர் குழுக்களுக்குக் கட்டாயம் விநியோகிக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மகளிர் குழுவில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் பொருளாதாரத்திலும் சமூக மேம்பாட்டிலும் உயர்ந்து 21 ஆம் நூற்றாண்டில் தமிழக மகளிர், தரணிக்கே வழி காட்ட வேண்டுமென்பது அரசின் விழைவு.

*26-1-2000* அன்று நடந்த கிராம சபைக் கூட்டங்களில், மகளிர் குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்கள் கலந்துகொண்டு ஆக்கபூர்வப் பணிகளில் தங்களின் ஈடுபாட்டை உறுதிபடுத்தினர்.

சென்னை நீங்கலாக அனைத்து 28 மாவட்டங்களிலுள்ள கிராமப்புற ஏழை எளிய பெண்களையும், பெரியார் நினைவு சமத்துவபுரங்களில் வாழும் பெண்களையும் சுயஉதவிக் குழுக்களில் உறுப்பினர்களாகச் சேர்த்து அவர்கள் மேம்பாட்டிற்கென தேவையான பயிற்சி தொடர்ந்து அளிக்கப்படும். இப்பெண்களுக்கு பல்வேறு திட்டங்களின்கீழ் வழங்கப்படும் கடன் வசதிகளைப் பெற்றுத் தர நபார்ட் மற்றும் மாநில அளவிலான வங்கிகளின் குழுவுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. மகளிர் திட்டத்தினை எஸ்.ஜி.எஸ்.ஒய். திட்டத்துடன் இணைத்து தகுதியான ஏழைப் பெண்கள் பலரும் பயனடைய *2000-2001*-ல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 3.3 மகளிர் திட்டம் "அன்னை பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்டம்" எனப் பெயர் மாற்றம் செய்தல்

*9-3-2000* அன்று வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற உலக மகளிர் தினவிழா கொண்டாட்டத்தின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்படி மகளிர் திட்டம் "அன்னை பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்டம்" என அழைக்கப்படும் என அறிவித்தார்கள். அதன்படி இத்திட்டம் "அன்னை பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்டம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள முதல் மற்றும் இரண்டாம் கட்ட *21* மாவட்டங்களில் சிறப்பாகச் செயல்படுகின்ற *63* சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஏழு வட்டார கூட்டமைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஊக்கத்தொகையாக ரூ. *87,500/-* பரிசளிக்கப்பட்டது.





*9-3-2000* அன்று நடைபெற்ற உலக மகளிர் நாள் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் வாழ்த்துரை வழங்கும்போது குறிப்பிட்டவைகளை நினைவு கூர்ந்திடல் நன்று.

"பேசியவர்கள் எல்லாம் ஆண்கள் பெண்களை அடிமைப்படுத்துகிறார்கள் என்று சொல்லி மேடையிலே இருந்த எங்களை எல்லாம் கொஞ்சம் நெளிய வைத்தார்கள். நானே சொல்கிறேன், என்னை வளர்த்து ஆளாக்கிய தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் எல்லாம் கூட புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் உள்ளிட்ட இந்த இயக்கத்தினர் அனைவருமே பெண்களின் விடுதலைக்காக, பெண்களுடைய முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டவர்கள் என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

மிகச் சுலபமாக பாரதிதாசன், 'ஆணும் பெண்ணும் சமம்தான்' என்பதை உணர்த்தியிருக்கிறார். ஏணை அசைத்தலும் கூடும், அது யார் அசைத்தாலும் ஆடும் என்பது அவருடைய கவிதை வரி. 'குழந்தை தூங்கும் ஏணையை அது விழித்துக் கொள்ளும்போது பெண்கள் அதை அசைத்தாலும் ஆடும், பெண்கள் மாத்திரம் அல்ல, அதை ஆண் அசைத்தாலும் ஆடும். ஆண் அசைக்கின்றான் என்பதற்காக ஏணை ஆடாமல் இருந்துவிடாது. அதனால் ஏணையை அசைப்பது பெண்களுக்குத்தான் உரியது என்றிருந்துவிடாமல் ஆண்களும் ஏணையை அசைக்க வேண்டும். குழந்தையைப் பராமரிக்க வேண்டும்' என்ற அந்த பொருளில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடியிருக்கிறார்." "ஆண்களை விட பெண்கள் தாழ்ந்துவிட்டதாக யாரும் நினைக்கத் தேவையில்லை. சுருக்கமாகச் சொல்லவேண்டுமேயானால் இந்த நாட்டிலே சாதி ஒழிய வேண்டும் என்று உத்தமர் காந்தி அடிகள் சொன்னார். பாரதி பாடினார், பெரியார் முழங்கினார், அண்ணா எழுதிக் காட்டினார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப் போன்றவர்கள கவிதைகளை அதற்காக இயற்றினார்கள். ஆனால் உள்ளபடியே சாதியை இன்னும் தங்களுடைய பெயருக்குப் பின்னால் வைத்துக் கொண்டிருப்பவர்கள் ஆண்கள்தான். இராமசாமி செட்டியார், குப்புசாமி முதலியார், நடேச ஐயர் என்று சாதியைத் தங்களுடைய பெயருக்குப் பின்னால் வைத்திருப்பவர்கள் ஆண்கள்தான். சரஸ்வதி செட்டியார் என்றோ, லட்சுமி முதலியார் என்றோ, பார்வதி கவுண்டர் என்றோ எந்தப் பெண்ணும் சாதிப் பெயரை தங்கள் பெயருக்குப் பக்கத்தில் போட்டுக்

[2000 ஏப்ரல் 17

கொள்வதில்லை. இதிலிருந்தே ஆண்களை விட பெண்கள் உயர்ந்தவர்கள், சாதியை ஒழிப்பதிலே என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்...."

"பல மூட நம்பிக்கைகளை இன்றைக்கு நம் நாட்டு தாய்மார்கள், சகோதரிகள் கடைப்பிடிக்கிறார்கள். அவர்கள் மூட நம்பிக்கையிலே ஆழ்ந்து போகின்ற காட்சிகளை நான் கண்டு மிக மிக வருந்துகிறேன்..."

"ஒரு தோட்டத்தில் அல்லது ஒரு வீட்டுக் கொல்லையில் பூக்கின்ற பூக்களிலே ஒரு பரங்கிப் பூ கொஞ்சம் நிமிர்ந்து நின்று பூத்திருக்கும். அதைப் பார்க்கும்போது ஏதோ ஒரு சாடையில் பாம்பு படம் எடுத்ததைப் போலத் தெரியும்; உடனே பரங்கிக் கொடியிலே நாகராஜன் தரிசனப்படுகிறான் என்று நான்கு நாள் பத்திரிகையிலே செய்தி வெளியிடுவார்கள். அதைப் பார்க்க ஒரு கூட்டம் செல்லும். இப்படி சாமியார்கள், பூதங்கள், சிலுவையின் பெயரால் மோசடிகள், இவைகள் எல்லாம் நடைபெறுவதை நாம் தடுத்தாக வேண்டும். அப்படித் தடுப்பதற்கு தாய்மார்கள் முதலில் தங்களுடைய பகுத்தறிவைப் பெருக்கிக்கொள்ள வேண்டும். அப்படி பகுத்தறிவைப் பெருக்கிக் கொண்டால் அதற்கு ஏற்றவாறு இந்த சமுதாய அமைப்பு நல்ல முறையிலே உருவாகும் என்பதை நான் எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்...."

பெண்களின் முன்னேற்றம் படிப்படியாக உயர்ந்திட மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் நடைபெறும் திட்டங்களை அனைத்து தரப்பினரும் மனமுவந்து பாராட்டுகிறார்கள்.

### 3.4. 2000-2001-ஆம் ஆண்டில் திட்ட உறுதி செயல்பாடு

(1) விரைவாகவும், குறைபாடுகள் இல்லாமலும் மகளிர் திட்டத்தை புதிய 7 மாவட்டங்களில் செயல்படுத்துதல்;

(2) தகுந்த பயிற்றுமுறை பற்றிய கையேடு அனுபவம் மிகுந்த பயிற்சியாளர்களால் தயாரிக்கப்பட்டு தகுதியான பயிற்சியாளர்களால் குழுக்களுக்கு சிறந்த பயிற்சியை உறுதி செய்தல்;

(3) இத்திட்டம் செயற்படுத்தப்பட்ட முதற்கட்ட மற்றும் இரண்டாம் கட்ட மாவட்டங்களில் சுயஉதவி குழுக்கள் பிரதிநிதிகள் இடம்பெறும் தொகுப்பு அமைப்பு ஏற்படுத்திட போதிய பயிற்சி அளித்தல்;



2000 ஏப்ரல் 17]

(4) குழுக்கள் அனைத்தும் •அரசு திட்டங்களின் பயன்களை பெற்றிடும் வகையில் பல்வேறு அரசுத்துறை மாவட்ட அலுவலர்கள், பணியாளர்கள் பணியினை ஒன்றுபடுத்துதல்;

(5) தகுதியான குழுக்களுக்கு வங்கிக் கடன் வசதி பெற்றுத் தருதல். இதற்கென வழிகாட்டு நெறிமுறைகள் தேவைக்கேற்ப வழங்குதல்;

(6) குழுக்களின் ஆற்றலை மேம்படுத்த ஆவன செய்தல் மூலம் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்யும் திறமையை மேம்படுத்துதல்;

(7) மகளிர் திட்டம் எஸ்.ஜி.எஸ்.ஒய். திட்டத்துடன் இணைத்து செயல்படுத்தப்படும்;

(8) பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஒருங்கிணைத்து "வாழ்ந்து காட்டுவோம்" என்ற பெயரில் முதலமைச்சர் செயலகத்தின்கீழ் இயங்கும்.

2000-2001 ஆம் ஆண்டில் அன்னை பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்டத்திற்கென ரூ. 1200.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

"முற்றம்" என்ற மாத இதழ் 1998-99 ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஏழை பெண்களின் அனுபவங்கள், கருத்துக்கள் பரிமாற்றம் செய்ய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2000-2001-ல் இதைத் தவிர இதர சாதனங்களான தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகள், வீடியோ படங்கள் மூலம் பெண்களின் கருத்துப் பரிமாற்றங்கள் நிகழ்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.5 தொழிற் பயிற்சித் திட்டம்

தமிழக அரசு, தொழிற் பயிற்சித் திட்டத்திற்கென 1998-99 ஆம் ஆண்டிற்கு ஏழை பெண்கள் வேலைவாய்ப்பு பெறக்கூடிய தொழிற் திறன் மேம்பாடு பயிற்சி நடத்திட ரூ. 15.00 இலட்சம் ஒதுக்கீடு செய்தது. 75 மகளிர் பயனடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 95 மகளிர் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்தனர்.

1999-2000 ஆம் ஆண்டிற்கு 100 மகளிர்க்கு ரூ. 7.50 இலட்சம் செலவில் (1) கணினி பயிற்சி, (2) செவிலியர் பயிற்சி, (3) திரை அச்சுப் பயிற்சி, (4) லேசர் பிரிண்டிங், (5) காலணி மற்றும் தோல் பொருட்கள்

[2000 ஏப்ரல் 17

செய்யும் பயிற்சி, (6) செடி வளர்ப்புப் பயிற்சி போன்ற தொழிற் பயிற்சி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இத்திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கிற்கு மேல் 330 மகளிருக்கு கையிருப்புத் தொகையுடன் சேர்த்து ரூ. 9.43 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டது.

2000-2001 ஆம் ஆண்டிற்கு ரூ. 7.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

### 3.6. தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

தமிழக அரசு, தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் சென்னை மற்றும் மதுரை மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 25 மகளிர் என முதன்முதலாக தொழில் முனைவோராக இருக்கும் திறமையான 50 மகளிருக்கு பயிற்சி அளிக்க 1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ. 2.00 இலட்சம் ஒதுக்கியது. இத்திட்டத்தின்கீழ் ரூ. 1.69 இலட்சம் செலவில் 38 மகளிருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

1999-2000 ஆண்டிற்கு ரூ. 4.00 இலட்சம் செலவில் 100 மகளிருக்கு பயிற்சி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் ரூ. 4.00 இலட்சம் செலவில் 125 மகளிருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

CED (Centre for Entrepreneurship Development), Canara Bank (Chennai), RUDSET (Rural Development and Self Employment Training Institute), Madurai, STEP-TREC (Science and Technology Entrepreneurial Park - Tiruchy Regional Engineering College), Tiruchy and Sharamik Vidyapeeth and Avinashilingam Home Science University (Coimbatore) ஒத்துழைப்புடன் குறிப்பிடத்தக்க வகையில் பயிற்சி தரம் மேம்படுத்தப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிலும் தொடர்ந்து பயிற்சியின் தரம் கண்காணிக்கப்படும்.

தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ் 100 பெண்களுக்கு பயிற்சி அளிக்க 2000-2001 ஆண்டிற்கு ரூ. 4.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

### 3.7 மகளிர் மனமகிழ் மையங்கள்

ஊட்டச்சத்து, உடல் நலம், கல்வி ஆகியவற்றின் அவசியத்தினை உணர்ந்ததுபோல் கூலித்தொழிலைச் சார்ந்திருக்கும் ஏழை மகளிரின் அலுப்பு தீர்ந்து, புத்துணர்ச்சி பெற்றிட இவர்களுக்கென மனமகிழ் மையங்களின் அவசியத்தினையும் கருத்திற்கொண்டு அதன்படி 1997-98



2000 ஏப்ரல் 17]

ஆம் ஆண்டில் மகளிர்க்கென 50 மனமகிழ் மையங்கள் துவக்கப்பட்டன. 1998-99 ஆம் ஆண்டில் புதிதாக மனமகிழ் மையங்கள் துவக்கப்படவில்லை. எனினும் பழைய மனமகிழ் மையங்கள் பராமரிக்கப்பட்டன.

1999-2000 ஆண்டுக்கென பகுதி 2 திட்டத்தின்கீழ் 100 புதிய மகளிர் மனமகிழ் மையங்கள் துவக்கவும் பழைய 50 மையங்களைப் பராமரிக்கவும் அரசு ரூ. 4.75 இலட்சம் ஒதுக்கியது.

2000-2001 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கென 100 மனமகிழ் மையங்கள் தொடங்க ரூ. 4.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## அத்தியாயம்-4

### ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை

4.1. ஊனமுற்றோர் மறுவாழ்வுப் பணிகள் அனைத்தும் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட இயக்ககம் மூலம் 1992 வரை செயல்படுத்தப்பட்டு வந்தன. ஊனமுற்றோருக்கென உள்ள தனிப்பட்ட பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டும், தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தவும், சிறப்புத் திறனும் கூடுதல் வசதியும் கொண்டதுமான ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்ககம் 1992 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. 1999 ஆம் ஆண்டில் ஊனமுற்றோர் (இணையான வாய்ப்புகள், உரிமை பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம், 1995-ன்கீழ் இவ்வியக்ககம் ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அலுவலகம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

### 4.2 ஊனமுற்றோருக்கான ஆணையர்

ஊனமுற்றோர் (இணையான வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம், 1995-ன் சட்டப் பிரிவு 60-ன்படி ஒவ்வொரு மாநில அரசும் இச்சட்டத்தினைச் செயல்படுத்த ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் நியமனம் செய்யப்பட வலியுறுத்தப்பட்டது. அதன்படி, தமிழ்நாட்டில் ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்குநர், ஊனமுற்றோருக்கான மாநில ஆணையராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர், ஊனமுற்றோரின் நலனுக்கென மாநில அரசின் துறைகளால் நிறைவேற்றப்படும் அனைத்துத் திட்டம் மற்றும் செயல்முறைகளுக்கும் ஒருங்கிணைப்பாளராக இருப்பார். மாநில அரசு வழங்கும் பணம் செலவிடப்படுவதை மேற்பார்வை செய்வார். ஊனமுற்றோருக்கு

[2000 ஏப்ரல் 17

அளிக்கப்பட்டிருக்கும் உரிமைகள் மற்றும் சலுகைகளைப் பாதுகாக்க வழிமுறைகளை மேற்கொள்வார். ஊனமுற்றோர் திட்டம் செயல்படுத்துவது குறித்து மாநில அரசு வரையறுத்துள்ளவாறு அரசுக்கு அறிக்கை அனுப்பி அதன் நகலினை தலைமை ஆணையருக்கு அனுப்புவார். ஊனமுற்றோர் சட்டம், 1995-ன்கீழ் வரையறுக்கப்பட்ட அலுவல்களை நிறைவேற்ற ஆணையருக்கு அளிக்கப்படும் அதிகாரங்கள் உரிமை இயல் நடைமுறைகள் விதித் தொகுப்பு, 1908-ன்படி நீதிமன்றத்திற்கு அளிக்கப்படும் அதிகாரங்களுக்கு இணையானவைகளாகும். ஆணையர், மாநில ஒருங்கிணைப்புக் குழு மற்றும் மாநில செயல்பாட்டுக் குழுக்களின் அலுவல் உறுப்பினராவார்.

### 4.3 ஊனமுற்றோரின் தொகை

தேசிய மாதிரிக் கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகையில் ஊனமுற்றோர் 1.9 விழுக்காடு ஆகும். 1991 ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பின்படி தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில் 1.9 விழுக்காடு என்பது 10,61,320 ஆகும். ஊனமுற்றோர் வகை வாரியான விவரம் பின்வருமாறு:

| வ. எண் | ஊனத்தின் வகை | ஊனமுற்றோரின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | விழுக்காடு |
|---|---|---|---|
| 1. | பார்வையற்றோர் | 2.04 | 19.2 |
| 2. | பேசும் திறன் அற்று காது கேளாதோர் | 2.17 | 20.5 |
| 3. | கை, கால் ஊனமுற்றோர் | 6.24 | 58.8 |
| 4. | மன வளர்ச்சி குன்றியோர், தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோர் மற்றும் இதர வகை ஊனமுற்றோர் | 0.16 | 1.5 |
| | மொத்தம் | **10.61** | **100.00** |

### உயர்ந்து வரும் நிதி ஒதுக்கீடு

கடந்த 10 ஆண்டுகளில் ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கென ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடு நான்கு (4) மடங்கிற்கு மேல் அதிகரிக்கப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் 2009.20 இலட்சங்கள்



2000 ஏப்ரல் 17]

ஒதுக்கப்பட்டுள்ளது. ஊனமுற்றோர் நிலையை உயர்த்த ஊனமுற்றோர் நலனில் அரசு கொண்டுள்ள ஆழ்ந்த அக்கறையினை ஆண்டுக்காண்டு நிதி ஒதுக்கீடு உயர்த்தி வழங்குவதைக் கொண்டு அறியலாம்.

### 4.4 ஊனமுற்றோருக்கான சிறப்புக் கல்வி

ஊனமுற்றோருக்காக நிறுவப்பட்டுள்ள சிறப்புப் பள்ளிகளின் மூலம் அவர்களுக்கு சிறப்புக் கல்வி அளிக்கப்படுகிறது. அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு மானியம் பெற்று நடைபெறும் சிறப்புப் பள்ளிகளின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | பள்ளியின் வகை | அரசுப் பள்ளிகள் | அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகள் | | நகராட்சிப் பள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | மானியம் பெறும் பள்ளிகள் | மானியம் பெறாத பள்ளிகள் | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | பார்வையற்றோருக்கான பள்ளி | 11 | 11 | 3 | — | 25 |
| 2 | பேச்சுத் திறன் குறைந்து செவித் திறன் இழந்தோர் பள்ளி (முன் பருவ வகுப்புடன்) | 10 | 19 | 19 | 2 | 50 |
| 3 | மன வளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி | 1 | 12 | 38 | — | 51 |
| 4 | கடும் உடல் ஊனமுற்றோருக்கான பள்ளி | 1 | 12 | 29 | — | 42 |
| 5 | தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோருக்கான பள்ளி | — | 1 | — | — | 1 |
| | மொத்தம் | **23** | **55** | **89** | **2** | **169** |

[2000 ஏப்ரல் 17

**அரசு சிறப்புப் பள்ளிகள் நடைபெறும் இடங்கள் பின்வருமாறு**

| பார்வையற்றோருக்கானது | பேச்சுத் திறன் மற்றும் செவித் திறன் இழந்தோருக்கானது | கடுமையான கை, கால் ஊனமுற்றோருக்கானது | மனவளர்ச்சி குன்றியோருக்கானது |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| கோயம்புத்தூர் | கடலூர் | மதுரை | சென்னை |
| கடலூர் | தருமபுரி | | |
| மதுரை | ஈரோடு | | |
| நாகர்கோவில் | காஞ்சிபுரம் | | |
| பூவிருந்தவல்லி | சென்னை | | |
| புதுகோட்டை | உதகமண்டலம் | | |
| சேலம் | புதுக்கோட்டை | | |
| சிவகங்கை | சேலம் | | |
| தஞ்சாவூர் | தஞ்சாவூர் | | |
| திருச்சிராப்பள்ளி | விருதுநகர் | | |
| தருமபுரி | | | |

சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயிலும் ஊனமுற்ற குழந்தைகளுக்கு கீழ்க்குறிப்பிட்ட வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

அ. இலவச உணவு மற்றும் உறைவிடம்

ஆ. ஆண்டிற்கு இரண்டு இணை இலவச சீருடை

இந்த சிறப்புப் பள்ளிகள் மூலம் மொத்தம் 8,500 ஊனமுற்ற குழந்தைகள் சிறப்புக் கல்வி பயிலுகிறார்கள். 2000-2001 ஆம் ஆண்டிற்கு சிறப்புக் கல்விக்கான நிதி ஒதுக்கீடு ரூ.1010.28 இலட்சங்களாகும்.

பேச்சுத் திறன் மற்றும் செவித் திறன் குறைந்துள்ள குழந்தைகளுக்கென 20 முன் பருவப் பள்ளிகள் கடலூர், தருமபுரி, ஈரோடு, காஞ்சிபுரம், சென்னை, உதகமண்டலம், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர், விருதுநகர் ஆகிய இடங்களிலுள்ள அரசு காது கேளாதோருக்கான பள்ளிகளிலும், வேலூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, சிவகங்கை, கன்னியாகுமரி, தூத்துக்குடி, திண்டுக்கல்



2000 ஏப்ரல் 17]

ஆகிய இடங்களிலுள்ள அரசு மானியம் பெறும் பள்ளிகளிலும் இணைந்து இயங்கி வருவதுடன் இராமநாதபுரத்தில் அனாதைக் குழந்தைகள் காப்பகத்திலும், கோயம்புத்தூரில் உள்ள அரசு பார்வையற்றோருக்கான பள்ளியிலும் நடத்தப்பட்டு வருகின்றன. செவித் திறன் குறைந்த குழந்தைகள் 200 பேர் இப்பள்ளிகளின் மூலம் சிறப்புக் கல்வி பெறுகிறார்கள்.

**4.5 ஊனமுற்றோருக்கான கல்வி உதவித் தொகை**

ஊனமுற்ற குழந்தைகளின் கல்விக்காக புத்தகங்கள், குறிப்பேடுகள் மற்றும் இதர பொருள்கள் வாங்க பள்ளி மற்றும் உயர் கல்வி பயிலும் அனைத்து மாணவ மாணவிகளுக்கும் அரசு உதவித் தொகை வழங்குகிறது. உதவித் தொகை பெறும் விவரம் பின்வருமாறு:

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு மாதம் ரூ.25 வீதமும், ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மாதம் ரூ.75 வீதமும் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது.

ஒன்பதாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை மாதம் ரூ.110 எனவும் பட்டப் படிப்பிற்கு மாதம் ரூ.150 எனவும், தொழிற் கல்வி, பொறியியல், மருத்துவம் மற்றும் முதுநிலை பட்டப் படிப்பிற்கு மாதம் ரூ.195 எனவும் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் மொத்தம் 13,700 மாணவர்கள் பயன் பெற்று வருகிறார்கள். 2000-2001 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு ரூ.92.45 இலட்சங்களாகும்.

**4.6 பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத உதவியாளர்களுக்கு உதவி**

பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயிலும் பார்வையற்ற மாணவர்கள் தேர்வுகளில் வினாக்களுக்கு இவர்கள் வாய் மூலம் சொல்லும் பதிலினை அவ்வாறே எழுத பார்வையுள்ள உதவியாளரை வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.

பார்வையற்ற மாணவர்கட்கு தேர்வு எழுத உதவி புரிபவர்களுக்கு ஒரு தேர்வுத் தாளுக்கு ரூ.30 வீதம் உதவித் தொகையை இத்துறை வழங்கி வருகிறது. இந்த உதவித் தொகை பெறும் பள்ளிகள் பின்வருமாறு:

1. பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை.

2. பார்வையற்றோருக்கான அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருச்சிராப்பள்ளி.

3. பார்வையற்றோருக்கான சிறுமலர் மேல்நிலைப் பள்ளி, சென்னை.

4. பார்வையற்றோருக்கான புனித லூயிஸ் மேல்நிலைப் பள்ளி, சென்னை.

200 மாணவர்கள் இத்திட்டத்தினால் ஆண்டுதோறும் பயனடைந்து வருகிறார்கள். இத்திட்டத்திற்கென 2000-2001 ஆம் ஆண்டில் ரூ. 2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.7 அரசு மண்டல பிரெய்லி அச்சகம்

பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி வளாகத்தில் பார்வையற்றோருக்கு பிரெய்லி புத்தகங்களை அச்சிட்டுத் தரும் மண்டல பிரெய்லி அச்சகம் இயங்கி வருகிறது. ஒவ்வொரு வருடமும் இந்த அச்சகம் மூலம் அரசு பார்வையற்றோருக்கான பள்ளிகளில் பயிலும் பார்வையற்றோருக்கு ஒன்றாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை இலவசமாக பிரெய்லி புத்தகங்கள் அச்சிடப்பட்டு வந்தது. தற்போது இயந்திரங்கள் சரிவர இயங்காததால் 1,130 புத்தகங்கள் இந்த நிலையத்தில் அச்சிடப்பட்டும் 400 புத்தகங்கள் வெளியிலிருந்து வாங்கப்பட்டும் ஒன்று முதல் 10 ஆம் வகுப்பு வரை வழங்கப்பட்டு வந்தது. இக்குறையினை நிவர்த்தி செய்யும் வகையில் அரசு 2000-2001 ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டத்தின்கீழ் இரண்டு நவீன கணினி பிரெய்லி அச்சு இயந்திரங்கள் தலா ரூ.6 இலட்சம் வீதம் ரூ.12 இலட்சம் செலவில் வாங்கப்பட உள்ளன. இதைத் தவிர மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு வகுப்புகளுக்கு ஒலி நாடாக்கள் மூலம் பாடங்கள் பதிவு செய்யப்பட்டு 170 ஒலி நாடாக்கள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 2,000 பார்வையற்ற மாணவர்கள் பயன் பெறுகின்றனர். 2000-2001 ஆம் நிதியாண்டிற்கு ரூ.14.45 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.8 பள்ளி ஆசிரியருக்கு சிறப்பு பயிற்சி

பல்வேறு வகையான ஊனமுற்ற குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்க வேண்டி இருப்பதால், ஆசிரியர்களுக்கு அதற்கு ஏற்ற வகையில் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சிக்கான கால அளவு ஒரு வருடம் ஆகும்.



பூவிருந்தவல்லியில் பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள மண்டல பயிற்சி மையத்தில் 35 ஆசிரியர்களுக்கு பார்வையற்றோருக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இதில் மாநில அரசால் தேர்வு செய்யப்படும் 15 ஆசிரியர்களுக்கும் சேர்த்து பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சிக்காக 2000-2001 ஆம் நிதியாண்டில் ரூ.7.13 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

செவித் திறன் குறைந்தோருக்கு கற்பிக்கும் ஆசிரியர் பயிற்சி சென்னையிலுள்ள சிறுமலர் காது கேளாதோருக்கான பள்ளியில் நடத்தப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 50 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியின்போது மாத உதவித் தொகை ரூ.300 வழங்கப்பட்டு வருகிறது. இங்கு மாநில அரசால் தேர்வு செய்யப்படும் 10 ஆசிரியர்களுக்கும் சேர்த்து பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சிக்காக 2000-2001-ல் ரூ.5.56 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மன வளர்ச்சி குன்றியோருக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி, பால விஹார் மன வளர்ச்சி குன்றியோருக்கான பள்ளியில் நடைபெறுகிறது. பயிற்சி பெறும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 25 ஆகும். மாத உதவித் தொகை ரூ.300 வழங்கப்பட்டு வருகிறது.

### 4.9 ஊனமுற்றோருக்கான பயிற்சி

கிண்டியிலுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் காது கேளாதோருக்கு பயிற்சி அளிப்பதற்காக ஒரு சிறப்புப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு, தற்போது பேசும் திறன் இழந்து காது கேளாத 16 மாணவர்கள் பொருத்துநர் பிரிவில் பயிற்சி பெற்று வருகின்றனர். மாத உதவித் தொகை ரூ.100 வழங்கப்பட்டு வருகிறது. 2000-2001-ல் இதற்கென ரூ.2.82 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பூவிருந்தவல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான அரசு தொழிற் பயிற்சி மையத்தில் ஒவ்வொரு வருடமும் மொத்தம் 30 பார்வையற்றோருக்கு கீழ்க்கண்ட தொழில் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது:

1. பொருத்துநர் மற்றும் அடிப்படை இயந்திரம் இயக்குபவர் (ஓராண்டு காலம்)
2. மின் கம்பி சுற்றுபவர் (6 மாத காலம் இரு பிரிவாக)
3. புத்தகம் கட்டுபவர் (ஓராண்டு காலம்)

பயிற்சி பெறும் மாணவர்களுக்கு இலவசமாக இருப்பிடம், உணவு வழங்குவதைத் தவிர இரண்டு சோடி சீருடைகளும் வழங்கப்படுகின்றன. 2000-2001-ல் இதற்கென ரூ.13.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.10 நவீன உற்பத்திக்கூடம்

நவீன உற்பத்திக்கூடம் தற்போது கிண்டியில் இயங்கி வருகிறது. இந்த உற்பத்திக்கூடத்தில் தற்போது ஊனமுற்றோருக்கு இலவசமாக வழங்கப்படும் மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

1999-2000 ஆம் ஆண்டில் இந்த உற்பத்திக்கூடம் மூலம் 200 மூன்று சக்கர வண்டிகளும் 150 சக்கர நாற்காலிகளும் உற்பத்தி செய்யப்பட்டன. 2000-2001-ல் இதற்கென ரூ.72.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நவீன பயிற்சி மற்றும் உற்பத்திக்கூடம் இயங்கி வந்த முட்டுக்காட்டு நிலத்தை பல்வகை ஊனமுற்றோருக்கான தேசிய நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கென மத்திய அரசின் வசம் 1997-ல் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## 4.11 பார்வையற்ற பெண்களுக்கான தொழிற்கூடத்துடன் கூடிய அரசு மறுவாழ்வு மையம், பூவிருந்தவல்லி

18 வயதிலிருந்து 40 வயது வரையிலான (தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) பார்வையற்ற, ஆதரவற்ற, அனாதைப் பெண்கள் இந்த இல்லத்தில் சேர்க்கப்பட்டு சாக்கு கட்டிகள் தயாரிப்பதிலும், துணி நெய்வதிலும் இவர்களுக்கு 6 மாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக்குப் பின் இவர்களுக்கு இவ்வில்லத்திலேயே படுக்கை விரிப்புகள், துண்டுகள், கட்டுத் துணிகள், மற்றும் சாக்குக் கட்டிகள் தயாரிப்பதில் வேலை அளிக்கப்படுகிறது. இப்பொருள்கள் அரசு மருத்துவமனை மற்றும் பள்ளிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. மொத்தம் 40 பார்வையற்ற பெண்கள் இவ்வில்லத்தில் பயிற்சி பெற்று பயனடைந்து வருகிறார்கள். இத்திட்டத்திற்கு 2000-2001-ல் ரூ.8.72 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 4.12 பயிற்சி பெற்ற, பார்வையற்ற மற்றும் காது கேளாதோரை சிறப்புத் தொழில் பழகுநராக அமர்த்துதல்

பூவிருந்தவல்லி பார்வையற்றோருக்கான அரசு தொழிற் பயிற்சி மையத்திலும், சென்னை கிண்டியில் இயங்கும் அரசு தொழிற் பயிற்சி நிலையத்திலும் பயிற்சி பெற்ற, பார்வையற்ற மற்றும் காது கேளாதவர்கள் அரசு மற்றும் அரசு சார்பு மற்றும் தனியார் நிறுவனங்களில் சிறப்புத் தொழில் பழகுநராக மாதம் ரூ.500 வீதம் உதவித் தொகையுடன் சிறப்புத் தொழில் பயிற்சியில் அமர்த்தப்படுகின்றனர். தொழில் பழகும் காலம் ஓராண்டு முடிந்தபின் அவர்கள் பயிற்சி பெற்ற அதே நிறுவனத்தில் காலியிடம் எழும்போது நிரந்தரப் பணியில் அமர்த்தப் படுகிறார்கள். இதன் மூலம் 1999-2000-ல் 25 நபர்கள் பயனடைந்தார்கள். 2000-2001-ல் இதற்கென ரூ.1.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 4.13 ஊனமுற்றோருக்கான மூன்று சதவிகித இட ஒதுக்கீடு

அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங் களில் (அரசு மற்றும் உள்ளாட்சி நிர்வாகம்) எழும் பணியிடங்கள்/ பயிற்சியிடங்களில் மூன்று சதவிகிதம் ஊனமுற்றோருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மூன்று சதவிகிதத்தில் ஒரு சதவிகிதம் பார்வையற் றோருக்கும், ஒரு சதவிகிதம் பேசும் திறன் இழந்த காது கேளாதோருக்கும், ஒரு சதவிகிதம் கை, கால் ஊனமுற்றோருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. கல்வித் துறையில் ஆசிரியர்கள் பணியிடத்தில் பார்வையற்றவர்களுக்கு இரண்டு சதவிகிதம் இடஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.14 பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை

பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை கீழ்குறிப்பிட்டவாறு 5 வருட காலத்திற்கு அல்லது 40 வயது வரை (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) அல்லது வேலை கிடைக்கும் வரை இதில் எது முன்னரோ அது வரை வழங்கப்படுகிறது.

(அ) வழங்கப்படும் நிவாரணத் தொகையின் விவரம்:

1. பட்டதாரி/முதுநிலைப் பட்டதாரிகள் ரூ.300 மாதம் ஒன்றிற்கு

[2000 ஏப்ரல் 17

2. புதுமுக வகுப்பு/மேல்நிலை வகுப்பு தேர்ச்சி/பட்டப்படிப்பிற்குக்கீழ் ரூ.250 மாதம் ஒன்றிற்கு

3. பத்தாம் வகுப்பு மற்றும் அதற்குக்கீழ் ரூ.200 மாதம் ஒன்றிற்கு

(அ) 18 வயதிற்கு மேல் 40 வயதிற்குள் (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) இருக்க வேண்டும்.

(இ) வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்து ஓராண்டுக்கு மேல் காத்திருப்பவராக இருக்க வேண்டும்.

1999-2000 ஆண்டில் இதன் மூலம் 1,200 பார்வையற்ற நபர்கள் பயனடைந்துள்ளனர். 2000-2001-ல் இதற்கென ரூ.29.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.15 சுய வேலைவாய்ப்பு

ஊனமுற்றோருக்கு உதவும் பொருட்டு அவர்கள சுய வேலை வாய்ப்பில் ஈடுபடுவதற்காக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் பெற்றுக்கொள்ள பரிந்துரைக்கப்படுகிறார்கள். ரூ.1,000 அல்லது மொத்தக் கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இதில் எது குறைவோ அது அரசு மானியமாக வழங்கப்படுகிறது. 1999-2000-ல் 800 பேர்கள் பயனடைந்தார்கள். 2000-2001-ல் இத்திட்டத்தில் குறைந்தபட்சம் 800 பேர்கள் பயனடையும் வண்ணம் ரூ. 8.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.16 ஊனமுற்றோருக்கு இலவச உபகரணங்கள் வழங்குதல்

ஒவ்வொரு ஆண்டும் ஊனமுற்றோருக்கு இத்துறை மூலம் இலவசமாக மூன்று சக்கர சைக்கிள்கள், சக்கர நாற்காலிகள், காதொலிக் கருவிகள், கருப்புக் கண்ணாடிகள், மடக்குக் குச்சிகள், பிரெய்லி கை கடிகாரங்கள், சூரிய ஒளியினால் இயங்கும் பேட்டரிகள் மற்றும் கால் பாதம் பாதிக்கப்பட்ட/கால் பாதம் வளைந்த நபர்களுக்கு சாதாரண மிதிவண்டியும், பிரத்யேக காலணியும் வழங்கப்படுகின்றன. 2000-2001-ல்



2000 ஏப்ரல் 17]

இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் பயனடைவோரின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

| உபகரணங்களின் விவரம் | 1999-2000 ஆம் ஆண்டில் பயனடைந்தவர்கள் | 2000-2001 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) | 2000-2001-ல் பயன்பெற உள்ளோர் |
|---|---|---|---|
| 1. மூன்று சக்கர வண்டி | 2,000 | 45.00 | 2,000 |
| 2. சக்கர நாற்காலிகள் | 150 | 2.40 | 150 |
| 3. காதொலிக் கருவிகள் | 1,942 | 13.20 | 1,500 |
| 4. கருப்புக் கண்ணாடி மற்றும் மடக்குக் குச்சிகள் | 1,500 | 1.50 | 1,500 |
| 5. சோலார் பேட்டரிகள் | 1,500 | 5.25 | 1,500 |
| 6. பிரெய்லி கைக்கடிகாரம் | — | 3.50 | 1,000 |
| 7. சைக்கிளுடன் கூடிய பிரத்யேக காலணிகள் | 400 | 11.40 | 400 |
| 8. செயற்கை குரல் வளையம் | 4 | — | — |
| மொத்தம் | **7,496** | **82.25** | **8050** |

## 4.17 பார்வையற்றோரைத் திருமணம் செய்துகொள்ளும் பார்வை உள்ளவர்களுக்கான சலுகைகள்

பார்வையற்றவர்களைத் திருமணம் செய்துகொள்ளும் பார்வையுள்ளவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் பின்வருமாறு:

1. பாராட்டுச் சான்றிதழ்
2. திருமணச் செலவிற்காக ரொக்கத் தொகை ரூ.3,000 மற்றும்
3. ரூ. 7,000-க்கான தேசிய சேமிப்புப் பத்திரம்

ஒவ்வோராண்டும் இத்திட்டத்தின் மூலம் 100 தம்பதிகள் பயனடைவார்கள். இத்திட்டத்திற்காக 2000-2001-ல் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.18 ஒரு கை அல்லது ஒரு கால் இல்லாதவரை திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாதவருக்கு சலுகைகள்.**

இத்திட்டத்தின்கீழ், ஒரு கை அல்லது ஒரு கால் இல்லாதவரை திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாதவருக்கான சலுகைகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன:

1. பாராட்டுச் சான்றிதழ்
2. திருமணச் செலவிற்காக ரொக்கத் தொகை ரூ.2,000 மற்றும்
3. ரூ.3,000-க்கான தேசிய சேமிப்புப் பத்திரம்.

இத்திட்டத்தின் மூலம் 1999-2000 ஆம் ஆண்டில் 145 தம்பதிகள் பயனடைந்தனர். 2000-2001 ஆம் ஆண்டில் 145 தம்பதிகள் பயன் பெறும் வகையில் இத்திட்டத்திற்காக ரூ.7.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**4.19** காது கேளாத, வாய் பேசாத நபர்களைத் திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாதவருக்கான சலுகைகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன:

1. பாராட்டுச் சான்றிதழ்
2. திருமணச் செலவிற்கென ரொக்கத் தொகை ரூ. 2,000 மற்றும்
3. ரூ.3,000-க்கான தேசிய சேமிப்புப் பத்திரம்.

இதன் மூலமாக 75 தம்பதிகள் பயனடைந்துள்ளனர். 2000-2001 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 3.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 75 தம்பதிகள் இதன் மூலம் பயனடையவுள்ளனர்.

**4.20 உடல் ஊனமுற்றவர்களுக்கு அரசுப் பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்ய பயணச் சலுகை வழங்குதல்.**

பார்வையற்றவர்கள் அனைவரும் எவ்வித நிபந்தனையுமின்றி 100 கிலோ மீட்டர் தூரம் வரை அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய சலுகை அளிக்கப்படுகிறது. ஏனைய உடல்



ஊனமுற்றவர்களுக்கு இச்சலுகை சில நிபந்தனைகளுக்குட்பட்டு அவர்கள் கல்விக்கூடம், மருத்துவமனை, தொழிற்பயிற்சி மற்றும் வேலைக்குச் சென்று வர வழங்கப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டிலிருந்து பார்வையற்றவரும், கால் ஊனமுற்றவரும் விரைவுப் பேருந்துகளில் மாநிலத்திற்குள் இலவசமாக ஆண்டுக்கு ஒரு முறை பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் 11,843 நபர்கள் பயனடைந்துள்ளார்கள். இத்திட்டத்திற்காக ரூ.80.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு 2000-2001 ஆம் ஆண்டுக்கு செய்யப்பட்டுள்ளது.

**4.21 கடும் ஊனமுற்றோருக்கான பராமரிப்பு உதவித் தொகை**

கடுமையான ஊனமுற்றோர்களை உடைய குடும்பத்திற்கு மாதம் ரூ.150 வீதம் பராமரிப்பு மானியம் வழங்கப்படுகிறது. அவர்களின் பெற்றோர்கள்/பாதுகாவலர்களுடைய மாத வருமானம் ரூ.1,000-க்குள் இருக்க வேண்டும். இத்திட்டத்தின்கீழ் 1999-2000 ஆண்டில் 6400 நபர்கள் பயன்பெற்றுள்ளார்கள். 2000-2001 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ.115.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.22 மன வளர்ச்சி குன்றிய மகளிருக்கான பாதுகாப்பு இல்லம்**

1997-98 ஆம் ஆண்டு முதல் 14 வயதுக்கு மேற்பட்ட மன வளர்ச்சி குன்றிய மகளிரைப் பாதுகாக்கும் வகையில் பாதுகாப்பு இல்லம் நடத்தும் தொண்டு நிறுவனங்களுக்கு மாநில அரசால் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒரு தொண்டு நிறுவனத்திற்கு 30 பெண்கள் பயனடையும்வண்ணம் தலா ரூ.2.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 6 நிறுவனங்களுக்கு (மதுரை, சேலம், தூத்துக்குடி, சிவகங்கை, தஞ்சாவூர் மற்றும் வேலூர்) மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக ரூ.15.60 இலட்சம் 2000-2001-ல் நிதி ஒதுக்கீடு செய்யப்படுள்ளது.

**4.23 சட்டப் படிப்பு முடித்த ஊனமுற்றோருக்கு உதவி**

சட்டப் படிப்பு முடித்த உடல் ஊனமுற்ற பட்டதாரிகள், வழக்கறிஞர் மன்றத்தில் பதிவு செய்து கொள்ளவும், புத்தகங்கள் வாங்கவும் ரூ.3,000 உதவித் தொகை வழங்கப்படுகிறது. 1998-99-ல் 10 நபர்கள் பயனடைந்தார்கள். இத்திட்டத்திற்காக 2000-2001-ல் 0.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2000 ஏப்ரல் 17

## 4.24 செயற்கை அவயங்கள் பொருத்தும் துணை நிலையம், மதுரை

கடுமையான கை, கால் ஊனமுற்ற குழந்தைகளுக்கான அரசுப் பள்ளிகளில் பயிலும் ஊனமுற்ற குழந்தைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு செயற்கை அவயங்கள் பொருத்தும் துணை நிலையம் ஒன்று மதுரையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையத்தின் மூலம் ஊனமுற்ற குழந்தைகளுக்கு மருத்துவ அறுவை சிகிச்சை, இயற்பியல் சிகிச்சை மற்றும் உபகரணங்கள் ஆகியவை இலவசமாக அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.7.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தற்போது மதுரை மாவட்ட மறுவாழ்வு மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

## 4.25 மாநில விருதுகள்

ஊனமுற்றோருக்கான சேவையைப் பாராட்டி ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் ஊனமுற்றோருக்கு அரிய சேவை புரிந்தவர்களுக்கு கீழ்க்கண்ட மாநில விருதுகள் சுதந்திர தினத்தன்றும், அனைத்துலக ஊனமுற்றோர் தினத்தன்றும் வழங்கப்படுகின்றன.

ஊனமுற்றோருக்கான திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக சிறந்த மாவட்ட ஆட்சியர் விருதும், அதிக அளவில் ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பு வழங்கியமைக்காக சிறந்த தொழிலதிபர் விருதும், சிறப்பாக பணி செய்தமைக்காக சிறந்த பணியாளர் விருதும், ஊனமுற்றவர்களுக்கு சிறந்த முறையில் கல்வி மற்றும் பயிற்சி அளித்தமைக்காக சிறந்த ஆசிரியர் விருதும், ஊனமுற்றோருக்கு சிறப்பாக சேவை புரிந்த சமூக பணியாளர் விருதும், ஊனமுற்றோருக்கு சிறந்த முறையில் சிகிச்சை அளித்தமைக்காக சிறந்த மருத்துவர் விருதும், ஊனமுற்றோர், மகளிர் மற்றும் குழந்தைகள் நலனிற்காக சிறப்பாக சேவை செய்தமைக்காக சிறந்த நிறுவனங்கள் விருதும் வழங்கப்பட்டு வருகின்றன. பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைப் பள்ளியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பார்வையற்ற மற்றும் காது கேளாத மாணவர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

## 4.26 மாவட்ட மறுவாழ்வு மையங்கள்

மைய அரசின் உதவியுடன் காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டில் மாவட்ட மறுவாழ்வு மையம் ஒன்று ஊனமுற்றவர்களுக்குத் தேவையான



2000 ஏப்ரல் 17]

உதவிகளை வழங்கி வருகிறது. 1999-2000-ல் பலவகைப்பட்ட ஊனமடைந்தவர்கள் சுமார் 2000 பேர் இதன் மூலம் பயனடைந்து வருகிறார்கள். 2000-2001-ல் இதற்கான ஒதுக்கீடு ரூ. 17.47 இலட்சங்களாகும்.

மாநிலத்தின் இதர 28 மாவட்டங்களிலும் இதைப் போன்ற மாவட்ட மறுவாழ்வு மையங்கள் 1997-98 ஆம் ஆண்டு மாநில நிதியுடன் நிறுவப்பட்டுள்ளன. இம்மாவட்ட மறுவாழ்வு மையங்களின் மூலமாக ஊனமுற்றவர்களைக் கண்டறிந்து அவர்களின் ஊனத்தன்மைக்கு ஏற்றவாறு உதவிகளும் உபகரணங்களும் மற்றும் தேவையான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. இவை தவிர இந்த மாவட்ட மையங்கள் ஏற்கெனவே மாவட்ட மறுவாழ்வு அலுவலகங்கள் மூலமாக கவனித்து வந்த பணிகளையும் மேற்கொள்ளும். இதற்காக ரூ.287.92 இலட்சம் 2000-2001 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.27 இளம்பிள்ளைவாத நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வுத் திட்டம்.

இளம்பிள்ளைவாத நோய் வராமல் தடுக்கவும், இளம்பிள்ளைவாத நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிககவும் 1989 ஆம் ஆண்டிலிருந்து இந்த ஒருங்கிணைந்த திட்டம் செயல்படுத்தப்பட்டது.

இளம்பிள்ளைவாத நோய் வராமல் தடுப்பது மற்றும் மறுவாழ்வு அளிப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இத்துறையின் மூலம் மறுவாழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தில், இளம்பிள்ளைவாதத்தினால் பாதிக்கப்பட்ட நபர் கண்டறியப்பட்டு அவர்களுக்குத் தேவையான மருத்துவச் சிகிச்சைகள், அறுவைச் சிகிச்சைகள், இயற்கை முறை உடற்பயிற்சி, இலவசமாக மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி, உதவிக் கருவிகள், அக்குள் கட்டை ஆகியன வழங்கியும், சிறப்புப் பள்ளிகளில் சேர்த்தல், கல்வி உதவித் தொகை அளித்தல், தொழிற் பயிற்சி அளித்தல், வேலை வாய்ப்பு அளித்தல், சுய வேலைவாய்ப்புக்கு அரசு மானியத்துடன் வங்கிக் கடனுக்கு பரிந்துரைத்தல், முதியோர் ஓய்வூதியம் வழங்குதல் மற்றும் பராமரிப்பு உதவித் தொகை வழங்குதல் ஆகியவை மூலமும் பயனடைகிறார்கள். 1997-98 உடன் முடிவடைந்த இத்திட்டத்தின் மூலம் 1,19,952 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

[2000 ஏப்ரல் 17

### 4.28 அனைத்து விதமான ஊனங்களையும் அடையாளம் காணும் விரிவான மருத்துவ முகாம்கள்

இளம்பிள்ளைவாத தடுப்புத் திட்டம் மாநிலம் முழுவதும் நிறைவேற்றப்பட்ட பிறகு இளம்பிள்ளைவாத நோயினால் பாதிக்கப்பட்டவர்களை மட்டும் உள்ளடக்காமல் வாய் பேசாத, காது கேளாத, பார்வையற்ற, மன வளர்ச்சி குன்றிய, தொழுநோயினால் பாதிக்கப்பட்ட அனைத்து வகை ஊனமுற்றவர்களும் பயன்பெறும் வகையில் விரிவான மருத்துவ முகாம்கள் துவங்கப்பட்டன. 1998-99 ஆம் ஆண்டில் 27,394 உதவிகளுக்குரிய பயனாளிகள் (ஊனமுற்றோர்) மருத்துவ முகாம் மூலம் கண்டறியப்பட்டு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 1999-2000 ஆம் ஆண்டிற்கான மருத்துவ முகாம்கள் 56 (காஞ்சிபுரம் மாவட்டம் நீங்கலாக மாவட்டத்திற்கு 2 வட்டங்கள் வீதம்) வட்டாரங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் 2000-2001 ஆம் ஆண்டிற்கு ரூ.44.49 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.29 தேசிய உடல் ஊனமுற்றோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்

உடல் ஊனமுற்றோருக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஏனைய பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்காக கடனுதவி அளித்து அவர்களுக்கு பொருளாதார மறுவாழ்வு அளிக்கும்பொருட்டு மத்திய அரசு தேசிய உடல் ஊனமுற்றோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தினை அமைத்துள்ளது. மேற்படி கழகத்திலிருந்து ஊனமுற்றவர்கள் கடனுதவி பெற, தமிழ்நாட்டிலுள்ள முறைப்படுத்தும் முகமைகளாக (Channalising Agency) மத்தியக் கூட்டுறவு வங்கியின் 23 மாவட்டக் கிளைகளை மாநில அரசு நியமித்துள்ளது.

### 4.30 மாநில ஒருங்கிணைப்புக் குழு

ஊனமுற்றோர் (இணையான வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம் 1995-ஐ மத்திய அரசு இயற்றியுள்ளது. இச்சட்டம் 7-2-1996 முதல் செயற்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் பிரிவு 13-ன்படி ஊனமுற்றோருக்கான பல்வேறு நலத் திட்டங்களின் செயல்பாட்டினைக் கண்காணிக்க மீளப் பார்வையிட மற்றும் இது குறித்து ஆலோசனைகள் வழங்கிட மாநிலக் கொள்கைகளை வகுத்திட உதவுதல் என்பது போன்ற சட்டத்தின்கீழ் தரப்பட்டுள்ள பல்வேறு பணிகளுடன் மாநில அரசு நிர்ணயிக்கும் ஏனைய பணிகளையும் மேற்கொள்ள மாநில ஒருங்கிணைப்புக் குழு



2000 ஏப்ரல் 17]

அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் 13 அரசு சார்ந்த உறுப்பினர்களையும், 5 அரசு சார்பற்ற உறுப்பினர்களையும் 3 சட்டமன்ற உறுப்பினர்களையும் கொண்டது. இக்குழு ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கூடி ஊனமுற்றோருக்கான பல்வேறு திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை ஆய்வு செய்து வருகிறது.

### 4.31 மாநில செயல்பாட்டுக் குழு

ஊனமுற்றோர் (இணையான வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம் 1995-ன் சட்டப் பிரிவு 19-ன்படி ஊனமுற்றோர் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்ற மாநில செயல்பாட்டுக் குழு, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டச் செயலர் அவர்களின் தலைமையின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் 11 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும் 6 அலுவல் சாரா உறுப்பினர்களும் உள்ளனர். இக்குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி ஒருங்கிணைப்புக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகள் மீது நடவடிக்கை மேற்கொள்கிறது.

ஊனமுற்ற குழந்தைகள் பிறப்பதைத் தவிர்த்திட கர்ப்பிணி பெண்களுக்கு சிறந்த ஊட்டச்சத்து உணவு வழங்கவும் அவர்கட்கு மனமகிழ்ச்சி ஏற்படவும் ஒவ்வொரு குடும்பத்தாரும் ஒத்துழைப்பு நல்கிட வேண்டும். சொந்த உறவுக்குள் திருமணம் நடப்பதையும் தவிர்க்கலாம். ஊனமுற்ற குழந்தைகள் பிறக்க நேரிட்டால் தக்க மருத்துவரிடம் காண்பித்து சிகிச்சை தொடர்ந்து வழங்கி பராமரிப்பு இல்லங்களில் சேர்த்து சிறப்பு கவனிப்பும் கல்வியும் வழங்கிட பெற்றோர் முன்வர வேண்டுகிறோம். விபத்தில் பாதிக்கப்பட்டு ஊனமுற்றால் தகுந்த மருத்துவரிடம் உடனடியாகக் காண்பித்து தொடர் சிகிச்சை அளித்து ஊனத்தை நீக்கிட, ஊனத்தின் தன்மை குறைத்திட முன் வர வேண்டும்.

## அத்தியாயம்-5

## சமூகப் பாதுகாப்புத் துறை

5.1 குழந்தைகள் நலனைப் பாதுகாத்து மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கின்றது. குழந்தைகள் நாட்டின் முக்கியமான வளம் என்பதனைக் கருத்தில் கொண்டு குறிப்பாக, துயருறும் சூழலில் உள்ள

[2000 ஏப்ரல் 17

குழந்தைகளுக்காக நம் நாட்டின் வரலாற்றிலேயே முதன் முதலாக 1920 ஆம் ஆண்டில் தமிழ்நாடு குழந்தைகள் சட்டம் என்ற சட்டத்தை இயற்றி சேவைகளை வழங்கி வருகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை குழந்தைகளின் சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்வு குறித்த வரலாறு 1887 ஆம் ஆண்டே தொடங்கப்பட்டது. இதன் மூலம் கைவிடப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட, ஆதரவற்ற மற்றும் தவறிழைத்த சிறார்களைக் கண்டறிந்து அவர்களுக்கு மறுவாழ்வு வழங்க முதன் முதலாக செங்கற்பட்டில் சீர்திருத்தப் பள்ளி எனும் சிறப்பு இல்லம் தொடங்கப்பட்டது. சமூக எழுச்சி என்பது சமூக அமைப்பின் அங்கமாகும் என்பதன் அடிப்படையில் தமிழ் நாடு சமூகப் புனரமைப்பு மற்றும் முன்னேற்றத்திற்கு எப்போதும் தன்னை ஆட்படுத்திக் கொண்டு வந்துள்ளது. தற்போது அழைக்கப்படும் சமூகப் பாதுகாப்புத் துறை, 1947 ஆம் ஆண்டு முதல் தனியான துறையின்கீழ் சான்றளிக்கப்பட்ட பள்ளிகள் மற்றும் விழிப்புப் பணிகள் என அழைக்கப்பட்டது.

5.2 1986 ஆம் ஆண்டில் இளைஞர் நீதிச் சட்டம் (மத்திய சட்டம்) 2-10-1987 முதல் நடைமுறைக்கு வந்த உடன் 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு குழந்தைகள் சட்டம் நீக்கப்பட்டது. 1986 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் சட்டம் அறிமுகப்படுத்தியப் பின்பு சமுகப் பாதுகாப்புத் துறை குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் கவனிப்பு மற்றும் நிறுவனங்களில் பராமரிப்பு போன்ற நடவடிக்கைகளில் தேவையான மாற்றங்களை கொண்டு வந்தது மட்டுமின்றி குழந்தைகளின் உரிமைகளை பாதுகாப்பதற்கும் நடவடிக்கை மேற்கொண்டு உள்ளது. சிறுமியர் பெண்களுக்கான 1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின்கீழ் அமைந்துள்ள நிறுவனங்கள் சமூகப் பாதுகாப்புத் துறை கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன.

5.3 1986 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் சட்டத்தின்கீழ் அமைந்த நிறுவனங்கள்:

**அ. கூர்நோக்கு இல்லங்கள்**

இடர்பாடான சூழலில் உள்ள சிறார்கள் மற்றும் சட்டத்திற்கு புறம்பான செயலில் ஈடுபட்டுள்ளதாகக் கருதப்படும் சிறார்களை, சேர்த்து பாதுகாக்கும் விதமாக 18 கூர்நோக்கு இல்லங்கள் உள்ளன.



2000 ஏப்ரல் 17]

| | | |
|---|---|---|
| (1) | அரசினர் கூர்நோக்கு இல்லங்கள் (சென்னை, செங்கற்பட்டு, விழுப்புரம், திருச்சி, தஞ்சாவூர், காரைக்குடி, ஈரோடு, திருநெல்வேலி, சேலம், தருமபுரி, வேலூர்) | 11 |
| (2) | தன்னார்வு தொண்டு நிறுவனங்கள் நடத்தும் கூர்நோக்கு இல்லங்கள் (சென்னை, நாகப்பட்டினம், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தூத்துக்குடி, மற்றும் கோயம்புத்தூர்) | 7 |
| | மொத்தம் | **18** |

புறக்கணிக்கப்பட்ட/ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட சிறார்கள் இளைஞர் நலக் குழுமம் மூலமாகவும், தவறிழைத்த சிறார்கள் இளைஞர் நீதி மன்றங்கள் மூலமாகவும் இவ்வில்லங்களில் சேர்க்கப்படுகின்றனர். அரசுசாரா அமைப்புகளின் கீழியங்கும் கூர்நோக்கு இல்லங்கள் பராமரிப்பு மான்யமாக அரசிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ஒரு இல்லவாசிக்கு ரூ.200/- வீதம் பெறுகின்றன.

**(ஆ) இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்கள்**

1986 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் சட்டத்தின்கீழ் அமையப் பெற்ற 22 இளைஞர்கள் இல்லங்கள் மற்றும் 2 சிறப்பு இளைஞர் இல்லங்களில் முறையே இளைஞர் நலக் குழுமங்கள் மற்றும் இளைஞர் நீதி மன்றங்களின் மூலம் அனுமதிக்கப்படும் சிறார்களுக்கு பாதுகாப்பு, பயிற்சி, கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகியவை வழங்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| (1) | அரசினர் சிறப்பு இல்லங்கள் (செங்கற்பட்டு (சிறுவர்), சென்னை (சிறுமியர்) | 2 |
| (2) | அரசினர் இளைஞர் இல்லங்கள் (சிறுவர் 7) சென்னை, இராணிப்பேட்டை, கடலூர், தஞ்சாவூர் பஞ்சப்பள்ளி, மல்லிப்புதூர், தட்டப்பாறை, (சிறுமியர் 1) | 8 |
| (3) | தன்னார்வு தொண்டு நிறுவனங்கள் நடத்தும் இளைஞர் இல்லங்கள் (திண்டுக்கல், கோயம்புத்தூர், தர்மபுரி, சேலம், தலா ஒன்று, சென்னை 9) | 13 |
| | மொத்தம் | **23** |

[2000 ஏப்ரல் 17

இளைஞர் நலக்குழுமம் மூலம் அனுப்பப்படும் மனநோயால் பாதிக்கப்பட்ட சிறுவர் சிறுமியரைப் பாதுகாத்து, கவனிக்க சென்னை பாலவிகார் நிறுவனத்தின்கீழ் ஒரு இளைஞர் இல்லம் இயங்கி வருகிறது.

**5.4. பிற்காப்பு இல்லங்கள்**

1986 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் சட்டம் பிரிவு 12-ன்படி தமிழ்நாடு அரசு பிற்காப்பு நிறுவனங்களை அமைத்துள்ளன. இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்களில் இருந்து வீடேகும் சிறார்களின் மறுவாழ்வு நலனை முன்னிட்டு பிற்காப்பு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மேலும் இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்களில் இருந்து வெளியேறும் சிறார்களின் நேர்மையான மற்றும் பயனுள்ள வாழ்க்கை நடத்திடவும் இத்திட்டம் உதவுகிறது.

இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்களில் பயிற்சி முடித்து வெளியேறும் சிறார்களின் பிற்காப்பு நலனுக்காக 3 பிற்காப்பு இல்லங்கள், கீழ் குறிப்பிட்ட இடங்களில் உள்ளன:

1. அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனம் ஆத்தூர் (காஞ்சிபுரம் மாவட்டம்) மற்றும் மதுரை
2. அரசினர் மகளிர் பிற்காப்பு நிறுவனம், (வேலூர்)

**5.5. இளைஞர் நலக்குழுமங்கள்**

1986 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் சட்டத்தின் பிரிவு 4(i)-ன்படி தமிழ்நாடு அரசு முறையான அறிக்கையின் வாயிலாக ஆதரவற்ற மற்றும் புறக்கணிக்கப்பட்ட சிறார்களின் வழக்குகளை விசாரிக்க இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகார ஒப்படைப்புகளுடன் இளைஞர் நலக் குழுமங்களை நிறுவியுள்ளது.

1986 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் சட்டத்தின்கீழ் புறக்கணிக்கப்பட்ட / ஆதரவற்ற சிறார்களின் தொடர்புள்ள வழக்குகளை விசாரிக்க 17 இளைஞர் நலக் குழுமங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு இளைஞா நலக் குழுமமும் அலுவல் சார்பற்ற ஒரு தலைவர் மற்றும் 4 உறுப்பினர்களைக் கொண்டு (மகளிர் ஒருவர் உட்பட) கீழ்குறிப்பிட்ட இடங்களில் இயங்கி வருகின்றன. இளைஞர் நலக் குழுமங்கள் கூர்நோக்கு இல்லங்களின் வளாகத்திலேயே செயல்படுகின்றன.



2000 ஏப்ரல் 17]

1. சென்னை
2. செங்கல்பட்டு
3. வேலூர்
4. விழுப்புரம்
5. தர்மபுரி
6. சேலம்
7. ஈரோடு
8. திருச்சி
9. தஞ்சாவூர்
10. மதுரை
11. திருநெல்வேலி
12. கோயம்புத்தூர்
13. மயிலாடுதுறை
14. விருதுநகர்
15. திண்டுக்கல்
16. தூத்துக்குடி
17. காரைக்குடி

**5.6. இளைஞர் நீதிமன்றங்கள்**

சென்னை மாநகரில் 12-வது பெருநகர நீதி மன்றம், தவறிழைத்த சிறார்களின் வழக்குகளை விசாரிக்கிறது. மாவட்டங்களில் தலைமைக் குற்றவியல் நீதிமன்ற நடுவர்/உட்கோட்ட குற்றவியல் நீதிமன்ற நடுவர்/ குற்றவியல் முதல் வகுப்பு நீதிமன்ற நடுவர் ஆகியோர் வழக்குகளை விசாரிக்கின்றனர்.

**5.7. 1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டத்தின்கீழ் அமைந்த மகளிர் காப்பகங்கள்**

1956 ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டத்தின்கீழ் தவறிழைத்தவர்களாகக் கருதப்படும் சிறுமியர் மற்றும் மகளிருக்கென அமைக்கப்பட்ட பாதுகாப்பு இல்லங்களில் பாதுகாப்பு, பராமரிப்பு, பயிற்சி மற்றும் மறு வாழ்வு வழங்கப்படுகிறது. ஒழுக்கநெறி அச்சுறுத்தலுக்கு உள்ளான சிறுமியர் மற்றும் மகளிர் பாதுகாப்பிற்காக தாமாக முன்வந்து இவ்வில்லங்களில் சேரவும் அனுமதிக்கப்படுகின்றனர். 6 மகளிர் காப்பகங்கள் கீழ் குறிப்பிட்ட இடங்களில் இயங்கி வருகின்றன:

| | |
|---|---|
| சென்னை | 2 |
| மதுரை | 1 |
| திருச்சி | 1 |
| சேலம் | 1 |
| கோயம்புத்தூர் | 1 |
| மொத்தம் | 6 |

### 5.8. மீட்பு மனைகள்

சமூகப் பாதுகாப்பு துறை மேற்குறிப்பிட்ட சட்டத்தின்கீழ் விசாரணைக்குட்படும் சிறுமியர் மற்றும் பெண்களுக்கு மீட்பு மனைகளை நிறுவி பராமரித்து வருகிறது. மேற்குறிப்பிட்ட இடங்களில் உள்ள பாதுகாப்பு இல்லங்களுடன் 5 மீட்பு இல்லங்கள் இணைந்துள்ளன. வேலூர் அரசினர் மகளிர் பிற்காப்பு நிறுவனத்துடன் 1 மீட்பு இல்லம் இணைந்து செயல்பட்டு வருகிறது.

### 5.9. மணமாகாத தாய்மார்கள் இல்லம்

மணமாகாத கர்ப்பிணிகட்காக என சென்னையில் அரசினர் மகளிர் காப்பகத்தில் அரசு சார்பில் ஓர் இல்லமும், திருநெல்வேலி, அடைக்கலாபுரத்தில் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின்கீழ் ஓர் இல்லமும் இயங்குகின்றன. இந்த நிறுவனங்கள் மணமாகாத கர்ப்பிணிகளை தங்க வைத்து அவர்களுக்கு பேறுகால முந்தைய பாதுகாப்பும் பராமரிப்பும் வழங்குகின்றன. இந்நிறுவனங்களில் அனுமதி இலவசமாகும்.

### 5.10. குறுகிய கால இல்லம்

திக்கற்ற மகளிருக்கென சென்னை மயிலாப்பூரில் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின்கீழ் அபய நிலையம் என்ற இல்லம் இயங்கி வருகிறது. மேற்குறிப்பிட்ட இல்லங்களை நடத்தும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு பராமரிப்பு மான்யமாக ஒரு இல்லவாசிக்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 200 வீதம் வழங்கப்படுகிறது.

### 5.11. இடைவழி இல்லங்கள்

1999-2000 ஆம் ஆண்டு முதல் பாதிக்கப்பட்ட சூழலில் உள்ள சிறுமியர் மற்றும் மகளிருக்கு புகலிடம், கல்வி மற்றும் தொழிற் பயிற்சி அளிக்கும் விதத்தில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் மூலம் கீழ் குறிப்பிட்ட இடங்களில் புதிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்படுகிறது:

1. உளுந்தூர்பேட்டை
2. விராலிமலை
3. நாமக்கல்



பாதிக்கப்பட்ட சூழலில் உள்ள இளம் சிறுமியர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு தீங்கு ஏற்படுவதைத் தடுக்கும் முகத்தான் மறுவாழ்வு வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். சிறுமியரின் சுயமதிப்பினை வளர்ப்பதற்கும் இத்திட்டம் உதவுகிறது. ஒவ்வொரு தன்னார்வ தொண்டு நிறுவனமும் இடைவழி இல்லங்களில் 25 பெண்களை வைத்துப் பராமரிப்பதற்கும் அவர்களின் மறுவாழ்வுக்கு உதவவும் செயல்படுகின்றன. ஒவ்வொரு தொண்டு நிறுவனத்திற்கும் ரூ. 0.77 இலட்சம் வீதமாக மொத்தம் ரூ. 2.33 இலட்சம் ஆண்டு மானியமாக வழங்கப்படுகிறது.

### 5.12. இளைஞர் வழிகாட்டி நிலையங்கள்

இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் சிறார்களின் ஆளுமை நோக்கும் மற்றும் நடத்தை ஆகியவற்றை அறிவியல்பூர்வமாக ஆய்ந்து அறிக்கைகள் வழங்க தோற்றுவிக்கப்பட்டவையாகும். சிறார்களின் சமூக மற்றும் பொருளாதார அடிப்படைகளையும் பயிற்சிபெற்ற சோதனை அலுவலர்கள் மற்றும் உளவியலாளர்கள் ஆய்வு செய்கின்றனர். இளைஞர் நலக் குழுமங்கள் மற்றும் இளைஞர் நீதிமன்றங்கள், சிறார்கள் குறித்த அறிக்கையினை இளைஞர் வழிகாட்டி நிலையங்களில் இருந்து பெறுகின்றனர். சென்னை, மதுரை, வேலூர், தருமபுரி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின்கீழ் 6 இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் இயங்கி வருகின்றன. கூர்நோக்கு இல்லங்கள், இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்களின் இல்லவாசிகள் மனநிலை குறித்தும் இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் ஆய்ந்து அறிக்கைகள் வழங்குகின்றன.

### 5.13. கல்விப் பயிற்சி

அனைத்து அரசு இளைஞர்/சிறப்பு இல்லங்களிலும் 8 ஆம் வகுப்புவரை கல்வி அளிக்கப்படுகிறது. செங்கற்பட்டு அரசினர் சிறப்பு இல்லம் மற்றும் சென்னை பெண்கள் சிறப்பு இல்லத்தில் 10 ஆம் வகுப்புவரை கல்வியுடன், கணிப்பொறி பயிற்சியும் அளிக்கப்படுகிறது. மேலும் இல்லவாசிகள் வெளியில் உள்ள மேல்நிலைப் பள்ளி, கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி, தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழில் கல்லூரியில் சேர்த்து பயிற்றுவிக்கப்படுகிறார்கள். விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| மருத்துவ பட்டப்படிப்பு | 2 ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவி |
| பொறியியல் பட்டப்படிப்பு | 1 ஒரு மாணவன் |

| | |
|---|---|
| மருந்தியல் பட்டப்படிப்பு | 1 ஒரு மாணவன் |
| இளங்கலை பட்டப்படிப்பு | 6 மாணவிகள் |
| தொழிற் பயிற்சி சான்றிதழ் படிப்பு | 7 மாணவிகள் |
| தொழிற் பயிற்சி சான்றிதழ் படிப்பு | 30 மாணவர்கள் |

## 5.14. இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்களில் வழங்கப்படும் தொழிற்பயிற்சி

சிறார்களுக்கு மறுவாழ்வு வழங்கும் நோக்குடன் இளைஞர்/சிறப்பு இல்லங்களில் பின் குறிப்பிட்ட தொழிற் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. தச்சு, புத்தகம் கட்டுதல், மின் தச்சு, கொத்து வேலை, தையல் மற்றும் பூ வேலை, சோப்பு தயாரிப்பு, தோட்டம் மற்றும் வேளாண்மை, நெசவு, இசைக் கருவி பயிற்சி, பாய் நெசவு, மாட்டுப்பண்ணை, கருமாரப் பணி மற்றும் உலோகப் பணி, இவை மட்டுமின்றி பின்வரும் குறுகிய கால தொழிற் பயிற்சிகளும் இல்லவாசிகளுக்கு அளிக்கப்படுகின்றன:

மெழுகுவர்த்தி தயாரிப்பு
காகித பொம்மை தயாரிப்பு
மின்விசை மாவு ஆலை
தானியங்கி வாகனங்கள் பழுதுபார்ப்பு
வீட்டு மின் அலகு பணி
தண்ணீர் குழாய் பழுதுபார்ப்பு
திரை அச்சு
பனியன் தயாரிப்பு

சென்னை, அரசினர் பெண்கள் சிறப்பு இல்லம் மற்றும் தஞ்சாவூர் அரசினர் இளைஞர் இல்லத்தில் உள்ள தையற் தொழிற்கூடங்களும், செங்கற்பட்டு அரசினர் இல்லத்தில் நெசவு தொழிற்கூடமும் தஞ்சாவூர், இராணிப்பேட்டை அரசினர் இளைஞர் இல்லங்களில் தச்சு தொழிற்கூடங்களும் இயந்திரமயமாக்கப்பட்டு இல்லவாசிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இராணிப்பேட்டை அரசினர் இளைஞர் இல்லத்தில் மின் பற்றவைப்பு மற்றும் உற்பத்தி தொழிற் கூடம் தொடங்கப்பட்டு மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

மகளிர் காப்பகங்கள், பெண்கள் பிற்காப்பு நிறுவனங்களில் தையல் மற்றும் பூ வேலை, பாய் நெசவு மற்றும் நெசவு ஆகியவற்றில் பயிற்சி





வழங்கப்படுகிறது. சென்னை அரசினர் மகளிர் காப்பகத்தில் மின் சலவைத் தொழிலில் பயிற்சி வழங்கப்படுகிறது.

சென்னை அரசினர் பெண்கள் சிறப்பு இல்லத்தில் குழந்தைகள் காப்பகம் ஒன்று இயங்கி வருகிறது. மேலும் இல்லவாசிகளுக்கு மனையியல் பயிற்சியும் அளிக்கப்படுகின்றது. பெண்கள் இளைஞர்/சிறப்பு இல்லத்தில் பயிற்சி பெற்று, வெளியே பணிபுரியும் முன்னாள் இல்லவாசிகள் தங்குவதற்காக, தங்கும் விடுதி சென்னை அரசினர் பெண்கள் இளைஞர்/சிறப்பு இல்ல வளாகத்தில் இயங்கி வருகிறது. 10 முன்னாள் இல்லவாசிகள் பயன் பெறுகிறார்கள்.

சென்னை, இராயபுரம், தஞ்சாவூர் மற்றும் கடலூர் இளைஞர் இல்லங்களில் இரு சக்கர வாகனங்கள் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பயிற்சிக் கூடம் இயங்கி வருகிறது. இம்மூன்று பயிற்சிக் கூடங்களிலும் 30 இல்லவாசிகள் பயிற்சி பெறுகின்றனர்.

தஞ்சாவூர் மற்றும் இராணிப்பேட்டை இளைஞர் இல்லங்களில் இயங்கும் ஹாலோ பிளாக் சிமெண்ட் செங்கற்கள் தயாரிக்கும் பிரிவு மற்றும் சென்னை அரசினர் பெண்கள் இளைஞர் மற்றும் சிறப்பு இல்லத்தில் இயங்கும் பெண்களுக்கான சுகாதாரத் துண்டுகள் தயாரிக்கும் பிரிவிலும் இல்லவாசிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

### தொழில் பிரிவுகளில் உள்ள சிறார்களுக்கு ஊக்கத்தொகை

இத்துறையின்கீழ் இயங்கும் இல்லங்களில் தொழிற் பயிற்சி பெறும் இல்லவாசிகளுக்கு பின்வருமாறு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது:

1. முழுத்திறன் பெற்ற இல்லவாசிகளுக்கு — ரூ. 70 மாதம்தோறும்
2. பகுதித்திறன் பெற்ற இல்லவாசிகளுக்கு — ரூ. 50 மாதம்தோறும்

இவ்வாறு வழங்கப்படும் ஊக்கத்தொகை இல்லவாசிகளின் கைப்பணக் கணக்கில் மாதம்தோறும் சேமிக்கப்படுகிறது.

### இல்ல நீக்கம் பெற்ற இல்லவாசிகளுக்கான தொழிற் பயிற்சிகள்

காஞ்சிபுரம் மாவட்டம் ஆத்தூரில் உள்ள அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனத்தில் புத்தகம் கட்டுதல், கருமாரப் பணி மற்றும் வேளாண்மை தொழிற் பிரிவுகளில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. தொழிற் பிரிவுகளில் பணி புரியும் இல்லவாசிகளுக்கு ஊக்கத் தொகை

(முழுத்திறன் பெற்றோருக்கு ரூ. 70-ம் பகுதித்திறன் பெற்றோருக்கு ரூ. 50-ம்) வழங்கப்படுகிறது.

அரசினர் இளைஞர்/சிறப்பு இல்லங்களில் இருந்து விடேகும் இல்லவாசிகளுக்கு தரமான பயிற்சிகள் வழங்கும் விதத்தில் 1999-2000 ஆம் ஆண்டில் ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு தொழிற் பயிற்சி மறுவாழ்வு மையம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. செங்கற்பட்டு, ஆத்தூர் அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவன வளாகத்தில் அமைந்துள்ள இம்மையத்தில் தானியங்கி இயந்திரங்கள் பழுதுபார்த்தல், பொது இயந்திரங்கள் பழுதுபார்த்தல், மின் இணைப்பு, மின்கம்பி சுருள் சுற்றுதல், குழாய் பணிகள், குளிர்சாதனம் பழுதுபார்த்தல், காற்றுப்பதனம் பழுதுபார்த்தல், டி.டி.பி. (கணினி) ஆகிவற்றில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

வேலூர் அரசினர் மகளிர் பிற்காப்பு நிறுவனத்தில் உள்ளடக்கிகள், தோல்பொருட்கள் மற்றும் தையல் ஆகிய பிரிவுகளில் தொழில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

**மறுவாழ்வுத் திட்டங்கள்**

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் நிறுவனங்களில் பயிற்சி பெற்று வெளியேறும் இல்லவாசிகளுக்கு கீழ்க்குறிப்பிட்ட மறுவாழ்வு திட்டங்கள் வழங்கப்படுகின்ற:

1. தமிழ்நாடு தேர்வாணையத்தின் வரம்புக்குட்படாத பதவிகளில் இத்துறையின் முன்னாள் இல்லவாசிகளுக்கு துறையில் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது.
2. மறுவாழ்வு வழங்கும் விதமாக பெண் இல்லவாசிகளுக்கு திருமணக் கொடையாக ரூ. 3,000-மும் திருமண நாள் செலவாக ரூ. 2,000-மும் வழங்கப்படுகிறது. இதுவரை 18 பெண் இல்லவாசிகள் பயன்பெற்றுள்ளனர்.
3. மகளிர் காப்பகங்களிலிருந்து வீடேகும் பெண்கள் சுய வேலைவாய்ப்பு பெற சமூகப் பாதுகாப்பு இல்லவாசிகளின் நலநிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒருவருக்கு ரூ. 5,000 வரை நிதி உதவி அளித்து கறவை மாடுகள், சிறு கடைகள், தையற் கடை, போன்றவை வைத்து, சொந்தமாக தொழில் செய்து முன்னேற வகை செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 148 பெண்கள் நிதி உதவி பெற்றுள்ளனர்.



4. அரசினர் இளைஞர்/சிறப்பு இல்லங்களில் பல்வேறு தொழிற்பிரிவுகளில் பயிற்சி பெற்று வீடேகும் இல்லவாசிகள் சுய தொழில் தொடங்க உதவுவதற்காக கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்க ஒட்டுமொத்த மானியம் வழங்கப்படுகிறது.

| | தொழிற்பிரிவுகள். | பயன்பெறுவோர் எண்ணிக்கை. | உதவித் தொகை. ரூ. |
|---|---|---|---|
| 1. | தச்சு | 5 | 2000 |
| 2. | நெசவு | 2 | 1000 |
| 3. | புத்தகம் கட்டுதல் | 3 | 1000 |
| 4. | தோட்டம் மற்றும் வேளாண்மை | 4 | 500 |
| 5. | கொத்து பிரிவு | 2 | 500 |
| 6. | தையல் | 10 | 2,500 |
| 7. | பூத்தையல் | 2 | 1000 |
| 8. | உலோக வேலை | 4 | 1000 |
| 9. | பாய் நெசவு | 4 | 1000 |
| 10. | வீட்டு மின் இணைப்பு, கம்பி சுருள் சுற்றுதல் மற்றும் குழாய் பணிகள் | 2 | 1000 |
| 11. | மின் பற்றவைப்பு | 2 | 1000 |
| 12. | இரண்டு சக்கர வாகனப் பராமரிப்பு | 2 | 2000 |
| | மொத்தம் | 42 | |

2000-01 ஆம் நிதி ஆண்டில் இதற்காக ரூ. 61,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.15. சிறார்கள் நலனுக்கான குடும்ப உதவித் திட்டம்**

பின்தங்கிய பொருளாதார சூழ்நிலை காரணமாக இளைஞர் இல்லங்களுக்கு அனுப்பப்படும் சிறார்களுக்கு உதவி செய்யும் விதத்தில்

[2000 ஏப்ரல் 17

குடும்ப உதவித் திட்டம் செயல்பட்டுவருகின்றது. இத்திட்டத்தின்கீழ் சிறார்கள் அவர்களது குடும்பச் சூழலில் வளரும் விதமாக அவர்களின் கல்விக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி, அமைக்கப்பட்ட குழு மூலம் சிறார்களைக் கண்டறிந்து அவர்களைப் பெற்றோர் வசம் ஒப்படைக்கப்படுகின்றனர். ஒரு இல்லவாசிக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 200 வீதம் நிதி உதவி வழங்கப்படுகிறது. 100 இல்லவாசிகள் இதன் மூலம் பயன்பெறுகின்றனர்.

**5.16 சிறார்கள் பிச்சையெடுத்தலை ஒழித்தல்**

பிச்சையெடுக்கும் சிறார்களைக் கண்டறிந்து அவர்களுக்கும் அவர்களின் பெற்றோர்க்கும் ஆலோசனை வழங்கி சிறார்கள் பள்ளிக்கு செல்வதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அரசின் மான்ய உதவியுடன் சென்னை செனாய் நகரில் இந்திய குழந்தைகள் நலச் சங்கம் எனும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின்கீழ் இளைஞர் வழிகாட்டி நிலையம் ஒன்று இயங்கி வருகிறது.

**5.17 சிறப்பு பராமரிப்பு மையங்கள்**

இளைஞர் / சிறப்பு இல்லங்களில் பயிலும் ஆதரவற்ற சிறார்களுக்கு அன்பும் அரவணைப்பும் அளிக்கும் வகையில் 2 சிறப்பு பராமரிப்பு மையங்கள் (சிறுமியர் 1, சிறுவர் 1) நடைபெற்று வருகின்றன. சென்னை அரசினர் பெண்கள் சிறப்பு இல்லத்தில் ஒரு மையமும் இராணிப்பேட்டை அரசினர் இளைஞர் இல்லத்தில் ஒரு மையமும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. ரூ. 1.20 இலட்சம் செலவில் 100 சிறார்கள் பயன்பெறுகிறார்கள்.

**5.18 துன்புறும் சூழலில் உள்ள சிறார்களின் இடர்பாடுகள் தலையீட்டு மையம்**

1986 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் சட்டத்தின் முக்கிய குறிக்கோள்களில் குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு மற்றும் அவர்களை முறைகேடாகப் பயன்படுத்துவதை தவிர்ப்பதும் ஒன்றாகும். குழந்தைகள் துன்புறுத்தப்படுவதை தவிர்க்க தமிழ்நாடு அரசு இந்திய குழந்தைகள் நலச் சங்கம் (தமிழ்நாடு கிளை) வாயிலாக ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் குழந்தைகளை தவறாக பயன்படுத்துவது குறித்த வழக்குகள் விசாரிக்கப்படுவதுடன் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு தற்காலிகப் பாதுகாப்பு மற்றும் புகலிடம்



2000 ஏப்ரல் 17]

அளிப்பதுடன் குழந்தையின் பெற்றோருக்கும் உரிய ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

**5.19 மாநில அரசின் சாலையோரச் சிறார்களுக்கான இரவுப் புகலிடங்கள் திட்டம்**

சாலைகளில் வாழும் சிறார்கள் மற்றும் நடைபாதைகளில் வசிக்கும் சிறார்களுக்கு இரவுப் புகலிடங்கள் அளிக்கும் விதமாக ஒரு திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் 16 புகலிடங்களை நடத்திவருகின்றன. 50 சிறார்கள் பயன்பெறும் வகையில் ஒவ்வொரு புகலிடத்திற்கும் (ஒரு வேளை உணவு, முறை சாரா கல்வி மற்றும் தொழிற் பயிற்சி ஆகிய செலவினங்களுக்காக) ஆண்டொன்றிற்கு ரூ.65,500 மான்யம் வழங்கப்படுகிறது. கீழ்கண்ட இடங்களில் புகலிடங்கள் இயங்கி வருகின்றன.

| | |
|---|---|
| சென்னை | 5 |
| மதுரை | 3 |
| சேலம் | 1 |
| விழுப்புரம் | 1 |
| வேலூர் | 1 |
| கோயம்புத்தூர் | 1 |
| திருநெல்வேலி | 1 |
| திண்டுக்கல் | 1 |
| திருச்சி | 1 |
| இராமநாதபுரம் | 1 |
| மொத்தம் | **16** |

சாலையோரச் சிறார்களுக்கு இரவு நேரங்களில் இப்புகலிடங்கள் பாதுகாப்பாக அமைந்துள்ளன. இவ்வில்லங்களில் தொழிற்பயிற்சி மற்றும் முறைசாரா கல்வி வழங்கப்படுகிறது. 800 சிறார்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுகின்றனர்.

**5.20 ஒருங்கிணைந்த சாலையோரச் சிறார்களின் நலத் திட்டம்**

இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகார ஒப்பளிப்புத் துறை தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு ஒரு முழுமையானத் திட்டமாக ஒருங்கிணைந்த சாலையோர சிறார்களின் நலத்திட்டத்தினை

[2000 ஏப்ரல் 17

நடைமுறைப்படுத்த நிதியுதவி வழங்குகிறது. தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் கருத்துருக்கள் மாநில அரசால் நிதியுதவி அளிக்க பரிந்துரைக்கப்படுகின்றன. ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனத்திற்கு அதிகபட்சமாக ஆண்டொன்றுக்கு மான்யம் ரூ. 15 இலட்சம் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 8 தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இத்திட்டத்தினைச் செயல்படுத்துகின்றன.

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை சமூகப் பாதுகாப்புத் துறை நகரக் குழு ஒன்றினை அமைத்து அதற்கான திட்ட வரைவினை வெளியிட்டுள்ளது. இத்திட்ட வரைவு சாலையோரச் சிறார்களின் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் அரசு மற்றும் அரசுசாரா அமைப்புகளை ஒருங்கிணைத்து கூட்டமைத்து செயல்பட ஒரு வழிகாட்டுதலை ஏற்படுத்தித் தருகிறது. நம் நாட்டிலேயே இவ்வாறான அமைப்பு முதலாவதாகும்.

### 5.21 போதை மருந்தினை தவறாகப் பயன்படுத்துதலைத் தடுக்கும் திட்டம்

கீழ்க்காணும் திட்டங்களை செயல்படுத்த தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மைய அரசின் நிதி உதவி பெறுகின்றன:

| திட்டங்கள் பெயர் | தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1. விழிப்புணர்வு மற்றும் தடுப்பு கல்வி | 3 |
| 2. போதை மருந்து விழிப்புணர்வு, ஆலோசனை மற்றும் உதவி மையம் | 14 |
| 3. போதைக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளித்தல் மற்றும் மறுவாழ்வளித்தல் | 9 |
| 4. போதை தடுப்பு முகாம் | 1 |
| மொத்தம் | 27 |

### 5.22 குழந்தைகளுக்கான தொலைபேசி உதவித் திட்டம்

துன்புறும் சூழ்நிலையில் உள்ள குழந்தையோ அல்லது குழந்தையின் துன்புறும் சூழலைக் காண நேரும் நபரோ 1098 என்ற எண்ணுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம்.



2000 ஏப்ரல் 17]

இத்தொலைபேசி எண் இதற்கென சிறப்பாக ஒதுக்கீடு செய்யப்பட்டதாகும். இது நாடு முழுவதற்கும் பொதுவான தொலைபேசி எண்ணாகும். துன்பச் சூழலில் உள்ள குழந்தைக்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்து தரப்படும். இதற்கென அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகள் அடங்கிய ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது. இத்திட்டம் மைய அரசின் நிதி உதவியுடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலமாக செயல்படுத்தப்படுகிறது. தொலைபேசி நிறுவுதல், தொலைபேசி அழைப்புகள் ஏற்கும் இரு மையங்களுக்கு இணைப்புகள் ஏற்படுத்துதல் போன்ற பணிகள் தொலை தொடர்புத் துறையினரால் முடிக்கப்பட்டுவிட்டன.

இத்திட்டத்தை ஒருமுகப்படுத்தும் பணியை சமூக பாதுகாப்புத் துறை மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தை மேற்பார்வை செய்யவும் கண்காணிக்கவும் மாநகர அறிவுரைக் குழுமம் ஒன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது. இக்குழுமம் யுனிசெப், அரசு சாரா அமைப்புகள், இந்திய அரசின் தகவல் துறை, ரயில்வே, தொலை தொடர்பு துறை, சென்னை மாநகராட்சி, மாநில அரசின் சமூக நலத் துறை, குழந்தைகள் மருத்துவ மனை மற்றும் காவல்துறைகளின் அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும் சமூகப் பாதுகாப்புத் துறை இயக்குநர் இக்குழுமத்தின் தலைவராக இருப்பார். தொலைபேசி உதவித் திட்டம் சென்னையில் 30-4-1999 அன்று மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இதுவரை கீழ்காணும் உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| 1. | மருத்துவ உதவி | 28 |
| 2. | புகலிட உதவி | 241 |
| 3. | துன்பத்திலிருந்து பாதுகாத்தல் | 26 |
| 4. | காணாமல் போன சிறார்கள் | 51 |
| 5. | குடும்பத்துடன் சேர்த்தல் | 86 |
| 6. | இறப்பு தொடர்பாக | 1 |
| 7. | உணர்வுபூர்வமான ஆலோசனை | 26 |
| 8. | தகவல் மற்றும் முறையிடுதல் | 126 |
| 9. | தொலைபேசி உதவி குறித்து | 1292 |
| 10. | விளையாட்டு அழைப்பு | 484 |
| | மொத்தம் | 2361 |

**5.33 திட்ட முன்னேற்றம் மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு**

யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் 1991 ஆம் ஆண்டில் சமூகப் பாதுகாப்புத் துறை இயக்ககத்தில் திட்ட முன்னேற்றம் மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. சமூகப் பாதுகாப்புத் துறையினால் செயலாக்கப்படும் குழந்தைகள் நலத் திட்டங்களைக் (நிறுவனங்கள் மற்றும் நிறுவனம் சாராத பணிகள்) கண்காணிப்பதுடன் நிறுவனங்களில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் சேவை குறைந்தபட்ச தரத்தில் இருக்குமாறு மேற்பார்வையிடுவதும் இப்பிரிவின் நோக்கமாகும்.

துயருறும் சூழ்நிலையில் உள்ள சிறார்கள் சார்ந்த கருத்தரங்குகள் நடத்துவதோடு தன்னார்வு தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சாலையோர சிறார்களுக்கான நலத் திட்டங்கள் போன்ற பணிகளையும் இப்பிரிவு கவனித்து வருகின்றது.

## அத்தியாயம்-6

## முதியோர் ஓய்வூதியத் திட்டம்

6.1 இந்தத் திட்டம் முதியோர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். உற்றார் உறவினர் ஆதரவின்றி வாழ வழியற்றவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு கீழ்க்கண்ட ஐந்து இனங்களின்கீழ் இத்திட்டத்தை மாநில அரசு செயல்படுத்துகிறது:—

1. முதியோர் உதவி ஓய்வூதியம் (சாதாரணம்) திட்டம் (1-4-1962 முதல் அமுல்படுத்தப்படுவது)
2. ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டம் (1-11-1974)
3. ஆதரவற்ற விதவை ஓய்வூதியத் திட்டம் (1-6-1975)
4. ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம் (15-3-1981)
5. கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம் (25-4-1986)

இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை கீழே கண்டவாறு அரசினால் அவ்வப்போது உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது:—

1. 1-4-1962 முதல் 31-3-1979 வரை ரூ. 20/-



2. 1-4-1979 முதல் 31-3-1982 வரை ரூ. 25/-
3. 1-4-1982 முதல் 30-4-1989 வரை ரூ. 35/-
4. 1-5-1989 முதல் 31-1-1992 வரை ரூ. 50/-
5. 1-2-1992 முதல் 30-6-1995 வரை ரூ. 75/-
6. 1-7-1995 முதல் 31-3-1998 வரை ரூ. 100/-
7. 1-4-1998 முதல் இது நாள் வரை ரூ. 150/-

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 2000-2001 ஆம் ஆண்டில் நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளவாறு மேலே குறிப்பிட்டுள்ள அனைத்துப் பிரிவினருக்கும் மற்றும் மீனவர்களுக்கும் முதியோர் உதவித் தொகையை ரூ. 150/-லிருந்து ரூ. 200/-ஆக உயர்த்தி அரசு வழங்கவுள்ளது.

### 6.2 முதியோர் ஓய்வூதியத் திட்டம்

### (அ) முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டம்

இத்திட்டம் பிழைப்புதவி இல்லாமலும். காப்பாற்றுபவர் இல்லாமலும் உள்ள அனைத்து முதியோர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க அறிமுகப்படுத்தப்பட்டு 1-4-1962 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கண் பார்வையற்றோர், தொழுநோய், மனநோய், பாரிசவாயு மற்றும் அவயம் இழந்து வருவாய் ஈட்ட முடியாத நபர்கள் உதவித் தொகை பெற குறைந்தபட்ச வயது வரம்பு 60 ஆகும். மற்ற ஆதரவற்ற நபர்களுக்கு குறைந்த பட்ச வயது வரம்பு 65 ஆகும்.

இத்திட்டத்தின்கீழ் 31-3-2000 தேதியில் 4,15,399 முதியோர்கள் பயனடைந்து வருகின்றனர்.

### இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசின் பங்கு

தற்பொழுது முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டத்தின்கீழ் 65 வயது முடிந்து பயனாளிகளுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் (ரூ. 150/-) உதவித் தொகையில் இந்திய அரசின் வழிகாட்டும் நெறிமுறைகளின்படி வெளியிடப்பட்டுள்ள தமிழக அரசின் ஆணை எண் (பல்வகை) 46 சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 12-2-1996-ன்படி மத்திய அரசின் பங்கு ரூ. 75/-அடங்கும்.

[2000 ஏப்ரல் 17

## ஆ. ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஒய்வூதியத் திட்டம்

இத்திட்டம் அரசாணை எண் (பல்வகை) 1402, நிதித் துறை, நாள் 6-11-1974-ல் ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்களும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டு 1-11-1974 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. உடல் ஊனம் 50 சதவிகிதம் அளவும் அதற்கு மேலும் உள்ள ஆதரவற்ற உடல் ஊனமுற்றவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறத் தகுதி உடையவர் ஆவர். இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுபவர்களின் வயது வரம்பு ஆரம்பத்தில் 55 ஆக இருந்தது. அரசாணை எண் 972, நிதித் துறை (ட்டி மற்றும் எ), நாள் 6-10-1975-ன்படி வயது 45 ஆகக் குறைக்கப்பட்டது.

அரசாணை எண் (பல்வகை) 964, சமூக நலத் துறை, நாள் 19-12-1980-ல் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியாளர் மாவட்ட மருத்துவ அலுவலர் மற்றும் மாவட்ட சமூக நல அலுவலர் ஆகியோர் அடங்கிய குழு ஏற்படுத்தி, ஊனமுற்றோரிடமிருந்து ஓய்வூதியம் வேண்டி பெறப்படும் மனுக்களை ஆய்வு செய்து அவர்களின் ஊனத்தின் தன்மைக்கு ஏற்ப அவர்களுக்கு வயது வரம்பின்றி ஓய்வூதியம் அங்கீகாரம் செய்யவும் அரசு கடித எண் ஜி2/16869/82-7, நாள் 22-7-1982-ன்படி தொழுநோயாளிகளும் பயன்பெறும் வகையிலும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 31-3-2000 தேதியில் 39,847 உடல்ஊனமுற்றோர் பயனடைந்து வருகின்றனர்.

## இ. ஆதரவற்ற விதவை ஒய்வூதியத் திட்டம்

இத்திட்டம் அரசாணை (பல்வகை) எண் 507, நிதித் துறை, நாள் 27-5-1975-ல் ஆதரவற்ற விதவைகளும் பயன்பெறும் வகையில் 1-6-1975 முதல் விரிவுபடுத்தப்பட்டது. இதன்படி இத்திட்டத்தின்கீழ் பயன் பெறும் பயனாளிகளின் குறைந்தபட்ச வயது வரம்பு 45 என நிர்ணயிக்கப்பட்டிருந்து, பிறகு அரசாணை எண் 391, நிதித் துறை (ட்டி மற்றும் ஏ), நாள் 27-4-1978-ல் வயது வரம்பு 40 எனக் குறைக்கப்பட்டது. பின்பு அரசாணை (பல்வகை) எண் 257, சமூக நலத் துறை, நாள் 24-5-1990-ல் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகளின் வயது வரம்பினை நீக்கி ஆணையிடப்பட்டது. திருமணமாகி விதவையாகியுள்ள மறுமணம் செய்யாமல் இருக்கும் ஆதரவற்ற பெண்களுக்கும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டத்தில் கூறப்பட்டுள்ள மற்ற நிபந்தனைகள் இவர்களுக்கும் பொருந்தும். அரசாணை நிலை



2000 ஏப்ரல் 17]

எண் 92, சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 2-6-1998-ல் 18 வயது நிரம்பிய வாரிசாக இருந்தாலும் தகுதியின் அடிப்படையில் இத்திட்டத்தின்கீழ் உதவித்தொகை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 31-3-2000 தேதியில் 3,97,850 விதவைகள் பயனடைந்து வருகின்றனர்.

## ஈ. ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் ஒய்வூதியத் திட்டம்

இத்திட்டம் அரசாணை (பல்வகை) எண் 165, சமூக நலத் துறை, நாள் 12-3-1981-ல் 15-3-1981 முதல் ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ் குறைந்தபட்ச வயது 60 நிர்ணயிக்கப்பட்டது. முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகள் இவர்களுக்கும் பொருந்தும். இத்திட்டத்தின்கீழ் 31-3-2000 தேதியில் 78,572 ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

## உ. கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் ஒய்வூதியத் திட்டம்

இத்திட்டம் அரசாணை (பல்வகை) எண் 1645, சமூக நலத் துறை, நாள் 3-5-1984-ல் 30 வயதுக்கு குறைவாக கணவனால் கைவிடப்பட்ட நீதிமன்றத்தில் விவாகரத்து சான்று பெற்ற தகுதிவாய்ந்த ஆதரவற்ற மனைவிகள் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டது. திருமணம் சட்டபூர்வமான ஒன்றாகவும் கணவருடன் ஐந்தாண்டுகளுக்கு குறையாமல் எவ்வித தொடர்பும் இல்லாமலும், கைவிடப்பட்டும் முதியோர் உதவித்தொகை (சாதாரணம்) திட்டத்தில் விதி-5-ல் குறித்துள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தும், தமிழ்நாட்டை நிரந்தர வசிப்பிடமாக கொண்டவராகவும் இருப்பவர்கள் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெற தகுதியுடையவர்கள் ஆவர். இத்திட்டத்தின்கீழ் கைவிடப்பட்டுள்ள மனைவிகள் மறுமணம் செய்துகொண்டாலும் கணவருடன் மீள சேர்ந்து வாழ்ந்தாலும், வேலை வாய்ப்பு பெற்றாலும், கைவிடப்பட்ட கணவரிடமிருந்து ஏதேனும் உதவிகள் கிடைக்கப் பெற்றாலும் இவ்வுதவித்தொகை நிறுத்தப்படும். அரசாணை (நிலை) எண் 92, சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை, நாள் 2-6-1988-ல் 18 வயது நிரம்பிய வாரிசு இருந்தாலும் கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 31-3-2000 தேதியில் 70,489 கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் பயனடைந்து வருகின்றனர்.

[2000 ஏப்ரல் 17

### 6.3. உதவித்தொகை வழங்கும் முறை

முதன்முதலில் முதியோர் உதவித் தொகை அங்கீகாரம் வழங்குவதற்குக் கோட்டாட்சியர்கள் அதிகாரம் பெற்றவர்களாக இருந்தனர். அதன் பிறகு இந்த அதிகாரம் வட்டாட்சியர்களுக்கு வழங்கப்பட்டது. 1989 முதல் இந்த அதிகாரம் நலிந்தோர் நல தனி வட்டாட்சியர் வசம் உள்ளது. இதன் மூலம் முதியோர் ஓய்வூதிய பயனாளிகளிடம் நேரடி தொடர்புடைய அதிகாரிகளிடம் அரசு இந்த அதிகாரத்தைப் பரவலாக்கி தேவையான நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்குவதில் சுலபமாகவும் காலதாமதத்தை தவிர்த்தும் உதவி செய்து வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவித் தொகை பெறுபவர்களின் முகவரிக்கு அஞ்சல் பணவிடை மூலம் சிறப்பு வட்டாட்சியரால் அனுப்பப்படுகிறது. இதற்கான பண அஞ்சல், கட்டணச் செலவையும் மாநில அரசே ஏற்றுக் கொள்கிறது. முதியோர் உதவித் தொகை பட்டியல்கள் எழுதி வழங்கும் முறைகளில் உள்ள வேலைப் பளுவைக் குறைப்பதுடன் அதில் ஏற்பட்டுள்ள பிழைகளைத் தவிர்க்கும் நோக்கத்துடன் அரசு கணிப்பொறி மூலம் பண அஞ்சல் தொகையினை அனுப்ப அனுமதி வழங்கியுள்ளது.

### 6.4. முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கு வழங்கப்படும் இதர உதவிகள்

#### 1. இலவச வேட்டி/சேலை வழங்குதல்

அரசாணை (நிலை) எண் 995 நிதி (ஓய்வூதியம்) நாள் 18-7-1979-ன்படி முதியோர் உதவித் தொகை மற்றும் அதன் சார்பு உதவித் தொகை பெறும் அனைத்து பயனாளிகளுக்கும் ஆண்டுக்கு இருமுறை அதாவது பொங்கல் மற்றும் சுதந்திர நாளன்று ஆண்களுக்கு தலா ஒரு வேட்டியும் பெண்களுக்கு தலா ஒரு புடவையும் 15-8-1979 சுதந்திர நாள் முதல் அளிக்கப்பட்டு வந்தது. அரசாணை எண் 459 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை நாள் 25-10-1991-ன்படி 1992-93-ம் ஆண்டு முதல் இத்திட்டங்களின்கீழ் வரும் பயனாளிகளுக்கு வருடந்தோறும் பொங்கல் மற்றும் சுதந்திர நாளின்போது இலவச வேட்டி/சேலைகள் வழங்கப்படுவதற்கு பதிலாக வருடத்தில் பொங்கல் மற்றும் தீபாவளி ஆகிய இரு பண்டிகை நாட்களுக்கு மட்டும் இலவச வேட்டி மற்றும் சேலை வழங்க உத்தரவிடப்பட்டு அதன்படி தொடர்ந்து



2000 ஏப்ரல் 17]

வழங்கப்பட்டு வருகிறது. 1999-2000 ஆண்டில் இதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 15.50 கோடி ஆகும்.

### 6.5. முதியோர் உதவித் தொகை பெறும் பயனாளிகளுக்கு வழங்கப்படும் இலவச சத்துணவு மற்றும் இலவச அரிசி விவரம்

அரசாணை எண் 771 சமூக நலத் துறை, நாள் 6-10-1980-ன்படி முதியோர் உதவித் தொகை பெறும் அனைத்து ஓய்வூதியதாரர்களுக்கும் 1-11-1980 முதல் வாரத்திற்கு தலா ஒரு கிலோ அரிசி வழங்க உத்தரவிடப்பட்டது.

மேலும் அரசாணை எண் 69, சமூக நலத்துறை, நாள் 11-1-1983-இன்படி முதியோர் உதவித் தொகை பெறும் அனைத்து ஓய்வூதியதாரர்களுக்கும் வாரம் ஒரு முறை வழங்கப்பட்டு வந்த தலா ஒரு கிலோ அரிசிக்கு பதிலாக இவர்களுக்கு தலா வாரம் அரை கிலோ இலவச அரிசியும் அதனுடன் தினமும் சத்துணவுக் கூடங்களில் மதிய இலவச சத்துணவும் 15-1-1983 முதல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது.

அரசாணை எண் 440, பிற்பட்டோர் நலம் மற்றும் சத்துணவுத் திட்டம் மற்றும் சமூகநலத் துறை, நாள் 8-5-1989-ன்படி முதியோர் உதவித் தொகை ஓய்வூதியத் திட்டத்தில் பயன்பெறும் அனைத்து பயனாளிகளும் மதிய உணவுக் கூடங்களில் வழங்கப்பட்டுவரும் இலவச உணவை மட்டும் அனுபவித்துக்கொள்ள வேண்டும் என்றும் இவர்கள் இதற்கு மேல் இலவச அரிசி பெற தகுதியுடையவர்கள் அல்லர் என்றும் உத்தரவிடப்பட்டிருந்தது.

மேலும் அரசாணை எண் 394 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 5-9-1991-ன்படி முதியோர் ஓய்வூதியம் பெறும் அனைத்து பயனாளிகளும் 15-9-1991 முதல் கீழே கண்டபடிநிலைகளில் உள்ளவாறு இலவச அரிசி பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

1. சத்துணவுக்கூடங்களில் உணவு சாப்பிடாதவர்களுக்கு வாரம் ஒருமுறை, தலா ஒரு கிலோ இலவச அரிசி வழங்கப்படும்.
2. சத்துணவுக்கூடங்களில் உணவு சாப்பிடுபவர்களுக்கு வாரம் ஒரு முறை அரை கிலோ இலவச அரிசி வழங்கப்படும்.

அரசாணை எண் 288, சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை நாள் 29-6-1997-ன்படி வாரம் ஒரு முறை அரிசி வழங்கும் முறை

திருத்தப்பட்டு இதற்குப் பதிலாக மாதம் ஒரு முறை அரிசி வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி சத்துணவுக்கூடங்களில் உணவு சாப்பிடாதவர்களுக்கு மாதம் நான்கு கிலோ இலவச அரிசியும் சத்துணவுக் கூடங்களில் உணவு சாப்பிடுபவர்களுக்கு மாதம் இரண்டு கிலோ அரிசியும் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் 10,02,157 நபர்கள் பயன்பெறுகிறார்கள்.

## தொகுப்புரை

பெண்களின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கும், குழந்தைகளின் வளர்ச்சிக்கும், ஊனமுற்றோர் உயர்வுக்கும், நலிந்தோர் மற்றும் மூத்த குடிமக்களின் நலனுக்காகவும் பாடுபடும் இத்துறை, பல்வேறு சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதோடு, அத்திட்டங்களின் பயன்கள் உரிய காலத்தில் உரியவர்களுக்கு சென்றடையத் தேவையான எல்லா முயற்சிகளையும் எடுக்கும் என்று உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## இணைப்பு

### 2000-2001-ஆம் ஆண்டிற்கான புதிய திட்டப் பணிகளின் விவரப்பட்டியல்

| தொடர் எண் | திட்டப் பணிகளின் விவரம் | பணி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| | **இயலாமையுற்றோர் மறுவாழ்வுத் துறை** | |
| 1 | அரசினர் காதுகேளாதோர் பள்ளியில் I முதல் XII வரை பயிலும் மாணவர்களுக்கு இலவசமாக நோட்டு புத்தகங்கள் வழங்குதல் | 1.33 |
| 2. | உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கு பார்வையற்றோர், காதுகேளாதோர்களுக்கு ஆய்வுக் கூடப்பொருள்கள் வாங்குதல் (8 பள்ளிகள்) | 4.40 |
| 3. | தாம்பரம் மற்றும் உதகமண்டலத்தில் உள்ள அரசு காதுகேளாதோர் பள்ளிகளில் 4 இடைநிலை ஆசிரியர் பதவிகளை ஏற்படுத்துதல் | 3.35 |



| | | |
|---|---|---|
| 4. | திருச்சி பார்வையற்றோர் பெண்கள் அரசு மேல்நிலைப் பள்ளியிலும், பூவல் பார்வையற்றோர் அரசு மேல்நிலைப் பள்ளியிலும், தருமபுரி காதுகேளாதோர் அரசு மேல்நிலைப் பள்ளியிலும் முறையே பொருளாதாரம், ஆங்கிலம், துணித் தொழில் ஆகிய பாடங்களில் பட்ட மேற்படிப்பு ஆசிரியர் பதவிகள் 3 ஏற்படுத்துதல் | 3.00 |
| 5. | இயலாமையுற்றோருக்குக் கணினி மென்பொருள் குறித்து பயிற்சியளித்தல் | 0.88 |
| 6. | இயலாமையுற்றோருக்கு ஆட்டோமொபைல் வர்த்தகத்தில் பயிற்சியளித்தல் (உறுப்பு இழந்தவர், காது கேளாதோர்) | 0.88 |
| 7. | விருதுநகர், புதுக்கோட்டை, காதுகேளாதோர் அரசு பள்ளிகளுக்கும், ஆம்பூர் I.E.L.C. மானாமதுரை தென்னிந்திய கிறித்துவ சபைக்கும் பாலர் பள்ளி வகுப்புகள் தொடங்குதல் | 1.80 |
| 8 | மாவட்ட மறுவாழ்வு மையங்கள் 15-ல் சாய்தளம் அமைத்தல் | 0.90 |
| 9 | பூவிருந்தவல்லி அரசு பார்வையற்றோர் பள்ளியில் கணினிமயமாக்கப்பட்ட பிரெய்லி பிரிண்டர் வழங்குதல், 2 யூனிட்டுகள்) | 12.00 |
| 10 | அரசு சாரா நிறுவனங்கள் சமூக நலத்திற்கும் சத்துணவிற்கும் தொலைநோக்குத் திட்டம் தயாரித்தல் | 5.00 |
| 11 | அரசினர் அனாதை இல்லங்கள் பதினான்குக்கு புதிய பாத்திரங்கள் வழங்குதல் | 2.00 |
| 12 | அரசினர் அனாதை இல்லங்கள் பதினொன்றுக்கு புதிய அறைக்கலன்கள் வழங்குதல் | 6.20 |
| 13 | கடலூர் மற்றும் திருநெல்வேலியிலுள்ள அசவை இல்லங்களுக்குப் புதிய பாத்திரங்கள் வாங்குதல் | 1.50 |
| 14 | 8 மாவட்டங்களிலுள்ள வெட்டும் இயந்திரம் உள்ள மையங்களுக்கு வெட்டும் இயந்திரங்கள் | 5.60 |
| | சமூக பாதுகாப்புத் துறை | |

223305

| | | |
|---|---|---|
| 15 | அரசினர் கண்காணிப்பு இல்லங்கள் 10 மற்றும் 2 பாதுகாப்பு இல்லங்களுக்கு நீர் சுத்திகரிப்புக் கருவி வழங்குதல் | 3.0[illegible] |
| 16 | சென்னை அரசினர் விழிப்புப் பணி இல்லத்திற்கும், ஸ்ரீசதனத்திற்கும் மின் உற்பத்தி இயந்திரம் (3KVA) வழங்குதல் | 0.39 |
| 17 | அரசினர் இளங்குற்றவாளிகள் இல்லத்தில்/சிறப்பு இல்லத்தில் (சிறுவர்கள்) உள்ள சிறார்களுக்கு பனியன்களும், உள்ளாடைகளும் வழங்குதல் | 2.65 |
| 18 | தஞ்சாவூர் அரசினர் இளங்குற்றவாளிகள் இல்லத்தைச் சேர்ந்த பணியாளர் குடியிருப்பு களுக்குத் தனி மின் மீட்டர்கள் வழங்குதல் | 2.20 |
| 19 | அரசு சாரா நிறுவனம் ஒன்றில் தங்கியுள்ள மாணவிகளுக்கான இளங்குற்றவாளிகள் இல்லத்தின் பராமரிப்புச் செலவுகளை உயர்த்துதல் | 0.88 |
| 20 | மதுரையிலுள்ள இத்துறையின் வட்டார அலுவலகத்தை வலுப்படுத்துதல் | 2.98 |
| 21 | வேலூரிலுள்ள அரசு கண்காணிப்பு இல்லத்தில், மதிற்சுவருக்கு மேல் கம்பி வேலியமைத்து, கம்பங்கள் நட்டு அதில் மெர்க்குரி விளக்கு களுக்கு வகை செய்தல் | 1.50 |
| 22 | செங்கல்பட்டில் உள்ள சிறுவர்களுக்கான அரசுச் சிறப்பு இல்லம், சென்னையிலுள்ள மாணவியருக் கான அரசு இளங்குற்றவாளிகள் இல்லம் ஆகிய வற்றின் பணியாளர் குடியிருப்புகளுக்கு சிறப்பு பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் | 10.00 |
| 23 | சென்னையிலுள்ள மகளிருக்கான அரசுச் சிறப்பு இல்லம், இளங்குற்றவாளிகள் அரசு இல்லம் ஆகியவற்றின் வசதிகளை மேம்படுத்துதல் | 10.12 |



| | | |
|---|---|---|
| 24 | சென்னையிலுள்ள அரசு கண்காணிப்பு இல்லத்தின் வசதிகளை மேம்படுத்துதல் | 9.80 |

**தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்**

| | | |
|---|---|---|
| 25 | தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சித் திட்டம் | 4.00 |
| 26 | வாழ்க்கை தொழில் பயிற்சித் திட்டம் | 7.50 |
| 27 | மகளிருக்கான 100 மனமகிழ் மையங்களைத் தொடங்குதல் | 4.20 |

உஉ

**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 816, Anna Salai, Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.